பெரியார் தொலைநிலைக்கல்வி நிறுவனம்

பெரியார் பல்கலைக்கழகம்

சேலம் – 636 011.

# இளங்கலை தமிழ் இலக்கியம்

## மூன்றாமாண்டு

## தாள் – 13 : அற இலக்கியங்களும் சங்க இலக்கியங்களும்

ஆசிரியர்
முனைவர் ச. இரேணுகா
விரிவுரையாளர்
பாரதி மகளிர் கல்லூரி,
சென்னை-108.

# இளங்கலை தமிழ் இலக்கியம்
## மூன்றாமாண்டு
## தாள் – 13 : அற இலக்கியங்களும் சங்க இலக்கியங்களும்

பொருளடக்கம்


அலகு - 1

பிரிவு 1 திருக்குறள்

பிரிவு 2 நாலடியார்

பிரிவு 3 நீதிநூல்

அலகு - 2

பிரிவு 1 திருமுருகாற்றுப்படை

பிரிவு 2 நெடுநல்வாடை

அலகு - 3 பாலைக்கலி

அலகு - 4

பிரிவு 1 அகநானூறு

பிரிவு 2 நற்றிணை

பிரிவு 3 குறுந்தொகை

அலகு - 5

பிரிவு 1 புறநானூறு

பிரிவு 2 பதிற்றுப்பத்து

பிரிவு 3 பரிபாடல்

மாதிரி வினாத்தாள்

## பாடத்திட்டம்

அலகு - 1

| | | | |
|---|---|---|---|
| பிரிவு 1 | திருக்குறள் | - | நிலையாமை (அறம்) |
| | | - | கல்லாமை (பொருள்) |
| | | - | ஊடல் உவகை (இன்பம்) |
| பிரிவு 2 | நாலடியார் | - | தூய்த்தன்மை (அறம்) |
| | | - | நட்பாராய்தல் (பொருள்) |
| | | - | கற்புடை மகளிர் (இன்பம்) |
| பிரிவு 3 | நீதிநூல் | - | தெய்வ முண்டெனல் |
| | | - | தாய் தந்தையரை வணங்கல் |
| | | - | மாதரைப் படிப்பித்தல் |

அலகு - 2

| | |
|---|---|
| பிரிவு 1 | திருமுருகாற்றுப்படை |
| பிரிவு 2 | நெடுநல்வாடை |

அலகு - 3 பாலைக்கலி

அலகு - 4

| | | | |
|---|---|---|---|
| பிரிவு 1 | அகநானூறு | - | பரணர் பாடல்கள் (34) |
| பிரிவு 2 | நற்றிணை | - | நக்கீரர் பாடல்கள் (7) |
| பிரிவு 3 | குறுந்தொகை | - | கபிலர் பாடல்கள் (29) |

அலகு - 5

| | | | |
|---|---|---|---|
| பிரிவு 1 | புறநானூறு | - | ஔவையார் பாடல்கள் (32) |
| பிரிவு 2 | பதிற்றுப்பத்து | - | இரண்டாம்பத்து |
| பிரிவு 3 | பரிபாடல் | - | ஆறாம் பத்து (வையை) |

## அலகு - 1

### 1. 0 முன்னுரை

திருவள்ளுவர் அறம் என்பதற்கு 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறம்' என்று பொருள் கூறுகிறார். மனதில் குற்றம் தோன்றாத வண்ணம் இருப்பதற்குரிய வழி வகைகளை இப்பகுதி விளக்குகிறது. இந்த அலகில் மூன்று பிரிவுகள் உள்ளன. பிரிவு 1 - திருக்குறள், பிரிவு 11- நாலடியார், பிரிவு 111- நீதி நூல்.

### பிரிவு 1: திருக்குறள் - பாட அமைப்பு

11.1 நோக்கங்கள்

1.1.2 நூல் அறிமுகம்

1.1.3 பாடல் ஆசிரியர்

1.1.4 பாடப் பொருள் விளக்கம்

1.1.4.1 நிலையாமை (அறம்)

1.1.4.2 கல்லாமை (பொருள்)

1.1.4.3 ஊடல் உவகை (இன்பம்)

1.1.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

1.1.6 பாடத் தொகுப்புரை

1.1.7 அருஞ்சொற் பொருள்

1.1.8 மாதிரி வினாக்கள்

1.1.9 பரிந்துரை நூல்கள்

1.1.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

### 1.1.1 நோக்கங்கள்

- திருக்குறள் பற்றியும் திருவள்ளுவர் பற்றியும் அறிதல்.
- மனித வாழ்வின் நிலையாமையை உணர்தல்.
- கல்வி கல்லாமையின் இழிவை அறிதல்.
- இல்லற வாழ்வில் ஊடலால் ஏற்படும் மகிழ்ச்சியை உணர்தல்.

### 1.1.2. நூல் அறிமுகம்

திருக்குறள் உலகப் பொதுமறை என்று அழைக்கப்படுகிறது. இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. குறள் வெண்பாவால் ஆனது. இதில் 1330 குறட்பாக்கள் உள்ளன. அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பால் பிரிவுகளை உடையது. அறத்துப்பாலில் 38 அதிகாரங்களும் பொருட்பாலில் 70 அதிகாரங்களும் இன்பத்துப்பாலில் 25 அதிகாரங்களும் உள்ளன. இந்நூலின் காலம் கி.மு. 31 என்று தமிழறிஞர்கள் வரையறுத்துள்ளனர். இந்நூல் உலகின் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உள்ளமை இதன் தனிச்சிறப்பாகும்.

இந்நூலுக்கு உத்தரவேதம், தமிழ்மறை, பொதுமறை, திருவள்ளுவம், தெய்வநூல், பொய்யாமொழி, முப்பால், வாயுரைவாழ்த்து என்ற வேறு பெயர்களும் உண்டு.

### 1.1.3 பாடல் ஆசிரியர்

இந்நூல் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. திருவள்ளுவரைத் தெய்வப்புலவர் என்று அழைப்பர். இவரைச் செந்நாப்போதர், மாதானுபங்கியார், தேவர், நாயனார், நான்முகனார், பெருநாவலர் என்ற வேறு பெயர்களாலும் அழைப்பர்.

### 1.1.4 பாடப் பொருள் விளக்கம்

அறத்துப்பாலின் நிலையாமை, பொருட்பாலின் கல்லாமை, இன்பத்துப்பாலின் ஊடல் உவகை ஆகியவற்றின் குறளும் அதன் கீழ் பொருள் விளக்கமும் தரப்பட்டுள்ளன.

#### 1.1.4.1 நிலையாமை (அறம்.)

(காண்கின்ற எப்பொருளும் நின்று நிலைக்காமை)

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. (331)

நிலையில்லாப் பொருள்களை நிலைப்பவை என நினைக்கின்ற தாழ்ந்த அறிவுடைமை மிகவும் இழிந்தது.

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. (332)

ஒருவருக்குப் பெருஞ்செல்வம் வந்து சேர்தல், கூத்தரங்கில் கூத்தைக் காணச் சிறிது சிறிதாக மக்கள் கூட்டம் வந்து சேர்வதைப் போன்றது. அச்செல்வம் அழிந்து போதல் ,கூத்து முடிந்ததும் கூட்டமாக மக்கள் வெளியேறுவதைப் போன்றது.

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல். (333)

செல்வம் நிலையில்லாத தன்மையுடையது. அச்செல்வத்தைப் பெற்றால் நிலைத்த அறத்தை அப்பொழுதே செய்க.

நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின். (334)

நாள் என்பது அதன் இயல்பை உணர்கின்றவர்க்கு இன்பம் அளிப்பது போல் காட்டி அவர்தம் வாழ்நாளைச் சிறிது சிறிதாக அறுக்கும் வாள் ஆகும்.

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும். (335)

பேசமுடியாமல் நாக்குழறி விக்குள் ஏற்படும் முன் நல்லறங்களை முனைந்து செய்ய வேண்டும்.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு. (336)

இவ்வுலகம் நேற்று வாழ்ந்த ஒருவன் இன்று இறந்தான் எனச் சொல்லும்படி நிலையாமையை உடையது.

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல. (337)

கணப் பொழுதாயினும் இவ்வுலகில் உறுதியாக வாழ்வோம் என்பதை அறியாதவர் கோடியும் அதற்கு மேலானதும் ஆன எண்ணங்களை எண்ணிக் கொண்டிருப்பர்.

குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு. (338)

உடம்புடன் உயிருக்கு உள்ள தொடர்பு, கூட்டில் தங்கிய பறவை அக்கூட்டை விட்டு வெளியில் பறந்து போவது போன்றதாகும்.

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. (339)

ஒருவனுக்குச் சாவு வருவது உறங்குவது போன்றது. பிறகு பிறப்பு வருவது விழிப்பு போன்றதாகும்.

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு. (340)

வாதம் பித்தம் சிலேட்டுமம்(ஈளை) முதலியவற்றிற்கு இடமாக உள்ள உடம்பினுள் ஒண்டும் குடியாகத் தங்கியிருந்த உயிருக்கு நிலையாகத் தங்கும் இல்லம் அமையவில்லை போலும்.

### 1.1.4..2 கல்லாமை (பொருள்.)

(கல்வி கற்காததால் வரும் இழிவு)

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். (401)

அறிவு உண்டாவதற்குரிய நூல்களைக் கல்லாமல் ஒருவன் கற்றவர் அவையில் ஒரு பொருளைப் பற்றிக் கூறுதல், சூதாடும் களத்தை அமைத்துக் கொள்ளாமல் வட்டு உருட்டியது போன்றது.

கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று. (402)

நூல்களைக் கல்லாதவன் கற்றார் அவையில் ஒரு பொருள் பற்றிக் கூற விரும்புதல் இரு தனங்கள் இல்லாதவள் பெண்மையை அடைய விரும்புதல் போன்றது.

கல்லா தவரும் நனிநல்லார் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின். (403)

தாம் கல்லாமையைத் தாமே அறிந்து கற்றார் அவையில் ஒன்றும் சொல்லாமல் அடங்கி இருப்பாரானால் கல்லாதவரும் மிகவும் நல்லவர் ஆவர்.

கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார். (404)

கல்லாதவன் அறிவுடைமை சில நேரங்களில் அறிவுடையதாக இருப்பினும் அறிடையார் அதனை ஏற்றுக் கொள்ளமாட்டார்.

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். (405)

கல்லாத ஒருவன் தன்னைத்தானே அறிவுடையவனாக மதித்துக் கொள்ளும் பெருமை கற்ற ஒருவன் அவனுடன் உரையாடக் கெடும்.

உளரென்னும் மாத்திரைய ரல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர். (406)

கல்லாதவர் உயிருடன் வாழ்கின்றார் என்று சொல்லும் அளவினரே அல்லாமல் ஒரு பொருளும் விளையாத களர் நிலத்திற்கு ஒப்பானவர் ஆவர்.

நுண்மா ணுழைபுல மில்லான் எழில்நலம்
மண்மான் புனைபாவை யற்று. (407)

நுட்பமான பெருமையுடைய எல்லா நூல்களினும் நுணுகி ஆராய்ந்த புலமை இல்லாதவனுடைய அழகும் தோற்றமும் மண்ணால் செய்யப்பட்ட பொம்மையின் அழகும் தோற்றமும் போன்றதாகும்.

நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு. (408)

கற்றவரிடத்தில் உண்டாகிய வறுமையைக் காட்டிலும் கல்லாதவரிடத்தில் உண்டாகிய செல்வம் மிகுந்த துன்பம் தரும்.

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. (409)

கல்லாதவர் உயர்ந்த குலத்தில் பிறந்தவராயினும் அவர்க்குக் கீழ்க்குலத்தில் பிறந்தும் கற்றவருடன் ஒத்த பெருமை இல்லை.

விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். (410)

விளக்கமான நூல்களைக் கற்றவரோடு கல்லாதவர்கள் விலங்குகளுக்கும் மக்களுக்கும் உள்ள வேறுபாடு உடையவர்.

### 1.1.4.3. ஊடல் உவகை (இன்பம்.)

(இன்பத்திற்குக் காரணமாகிய ஊடலைத் தலைவனும் தலைவியும் ஆகிய இருவரும் புரிந்து மகிழ்தல்)

இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர்அளிக்கு மாறு. (1321)

தலைவரிடத்துத் தவறில்லை எனினும் அவர் நமக்கு அன்பு செய்கின்ற முறை, அவருடன் ஊடலை உண்டாக்கக் கூடியதாக உள்ளது.

ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும். (1322)

ஊடலால் தோன்றும் சிறிய வெறுப்பினால் தலைவருடைய அருள் பெறாமல் போனாலும் பின்னர் அது இன்பம் தரக் கூடியதாகும்.

புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து. (1323)

நிலத்தோடு நீர் சேர்ந்தது போன்று மகளிர் இயல்புடன் கலந்த காதலருடன் ஊடுவது போல நமக்குத் தருகின்ற தேவர் உலகம் உண்டோ?.. இல்லை !..

புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்
உள்ளம் உடைக்கும் படை.. (1324)

தலைவரைத் தழுவிக் கொண்டு பின் விடாமைக்குக் காரணமான ஊடலில் என் உள்ளத்தை உடைக்கும் கருவி தோன்றும்.

தவறில ராயினும் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலி னாங்கொன்று உடைத்து. (1325)

ஆடவர் தம்மிடம் தவறில்லாதவராயினும் தவறு செய்தவர்போல் ஊடல் கொண்டு தாம் விரும்பும் மகளிருடைய மென்மையான தோள்களைச் சேராதபோது அங்கே ஊடல் தோன்றும்.

உணலினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது. (1326)

உணவை உண்டதைக் காட்டிலும் உண்டது செரித்தல் இன்பம் தருவதாகும். அதுபோல இன்பத்திற்குப் புணர்தலைக் காட்டிலும் ஊடல் இன்பம் தருவதாகும்.

ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும். (1327)

இன்பம் கொள்ளும் இருவருள் ஊடலில் தோற்றவர் வெற்றி பெற்றவராவர். அது கூடலால் அறிந்து கொள்ளப்படும்.

ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு. (1328)

இவள் நுதல் வியர்க்கும்படி கூடலில் உன்டான இன்பத்தை இன்னும் ஒரு முறை ஊடலால் பெறுவோமோ?

ஊடுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா. (1329)

ஒளிமிக்க அணிகள் அணிந்த தலைவி இன்னும் என்னுடன் ஊடுவாளாக. நாம் அவளை வணங்கி ஊடல் நீக்கும் வரை இரவு நீள்வதாகுக.

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின். (1330)

காமத்திற்கு இன்பம் காதலர் தமக்குள் ஊடுவதாகும். அவ்வூடலுக்கு இன்பம் அவ்வூடல் நீங்கிக் கூடுவதாகும்.

### 1.1.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

**அ. வினாக்கள்:**

1. செல்வம் நிலையாமைக்கு வள்ளுவர் காட்டும் உவமை யாது?
2. நாள் என்னும் கால அளவை வாள்' எனக் குறள் கூறக் காரணம் யாது?
3. சூதாட்டம் ஆடுவது போன்றது எது?
4. கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் உள்ள வேறுபாடு எத்தகையது?
5. ஊடியவர் உயர்ந்த இன்பம் பெறுவது எப்பொழுது?

**ஆ. சரியா? தவறா?**

1. செல்வம் ஓர் இடத்தில் நிலைக்காத தன்மையுடையது.
2. சாவும் பிறப்பும் உறக்கமும் விழிப்பும் போன்றது .
3. கல்லாதவர் கற்றவர் முன் உரையாடுவது நல்லது.
4. கல்லதாவர் உயர் குடியில் பிறந்தாலும் பெருமையில்லாதவர்.
5. ஊடலில் தோற்றவரே வென்றவர் ஆவார்.

### 1.1.6 பாடத் தொகுப்புரை:

- நிலையாமையை அறியாமல் இருக்கும் சிற்றறிவு இழிவாகும். பெருஞ்செல்வமும் வாழ் நாளும் நிலையில்லாதவை.
- கல்லாதவர் களர் நிலத்திற்கு ஒப்பாவர் . அவர் தம் தோற்றப் பொலிவு மண்ணால் வண்ணம் தீட்டிச் செய்யப்பட்ட பாவை போன்றது.
- ஊடல் கொள்வதிலும் உயர்ந்த இன்பம் இல்லை. ஊடலால் உண்டாகும் இன்பம் உண்ட உணவு செரித்தலில் உண்டாகும் இன்பத்தைக் காட்டிலும் மிகுதியாகும்.

### 1.1.7 அருஞ்சொற் பொருள்:

| | | |
|---|---|---|
| புல்லறிவு | - | சிற்றறிவு |
| அற்கா | - | நிலையில்லாத |
| நெருநல் | - | நேற்று |
| புள் | - | பறவை |
| வட்டு | - | சூதாட்டம் |

| | | |
|---|---|---|
| ஒட்பம் | - | உண்மை அறிவு |
| திரு | - | செல்வம் |
| துனி | - | துன்பம் |
| அளி | - | அன்பு |
| முயக்கம் | - | தழுவுதல் |

### 1.1.8 மாதிரி வினாக்கள்:

**அ. குறு வினாக்கள்**

1. செல்வம் எத்தகையது?
2. எவர் செல்வம் கேடு தரும்?
3. துணைவி ஊடல் கொள்வது ஏன்?

**ஆ. சிறு வினாக்கள்**

1. உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவு எத்தகையது?
2. கல்வி அறிவில்லாதவன் மேன்மை குறைவது எப்பொழுது?
3. ஊடலில் தோன்றும் பயன் எத்தகையது?

**இ. பெரு வினாக்கள்**

1. நிலையாமை பற்றித் தொகுத்து வரைக.
2. கல்லாமை பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?
3. ஊடல் உவகை பற்றிக் குறள் கூறும் கருத்துகள் யாவை?

### 1.1.9 பரிந்துரை நூல்கள்:

1. திருக்குறள் உரை, பரிமேலழகர், திருவல்லிக்கேணி, சென்னை.
2. திருக்குறள் உரை, புலவர் குழந்தை, நான்காம் பதிப்பு, ஈரோடு.
3. திருக்குறள் உரைவளம், தண்டபாணி தேசிகர், பொருட்பால் மற்றும் காமத்துப்பால், (தொகு) தரும்புர ஆதீனம்.

### 1.1.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

**அ. விடைகள்:**

1. கூத்து நிகழ்ச்சிக்கு வந்து சேர்ந்து கூத்து முடிந்ததும் ஒரு சேர விரைந்து போகும் மக்கள் கூட்டம் செல்வம் நிலையாமைக்கு வள்ளுவர் காட்டும் உவமை ஆகும்.
2. நாள் என்னும் கால அளவு ஒரு பொருள் போல் தன்னைக் காட்டி உயிரின் கால அளவை அறுத்துக் குறைக்கும் என்பதால் நாளை வாள் என்று சொல்கிறார்.
3. ஒருவன் நூலைக் கற்காமல் கற்றவர் அவையில் பேச விரும்புதல் சூதாடுவதற்கு உரிய கட்டம் அமைத்துக் கொள்ளாமல் சூதாடுவது போன்றது.
4. ஆறறிவு மக்களுக்கும் ஐயறிவு மக்களுக்கும் உள்ள வேறுபாடு கற்றவர்களுக்கும் கல்லதாவர்களுக்கும் உள்ள வேறுபாடாகும்.
5. ஊடியவர் பின்னர் கூடித் தழுவுவதால் இன்பம் பெறுவர்.

**ஆ. விடைகள்**

1. சரி
2. சரி
3. தவறு
4. சரி

5. சரி

**பிரிவு 11- நாலடியார் - பாட அமைப்பு**

1.2.1 நோக்கங்கள்

1.2.2 நூல் அறிமுகம்

1.2.3 பாடல் ஆசிரியர்

1.2.4 பாடப் பொருள் விளக்கம்

1.2.4.1 தூய்தன்மை (அறம்)

1.2.4.2 நட்பாராய்தல் (பொருள்)

1.2.4.3 கற்புடை மகளிர் (இன்பம்)

1.2.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

1.2.6 பாடத் தொகுப்புரை

1.2.7 அருஞ்சொற் பொருள்

1.2.8 மாதிரி வினாக்கள்

1.2.9 பரிந்துரை நூல்

1.2.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

**1.2.1 நோக்கங்கள்**

- நாலடியார் பாடல்களின் பொருட் சிறப்பையும் கருத்தாழத்தையும் அறிதல்.
- தூய தன்மை என்பது பற்றி நன்கு விளங்கிக் கொள்ளுதல்.
- மனித வாழ்வில் சிறந்த நண்பர்கள் யார் என்பதை நுட்பமாக அறிந்து கொள்ளுதல்.
- கற்புடைய மகளிரின் இயல்பு எத்தன்மைத்து என அறிதல்.

**1.2.2 நூல் அறிமுகம்**

நாலடியார், திருக்குறளுக்கு அடுத்து வைத்து எண்ணப்படும் சிறந்த அறநூல் ஆகும். இந்நூல் நாலடி என்றும் நாலடி நானூறு என்றும் அழைக்கப்படும். இதில் 400 வெண்பாக்கள் உள்ளன. இது அறம், பொருள், இன்பம் என மூன்று இயல்களை உடையது. அறத்துப்பாலில் 2 இயல்களும் 13 அதிகாரங்களும் பொருட்பாலில் 7 இயல்களும் 24 அதிகாரங்களும் இன்பத்துப்பாலில் 2 இயல்களும் 3 அதிகாரங்களும் உள்ளன.

**1.2.3 பாடல் ஆசிரியர்**

இந்நூலைச் சமண முனிவர்கள் பாடினர் என்பர். பதுமனார் என்பவர் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடி, இந்நூலைத் தொகுத்தார்.

**1.2.4 பாடப் பொருள் விளக்கம்**

அறத்துப்பாலில் தூய்தன்மை, பொருட்பாலில் நட்பாராய்தல், இன்பத்துப்பாலில் கற்புடை மகளிர் ஆகியவற்றின் பாடலும் அதன் கீழ் பொருள் விளக்கமும் தரப்பட்டுள்ளன.

**1.2.4.1 தூய்தன்மை(அறம்)**

(தூய தன்மை இல்லாமை பற்றி உரைத்தல்.)

மாக்கேழ் மடநல்லாய் என்றரற்றும் சான்றவர்
நோக்கார்கொல் நொய்யதோர் புக்கிலை -யாக்கைக்கோர்
ஈச்சிற கன்னதோர் தோல் அறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல். (41)

மாந்தளிர் போன்ற நிறமும் இளமையும் உடைய பெண்ணே! என்று பெண்களைப் பார்த்து பிதற்றும் அறிவுடையோர், அற்பமான உடம்பின் இயல்பினை எண்ணமாட்டார்களா? உடம்பில் ஈயின் சிறகு அளவான சிறிய தோல் அறுபட்டாலும் அந்த இடத்தில் உள்ள புண்ணை நோக்கி வரும் காக்கையை விரட்ட ஒரு கோல் வேண்டும்.

தோல்போர்வை மேலும் தொளைபலவாய்ப் பொய்ம்மறைக்கும்
மீப்போர்வை மாட்சித்து உடம்பானால் மீப்போர்வை
பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்
பைம்மறியாப் பார்க்கப் படும். (42)

உள்ளே உள்ள அழுக்கை , பல துளைகள் உள்ள தோலாகிய போர்வையினால் மறைக்கின்ற பெருமையுடையது இவ்வுடம்பு. எனவே மேல் போர்வையால் உள்ளே இருக்கும் அழுக்கை மறைக்காமலும் ஆசை மொழி கூறாமலும் அந்த உடம்பை ஒரு பையைத் திருப்பிப் பார்ப்பது போல் எண்ண வேண்டும்.

தக்கோலம் தின்று தலை நிறையப் பூச்சூடி
பொய்க்கோலம் செய்ய ஒழியுமே-எக்காலும்
உண்டி வினையுள் உறைக்கும் எனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல். (43)

எப்பொழுதும் உண்பது உடம்பின் உள்ளே அழுக்கை அதிகரிக்கும் என்று அறிந்து பெரியோர் விலக்கினர். ஆனால் ஆசை என்னும் மயக்கத்தால் உண்டாகும் உடம்பின் அழுக்கு (கெட்ட நாற்றம் ) வால்மிளகு, வெற்றிலை, பாக்கு முதலிய வாசனைப் பொருட்களை வாயிலிட்டு மென்று தின்று, தலை நிறைய வாசனை மலர் சூடிச் செயற்கையாக அலங்காரம் செய்வதால் ஒழியுமா? ஒழியாது.

தெண்ணீர்க் குவளை பெருங்கயல் வேலென்று
கண்ணில்புன் மாக்கள் கவற்ற விடுவெனோ
உண்ணீர் களைந்தக்கால் நுங்குசூன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன். (44)

உள்ளே இருக்கும் நீரை நீக்கினால் பனை நுங்கானது தோண்டி எடுத்தது போல் காணப்படும் கண்ணின் இயல்பை அறிந்து, பற்றற்ற நான், மகளிரின் கண்களைத் தெளிந்த நீரிலே உள்ள குவளைப் பூ, புரளும் கயல்மீன், வேற்படை என்றெல்லாம் கூறி அறிவற்ற அற்ப மனிதர்கள் எனது மனதைத் துன்புறுத்த விடுவேனோ? (ஒழுக்கத்தை விட மாட்டேன்.)

முல்லை முகைமுறுவல் முத்தென் றிவைபிதற்றும்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவெனோ
எல்லோரும் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன். (45)

எல்லோரும் காண, சுடுகாட்டில் உதிர்ந்து இருக்கின்ற பல்லாகிய எலும்புகளைப் பார்த்துப் பற்றற்ற நான், மகளிரின் பற்களை முல்லை அரும்புகள், முத்துகள் என்றெல்லாம் கூறிப் பிதற்றும் நூலறிவில்லாக் கீழ் மக்கள் எனது உள்ளத்தைத் துன்புறுத்த விடுவேனோ? (ஒழுக்கத்தை விட மாட்டேன்.)

குடருங் கொழுவுங் குருதியும் என்பும்
தொடரும் நரம்பொடு தோலும்-இடையிடையே
வைத்த தடியும் வழும்புமாம் மற்றிவற்றுள்

எத்திறத்தாள் ஈர்ங்கோதை யாள். (46)

குடலும், கொழுப்பும், இரத்தமும், எலும்பும்,தொடர்ந்துள்ள நரம்பும், தோலும், இவற்றுக்கிடையே உள்ள தசைகளும் நிணமும் ஆகிய இவற்றில் குளிர் மாலை அணிந்த பெண் எந்தப் பகுதியைச் சேர்ந்தவள்? (எனவே இவற்றின் சேர்க்கையான உடம்பில் பற்று வைத்து அறத்தை விடக்கூடாது.)

ஊறி உவர்த்தக்க ஒன்பது வாய்ப்புலனும்

கோதிக் குழம்பலைக்கும் கும்பத்தை - பேதை

பெருந்தோளி பெய்வளையாய் என்னும் மீப்போர்த்த

கருந்தோலால் கண்விளக்கப் பட்டு. (47)

உடலாகிய ஒரு குடம் வெறுக்கத்தக்க ஒன்பது துளைகளை உடையது. அத்துளைகளின் வழியாக உள்ளே ஊறிய அழுக்காகிய குழம்புகள் வெளிப்படும். அத்தகைய உடம்பைப் பார்த்து அறிவில்லாத ஒருவன், மேலே போர்த்தப்பட்டிருக்கும் அழகிய தோலால் கண்கள் கவரப்பட்டு, 'பெருத்த தோளை உடையவளே! வளையல்களை அணிந்தவளே! என்று பலவாறு உரைப்பான். (அறிவற்றவன் உடம்பின் புற அழகைக் கண்டு மயங்குவான்.)

பண்டம் அறியார் படுசாந்தும் கோதையும்

கண்டுபா ராட்டுவார் கண்டிலர்கொல்-மண்டிப்

பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்தும்

முடைச்சாகாடு அச்சிற்று உழி. (48)

உடம்பு என்னும் பண்டத்தின் இயல்பை அறியாதவர், அதன் மேல் பூசப்படும் சந்தனத்தையும் அணியும் மலர் மாலையையும் பார்த்துப் பாராட்டுவர். அவர்கள் முடை நாற்றம் உள்ள இவ்வுடம்பாகிய வண்டியை, அதன் அச்சாகிய உயிர் முறிந்தபின் பெண்ணும் ஆணுமாகிய வலிமையான கழுகுகள் வந்து புரட்டிப் புரட்டிக் குத்தித் தின்பதைப் பார்க்கவில்லையா?

கழிந்தார் இடுதலை கண்டார்நெஞ் சுட்கக்

குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி ஒழிந்தாரைப்

போற்றி நெறிநின் இற்றிதன்மின் பண்பென்று

சாற்றுங்கொல் சாலச் சிரித்து. (49)

சுடுகாட்டில் எரிக்கப்பட்ட இறந்தவர்களின் தலைகள், பார்ப்பவர் மனம் அஞ்சுமாறு, பள்ளமாக உள்ளே உள்ள கண்களாகத் தோன்றும். மேலும் இறக்காமல் இருக்கும் மற்றவர்களைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கும், 'இவ்வுடம்பின் தன்மை இப்படிப்பட்டது, ஆகவே அறத்தைப் போற்றி நல்ல வழியில் செல்லுங்கள் என்று கூறுவது போலத் தோன்றும்.

உயிர்போயார் வெண்டலை உட்கச் சிரித்துச்

செயிர்தீர்க்குஞ் செம்மாப் பவரை-செயிர்தீர்ந்தார்

கண்டிற்றிதன் வண்ணம் என்பதனால் தம்மையோர்

பண்டத்துள் வைப்ப திலர். (50)

இறந்தவர்களின் மண்டை ஓடுகள், பார்ப்பவர் அஞ்சும்படி சிரித்து இல்லறத்தில் இறுமாந்தவர்களின் குற்றத்தை நீக்கும். குற்றம் நீங்கியவர்கள் உண்மையை உணர்ந்து உடம்பின் இயல்பு இத்தகையது என்பதை அறிந்து, தம்முடைய உடம்பை ஒரு பொருளாக மதிக்கமாட்டார்கள்.

### 1.2.4.2 நட்பாராய்தல் (பொருள்.)

(நட்புக்குரியவரை ஆராய்ந்து அறிதல்.)

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை எஞ்ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே-குருத்திற்கு
எதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ என்றும்
மதுரம் இலாளர் தொடர்பு. (211)

கரும்பை நுனியிலிருந்து தின்றால் இனிமை அதிகமாவதுபோல நூல்களைக்கற்று உணர்ந்தோர் நட்பு நாளுக்கு நாள் இனிமை மிகும். அதற்கு எதிர் பக்கம் தின்றால் இனிமை குறைவது போல் கல்லாதவர் நட்புச் சுவை குறைந்து வெறுக்கப்படும்.

இற்பிறப்பு எண்ணி இடைதிரியார் என்பதோர்
நற்புடை கொண்டமை யல்லது-பொற்கேழ்
புனலொழுகப் புள்ளரியும் பூங்குன்ற நாட!
மனமறியப் பட்டதொன் றன்று. (212)

மலை நாடுகளுடைய மன்னனே! ஒருவரின் உயர் குடிப் பிறப்பைப் பார்த்து, இவர் இடையில் மாறமாட்டார் என்னும் நம்பிக்கையுடன் நட்பு கொள்வதுடன் பிறருடைய மனநிலையை அறிந்து நட்பு கொள்ளுதல் வேண்டும்.

யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்-யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய். (213)

யானை போன்ற பெருமையுடையவரது நட்பை விட நாய் போன்ற இழிவுடையவரது நட்பை விரும்பிக் கொள்ளல் வேண்டும். ஏனெனில் யானை பலநாள் பழகிய பாகனையே சமயம் நேரும் பொழுது கொல்லும். ஆனால் நாயோ தன்னை வளர்த்தவன் சினம் கொண்டு எறிந்த வேல் தனது உடலில் அழுந்தி இருந்தாலும் வாலை ஆட்டி அவன் அருகே செல்லும்.

பலநாளும் பக்கத்தா ராயினும் நெஞ்சில்
சிலநாளும் ஒட்டாரோடு ஒட்டார் - பலநாளும்
நீத்தார் எனக்கை விடலுண்டோ தம்நெஞ்சத்து
யாத்தாரோடு யாத்த தொடர்பு. (214)

அறிவுடையோர் பல நாள் பக்கத்தில் இருந்து பழகுவராயினும் சில பொழுதும் தன் மனதுடன் பொருந்தாதவருடன் சேரமாட்டார்கள். ஆனால் தம் நெஞ்சம் விரும்பியவருடன் கொண்ட நட்பினை , தம்மை விட்டுப் பல நாள் நீங்கி இருந்தார்கள் என்று அவர்களைக் கைவிடுவார்களோ? கைவிடமாட்டார்கள்.

கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பாகி - தோட்ட
கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரும் நட்பாரும் இல். (215)

கொம்பிலே பூக்கும் பூக்கள் மலர்ந்தது முதல் குவியாமல் இருப்பது போல முதல் நாள் முதல் இறுதி வரை உள்ளம் மகிழ்ந்து விரும்பி இருப்பவரது நட்பு நட்பாகும். அப்படி இல்லாமல் தோண்டப்பட்ட குளத்திலே இருக்கும் பூவைப் போலே முதலில் மலர்ச்சியைக் காட்டி பின்பு முகம் சுருங்கும் இயல்புடையவரது நட்பை விரும்புபவரும் நட்பு கொள்பவரும் இல்லை.

கடையாயார் நட்பிற் கமுகனையார் ஏனை
இடையாயார் தெங்கின் அனையர் - தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன்று இட்டஞான்று இட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு. (216)

நட்பின் தன்மையாவது , கடையானவர் நாளும் நீர் பாய்ச்சி வளர்க்க உதவும் பாக்கு மரம் போல நாளும் உதவி செய்தால்தான் பயன்படுவர். இடையானவர் இடையிடையே நீர் பாய்ச்சி வளர்த்து வந்தால் உதவும் தென்னை மரம் போல் அவ்வப்போது உதவி செய்து வந்தால் பயன்படுவர். ஒரு முறை செய்த நட்பினைப் பாராட்டும் தலையானவர் விதை போட்ட நாளில் ஊற்றிய நீர் அன்றி பிறகு ஒரு பராமரிப்பும் செய்யாமலே உதவும் பனை மரம் போலப் பயன்படுவர்.

கழுநீருள் காரட கேனும் ஒருவன்
விழுமிதாக் கொள்ளின் அமிழ்தாம் - விழுமிய
குய்த்துவையார் வெண்சோறே யாயினும் மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய். (217)

அரிசி கழுவிய நீரிலே உப்பின்றி சமைத்த கறுத்த கீரை உணவாக இருந்தாலும் ஒருவன் அன்புடன் பெற்றால் அது அமிழ்தமாகும். ஆனால் தாளித்த துவையலுடன் வெள்ளிய சோறாக இருந்தாலும் அன்பிலாதவர் கையில் இருந்து வாங்கி உண்பதாக இருந்தால் அது எட்டிக் காயைத் தின்பது போலாகும்.

நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்
சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும் செய்விளைக்கும்
வாய்க்கால் அனையர் தொடர்பு. (218)

நாயின் காலில் உள்ள சிறு விரல்கள் போன்றவரது நெருங்கிய நட்பை விட ஈயின் கால் அளவாவது உதவி செய்யாதவரது நட்பினால் என்ன பயன் கிடைக்கும். ஒரு பயனும் கிடைக்காது. எனவே வயல் விளைச்சலுக்குப் பயன்படும் வாய்க்கால் போன்றோரின் நட்பைத் தூரத்தில் இருந்தாலும் சென்று பெற வேண்டும்.

தெளிவிலார் நட்பின் பகைநன்று சாதல்
விளியா அருநோயின் நன்றால் - அளிய
இகழ்தலின் கோறல் இனிதேமற் றில்லா
புகழ்தலின் வைதலே நன்று. (219)

அறிவில் தெளிவில்லாதவர் நட்பை விட அவரது பகை நல்லது. மருந்தால் தீராத கொடு நோயை விட சாவது நல்லது. ஒருவரது மனம் வருந்த இகழ்வதைவிட அவரைக் கொல்வது நல்லது. ஒருவரிடம் இல்லாததைக் கூறி புகழ்வதை விடப் பழித்தல் நல்லது.

மரீஇப் பலரோடு பன்னாள் முயங்கிப்
பொரீஇப் பொருள்தக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ உயிர்செகுக்கும் பாம்பொடும் இன்னா
மரீஇப் பின்னைப் பிரிவு. (220)

பலருடன் சேர்ந்து பலநாள் பழகி பலர் குணங்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்து தகுந்த மேலோரை நண்பராகக் கொளல் வேண்டும். ஏனென்றால் பல்லால் கடித்து உயிரைக் கொல்லும் பாம்பாக இருந்தாலும் பழகிய பிறகு பிரிந்தால் துன்பம் தரும்.

### 1.2.4.3 கற்புடை மகளிர் (இன்பம்)

(கற்புடைய மகளிரின் இயல்பைச் சொல்வது)

அரும்பெறற் கற்பின் அயிராணி யன்ன
பெரும்பெயர்ப் பெண்டிர் எனினும்- விரும்பிப்
பெறுநசையால் பின்னிற்பார் இன்மையே பேணும்
நறுநுதலாள் நன்மைத் துணை. (381)

கற்புடைய இந்திராணியைப் போன்ற புகழ்மிக்க பெண்களே ஆனாலும் அவர்களுள் தன்னைப் பெறவேண்டும் என்னும் ஆசையால் தன் பின்னால் ஆண்கள் நிற்காத வகையில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒருத்தியே சிறந்த மனைவியாவாள்.

குடநீர்அட் டுண்ணும் இடுக்கண் பொழுதும்
கடல்நீர் அறவுண்ணும் கேளிர் வரினும்
கடன்நீர்மை கையாறாக் கொள்ளும் மடமொழி
மாதர் மனைமாட்சி யாள். ( 382 )

ஒரு குடத்தில் இருக்கும் தண்ணீரையே காய்ச்சிக் குடிக்கத்தக்க வறுமை ஏற்பட்டாலும் கடல் நீர் வற்றுமாறு பருகும் அளவுக்கு மிகுந்த எண்ணிக்கையில் உறவினர் வந்தாலும் விருந்தோம்பும் பண்பை வாழ்க்கையின் ஒழுக்கமாகக் கொண்டு பேசும் பெண் இல்வாழ்க்கைக்குரிய சிறந்த குணம் உடையவள் ஆவாள்.

நாலாறும் ஆறாய் நனிசிறிதாய் எப்புறனும்
மேலாறு மேலுறை சோரினும்- மேலாய
வல்லாளாய் வாழும்ஊர் தற்புகழும்மாண் கற்பின்
இல்லாள் அமர்ந்ததே இல். (383)

சுவர்கள் இடிந்து நான்கு பக்கமும் வழியாகி மிகச்சிறியதாகி எல்லா இடங்களிலும் கூரைமேலிருந்து மழை வீழ்ந்தாலும் இல்லறக் கடமைகளைச் செய்யக் கூடியவளாய் தான் வாழும் ஊரில் உள்ளவர் தன்னைப் புகழுமாறு கற்புடையவளாய் திகழும் மனைவி இருக்கும் இல்லமே சிறந்த இல்லமாகும்.

கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள்- உட்கி
இடனறிந்து ஊடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண். (334)

கண்ணுக்கு இனிய அழகுடையவளாய் தன் கணவன் விரும்புமாறு அலங்கரித்துக் கொள்பவளாய் அச்சமுடையவளாய் ஊரார் பழிக்கு நாணுபவளாய் நேரமறிந்து கணவனுடன் ஊடல் கொண்டும் அவ்வூடலில் இருந்து நீங்கி அவனுக்கு மகிழ்ச்சியைத் தரும் இனிய மொழி உடையவள் நல்ல பெண் ஆவாள்,

எஞ்ஞான்றும் எம்கணவர் எம்தோள்மேல் சேர்ந்தெழினும்
எஞ்ஞான்று கண்டேம்போல் நாணுதுமால்- எஞ்ஞான்றும்
என்னை கெழீஇயினர் கொல்லோ பொருள்நசையால்
பன்மார்பு சேர்ந்தொழுகு வார். (335)

நாள் தோறும் எம் கணவர் எம் தோள் தழுவி எழுந்தாலும் முதல் நாள் நாணம் அடைந்தது போலவே இன்றும் அடைகின்றோம். ஆனால் பொருளாசையால் பலரையும் தழுவும் பொது மகளிர் எப்படித்தான் நாணம் இன்றி தழுவுகின்றனரோ (கற்புடைய பெண்களுக்கு நாணமும் ஒரு அழகாகும்).

உள்ளத் துணர்வுடையாள் ஓதிய நூலற்றால்
வள்ளன்மை பூண்டான்கண் ஒண்பொருள்- தெள்ளிய
ஆண்மகன் கையில் அயில்வாள் அனைத்தரோ
நாணுடையாள் பெற்ற நலம். (386)

இயல்பாகவே கொடைக்குணம் உடையவனிடம் கிடைத்த செல்வம் முன்னறிவு உடையவன் கற்ற கல்வி போல எவர்க்கும் பயன்படும். நாணம் மிக்க குலமகளின் அழகு சிறந்த வீரனின் கையில் உள்ள கூர்வாள் போல் எவராலும் நெருங்க இயலாது.

கருங்கொள்ளும் செங்கொள்ளும் தூணிப் பதக்கென்று
ஒருங்கொப்பக் கொண்டானாம் ஊரான்- ஒருங்கொவ்வா
நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்பன் நீராடாது
என்னையும் தோய வரும். (387)

ஒரு சிற்றூரான் கருங்கொள் செங்கொள் ஆகிய இரண்டையும் வேறுபாடு இல்லாமல் ரூபாய்க்கு ஆறு மரக்கால் என வாங்கிக் கொண்டானாம். அதுபோல என்னுடன் இணையில்லாத பொது மகளிரைக் கூடிய கணவன் குளிக்காமல் என்னையும் கூட வருகிறான் (கற்புடைய மகளிர் அகத்தூய்மை புறத்தூய்மை இரண்டும் உடையவர்).

கொடியவை கூறாதி பாணநீ கூறின்
அடிபைய இட்டொதுங்கிச் சென்று-துடியின்
இடக்கண் அனையம்மாம் ஊரற்கு அதனால்
வலக்கண் அனையார்க்கு உரை. (388)

பாணனே! எம்மிடம் கொடிய சொற்களைக் கூறாதே. ஏனென்றால் நாங்கள் தலைவனுக்கு உடுக்கையின் இடது பக்கம் போலப் பயன்படாதவர்களாக உள்ளோம். சில சொல்ல வேண்டிய சொற்களை இங்கிருந்து விலகிச் சென்று உடுக்கையின் வலப்பக்கத்தைப் போலத் தலைவனுக்குப் பயன்படும் பொதுமகளிருக்குச் சொல். (கற்புடைய பெண் தன் கணவன் பற்றிய எந்தப் பழிப்புரையையும் கேட்கவிரும்ப மாட்டாள்.)

சாய்ப்பறிக்க நீர்திகழும் தண்வய லூரன் மீது
ஈப்பறக்க நொந்தேனும் யானேமன்- தீப்பறக்கத்
தாக்கி முலைபொருத தண்சாந்து அணியகலம்
நோக்கி இருந்தேனும் யான். (389)

நீரால் சூழப்பட்ட குளிர்ந்த வயல்கள் விளங்கும் ஊரில் உள்ள தலைவன் மீது முன்பு ஈ பறந்தாலும் அது கண்டு வருந்தியவளும் யானே. இப்போது பொதுமகளிரைக் கூடித் தன் மார்பில் சந்தனம் கலைந்த தலைவனைப் பொறுமையோடு பார்த்துக் கொண்டிருப்பவளும் நானே (கற்புடைய மகளிர் தம் கணவர் பரத்தையரைக் கூடிய போதும் பொறுத்திருக்கும் இயல்புடையவர் என்பது கருத்து).

அரும்பவிழ் தாரினாள் எமஅருளும் என்று
பெரும்பொய் உரையாதி, பாண-கரும்பின்
கடைக்கண் அனையர்நாம் ஊரற்கு அதனால்
இடைக்கண் அனையர்க்கு உரை. (390)

பாணனே! மலர்ந்த மாலை அணிந்த தலைவன் எமக்கு அருள்புரிவார் என்று பொய்யான சொற்களைச் சொல்லாதே. ஏனெனில் நாங்கள் கரும்பின் கடைசிக் கணுக்களை ஒத்து இருக்கிறோம். அதனால் இப்பேச்சை இடையில் உள்ள

கணுக்களைப் போன்ற பரத்தையரிடம் சொல். (குல மகளிர் எப்போதும் அடிக்கரும்பு போல் இருக்க விரும்புவர்.)

### 1.2.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

**அ. வினாக்கள்**

1. உடம்பின் புண்மை எப்பொழுது புலப்படும்?
2. எவர், உடம்பின் புற அழகைக் கண்டு மயங்குவார்?
3. நாலடியார் கரும்பின் சுவையை நட்புடன் எவ்வாறு பொருத்திக் காட்டுகிறது?
4. எவருடைய நட்பை நாடிப் பெறவேண்டும்?.
5. இல்வாழ்க்கைக்குரிய பெண்ணின் குணத்தைக் கூறுக?

**ஆ. சரியா ? தவறா?.**

1. அறிவுடையோர் அற்ப உடம்பின் இயல்பினை எண்ணிப் பார்க்க மாட்டார்கள்.
2. உடம்பின் தூய்மையில்லாத் தன்மை கண்டு அறத்தைப் போற்றி நன்னெறியில் நிற்க வேண்டும்.
3. நட்புக்கு மனக்கருத்தை அறிய வேண்டியதில்லை.
4. முகமலர்ச்சியுடன் பழகுவதே நட்புக்கு அழகாகும்.
5. கற்புடைய மகளிருக்கு நாணமும் ஓர் அழகாகும்.

### 1.2.6 பாடத் தொகுப்புரை:

- அறிவுடையவர்கள் பெண்களின் இளமை அழகை நோக்கிப் பிதற்றமாட்டார்கள். உடலின் உள்ளே இருக்கும் அழுக்கின் நாற்றம் வாசனைப் பொருள்களை அணிந்து கொள்வதால் அழியாது.
- கற்றறிந்தவர் நட்பு கரும்பின் குருத்திலிருந்து அடிநோக்கி தின்பது போல் ஆகும். தீயவர் நட்பு கரும்பை அடியிலிருந்து நுனி நோக்கித் தின்பது போல் ஆகும். மனப் பொருத்தம் உடையவரை நண்பர் ஆக்கிக் கொள்ள வேண்டும்.
- வறுமை வந்தாலும் கடலளவு சுற்றத்தார் வந்தாலும் விருந்தோம்பும் குணமுடையவளே இல்வாழ்க்கைக்குரிய பெண் ஆவாள். கற்புடைய பெண் தன் கணவனைப் பற்றிய எந்தப் பழிப்புரையையும் கேட்க விரும்பமாட்டாள்.

### 1.2..7 அருஞ்சொற் பொருள்:

| | | |
|---|---|---|
| மடம் | - | இளமை |
| மயல் | - | மயக்கம் |
| கொழு | - | கொழுப்பு |
| கேண்மை | - | நட்பு |
| கோடு | - | கொம்பு |
| காஞ்சிரங்காய் | - | எட்டிக்காய் |
| நசை | - | ஆசை |
| மடமொழி | - | இனியமொழி |
| நலம் | - | அழகு |
| அகலம் | - | மார்பு |

### 1.2.8 மாதிரி வினாக்கள்

**அ. குறு வினாக்கள்**

1. உடம்பின் பெருமை யாது?
2. எத்தகையோர் நட்பைக் கொள்ளவேண்டும்?
3. நுண்ணறிவாளான் கல்வி எவ்வாறு இருக்க வேண்டும்?

**ஆ. சிறு வினாக்கள்**

1. பூச்சூடிப் பொய்க்கோலம் செய்ய ஒழியுமே - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக
2. முகமலர்ச்சியுடன் பழகுவதே நட்புக்கு அழகாகும் எங்ஙனம்?
3. குலமகள் அழகு எத்தகையது?

**இ. பெரு வினாக்கள்**

1. நாலடியார் கூறும் மனித உடலின் தூய்மையில்லாமையைத் தொகுத்துக் கூறுக?
2. நட்பாராய்தல் பற்றிய நாலடியார் கருத்துகள் யாவை?
3. கற்புடைய மகளிரின் இயல்புகளைக் கூறுக?

### 1.2..9 பரிந்துரை நூல்

சமண மாமுனிவர்கள் அருளிய, ‘ நாலடியார்’ மூலமும் தெளிவுரையும், வர்த்தாணன் பதிப்பகம்., 141, உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை-600017.

### 1.2.10. தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

**அ. விடைகள்**

1. உள்ளே உள்ள அழுக்கைத் தோல் போர்வையால் மறைத்துள்ளது இவ்வுடம்பு. இவ்வுடம்பை ஒரு பாயைத் திருப்பிப் பார்ப்பது போல எண்ணிப் பார்த்தால் உடம்பின் புன்மை புலப்படும்.
2. அறிவில்லாத ஒருவன் மேலே போர்த்திருக்கும் அழகான தோலினால் கண்கள் கவரப்பட்டுப் பெண்களின் புற அழகைக் கண்டு மயங்குவான்.
3. கற்றறிந்தவர் நட்பு கரும்பின் குருத்திலிருந்து அடிநோக்கித் தின்பது போல் ஆகும். தீயவர் நட்பு கரும்பை அடியிலிருந்து நுனி நோக்கித் தின்பதுபோல் ஆகும் என நாலடியார் கரும்பின் சுவையை நட்புடன் பொருத்திக் காட்டுகிறது.
4. வயலால் தனக்கு ஒரு பயனும் இல்லையென்றாலும் தூரத்து நீரைக் கொண்டு வந்து வயலை விளைவிக்கும் வாய்க்கால் போன்ற பண்புள்ளவர்களின் நட்பை நாடிப் பெற வேண்டும்.
5. ஒரு குடத்து நீரையே காய்ச்சிக் குடிக்கும் நிலைமை வந்தாலும் அளவு மிகுந்த சுற்றத்தார் வந்தாலும் விருந்தோம்பும் குணத்தை ஒழுக்கமாகக் கொண்டு இனிய மொழி பேசும் பெண் இல்வாழ்க்கைக்குரிய குணம் உடையவள் ஆவாள்.

**ஆ. விடைகள்**

1. சரி
2. சரி
3. தவறு
4. சரி
5. சரி

**பிரிவு 111. நீதி நூல் - பாட அமைப்பு**

13.1 நோக்கங்கள்
1.3.2 நூல் அறிமுகம்
1.3.3 பாடல் ஆசிரியர்
1.3.4 பாடப் பொருள் விளக்கம்
1.3.4.1 தெய்வமுண்டெனல்
1.3.4.2 தாய் தந்தையரை வணங்கல்
1.3.4.3 மாதரைப் படிப்பித்தல்
1.3.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்
1.3.6 பாடத் தொகுப்புரை
1.3.7 அருஞ்சொற் பொருள்
1.3.8 மாதிரி வினாக்கள்
1.3.9 பரிந்துரை நூல்
1.3.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

**1.3.1 நோக்கங்கள்**

- ஆசிரியரையும் நூலையும் அறிதல்.
- தெய்வம் இருப்பதை ஏதுக்களால் உணர்தல்.
- தாய் தந்தையின் சிறப்பினைத் தெரிதல்.
- பெண் கல்வியின் தேவையை எண்ணிப் பார்த்தல்.

**1.3.2 நூல் அறிமுகம்**

நீதிநூல் 613 பாடல்களைக் கொண்டது. 1858இல் வெளியிடப்பட்டது. எளிமை, தெளிவு, இனிமை, செறிவு, அறிவு, திட்பநுட்பம் உடையது.

**1.3.3 பாடல் ஆசிரியர்**

இந்நூலாசிரியர் வேதநாயகம் பிள்ளை திருச்சிக்கு அருகில் உள்ள குளத்தூரில் தந்தை சவரிமுத்துப் பிள்ளைக்கும் தாய் ஆரோக்கிய மரியம்மாளுக்கும் 14-10-1826 இல் பிறந்தார். தன் 11ஆம் வயதிலேயே தமிழ், ஆங்கிலம் முறையாகக் கற்றுத் தேர்ந்தார். இவர் 1848இல் திருச்சி வழக்கு மன்றத்தில் பதிவுப் பொறுப்பாளராகவும், பின் மொழிபெயர்ப்பாளராகவும், 1857இல் தரங்கம்பாடியில் முனிசீப்பாகவும் பணி புரிந்தார். 1876இல் தமிழில் பிரதாப முதலியார் சரித்திரம் என்ற முதல் புதினநூலை எழுதினார். நீதிநூல், பெண்மதிமாலை, சுகுண சுந்தரி சரித்திரம், தேவமாதா அந்தாதி, திருவருள் அந்தாதி, திருவருள் மாலை போன்ற பிற நூல்களையும் எழுதி உள்ளார்.

**1.3.4 பாடப் பொருள் விளக்கம்**

தெய்வமுண்டெனல், தாய் தந்தையரை வணங்கல், மாதரைப் படிப்பித்தல் ஆகியவற்றின் பாடலும் அதன் கீழ் பொருள் விளக்கமும் தரப்பட்டுள்ளன.

**1.3.4.1 தெய்வமுண்டெனல்**

(எடுத்துக் காட்டுகளால் தெய்வம் உண்டு எனக் கூறல்)

மண்டப மாதி கண்டோர் மயனுளன் என்னல் போலுங்
குண்டல முதல்கண் டோற்பொற் கொல்லனுண் டென்னல் போலும்
ஒண்டுகில் கண்டோர் நெய்தோன் ஒருவனுண் டென்னல் போலும்
அண்டமற் றகண்டஞ் செய்தோன் உளனென அறிவாய் நெஞ்சே. (1)

மண்டபம் குண்டலம் ஆடை முதலிய பொருள்களைக் காண்போர் முறையே கொற்றன், தட்டான், நெய்வோன் ஒருவன் இருக்கின்றான் என்று உய்த்து உணர்ந்து

கொள்வது போல உலகத்தையும் பிறவற்றையும் காண்போர் இவற்றைப் படைத்து அருளிய முழு முதல் ஒன்று உள்ளது என்று நெஞ்சே நீ உணர்வாய்.

தீட்டுவோன் இன்றி யாமோ சித்திரந் திகழ்பொற் பாவை
யாட்டுவோன் இன்றித் தானே யாடுமோ திவவி யாழின்
மீட்டுவோன் இன்றிக் கீதம் விளையுமோ சராச ரங்கள்
நாட்டுவோன் ஒருவனின்றி நன்கமைந் தொழுகுங் கொல்லோ. (2)

சித்திரம், பாவை, யாழ் முதலியன முறையே வரைபவரையும் ஆட்டுபவரையும் மீட்டுபவரையும் இல்லையென்றால் வெளிப்படாதது போல இயங்குவதும் நிலைத்ததுமான உயிரினங்கள் கடவுளை இன்றி உடல் பெற்று இவ்வுலகத்தில் தோன்றா.

மரமுத லசைத லாற்கா லுளதென மதிப்பா ரெங்கும்
பரவிய புகையாற் செந்தீ யுளதெனப் பகர்வார் சுற்றும்
விரவிய மணத்தாற் பாங்கர் வீயுள தென்று தேர்வார்
பரனுள னெனுமுண்மைக்குப் பாரெலாஞ் சான்று மன்னோ. (3)

மரம் முதலியவற்றின் அசைவால் காற்றும், புகையால் தீயும் நறுமணத்தால் பூவும் உண்டு என மதிப்பர்; அது போல இவ்வுலகத்தால் கடவுள் உண்டு என்னும் உண்மை பெறப்படும்.

நாதனில் லாத வீடு நாளுமே நடவா தென்னில்
வேதநா யகனி லானேல் விரிகதிர் மீனு தித்தல்
சீதநீர் பெயல்தருக்கள் சீவரா சிகள்க தித்தல்
பூதபௌ தீக மெல்லாம் புரையற ஒழுகற் பாற்றோ. (4)

தலைவன் இல்லாமல் வீடு இயங்காதது போலக் கடவுள் இல்லாத உலகமும் உலகத்தில் ஞாயிறு திங்கள் விண்மீன் தோன்றுதலும் மழை பெய்தலும் உயிர்கள் வாழ்தலும் நிகழா.

பூதம்யா வுக்கும் ஏணாய்ப் பொருந்திய விசும்பைக் காற்றை
வேதனு லதனை மண்ணோர் மெய்யுரை யுயிரை நெஞ்சை
ஏதமிலறத்தைக் கண்ணாற் பார்த்திலோமெனி னுழண்டென்று
ஓதல்போல் தெய்வந்தானொன் றுளதெனல் தேற்ற மம்மா.(5)

நிலம் நீர் தீ காற்று ஆகாயம் ஆகிய பூதங்களுக்கு ஆதாரமாய் உள்ள காற்றை வானத்தை அறிவை உயிரை அறத்தைக் கண்ணால் காண முடியவில்லை என்றாலும் இருக்கிறது என்று ஒப்புக்கொள்கிறாம். அதுபோலக் கண்ணால் காண முடியாத தெய்வம் உண்டு என்பது தெளிவாகும்.

வாசமூக் கறியுமன்றி வாய்செவி விழிமெய் தேரா
பேசவாய் அறியு மன்றிப் பின்னையோர் புலன்றே ராது
நேசமார் தொண்டர் ஞான நேத்திரங் கொண்டு காணும்
ஈசனை முகத்தில் கண்ணால் இகத்தில்யார் காண வல்லார்.(6)

நறுமணத்தை மூக்கும், பேச வாயும் மட்டுமே அறியும். பிற உறுப்புகள் அறியாது. அது போலக் கடவுளை மெய் அன்பர்கள் ஞானக் கண்ணால் காண்பர். அவ்வாறு இருக்க உலகத்தில் யாரால் முகக் கண்ணால் காண முடியும்.

வானின்றி மழையுமில்லை வயலின்றி விளைவு மில்லை
ஆனின்றிக் கன்றுமில்லை அரியின்றி யொளியு மில்லை
கோனின்றிக் காவலில்லை குமரர்தா யின்றி யில்லை
மேனின்ற கடவுளின்றி மேதினி யில்லை மாதோ. (7)

மேகமில்லாமல் மழை இல்லை; வயல் இல்லாமல் விளைச்சல் இல்லை; பசு இல்லாமல் கன்று இல்லை; ஞாயிறு இல்லாமல் வெளிச்சம் இல்லை; அரசன் இல்லாமல் காவல் இல்லை; தாய் இல்லாமல் மக்கள் இல்லை. இவை போலக் கடவுள் இல்லாமல் உலகம் இல்லை.

கதிரவற் கொளியின் றென்னக் கண்ணிலார் கழறல் போலும்
வதிரர்பே ராழி யோசை மாறிய தென்னல் போலும்
எதிருறு பொருளைக் காணா திடருறு பித்தர் போலும்
மதியிலார் தேவின் றென்ன மருளொடும் இயம்பு வாரே. (8)

குருடர் ஞாயிற்றுக்கு ஒளியில்லை என்பர். செவிடர் கடலுக்கு ஓசையில்லை என்பர். பித்தர் எதிரிலுள்ள பொருளறியாமல் துன்புறுவர். அதுபோல் அறிவிலார் கடவுளில்லை என்று மயங்கிக் கூறுவர்.

அத்தன்தாய் முன்னோர்தம்மை யறிகிலா னிலரென் பானோ
சத்தமின் சுவைகந் தத்தைத் தரிசியா னிலரென் பானோ
நித்தனைக் கண்ணிற் காணா நீர்மையா லிலனென் றோதும்
பித்தரிற் பித்தர் பாரில் பேசிட வுளரோ அம்மா. (9)

தந்தை தாய் முன்னோரை அறியாதவன் அவர்களை இல்லையென்று கூற முடியுமா? ஓசை, சுவை, மணம் இவற்றைக் கண்ணால் காணாததால் இல்லை என்று கூற முடியுமா?. இவை போன்றே கடவுளை நேரில் காண முடியாததால் இல்லை என்று சொல்ல முடியாது. அவ்வாறு சொல்வோர் பித்தரில் பித்தர் ஆவர்.

தேவனே யிலனேல் மோக்கந் தீநர கில்லை வேதம்
பாவபுண் ணியங்க ளில்லை பரனிலை யென்போ னில்லின்
மேவலர் தீயிட் டன்னான் விபவமெல் லாஞ்சி தைத்துச்
சீவனை வதைசெய் தாலென் செய்குவன் சிதடன் றானே. (10)

கடவுள் இல்லாவிடின் மோட்சம் இல்லை; நரகம் இல்லை; கடவுள் நூல் இல்லை; பாவ புண்ணியங்கள் இல்லை என்று சொல்லித் திரிபவன் வீட்டில் தீ இட்டும் அவன் செல்வத்தைக் கொள்ளை இட்டும் அவனைக் கொன்றும் கொடுமை செய்தால் அவ்வறிவில்லாதவன் என்ன செய்வான்.

### 1.3.4.2 தாய் தந்தையரை வணங்கல்

(தாய் தந்தைக்கு ஈடு எங்கும் இல்லை என்று கூறி அவர்களை வணங்கல் வேண்டும் எனல்)

சின்னவோர் பொருள்தந் தோரைச் சீவனுள் ளளவு முள்ளத்து
உன்னவே வேண்டு மென்ன உரைத்தனர் பெரியோர் தேகந்
தன்னையா ருயிரைச் சீரார் தரணியின் வாழ்வைத் தந்த
அன்னைதந் தைக்குச் செய்யும் அருங்கைம்மா றுளதோ அம்மா.(1)

சிறிய ஒரு பொருள் தந்தவரையும் தம் வாழ்நாள் முழுவதும் மனதில் நினைக்க வேண்டும் என்பது பெரியோர் கூற்று.அப்படி என்றால் நம் உடல்,உயிர், வாழ்வு எல்லாம் தந்த தாய் தந்தையரை மறக்காமல் இருப்பதே கைம்மாறு ஆகும். வேறு கைம்மாறு இல்லை.

கடவுளை வருந்திச் சூலாய்க் கைப்புறை யுண்ட னந்தம்
இடர்களுற் றுதரம் தன்னில் ஈரைந்து திங்கள் தாங்கிப்
புடலியில் ஈன்று பன்னாள் பொற்றனப் பாலை யூட்டித்
திடமுற வளர்த்து விட்ட செல்வியை வணங்காய் நெஞ்சே. (2)

நெஞ்சமே! கடவுளை வணங்கி, கருவுற்று, பல கசப்பான மருந்து உண்டு துன்பங்கள்பல அடைந்து பத்துத் திங்கள் சுமந்து பெற்று பால் ஊட்டி வலிமையுடன் வளர்த்த அருமைத் தாயை வணங்குவாயாக.

எப்புவி களும்பு ரக்கு மீசனைத் துதிக்க வேண்டின்
அப்பனே தாயே யென்போ மவரையே துதிக்க வேண்டின்
ஒப்பனை யுளதோ வேலை யுலகிற்கட புலனில் தோன் றுஞ்
செப்பருந் தெய்வம்அன்னார் சேவடி போற்றாய் நெஞ்சே. (3)

எல்லா உலகங்களையும் படைத்துக் காக்கும் இறைவனை வணங்க வேண்டும் என்றால் அம்மையே அப்பனே என்று ஒப்பு உரைத்து வணங்க வேண்டும். கண் கண்ட தெய்வமான தாய் தந்தையருக்கு எங்கும் ஒப்பில்லை எனவே அவர்கள் திருவடியை நெஞ்சமே நீ போற்றுவாயாக.

வைத்தவர் உளமு வப்ப மலர்நிழல் கனியீ யாத
அத்தருத் தன்னை வெட்டி அழலிடு மாபோல் ஈன்று
கைத்தலத் தேந்திக் காத்த காதற்றாய் பிதாவை யோம்பாப்
அத்தனை அத்தன் கொன்று பெருநர கழற்சேர்ப் பானே. (4)

வைத்து வளர்த்தவர்க்குப் பூ, நிழல், பழம் கொடுக்காத மரத்தை வெட்டி நெருப்பில் போடுவது போலத் தாய் தந்தையரை வணங்காத அறிவில்லாதவரை இறைவன் இருளாகிய உலகில் தள்ளி வருத்துவான்.

ஈன்றவர் நம்மால் உற்ற எண்ணரும் இடர்கட் கான்ற
மூன்றுல கமுமொப் பாமோ மூப்பினால் இளைப்பால் அன்னார்
கான்றவன் சொற்கள் கன்னல் கான்றவன் பாகெனக் கொண்டு
ஊன்றுகோ லென்னத் தாங்கி ஊழியஞ் செய்யாய் நெஞ்சே. (5)

பெற்றவர்கள் பிள்ளைகளுக்காக அளவற்ற துன்பம் அடைந்தனர். அத்துன்பத்திற்கு ஈடாக மூன்று உலகங்களையும் கொடுத்தாலும் ஈடாகாது. அவர்கள் தங்கள் மூப்பினாலும் சோர்வினாலும் கடும் சொற்களைக் கூறினால் அச்சொற்களை வெல்லப்பாகாக எண்ணி அவர்களைப் போற்றுவது மக்களுடைய கடமையாகும்.

ஈங்கெதி ருதவி வெஃகா தெவருமோ ருதவி செய்யார்
ஓங்குஞ்சேய் வாழும் வீயு முடலெய்க்கும் பொழுது தம்மைத்
தாங்கிடுந் தாங்கா தென்னுந் தன்மைநோக் காது பெற்றோர்
பாங்குடன் வளர்க்குமன்பு பரவலாந் தகைமைத் தன்றே. (6)

இவ்வுலகில் உள்ளவர் எதிர் உதவியை நாடியே அடுத்தவர்க்கு ஓர் உதவி செய்வர். வாழ்வுக்கும் சாவுக்கும் இலக்காகிய உடம்பு தளர்ந்த காலத்தில் பிள்ளைகள் தம்மைக் காப்பாற்றுவார் என்று எதிர்ப்பார்த்துப் பிள்ளைகளைப் பெற்றோர்கள் வளர்ப்பதில்லை. எனவே பெற்றோர்தம் அன்பு அளவிடற்கரியது.

மண்ணினி லன்னை தந்தை மறம்அறஞ் செயினும் நோன்பு
பண்ணினு முடல் வருந்தப் பணிபுரி யினும ருந்தொன்று
உண்ணினுங் களிக்கினுந் துன்புற்ற யரினுமனத்தொன்று
எண்ணினுந் தம்பொருட்டன்று ஈன்சுதர் பொருட்டா லன்றோ. (7)

பெற்றவர்கள் வன்செயல் மென்செயல் செய்தாலும் தவம் செய்தாலும் உடல் வருந்தி பாடுபட்டாலும் மருந்து உட்கொண்டாலும் மகிழ்ந்தாலும் துன்பப்பட்டுத் தளர்ந்தாலும் எல்லாம் பிள்ளைகளுக்காகவே அன்றி தமக்காக அல்ல.

ஐயமெய் யம்ம ணத்தோ டமுவதை யன்றிப் பேசச்

செய்யவொன் றறியா நொய்ய சிற்றுடற் சேய்வ ளர்ந்திங்
குய்யவேண் டுவன செய்தா ருயிரின மினிதாக் காக்கும்
பொய்யிலன் புடைத்தாய் தந்தை போல்பவ ருளரோ நெஞ்சே. (8)

நெஞ்சே! நமக்கு ஆடை கட்டத் தெரியாது. அழுவதன்றி வேறு செய்யத் தெரியாது. பேசத் தெரியாது. நம்மை வளர்த்துப் பேசச் செய்து உயிரினும் மேலாகக் காத்தவர் பெற்றோர். அவர்களே ஒத்த உண்மை அன்புடையவர் யாவர்?..

மனையவள் வீயின் வேறோர் மனைவியைக் கொளலாம்பெற்ற
தனையரா தியரி றப்பில் தனித்தனி பெறலாம் பின்னும்
புனைபொரு ணீங்கின் மற்றொர்பொருளையும் பெறலாமத்தன்
அனையிறந் திடின்வேறெத்த னனைவரு வாரோ நெஞ்சே. (9)

நெஞ்சே! மனைவி, மக்கள், பொருள் இவற்றை இழந்தால் மீண்டும் பெறலாம். தாய் தந்தையர் இறந்துவிடின் வேறு தாய் தந்தையர் வருவரோ?.. வரமாட்டார்.

ஒருத்திபஞ்ச காலத்தில் தாதைக்குத் தன் முலைப்பா லூட்டிக் காத்தாள்
எருத்தமிசைத் தந்தையினைச் சுமந்தோடி யொருவனொன்னா ரிடரைத்
தீர்த்தான் ஒருத்தன்தன் தந்தைக்கே உயிர்கொடுத்தா னெனப்பலவா வுரோமை
நாட்டின் சரித்திரஞ்சொல் வதையறிவாய் நெஞ்சமே யீன்றோரைத் தாங்கு
வாயே. (10)

நெஞ்சே! ஒருத்தி வறுமை காலத்தில் தன் தனப் பாலை ஊட்டி தந்தையைக் காப்பாற்றினாள். ஒருவன் தந்தையை முதுகில் சுமந்து கொண்டு பகைவரிடமிருந்து காப்பாற்றினான். ஒருவன் தந்தைக்காகவே உயிரைக் கொடுத்தான். இவ்வாறான வரலாறுகள் பல ரோம் நாட்டில் நிகழ்ந்தன. அவை போல நீயும் பெற்றவரைக் காப்பாற்றுவாயாக.

### 1.3.4.3 மாதரைப் படிப்பித்தல்

(பெண்களுக்கும் கல்வியே பெரும் துணையாகும்)

கல்வியே அறவழி காட்டும் ஆண்மகன்
செல்வழி யறிந்திடான் வித்தை தேறுமுன்
அல்வளர் கூந்தலார் அரிய நூலின்றி
நல்வழி யுணர்ந்ததில் நடக்கற் பாலரோ. (1)

எவர்க்கும் கல்வியே நல்வழி காட்டும். ஆண்மகனும் தான் கல்வி கற்பதற்கு முன் செல்லும் நல்வழி அறியான். அவ்வாறு இருக்கப் பெண்கள் கல்வி கற்காமல் எவ்வாறு நல்வழி அறிந்து நடப்பாள்.

பெண்மகள் கெடுவளென் றஞ்சிப் பெற்றவன்
உண்மைநூ லவட்குணர்த் தாமை தன்மனைக்
கண்மறு புருடரைக் காணு மென்றதை
எண்மையாய்த் தவன்பறித் தெறிதல் ஒக்குமே. (2)

பெண்மகள் கல்வி கற்றால் கெட்டுவிடுவாள் என்று அவள் தந்தை கல்வி அளிக்காமல் இருப்பது அவள் கண்ணுடையவளாக இருந்தால் அயலானைக் காண்பாள் என்று எண்ணி கணவன் அவள் கண்ணை எளிமையாகப் பிடுங்குவதை ஒக்கும்.

காவலன் பயத்தினாற் கற்பைக் காக்கின்ற
பாவையர் அரியநூல் பயன்தெ ரிந்திடில்
பாவபுண் ணியநெறி அறியும் பண்பினால்

சீவனீங் கினுமய லாரைச் சேர்வரோ. (3)

மன்னன், காவலுக்கு அஞ்சி கற்பைக் காக்கும் பெண்கள் உண்மை நூல் உணர்ந்தால் பாவ புண்ணியங்களுக்கு அஞ்சி உயிர் நீங்கினாலும் தம் கற்பைக் கைவிடமாட்டார்.

பொருந்துநற் கலைதெரி பூவை கற்பது
திருந்தியே மிகுமலால் தோய்ந்து போமெனல்
வருந்திடா துயிர்த ரு மருந்தை மானிடர்
அருந்திடில் சாவரென் றறைத லொக்குமே. (4)

பெண்களுக்கு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளும் கூறும் உண்மை நூல்களைக் கற்பதால் அறிவு மிகுமே அல்லாமல் குறைந்து போகாது. குறைந்து போகும் என்று சிலர் கூறுவது உயிரைக் காக்கும் மருந்தை உண்டால் மக்கள் இறப்பர் எனச்சொல்வதை ஒக்கும்.

முடவரே நடக்கினும் மூங்கை பேசினும்
திடமொடந் தகர்வழி தெரிந்து செல்லினும்
மடமயி லனையர்நூல் வாசி யாரெனில்
அடமில்நன் னெறிதெரிந் தமையற் பாலரோ. (5)

கால் இல்லாதவர் நடப்பதும் ஊமையர் பேசுவதும் குருடர் வழி தெரிந்து செல்வதும் ஒருவேளை நடந்தாலும் பெண்கள் கல்வி கற்காவிடின் குற்றமற்ற நல்வழி தெரிந்து நடக்கமுடியாது.

அரிவையர் நேசமும் ஆர அல்லினில்
விரிசுடர் விளக்கென விளங்கு வாரவர்க்கு
உரிய நன் னூலுணர்த் தாமை கூடையால்
எரியொளி விளக்கினை மறைத்தல் ஒக்குமே. (6)

பெண்கள் அன்பு நிறைந்தால் இருளில் விளங்கும் விளக்கு போல் விளங்குவர். அவர்களுக்குரிய நல்ல நூல்களை உணர்த்தாமல் இருப்பது எரியும் விளக்கைக் கூடையால் மறைப்பதைப் போன்றது.

நீதி நூன் மைந்தர்க்கு நிகழ்த்தி மென்மலர்
ஓதியர்க்கு ஓதிடா தொழித்தன் மெய்யினில்
பாதியை யேயலங் கரித்துப் பாதிமெய்
மீதினி லணியின்றி விடுத்தல் ஒக்குமே. (7)

அறநூல்களை ஆண்களுக்கு உணர்த்திப் பெண்களுக்கு உணர்த்தாமல் இருப்பது உடம்பில் ஒரு பாதியை ஆடை அணிகலன்களால் அழகு செய்து மற்றொரு பாதியை அழகு செய்யாமல் விடுவது போன்றது.

இக்கினை நகுமொழி யெழின்மின் னாரின்ஆண்
மக்கள்மிக் கோரெனல் மடமை யாமிரண்டு
அக்கமும் ஒக்குமே யன்றி நல்லகண்
எக்கண்மற் றெக்கணே யிழிவு டைக்கணே. (8)

கரும்பு கசக்கும்படி இனிய சொற்களைப் பேசும் அழகிய பெண்களை விட ஆண்கள் சிறந்தவர்கள் என்று சொல்வது அறியாமையாகும். இரண்டு கண்களுள் உயர்ந்தது எது?.. இழிந்தது எது?.. (இரண்டும் சமம்).

கலையு ணர்ந்தறி யாதவோர் கன்னியை
உலையு றுஞ்சமு சாரத்தின் உயக்குதல்

நிலையு ணர்ந்தறல் நீந்தறி யான்றனை
அலைக டற்கண் அமிழ்த்தலை யொக்குமே. (9)

கற்காத பெண்களைத் துன்பமான குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுத்துவது என்பது ஆறு, குளம் இவற்றில் நீந்தத் தெரியாதவனைக் கடலில் தள்ளுவதைப் போன்றது.

நல்லறி வேயணி நன்னுத லார்க்கஃது
இல்லவ ரோடுமி யைந்து கலத்தல்
புல்லுயிர் நீங்குபு முக்கொள் சவத்தைக்
கல்லுரு வைப்புணர் காம நிகர்த்தே. (10)

பெண்களுக்கு நல்லறிவே அணிகலனை விட அழகு தருவது. அவ்வழகு இல்லாதவரிடம் கூடி வாழ்தல் என்பது உயிரற்ற உடலோடும் உணர்வு அற்ற கல் உருவோடும் கூடி வாழ்வதைப் போன்றதாகும்.

### 1.3.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

**அ. வினாக்கள்.**

1. மண்டபம், குண்டலம், ஆடை ஆகியவற்றைக் கண்டால் எவர் உண்டென உணர்கிறோம்?
2. தெய்வம் உண்டென்று எவ்வாறு தெளிவுபெறலாம்?
3. அருமைத் தாயை வணங்குமாறு நெஞ்சுக்கு அறிவுறுத்தும் நீதிநூல் கூறுவது யாது?
4. தாங்கொணாத் துன்பத்திலும் தந்தை தாயைக் காத்தலுக்கு நெஞ்சுக்குக் கூறப்பட்ட சான்றுகள் யாவை?
5. கல்வியில்லாத பெண்ணுடன் கூடி வாழ்வது எப்படிப்பட்டது.?

**ஆ. சரியா? தவறா?**

1. உயிரினங்கள் கடவுளின்றி உடல்கொண்டு உலகில் உண்டாகும்.
2. கடவுளை நேரில் காணாததால் இல்லை என்று சொல்ல முடியாது.
3. நமக்கு உடல் உயிர் தந்தருளிய தாய் தந்தையரை மறவாமல் இருக்க வேண்டும்.
4. தாய் தந்தையரைவிட நம்மிடம் உண்மை அன்புடையவர்கள் உலகில் எவரும் இல்லை.
5. பெண்களுக்கு நல்லறிவே அணிகலன்களைவிட மிக அழகு தருவது.

### 1.3.6 பாடத் தொகுப்புரை:

- தெய்வத்தை நாம் கண்ணால் காணவில்லை என்றாலும் அது இருக்கிறது என்பதைப் பல அரிய எடுத்துக்காட்டுகள் மூலம் அறிதல்.
- தாய் தந்ததையர் தம் மக்களுக்குச் செய்யும் செயல்கள் வழி அவர்களது சிறப்பியல்புகள் உணர்த்தப்பட்டு, அவர்களை வணங்குதல் மக்களின் கடமை என்பதை அறிவுறுத்தல்
- பெண் கல்வியின் முக்கியத்துவம் விளக்குதல்.

### 1.3.6 அருஞ்சொற் பொருள்:

| | | |
|---|---|---|
| அண்டம், தரணி, புமினீ | - | உலகம் |
| அகண்டம் | - | நிறைவு |
| பரன், நித்தன் | - | கடவுள் |
| எண் | - | ஆதாரம் |

| | | |
|---|---|---|
| அத்தன் | - | தந்தை |
| விபவம் | - | செல்வம் |
| வேலை | - | கடல் |
| மி | - | மரம் |
| கன்னல் | - | கரும்பு |
| சுதர் | - | மக்கள் |
| எருத்தம் | - | முதுகு |
| வித்தை | - | கல்வி |
| தவன் | - | கணவன் |
| உலைவு | - | துன்பம் |
| மூங்கை | - | ஊமை |
| அந்தகர் | - | குருடர் |
| அக்கம் | - | கண் |

### 1.3.7 மாதிரி வினாக்கள்:

**அ. குறு வினாக்கள்**

1. தலைவன் இல்லாத வீட்டின் நிலைமை யாது?
2. ஆண்டவன் இருள் உலகில் எவரைத் தள்ளுவான்?
3. பெண்ணுக்குக் கல்வி தராமை எதனைப் போன்றது?

**ஆ. சிறு வினாக்கள்**

1. கடவுள் இல்லாமல் உலகம் இல்லை எவ்வாறு?
2. தாய் தந்தைக்குக் கைம்மாறு செய்ய இயலாது என்பதை நிறுவுக.
3. 'எரியொளி விளக்கினை மறைத்தல் ஒக்குமே' இடஞ் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

**இ. பெரு வினாக்கள்.**

1. தெய்வம் உண்டு என்பதை ஆசிரியர் எங்ஙனம் நிறுவுகிறார்?
2. தாய் தந்தையரை வணங்குவதற்கான காரணங்களாக ஆசிரியர் கூறுவன யாவை?
3. பெண் கல்வி குறித்து நீதி நூல் கூறும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

### 1.3.8 பரிந்துரை நூல்

நீதியரசர் வேதநாயகம் பிள்ளை அருளிய, 'நீதி நூல்' - பூம்புகார் பதிப்பகம், சென்னை - 600 108.

### 1.3.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

**அ. விடைகள்**

1. மண்டபம், குண்டலம், ஆடை கண்டால் அவற்றை உண்டாக்கியவர்கள் முறையே கொற்றன், தட்டான்,நெசவாளன் என்று உய்த்து உணரலாம். அதுபோல உலகிலுள்ள பொருள்களைக் கண்டதும் அவற்றைப் படைத்தருளிய தெய்வம் ஒன்று உண்டு என்று நெஞ்சே உணர்வாயாக.
2. நிலம் நீர் தீ காற்று ஆகாயம் ஆகிய பூதங்களுக்கு ஆதாரமாய் உள்ள காற்றை வானத்தை அறிவை உயிரை அறத்தை கண்ணால் காண முடியவில்லை என்றாலும் இருக்கின்றன என்று ஒப்புக் கொள்கிறாம். அதுபோலக் கண்ணால் காண முடியாத தெய்வம் உண்டு என்ற தெளிவு பெறலாம்.

3. நெஞ்சமே! கடவுளை வணங்கி, கருவுற்று, பல கசப்பான மருந்து உண்டு துன்பங்கள் பல அடைந்து பத்துத் திங்கள் சுமந்து பெற்று பால் ஊட்டி வலிமையுடன் வளர்த்த அருமைத் தாயை வணங்குவாயாக என நீதிநூல் கூறுகிறது.

4. நெஞ்சே! ஒருத்தி வறுமைக் காலத்தில் தன் பாலை ஊட்டித் தந்தையைக் காப்பாற்பறினாள். ஒருவன் தந்தையை முதுகில் சுமந்து கொண்டு பகைவரிடமிருந்து காப்பாற்றினான். ஒருவன் தந்தைக்காகவே உயிரைக் கொடுத்தான். இவ்வாறான வரலாறுகள் பல ரோம் நாட்டில் நிகழ்ந்தன. அவைபோல நீயும் பெற்றவரைக் காப்பாற்றுவாயாக.

5. பெண்களுக்கு நல்லறிவே அணிகலனை விட அழகு தருவது. அவ்வழகு இல்லாதவரிடம் கூடி வாழ்தல் என்பது உயிரற்ற உடலோடும் உணர்வு அற்ற கல் உருவோடும் கூடி வாழ்வதைப் போன்றதாகும்.

**ஆ. சரியா? தவறா?**

1. தவறு
2. சரி
3. சரி
4. சரி
5. சரி

## குறிப்புகள்

## அலகு - 2

### 2.0 முன்னுரை

இந்த அலகு சங்க காலத்தின் தொகை நூல்களுள் முதன்மையாக வைத்து எண்ணப்படும் பத்துப்பாட்டு பற்றிய சிறப்பியல்புகளை உங்களுக்கு அறிமுகம் செய்கிறது. சங்க காலம் என்பது இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டிற்கு முற்பட்டது. அக்காலத்தில் தோன்றிய பல புலவர்கள் பாடிய பாடல்களை ஒன்றாகத் தொகுத்தனர். அவை 'பாட்டு' எனப்படும். தனித்தனி புலவர்கள் பாடிய பெரிய பத்து அகவற் பாடல்களைக் கொண்ட தொகுதி ஆகும். இப்பத்துப் பாடலையும் குறிக்கும் ஒரு பழம் பாடல்,

> முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
> பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
> கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
> பாலை கடாத்தொடும் பத்து .

என்பதாகும்.

இந்த வெண்பாவில் சொல்லப்பட்டிருப்பது போல முதல் நான்கு பாடல்களும் இறுதியாக உள்ள மலைபடுகடாமும் சேர்ந்த ஐந்து நூல்கள் ஆற்றுப்படை நூல்களாகும். முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய மூன்றும் அகப்பொருள் பற்றிய பாடல்களாகும். மதுரைக்காஞ்சி புறப்பொருள் பற்றியது. நெடுநல்வாடை அகமும் புறமும் பற்றிக் கூறுவது என்று சிலரும், அகப்பாட்டு என்று வேறு சிலரும் கூறுவர்.

இந்த அலகில் நீங்கள் படித்து விளங்கிக் கொள்ளும் வகையில் இரண்டு பிரிவுகள் இடம் பெற்றுள்ளன. பிரிவு 1 - திருமுருகாற்றுப்படை, பிரிவு 2 - நெடுநல்வாடை.

**பிரிவு 1 திருமுருகாற்றுப்படை - பாட அமைப்பு**

21.1 நோக்கங்கள்
2.1.2 நூல் அறிமுகம்
2.1.3 பாடல் ஆசிரியர்
2.1.4 பாடப் பொருள் விளக்கம்
2.1.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்
2.1.6 பாடத் தொகுப்புரை
2.1.7 அருஞ்சொற் பொருள்
2.1.8 மாதிரி வினாக்கள்
2.1.9 பரிந்துரை நூல்கள்
2.1.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

### 2.1.1 நோக்கங்கள்

- நக்கீரரின் வரலாற்றை அறிதல்..
- இந்நூல் இறைவனின் அருளைப் பெற ஆற்றுப்படுத்தும் இலக்கியம் என்பதை அறிதல்.
- அறுபடை வீடுகள் பற்றியும் அவற்றில் முருகன் எழுந்தருளியிருக்கும் திறத்தினையும் அறிதல்.
- முருகனை வழிபடுவோர் வினையின் நீங்கிப் பேறு பெறுவர் என்பதை உணர்தல்.

### 2.1.2 நூல் அறிமுகம்

ஆற்றுப்படை என்பது ஒரு வள்ளலிடம் பரிசு பெற்று வரும் ஒருவன், பரிசு பெற விரும்பும் ஒருவனைச் சந்திக்கும் பொழுது, தான் பரிசில் பெற்ற தலைவனின் இயல்பையும் அவனிடம் செல்வதற்கான வழி முறைகளையும் கூறி அவனிடம் செல்லும்படி செய்வதாகும்.

கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகியோர் நெறிப்படுத்துதற்கு உரியோர் ஆவர். இதை,

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்.

எனத் தொல்காப்பியர் கூறுகிறார்.

எனவே அற இலக்கியங்கள் பயின்ற நீங்கள் சங்க இலக்கியங்களின் பல்வேறு சிறப்பியல்புகளையும் பொருள் ஆழத்தையும், மனித நேயத்தையும் அறிதல் வேண்டும்.

திருமுருகாற்றுப்படையை எழுதியவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் ஆவார். இந்நூல் 317 அடிகளைக் கொண்டது. ஆசிரியப்பாவால் ஆனது. இதைப் புலவராற்றுப்படை என்றும் அழைப்பர். முருகனிடம் அருள் பெற்ற புலவன் ஒருவன் அவன் அருளைப் பெற விழையும் வேறு ஒரு புலவனை அவ்விறைவனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. மற்ற ஆற்றுப்படை நூல்கள் ஆற்றுப்படுத்தப்படுபவர் பெயரால் அமைந்திருக்கிறது. இவ்வாற்றுப்படை நூலோ ஆற்றுப்படுவதற்கு இடமாக உள்ள தலைவன் பெயரால் அமைந்துள்ளது.

### 2:1:3 பாடல் ஆசிரியர்

நக்கீரரின் இயற்பெயர் கீரன் என்பதாகும். இப்பெயரின் இறுதியில் 'ஆர்' என்ற விகுதி சேர்ந்து கீரனார் என்றாயிற்று. பெயரின் முதலில் 'ந' என்ற சிறப்புப் பொருளையுணர்த்தும் அடை மொழி சேர்ந்து 'நக்கீரனார்' என்றாயிற்று. இவர் கணக்காயனார் என்பவரின் மகன் ஆவார். கணக்காயர் என்றால் ஓதுவிப்பார்/ஆசிரியர் என்பதாகும். எனவே இப்பொருளில் மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்ற பெயர் தோன்றியது.

இவர் நெடுநல்வாடை, குறுந்தொகையில் எட்டுப் பாடல்களும் நற்றிணையில் ஏழு பாடல்களும் அகநானூற்றில் பதினேழு பாடல்களும் திருவள்ளுவ மாலையில் ஒரு பாடலும் இயற்றியனவாகக் காணப்படுகின்றன.

#### 2:1:3.1 பாட்டுடைத் தலைவன் வரலாறு

திருமுருகாற்றுப்படை நூலின் தலைவன் இறைவன் முருகன் ஆவான். முருகு என்றால் அழகு, இளமை, இன்பம் எனப் பொருள்படும். இச்சொல்லுடன் 'அன்' என்ற விகுதி சேர்ந்து முருகன் என்றாயிற்று. தொல்காப்பியத்தில்,

'சேயோன் மேய மைவரை உலகம்' என்று கூறப்பட்டுள்ளது. இதில் சேயோன் - சிவந்த நிறமுடைய முருகன் ஆவான். நான்கு நிலங்களுள் ஒன்றான குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்ததாகும். அம்மலையில் குடி கொண்டிருக்கும் இறைவனாக முருகப்பெருமான் விளங்குகிறான். எனவே தமிழ்மொழி தோன்றி வளர்ந்து பண்பட்ட நிலையை அடைந்த காலத்திலிருந்தே முருகன் வழிபாடு தோன்றி இருந்தமையை இங்கு அனைவரும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

### 2.1.4 பாடப் பொருள் விளக்கம்

முருகன் குடிகொண்டுள்ள திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோராடல், பழமுதிர்சோலை ஆகிய தலைப்புகளின் கீழ் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

## 2:1:4:1 திருப்பரங்குன்றம் (1 - 77)

இப்பகுதியில் முருகனின் பெருமை, அவனது கடப்பமாலை, சூரர மகளிரின் இயல்பு , காந்தள் மாலை சூடிய சென்னி, முருகன் சூரனை அழித்த வகை, பேய்மகளின் துணங்கைக் கூத்து, மாமரத்தை வெட்டிய வெற்றி, ஆற்றுப்படுத்தல், திருப்பரங்குன்றில் முருகன் வீற்றிருத்தல் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

முருகன், அடியவர் உள்ளத்தில் இருந்தும் தொலைவில் நின்றும் அருள் வழங்கும் இயற்கை ஒளியானவன். அன்பர்களின் அறியாமையை நீக்கும் வலிய திருவடிகளையும் பகைவரை அழித்த பெரிய கைகளையும் உடையவன். தெய்வயானைக்குக் கணவன் ஆவான். கடம்ப மாலையை மார்பில் அணிந்தவன்.

தெய்வ மகளிர் இயற்கை மலர்களால் ஆன மாலைகளாலும் சந்தனத்தாலும் தங்களை ஒப்பனை செய்து கொண்டு சோலைகளில் முருகனின் சேவல் கொடி வாழ்க என்று வாழ்த்தினர்.

செங்காந்தள் மாலையைச் சூடிய திருமுடியை உடையவன். முருகன் சூரபத்மனை அழிக்க, மாமரமாய் நின்ற அவனை வெட்டி வீழ்த்தி வென்றான். போர்க் களத்தில் இதனைக் கண்ட பேய்மகள் துணங்கைக் கூத்தாடினாள்.

முருகனின் அருளைப் பெற விரும்பும் ஒருவனுக்கு அருள் பெற்ற ஒருவன் எதிர்ப்பட்டு வீடுபேற்றுக்குரிய வழியைச் சொல்லி ஆற்றுப் படுத்துகிறான். அவ்விறைவனை எங்குக் காண்பேன் என்று குறிப்பால் வினவும் ஒருவனுக்கு ஆசிரியர் அவன் உறையும் இடங்களைக் கூறத் தொடங்கி முதலில் அவ்விறைவன் மகிழ்ந்து தங்கியுள்ள திருப்பரங்குன்றத்தைச் சொல்லத் தொடங்குகிறார்.

போர்க்கொடிகள் எப்பொழுதும் அசைந்து கொண்டிருக்கும் மதிலின் வாயிலில் பகைவர் நெருங்கவும் அஞ்சுவர். அத்தகைய சிறப்புடையது மதுரை மாநகர். அதன் மேற்குத் திசையில் வளமுடைய வயல்கள் சூழ்ந்த இயற்கை எழிலுடன் காணப்படுவது திருப்பரங்குன்றம். இப்பகுதியில் சூரனை வென்ற முருகன் மனம் விரும்பி மகிழ்ந்து வீற்றிருக்கிறான்.

## 2:1:4:2 திருச்சீரலைவாய் (78 - 125 )

முருகன் யானை மீது ஏறி வருதல், ஆறு முகங்களின் இயல்புகள், பன்னிரு கைகளின் தொழில்கள்,அலைவாயில் ஆறுமுகம் வந்தருளி இருக்கும் காட்சி ஆகியன இடம் பெறுகின்றன.

வலிமையான காற்று எழுந்து வருவது போல அலங்கரிக்கப்பட்ட ஆண் யானையின் மீது முருகன் ஏறி வருகிறான்.

முருகனின் ஆறு முகங்களில் ஒன்று உலகில் இருளை நீக்குவதற்குப் பல சுடர்களைத் தோற்றுவித்தது. இரண்டாவது முகம் அன்பர்களுக்கு வேண்டும் பொருள்களை முடித்துத் தந்தது. மூன்றாவது முகம் அந்தணர் செய்யும் வேள்விக்கு இடையூறு நேராதவாறு காத்தது. நான்காவது முகம் வேதங்களிலும் பிற மெய்ந்நூல்களிலும் மறைந்து கிடக்கும் பொருள்களை ஆராய்ந்து இன்பம் அடையும்படி உணர்த்தித் திங்களைப் போல எல்லாத் திசைகளையும் விளக்கியது. ஐந்தாவது முகம் போர்க்களத்தில் அசுரர் முதலியவரை அழித்தது. ஆறாவது முகம் குறவரின் மகளாகிய வள்ளியுடன் மகிழ்ச்சியை அடைந்தது.

முதலிணைத் திருக்கைகளில் துறவிகளுக்குப் பாதுகாவலாக உள்ளது ஒருகை. அதற்கிணையாகிய கை இடையிலே வைக்கப்பட்டது. இரண்டாம் இணைத் திருக்கைகளில் ஒன்று தொடையின் மீது கிடக்க மற்றொன்று அங்குசத்தைச் செலுத்த இருந்தது. மூன்றாம் இணைத் திருக்கைகளில் ஒன்று கேடயத்தைச் செலுத்தும் மற்றொன்று வேற்படையைச் சுழற்றும். நான்காம் இணைத் திருக்கைகளில் ஒன்று முனிவருக்குத் தத்துவங்களைச் சொல்லும் காலத்தில் திருமார்புடன் விளங்க மற்றொன்று மார்பின் மாலை தாழ்ந்ததுடன் சேர்ந்து அழகு பெறும். ஐந்தாம் இணைத்

திருக்கைகளில் ஒன்று கீழ்ப்புறமாக நோக்கி விழும் தொடியோடே களவேள்விக்கு முத்திரை கொடுக்க மற்றொன்று ஒலி மணியை ஒலிக்கச் செய்யும். ஆறாம் இணைத் திருக்கைகளில் ஒன்று முகிலால் மழையைப் பொழியச் செய்ய மற்றொன்று தெய்வ மங்கையர்க்கு மணமாலை சூட்டும்.

இவ்வாறு பல இன்னிசை வாத்தியங்களும் சங்கும் முழங்க முருகன் திருச்சீரலைவாயிலில் நிலைபெற்ற குணத்துடன் தோற்றமளிப்பான் . எனவே அங்குச் சென்றால் அவனை வழிபாடு செய்யலாம்.

### 2:1:4:3 திருவாவினன் குடி (126 - 176)

முருகனைக் காணச் செல்லும் முனிவரது இயல்பு, பாடுவார் இயல்பு, பாடும் மகளிர் இயல்பு ,திருமால்,சிவன்,இந்திரன் ஆகியோரின் இயல்புகள் பிரமனுக்காகத் திரண்டு வந்த தேவர்கள் வருகின்ற காட்சி,முருகன் மடந்தையோடு வீற்றிருத்தல் ஆகியன இடம் பெறுகின்றன.

துறவு மேற்கொள்வதற்குரிய அனைத்து இலக்கணங்களும் பொருந்திய முனிவர்கள் முன்னே செல்ல, இசையை நுணுகி அறியும் ஆற்றல் பெற்ற கந்தருவர் இனிய யாழ் இசையை மீட்கத் தம் மகளிருடன் இருந்தனர். கருடக்கொடி உடைய திருமாலும், உமையொருபாகனும் மூன்று கண்ணுடையவனும் முப்புரத்தை எரித்தவனுமான உருத்திரனும், ஆயிரம் கண்ணுடையவனும் நூறு வேள்விகளைச் செய்தவனுமான இந்திரனும், தேவர்களும் பிரம்மனை விடுவிக்க வேண்டி முருகனைக் காண வானில் ஒரு சேர வந்து நின்றனர். முருகன் தெய்வயானையுடன் சில நாள் இருந்தான்.

திருவாவினன் குடி என்பது அழகிய வாவிகளை (குளம்) உடைய நல்ல குடிகள் பொருந்திய ஊர் என்பது பொருள். இது இந்நாளில் பழநி என அழைக்கப்படுகிறது. நக்கீரர் காலத்திலும் நச்சினார்க்கினியர் காலத்திலும் இவ்வூர் பழநி என அழைக்கப்படவில்லை.

### 2:1:4:4 திருவேரகம் (177 - 189)

இப்பகுதியில் இரு பிறப்பாளரின் இயல்பு, அந்தணர் வழிபடும் முறை ஆகியன இடம் பெறுகின்றன.

அந்தணர் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறு தொழிலைச் செய்பவர். தாய்,தந்தை ஆகிய இருவர் குலமும் நன்று என்று உலகில் போற்றும்படி பழைய குடியில் பிறந்தவர். பூணூல் அணியும் முன் ஒரு பிறப்பும் அணிந்த பின் ஒரு பிறப்பும் என இரு பிறப்பு உடையவர். நாற்பத்து எட்டாண்டு பிரம்மசரியம் மேற்கொண்டவர். மூவகை வேள்வியை இயற்றுபவர். வழிபட வேண்டிய காலத்தை அறிந்து வழிபடுபவர். முருகனைப் புகழ்ந்து ஆறெழுத்து மந்திரத்தை ஓதுபவர். மணம் மிக்க மலரால் இறைவனை வழிபடுபவர். அவர் வாழ்த்து கூறி வணங்க அதற்கு மகிழ்ந்து முருகன் திருவேரகத்திலும் வீற்றிருப்பான்.

### 2:1:4:5 குன்று தோறாடல் (190 - 217)

குரவைக் கூத்து, குன்றுதோறும் ஆடல் புரியும் தன்மை ஆகியன இடம்பெற்றுள்ளன.

குறிஞ்சி நிலமாகிய மலையில் வேலன் முருகனுக்கு உரிய ஆடை, மாலைகளை அணிந்து மயில் ஊர்தி, சேவல் கொடி முதலியவற்றை உடையவனாகக் கானவருடனும் பாடும் மகளிருடனும் குரவைக் கூத்து ஆடுவான். அவனது ஆடலில் முருகன் அவன் மீது காட்சி அளிப்பான்.

### 2:1:4:6 பழமுதிர்சோலை (218 - 317)

இப்பகுதியில் முருகனின் இருப்பிடங்கள் , குறமகளின் வெறியாட்டு, நகரில் முருகனை ஆற்றுப்படுத்தல், முருகனைக் கண்டு துதித்தல், கருதி வந்ததை மொழிதல்,

சேவிப்போர் கூற்று, முருகன் அருள்புரிதல், அருவியின் காட்சியும் இயற்கைவளமும் ஆகியன இடம்பெற்றுள்ள.

முருகனை ஊர்தோறும் நடைபெறும் விழாக்களில் காணலாம் என்று ஆற்றுப் படுத்தப்படுகின்றது. மேலும் முருகன் தன்னிடம் அன்பு கொண்டவர் எங்கிருந்து வழிபட்டாலும் அவர்களுக்கு அருள் புரிந்து அங்கிருப்பான். இதனால் பரிசில் பெற்றவன் பெற விரும்புபவனை நீயும் முருகனை அன்புடன் வழிபட்டு வாழ்த்தினால் அவனை நீ காணலாம் என்று ஆற்றுப்படுத்தப்படுகின்றது.

மேலும் முருகன் வேலன் வெறியாடும் இடம், காடு, சோலை, ஆற்றிடைக் குறை, ஆறு, குளம் இவையில்லாத பிற ஊர்கள், நாற்சந்தி, முச்சந்தி, ஐஞ்சந்தி, மலர்களுடைய கடப்ப மரம், மக்கள் ஒன்று கூடும் மரத்தடி, அம்பலம், இறைவன் திருவருள் குறியாக நடப்பட்டுள்ள தறி ஆகிய இடங்களிலும் இருப்பதனால் காணப்படக் கூடியவன்.

குறவர் குடிமகள், இசைக்கருவிகளில் இன்னிசை ஒலிக்க, மலர்களைத் தூவி, சிவந்த தினையைப் பரப்பி, முருகன் மகிழுமாறு வாத்தியத்தை வாசிக்குமாறு செய்து முருகக் கடவுள் வரும்படி குறிஞ்சிப் பண்ணைப் பாடும் அகன்ற நகரில் வெறியாடு களம் உள்ளது.

அக்களத்தில் ஊதுகொம்புகளை ஊதினர், மணிகளை ஒலித்தனர். முருகனின் பிணிமுகம் என்ற யானையை வாழ்த்தினர். தம் குறை தீர்க்க வேண்டி வந்தவர்கள் , தம் குறை நீங்கி வேண்டியதைப் பெற்றது போல நின்று வழிப்பட்டனர். இவ்விடங்கள் எல்லாம் முருகன் இருப்பிடங்கள் ஆகும். இவற்றை நான் அறிந்தவாறு உனக்குச் சொன்னேன் என்றான்.

மேற்கூறிய இடங்களிலோ மற்ற இடங்களிலோ முருகனைக் காணும் தகுதி பெற்றால், நீ விரும்பி நோக்கி, வாயார வாழ்த்தி, கைகளைத் தலைமீது குவித்துப் புகழ்ந்துரைத்து அவன் திருவடிகளில் உன் தலை பதியும்படி விழுந்து வணங்கி ஆறு மங்கையரால் தோன்றிய ஆறு வடிவுடையவனே! கல்லால மரத்தின் கீழ் அமர்ந்துள்ள சிவபெருமானின் மைந்தனே! மலையரசன் மகள் உமையின் மகனே! பகைவர்க்குக் கூற்றுவனே! வெற்றித் தெய்வமான கொற்றவையின் மகனே! காடு கிழாளின் குழந்தையே! வானவர் தலைவனே! அனைத்து நூல்களையும் அறிந்தோனே! போரிடுபவனே! வெற்றியோனே! அந்தணர் செல்வனே! புலவர் கூற்றின் சொற்பொருள் ஆனவனே! தெய்வயானை வள்ளி ஆகிய மங்கையரின் கணவனே! குறிஞ்சி நிலத்துக்குரியோனே! அரிதில் கிடைக்கக் கூடிய இயல்பான பெரிய பொருளை உடையவனே! வீடுபேறு பெற வேண்டுபவர்க்கு அருள்பவனே1 துன்புற்று வருவோர்க்கு அருள்பவனே! தன்னிடம் இரந்து வருபவர்களை மார்பிடத்தே தழுவி அவர்க்கு வேண்டுபவற்றைத் தந்து காப்பவனே! தேவரும் அந்தணரும் வாழ்த்தித் துதிக்கின்ற பெரிய ஆறெழுத்து மந்திரமான திருப்பெயர் உடையவனே! சூரனைச் சுற்றத்துடன் அழித்ததால் மதவலி என்னும் பெயரை உடையவனே! என்று நான் பலவாறு போற்றியதல்லாமல் அவனது குணத்தை முழுவதும் அளவிட்டு அறிதல் பல உயிர்களுக்கும் அரிது. எனவே அவனது திருவடியை அடைய எண்ணி வந்துள்ளேன் என்று நீ கருதிய வீடுபேறு பெற விரும்பியதைச் சொல்வதற்கு முன்பே நீ விண்ணப்பித்ததைப் பல வடிவுடைய பணியாளர் தோன்றி, தன் அறிவால் முதிர்ந்த சொற்களை உடைய இவ்விரவலன் இறைவா நின் அருளுக்காக உன்னைப் புகழ்ந்து இங்கு வந்துள்ளான்; கேட்பதற்கு இனிய உறுதியான பலவற்றைக் கூறி வாழ்த்துவாயாக! என்று கூறுவர்.

தெய்வத் தன்மை பொருந்திய முருகன் உன் முன் தோன்றுவான். தன் இளைய வடிவினைக் காட்டி,

‘அஞ்சாதே! வீடுபேற்றைப் பெற எண்ணி வந்த உன் வருகையை யான் முன்பே அறிவேன்’ என்று கூறுவான். மேலும் உன்னிடத்து அன்பு காட்டுவதற்கு

அறிகுறியாகப் பல நற்சொற்களைக் கூறுவான். கடல் சூழ்ந்த இப்பெரிய நில உலகத்தில் ஒருவனாகிய நீ எங்கும் தோன்றுமாறு சிறந்த மற்றவர்களால் பெறுவதற்கு அரிய வீடுபேற்றினைப் பரிசிலாக அளித்து அருளுவான்.

மேற்கூறிய அருளினைத் தரக்கூடியவன் யார் அவன் எங்குள்ளான் என்ற வினாவிற்கு விடையாக இனிவரும் பகுதி அமைந்துள்ளது.

பழமுதிர் சோலையில் உள்ள அருவியானது பல வெண்ணிறத் துகிலால் ஆன கொடி அசைந்தாற் போன்று அசைகிறது. அகில் கட்டைகளைச் சுமந்து சந்தன மரங்களைத் தள்ளி, சிறு மூங்கிலின் மலர் நிறைந்த கொம்பு பிரிய, வேரைப் பிளந்து, உயர்ந்த மலையில் ஞாயிற்றை ஒப்ப ஈக்கள் மொய்க்கும் தேன்கூடு சிதைய, அதில் ஆசினிப் பலாவின் சுளைகள் வந்து கலக்க, சுரபுன்னை மலர்கள் உதிர, கருங்குரங்குடன் முசுக்கலையும் நடுங்க, யானைகள் குளிரும்படி வீசி விரைந்து செல்கிறது.

மேலும் அருவியானது யானையின் முத்துக்களை உடைய கொம்புகளைஅடித்து வருகின்றது. பொன்னும் மணியும் நிறம் விளங்கும்படியாகச் செய்தது. பொன்னை அடித்துக் கொண்டு வருகின்றது. வாழை மரத்தினது அடிப்பகுதி ஒடியும்படியும் தென்னைமரத்தின் குலை சாயும்படியும் அவற்றை மோதுகின்றது. மிளகுக் கொடியானது கருமையான கொத்துக்களைச் சாய்க்கின்றது. மயில்களும் கோழிகளும் அஞ்சி ஓடும்படிச் செய்கின்றது. ஆண்பன்றியும் கரடிகளும் மலையிலே உள்ள குகைகளுக்குள் சென்று சேருகின்றன. கரிய கொம்புடைய ஆமான் ஏறுகள் ஒலிக்கின்றன. இவ்வாறாகப் பல செயல்களைச் செய்து கொண்டு மலையின் உச்சியில் இருந்து 'இழும்' என்ற ஓசையுடன் குதித்து வரும் அருவியை உடைய பழம் முற்றி உள்ள சோலைகள் நிறைந்த மலைக்கு உரியவனான முருகன் எழுந்தருளி உள்ளான். அங்குச் சென்றால் நீ அவனைக் கண்டு அருள் பெறலாம் என்று ஆற்றுப்படுத்தினான்.

### 2.1.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

**அ. வினாக்கள்**

1. சங்க இலக்கியத்தின் பாட்டு நூல் எண்ணிக்கை யாது ?
2. திருமுருகாற்றுப்படைக்கு உள்ள வேறு பெயர் யாது?
3. திருமுருகாற்றுப்படை யாரை யாரிடம் ஆற்றுப்படுத்துகிறது?
4. முருகன் குடிகொண்டுள்ள இடங்கள் யாவை?
5. முருகனின் யானை பெயர் யாது?

**ஆ சரியா? தவறா?**

1. ஆற்றுப்படை நூல்கள் ஐந்து.
2. திருமுருகாற்றுப்படை ஆற்றுப்படுத்தப்படுபவரால் பெயர் பெற்றது.
3. முருகன் என்றால் அழகு என்பது பொருள்.
4. முருகனின் வாகனம் மயில்.
5. முருகன் சூரனை அழித்தான்.

### 2.1.6 பாடத் தொகுப்புரை

- ஆற்றுப்படுத்தல் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.
- முருகனின் சிறப்பியல்புகள், சூரனின் வதை, அன்பர்களுக்கு அருளும் திறன் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.
- வேலனின் செயலும் குறமகளின் செயலும் கூறப்பெற்றுள்ளன.
- முருகனைப் போற்றிப் பாராட்டும் முறை தொகுத்து உரைக்கப்பட்டுள்ளன.

### 2.1.7 அருஞ்சொற் பொருள்

| | | |
|---|---|---|
| திரிதரு | - | திரியும் |
| இமைக்கும் | - | ஒளிரும் |
| தேய்த்த | - | அழித்த |
| போழ் | - | பிளந்த |
| மரா அம் | - | கடம்பமரம் |
| சேண் | - | உயரம் |
| வெற்பு | - | மலை |
| இழை | - | அணி |
| மருது | - | மருத மரம் |
| பிண்டி | - | அசோக மரம் |
| திளைப்ப | - | அசைய |
| சூர் | - | அச்சம் |
| அடுக்கம் | - | பக்க மலை |
| மிளைந்த | - | சூடிய |
| பார் | - | நிலம் |
| மோடு | - | வயிறு |
| சேஎய் | - | முருகன் |
| சேவடி | - | சிவந்த அடி |
| நியமம் | - | கடைத் தெரு |
| குடவாயின் | - | மேற்கு திசை |
| மொய்ம்பு | - | வலிமை |
| கறுவுதல் | - | சினத்தல் |
| குறங்கு | - | தொடை |
| மீமிசை | - | மேலே |
| வயிர் | - | கொம்பு |
| விழுமம் | - | துன்பம் |
| புட்டில் | - | கூடை |
| உடீஇ | - | உடுத்து |
| ஐயவி | - | வெண்சிறுகடுகு |
| அடுதல் | - | கொல்லுதல் |
| இயவுள் | - | கடவுள் |
| சாறு | - | விழா |
| பனிப்ப | - | நடுங்க |
| இரிதல் | - | ஓடுதல் |
| கேழல் | - | ஆண்பன்றி |

### 2.1.8 மாதிரி வினாக்கள்

**அ. குறு வினாக்கள்**

1. நக்கீரர் எழுதிய பிற பாட்டு நூல் எது?
2. ஆற்றுப்படை என்றால் என்ன?

3. முருகன் யாரைச் சிறைப்பிடித்துள்ளான் ?

4. திருமுருகாற்றுப்படைக்கு எந்த அடிப்படையில் பெயர் வைக்கப்பட்டுள்ளது?

**ஆ. சிறு வினாக்கள்**

1. அருவி விழும் அழகை ஆசிரியர் எவ்வாறு வருணித்துள்ளார்?
2. முருகனை வழிபடுவோர் எவ்வாறெல்லாம் போற்றுகின்றனர்?
3. முருகனின் திருக்கைச் சிறப்புகளாகக் கூறப்படுவன யாவை?
4. முருகனின் திருமுகங்கள் செய்த செயல்கள் யாவை?
5. முருகனை அந்தணர் வழிபடும் முறை யாது?

**இ. பெரு வினாக்கள்**

1. முருகனின் திருப்பரங்குன்றக் காட்சியை விவரி.
2. திருச்சீரலைவாய் முருகனது சிறப்புகளாகக் கூறப்படுவன யாவை?
3. பழமுதிர்சோலையில் முருகனை வழிபடும் முறை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

### 2.1.9 பரிந்துரை நூல்

பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், உ.வே.சாமிநாதையர் பதிப்பாசிரியர், கபீர் அச்சுக்கூடம், சென்னை.

### 2.1.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

**அ. விடைகள்**

1. சங்க இலக்கியப் பாட்டு நூல்கள் எண்ணிக்கை பத்து.
2. திருமுருகாற்றுப்படைக்கு உள்ள வேறு பெயர் புலவராற்றுப்படை.
3. திருமுருகாற்றுப்படை புலவன் ஒருவனை முருகனிடம் ஆற்றுப்படுத்துகிறது.
4. முருகன் குடிகொண்டுள்ள இடங்கள் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன்குடி, திருஏரகம், குன்றுதொறு ஆடல், பழமுதிர் சோலை ஆகும்.
5. முருகன் யானையின் பெயர் பிணிமுகம்.

**ஆ விடைகள்**

1. சரி
2. தவறு
3. சரி
4. சரி
5. சரி

**திருமுருகாற்றுப்படை**

**1. திருப்பரங்குன்றம்**

உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண்டா அங்கு
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர் ஒளி
உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன் தாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை
மறுஇல் கற்பின் வாணுதல் கணவன்

கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்உறை சிதறி
தலைப்பெயல் தலைஇய தண்நறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து
உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்
மால்வரை நிவந்த சேண்உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடி
கணைக்கால் வாங்கிய நுசும்பின் பணைத்தோள்
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிறைந்த சில்காழ் அல்குல்
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழை
சேண்இகந்து விளங்கும் செயிர்தீர் மேனி
துணையோர் ஆய்ந்த இணைஈர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடைஇடுபு
பைந்தாட் குவளைத் தூஇதழ் கிள்ளி
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்து
திலகம் தைஇய தேம்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்து
துவர மடித்த துகள்அறும் முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇகருந் தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்இணர் அட்டி
கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காழ்
நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேம்கமழ் மருதுஇணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரி மலர்
வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியா
கோழி ஓங்கிய வென்றுஅடு விறற் கொடி
வாழிய பெரிது என்றுஏத்திப் பலர்உடன்
சீர்திகழ் சிலம்புஅகம் சிலம்பப் பாடி
சூரர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்து
சுரும்பும் மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்கு
சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்

உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கில்
கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர்மோட்டு
உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
ஏன்று அடுவிறற் களம்பாடித் தோள்பெயரா
நிணம்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்க கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து
எய்யா நல்இசை செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவு நீ நயந்தனை ஆயின் பலஉடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன்று எடுத்த சேண்உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்க
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடம் மலிமறுகின் கூடல் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன்; அதாஅன்று

### 2. திருச்சீர்அலைவாய்

வைந்நுதி பொருத வடுஆழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கின் கடுநடை
கூற்றத் தன்ன மாற்றுஅரு மொய்ம்பின்
கால்கிளர்ந் தன்ன வேழம் மேல்கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பின் சென்னிப் பொற்ப

நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங்கு இயற்கை வாள்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாஇல் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனன்நேர்பு எழுதரு வாள்நிற முகனே;
மாயிருள் ஞாலம் மருஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்; ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிதுஒழுகி
காதலின் உவந்துவரம் கொடுத்தன்றே; ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே; ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத்திசை விளங்கும்மே; ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே; ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகைஅமர்ந் தன்றே;
ஆங்கு,அம் மூவிருமுகனும் முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பின்
செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை உக்கம் சேர்த்தியது ஒருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின் மிசை அசையியது ஒருகை
அங்குசம் கடாவ ஒருகை இருகை
ஐயிரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப ஒருகை
மார்பொடு விளங்க ஒரு கை
தாரொடு பொலிய ஒரு கை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப ஒருகை
பாடுஇன் படுமணி இரட்ட ஒருகை
நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட
ஆங்கு அப்பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர்எழுந்து இசைப்ப வால்வளை ஞரல
உரம்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பு ஆறுஆக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குஉயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே; அதாஅன்று

## 3. திரு ஆவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசுஅற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்புஎழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்
பலஉடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் முன்புக
புகைமுகந் தன்ன மாசுஇல் தூஉடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்து
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்யாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்நரம்பு உளர
நோய்இன்று இயன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்னுரை கடுக்கும் திதலையர் இன்நகைப்
பருமம் தாங்கிய பணிந்துஏந்து அல்குல்
மாசுஇல் மகளிரொடு மறுஇன்றி விளங்கக்
கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால்எயிற்று
அழல்என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்அணி நீள்கொடிச் செல்வனும் வெள்ஏறு
வலம்வயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமைஅமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூஎயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றுஅடு கொற்றத்து
ஈர்இரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக,
ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றித்,
தாமரை பயந்த தாஇல் ஊழி

நான்முக ஒருவற் சுட்டி, காண்வரப்,
பகலில் தோன்றும் இகல்இல் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு,
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்-
மீன்பூத் தன்ன தோன்றலர், மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர், வளியிடைத்
தீஎழுந் தன்ன திறலினர், தீப்பட
உரும்இடித் தன்ன குரலினர், விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்,
அந்தரக் கொட்பினர், வந்துஉடன் காணத்,
தாஇல் கொள்கை மடந்தையொடு, சில்நாள்,
ஆவினன்குடி அசைதலும் உரியன்; அதாஅன்று,

### 4. திரு ஏரகம்

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது,
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி,
அறுநான்கு இரட்டி இளமை நல்யாண்டு
ஆறினில் கழிப்பிய, அறன்நவில் கொள்கை,
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து,
இருபிறப்பாளர், பொழுது அறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்,
புலராக் காழகம் புலர உடீஇ,
உச்சிக் கூப்பிய கையினர், தற்புகழ்ந்து,
ஆறுஎழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப் பாடி,
விரைஉறு நறுமலர் ஏந்திப் பெரிதுஉவந்து,
ஏரகத்து உறைதலும் உரியன் ; அதா அன்று,

### 5. குன்றுதொறு ஆடல்

பைங்கொடி, நறைக்காய் இடைஇடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்வில்கொலைஇய கானவர்
நீடுஅமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து,
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல்உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கான்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை, அணைத்த கூந்தல்
முடித்த குல்லை, இலையுடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வால்இணர், இடை இடுபு

சுரும்புஉணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ,
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன், சிவந்த ஆடையன், செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்
கச்சினன், கழலினன்,செச்சைக் கண்ணியன்
குழலன், கோட்டன், குறும்பல் லியத்தன்
தகரன், மஞ்ஞையன், புகர் இல் சேவல்அம்
கொடியன், நெடியன், தொடிஅணி தோளன்
நரம்பு ஆர்த்தன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுஉறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணை தழீஇ, தலைத்தந்து
குன்றுதொறு ஆடலும் நின்றதன் பண்பே ; அதாஅன்று,

## 6 . பழமுதிர் சோலை

சிறு தினை மலரொடு விரைஇ, மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும், கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும், வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும், புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும், கந்துடை நிலையினும்
மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர
நெய்யோடு ஐயவி அப்பிஐது உரைத்து
குடந்தம் பட்டு கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுஉடன் உடீஇ
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடை
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇ
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்து
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணைஅற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பில் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்து குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியொடு இன்இயம் கறங்க
உருவப் பல்பூத் தூ உய் வெருவரக்

குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகுஇயம் நிறுத்து முரணினர் உட்க
முருகு ஆற்றுப்படுத்த உருகெழு வியல்நகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடு வாய்வைத்து கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்தவாறே
ஆண்டு ஆண்டு ஆயினும்ஆக காண்தக
முந்துநீ கண்டுழி முகன்அமர்ந்து ஏத்தி
கைதொழூஉப் பரவிக் கால்உற வணங்கி
நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ!
ஆல்கெழு கடவுட் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழைஅணி சிறப்பின் பழையோள் குழவி!
வானோர் வணங்குவில் தானைத் தலைவ!
மாலை மார்ப! நூல்அறி புலவ!
செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொல்மலை!
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே !
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே !
அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக !
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபேர் ஆள !
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய் !
மண்டுஅமர் கடந்தநின் வென்றுஅடு அகலத்து
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள் !
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந! குரிசில்!' எனப் பல
யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின்அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்
நின்அடி உள்ளி வந்தனென்; நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமையோய்! எனக்
குறித்தது மொழியா அளவையின் குறித்துஉடன்

வேறுபல் உருவின் குறும்பல் கூளியர்
சாறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெரும! நின்வண் புகழ்நயந்து என
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணம்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல் நின்வரவு என
அன்புடை நல்மொழி அளைஇ விளிவுஇன்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகித் தோன்ற , விழுமிய
பெறல்அரும் பரிசில் நல்குமதி பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து
ஆர முழுமுதல் உருட்டி வேரற்
பூவுடை அலங்குசினை புலம்ப வேர்கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியின் தொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறம் கிளரப்பொன் கொழியா,
வாழை முமுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கி
கறிக்கொடிக் கருந்துணர் சாய பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழிவயப் பெடை இரிய, கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉ மயிர்யாக்கைக் குடாஅடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்ஏறு சிலைப்பச் சேண் நின்று
இழுமென இழிதரும் அருவி,
பழம்முதிர் சோலை மலைகிழ வோனே. !

**பிரிவு 2 நெடுநல்வாடை. - பாட அமைப்பு**

2.2.1 நோக்கங்கள்

2.2.2 நூல் அறிமுகம்

2.2.3 பாடல் ஆசிரியர்

2:2:3.1 பாட்டுடைத் தலைவன்
2.2.4 பாடப் பொருள் விளக்கம்
2.2.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்
2.2.6 பாடத் தொகுப்புரை
2.2.7 அருஞ்சொற் பொருள்
2.2.8 மாதிரி வினாக்கள்
2.2.9 பரிந்துரை நூல்
2.2.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

**2:2:1 நோக்கங்கள்**

- இலக்கிய நயங்களை உணர்ந்து கொள்ளல்.
- வாடைக் காற்றின் தன்மையை அறிதல்
- வாடையில் அரண்மனை தலைவிக்கும் போர்ப்பாசறை தலைவனுக்கும் ஏற்படும் நிலை பற்றி அறிதல்.
- ஆசிரியரின் நுண்மான் நுழை புலமையைத் தெரிதல்.

**2.2.2 நூல் அறிமுகம்**

திருமுருகாற்றுப்படையை எழுதிய நக்கீரர் இந்நூலையும் எழுதியுள்ளார்.நீண்ட வாடையானது தலைவனைப் பிரிந்து தனித்து இருக்கும் தலைவிக்குத் துன்பம் தருகின்ற நெடு வாடையாகவும், வினை முடிக்கப் போருக்குச் சென்று போர்ப்பாசறையில் தங்கி உள்ள தலைவனுக்கு நல் வாடையாகவும் தோன்றுவதால் இந்நூல் நெடுநல்வாடை என்ற பெயரைப் பெற்றது.

தலைவியின் வருத்தம் நீங்கப் பாசறையில் உள்ள தலைவன் வென்று விரைவில் திரும்பி வரவேண்டும் என்று கொற்றவையை வழிபடும் செவிலித்தாயின் கூற்றாக இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூல் 188 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆனது. அகப்பொருள் சார்ந்த நூலாக இருந்தாலும் ‘வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம்’ என்ற அடியில் பாண்டிய மன்னனின் அடையாளப் பூவாகிய வேம்பு குறிக்கப்பட்டு உள்ளதால் புறப் பொருள் சார்ந்த நூல் என்று கூறுவாரும் உளர்.

**2.2.3 பாடல் ஆசிரியர்**

இந்த அலகில் உள்ள திருமுருகாற்றுப்படையில் காண்க.

**2:2:3.1 பாட்டுடைத் தலைவன்**

இந்நூலின் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவான். சங்க காலப் பாண்டிய மன்னருள் சிறந்த இருவரில் ஒருவன் இம்மன்னன்.

இம்மன்னன் இளம் பருவத்திலேயே அரசப் பதவியை அடைந்தவன். அப்பொழுது இவன் இளையவன் என்பதால் இவனை அழிக்க வேண்டும் என்று படை கொண்டு வந்தனர் பலர். அந்நேரத்தில் இம்மன்னன் உரைத்த வஞ்சினம்தான்

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என்நிலவரை.

என்ற புறநானூற்றுப் பாடல்.

இதனால் இம்மன்னனது புலமை, மாங்குடி மருதனாரிடம் பெருமதிப்பு உடைமை, வீரம் ஆகிய சிறப்பியல்புகளை அறியலாம். தலையாலங்கானம் என்ற இடத்தில் நடந்த போரில் சேர, சோழ மன்னர்களுடன் திதியன், எழினி, எருமையூரன் இருங்கோவேண்மான், பொருநன் ஆகிய குருநில மன்னர்களும் போரிட்டனர். அவர்களைக் கண்டு அஞ்சாது வென்றான். எனவே,' தலையாலங்கானத்துச் செருவென்ற' என்னும் அடை மொழி பெற்றான்.

### 2.2.4 பாடப் பொருள் விளக்கம்

கோவலர்நிலை, கூதிர்கால நிலை, ஊரினது செழிப்பு, முழுவலி மாக்களின் செயல் போன்ற தலைப்புகளின் கீழ் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

### 2.24.1 கோவலர் நிலை (1- 6)

கார்காலத்தில், பருவம் பொய்க்காத மேகமானது மழையைப் பொழிந்தது. அவ்வாறு பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தை வெறுத்துக் கையில் கோலை உடைய இடையர் (கோவலர்) தம்முடைய எருமை, பசு, ஆடு ஆகிய மூன்று இனங்களையும் வேற்று நிலத்தில் உள்ள மேட்டுப் பகுதியில் மேயும்படி விட்டனர். தாம் இதற்குமுன் பழகிய இடத்தை விட்டு வந்ததற்காக வருந்தினர். அவர்கள் அணிந்துள்ள காந்தள் மலர் மாலை நீர்த்துளிகள் விழுவதால் கசங்கியது. அவர்கள் கையில் நெருப்பை வைத்திருந்தனர். தம் பற்கள் பறை கொட்ட நடுங்கினர்.

### 2.2.4.2 கூதிர் கால நிலை (7 -12)

விலங்குகள் மேய்தல் தொழிலை மறந்தன. குரங்குகள் குளிரால் நடுங்கின. மரத்திலுள்ள பறவைகள் மிகுந்த காற்றால் நிலத்தில் விழுந்தன. பசுக்கள் தம் கன்றுகள் பால் உண்ணாதவாறு உதைத்துத் தள்ளும். மலையும் குளிரும் நிலை கொண்டது கூதிர் காலம். அக்காலத்தில் நள்ளிரவில்,

### 2.2.4.3 கூதிர்பருவ நிகழ்ச்சி (13-20)

புதர்களில் சிறிய முசுண்டைக் கொடியின் வெண்மையான மலர் பொன்னிறப் பீர்க்க மலருடன் மலர்கின்றன. வெண்மணல் பரப்பில் பசுமையான கால்களை உடைய கொக்குகள் நாரைகளுடன் இருந்து நீரிலுள்ள கயல் மீன்களைத் தின்னும்படி அம்மீன்கள் எதிர்த்து ஏறிவரும். தன்னிடம் உள்ள நீரினைப் பெய்ததனால் மேகங்கள் சிறுசிறு துளிகளை மெல்லத் தூவும்.

### 2.2.4.4 ஊரினது செழிப்பு (21- 28)

இடமகன்ற வயலில் நீர் வளத்தால் நெற்பயிர்களில் கதிர் முற்றி வளையும். பெரிய அடியை உடைய பாக்கு மரத்தின் மணிநிறக் கழுத்தில் மடல் விரிந்த பாளைக்குள் உள்ள பசுங்காய்கள் இனிமை தோன்ற முற்றும். மலையில் பலநிற மலர்கள் மலர்ந்துள்ள சோலைகளின் கொம்புகள் மழைத்துளிகளைத் தன்னிடம் பெற்றுள்ளதால் அத்துளிகள் நல்ல நிறம் உடையதாகத் தொங்கும்.

### 2.2.4.5 முழுவலி மாக்களின் செயல் (29 - 35)

உயர்ந்த மாடங்களை உடைய பழைய ஊரில் கிடந்தது போன்ற அகன்ற தெருக்கள் காணப்படும். அத்தெருக்களில் தழை கலந்த மாலை அணிந்தும், அழகிய பருத்த இறுகிய தோளையும், முறுக்குண்ட உடலையும், வலிமையையும் உடைய கீழ்மக்கள் வண்டுகள் மொய்க்கும் கள்ளைப் பருகி மகிழ்ச்சியால் தம்மேல் விழும் சிறிய குளிர்ந்த நீர்த்துளிகளுக்கு அஞ்சாமல் முன்னும் பின்னும் தொங்க விடப்பட்ட ஆடையை உடையவராக மாலை நேரத்தில் தம் மனம் போன போக்கில் திரிந்து கொண்டிருப்பர்.

### 2.2.4.6 மாலைக் கால மகளிர் வழிபாடு (36 -44)

முன்கையில் சங்கு வளையல் அணிந்தும் மூங்கில் போன்ற தோளையும் மென்சாயலையும் முத்து போன்ற பற்களையும், மகரக் குழை அணிந்தும் அழகிய

எடுப்பான கண்களையும் உடைய பெண்கள் பூந்தட்டில் பறித்து வைக்கப்பட்டிருக்கும் பிச்சிப் பூ மலர்ந்தமையால் இது மாலைக் காலம் என்று அறிந்து இரும்பு விளக்கில் திரிபோட்டு நெய் ஊற்றி விளக்கேற்றி நெல்லையும் அரும்பையும் தூவி இல்லத்தில் உள்ள தெய்வத்தைக் கைகுவித்து வணங்கினர். இவ்வாறு அங்காடித் தெருவில் (கடைவீதி) மாலைக் காலத்தைக் கொண்டாடினர்.

### 2.2.4.7 புறாவின் செயல் (45 - 48)

வீட்டிலுள்ள புறா தன் பெண் புறாவுடன் வெளியில் சென்று இரையைத் தேடித் தின்னாமல் இரவு பகல் அறியாது மயங்கிச் செயலற்றுப் பலகையில் கடுத்த கால் ஆறும்படியாகக் கால்களை மாற்றி மாற்றி வைத்துக் கொண்டிருந்தது.

### 2.2.4.8 மங்கையர் நிலை (49 - 56)

காவலுடைய இல்லத்தில் குற்றேவல் செய்யும் இளைஞர்களால் சாந்து (சந்தனம்) அரைக்க வடநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட வட்டக்கல்லும் சந்தனமும் பயன்படுத்தப்படாமல் கிடந்தன. குளிரால் மகளிர் தம் கூந்தலில் மலர்மாலை சூடவில்லை. மாறாகச் சில மலர்களைச் சூடினர். மேலும் சந்தன விறகில் தீ மூட்டி அதில் கரிய அகிலுடன் கண்ட சருக்கரையும் கலந்து கூந்தலுக்குப் புகை ஊட்டினர்.

### 2.2.4.9 பயன்படாப் பொருட்கள் (57 - 63)

கைத்தொழில் வல்லார் செய்த அழகிய சிவந்த நிறமுடைய ஆலவட்டம் (விசிறி) உறையில் இடப்பட்டு வளைந்த முளைக் கோலில் சிலந்தி நூல் சூழப் பயனின்றித் தூங்கியது. இளவேனிற் காலத்தில் தென்றல் காற்று வரும் பலகணிகளில் (ஜன்னல்) வலிமையான கதவுகள் பொருத்தமாக மூடித் தாழிடப்பட்டுக் கிடந்தன.

### 2.2.4.10 இளையவர் முதியவரின் செயல்கள் ( 64 - 66)

சிறு மழைத் துளியால் வாடைக்காற்று எங்கும் வீசியது. அதனால் இளையவரும் முதியவரும் குவிந்த வாயையுடைய குடத்து நீரைக் குடிக்காமல் பகுத்த வாயையுடைய கும்மட்டியில் சிவந்த நெருப்பை உண்டாக்கிக் குளிர் காய்ந்தனர்.

### 2.2.4.11 ஆடும் மங்கையர் நிலை (67 -70 )

ஆடும் தொழிலுடைய மகளிர் தாம் பாடும் பாடலை யாழிலே மீட்ட கூதிர்ப்பருவக் குளிர்ச்சியால் நிலைகுலைந்த யாழ் நரம்பினைத் தன் முலை வெப்பத்தில் ஒற்றிச் சிறிய யாழினைப் பண் நிற்கும் முறையில் நிறுத்தினர்.

### 2.2.4.12 அரசியின் அரண்மனை (71 -78)

மழை மிகுதியும் பெய்ததால் கணவனைப் பிரிந்திருக்கும் மகளிர் வருந்துமாறு கூதிர்காலம் தோன்றியது. சித்திரைத் திங்களில் பத்தாம் நாளுக்கும் இருபதாம் நாளுக்கும் இடையில் உள்ள ஒரு நாளில் பகல் பதினைந்து நாழிகையில் ஞாயிற்று மண்டிலமானது நிலத்தினது நடுவில் இயங்கும். அந்நேரத்தில் சிற்ப வல்லார் நூல் பிடித்துத் திசைகளைக் குறித்துக் கொண்டு அத்திசைகளில் உள்ள தெய்வங்களையும் வணங்கி மன்னனுக்கு ஏற்ற மனை, வாயில், மண்டபம் முதலியவற்றை வகையாகவும் முறையாகவும் அமைத்து இவற்றை ஒன்றாக வளைத்து அமைக்கப்பட்ட உயர்ந்த மதிலின் உள்ளே.

### 2.2.4.13 கோபுர வாயில் பகுதி (79 -88)

அணிகளும் பட்டங்களும் உடைய பெரிய இரும்பினால் (கட்டினர்) சாதிலிங்கம் (வழித்தனர்) இரண்டாக உள்ள கதவுகளைச் சேர்ப்பதற்காக உத்தரம் என்ற நாளின் பெயர் கொண்ட செருகுதல் அமைந்த குறுக்குக் கட்டையில் குவளைப் பூ வடிவினையும் புதிய பிடிகளையும் பொருத்தினர். தாழ்ப்பாலுடன் பொருத்தமாய் அமைந்த கைப்பிடியும் உடையனவாகக் கைத்தொழில் சிறந்த தச்சன் உருவாக்கிய வெண் சிறு கடுகு அப்பி வைக்கப்பட்ட நெய்யணிந்த நீண்ட வாயிலை உடையது.

அவ்வாயில் வெற்றிக்கொடியுடன் யானைகள் உள்ளே தடையின்றிச் செல்லக்கூடிய மிக உயர்ந்தது.

### 2.2.4.14 முற்றமும் முன்வாயிலும் (89 - 92)

திருமகள் நிலைத்திருக்கும் குற்றமற்ற சிறப்பினை உடையது, மணல் பரப்பப்பட்ட அழகிய அரண்மனை முற்றத்தில் நீண்ட மயிரையுடைய ஆண் கவரிமானானது குறுகிய கால்களுடைய அன்னத்துடன் தாவித் திரிந்து கொண்டிருக்கும் முன் வாயிலை உடையது.

### 2.2.4.15 அரண்மனையில் உண்டாகும் ஓசைகள் (93 - 100)

பிடரி மயிரை உடைய குதிரையானது பந்தியில் நிற்றலை வெறுத்து தனக்குரிய புல் உணவைக் குதட்டும் தனிமையைத் தோற்றுவிக்கும் குரலுடன், நிலா முற்றத்தில் இருக்கும் மகர மீன் வாய் போலப் பகுக்கப்பட்ட நீர்ப் பந்தல் நிரைவதால் வழிந்து கீழே விழும் அருவியின் ஓசையை ஒத்திருக்கும். அதனருகில் தழைத்த நீண்ட பீலி (தோகை) ஒதுங்க, மெல்லிய இயல்பை உடைய மயில் ஆரவாரிக்கும் கொம்போசையோ என்று மிரலும் இனிய ஓசை நிறைந்த மலையினது ஆரவாரம் போல ஆரவாரத்தை உடைய அரண்மனையின் உட்பகுதி.

### 2.2.4.16 அந்தப்புரத்தின் தோற்றம் (101 - 114)

எவனரால் தொழில் சிறப்புடன் உருவாக்கப்பட்ட பாவை, தன் கையில் ஏந்தியுள்ள தகளி (அகல் விளக்கு) முழுவதும் நெய் ஊற்றி பெரிய திரி போட்டு ஏற்றப்பட்டு மேல்நோக்கி எரியும் விளக்கு. அவ்விளக்கு நெய் வற்றிய பொழுது நெய் ஊற்றியும் ஒளி மங்கிய பொழுது தூண்டியும் பல்வேறு இடங்களில் உள்ள இருளை நீங்குமாறு செய்யும் பெருமை உடையது. பாண்டிய மன்னன் தவிர வேறு குற்றேவல் செய்பவரும் செல்ல முடியாத அரிய காவல் நிறைந்த அந்தப்புரம்.

அது மலைகளைக் கண்டது போன்ற உயரம் உடையது. மலைகளைச் சேர்ந்து இருக்கும் வானவில்லைப் போன்ற பல வண்ணக்கொடிகளை உடையது. வெள்ளி போன்ற வெண்மையான சுண்ணாம்பு பூசப்பட்டது. சில மணியைப் போன்ற கருமையும் வலிமையும் கொண்ட தூண்களை உடையது. செம்பால் செய்யப்பட்டது போன்ற தொழில்கள் நிறைந்த நெடிய சுவரில் பல வடிவில் பூக்கள் உள்ள பூங்கொடிகளை ஓவியமாக வரையப்பட்டுள்ளது. இத்தகைய காட்சிக்கு இனிமையாக நல்ல இல்லம் அமைந்திருக்கும்.

### 2.2.4.17 அரசியின் கட்டில் அமைப்பு (115 - 123)

நாற்பது வயதும், முரசு போன்ற கால்களும், புள்ளி நெற்றியும், போரிட்டு விழுப்புண் பெற்று இறந்த யானையின் தாமே விழுந்த கொம்புகளைக் (யானைத்தந்தம்) கைத்தொழில் வல்ல தச்சன் பக்கங்களைச் சீவி, கூர்மையான உளியால் செய்த பெரிய இலைத்தொழிலை இடையில் உடையது. கருவுற்ற பெண்களின் கொங்கை போன்ற பக்கம் திரண்ட குடத்தை உடையது. கட்டிற்கும் குடத்துக்கும் இடைப்பட்ட பகுதி மென்மையாய்த் திரண்டு உள்ளிப் பூண்டைப் போன்ற உறுப்புகளை உடையது. கால்களை உடையது. பாண்டில் என்ற பெயரை உடையது.

### 2.2.4.18 கட்டிலின் மேல் உள்ள படுக்கை (124 - 130)

கட்டிலில் முத்துக்களாலான தொடர் மாலைகளைத் தொங்கவிட்டு, புலியின் வரிகளைத் தன்னிடம் கொண்ட அழகிய நிறமுடைய தட்டம் போன்ற தகடுகளைக் கொண்டு கட்டிலின் உள்ளே வெளி மறையும் படி உள்ளே அடக்கி, அதன்மீது சிங்கம் வேட்டையாடும் உருவமும் காட்டில் மலரும் பல வகை மலர்களைப் போன்ற உருவமும் ஓவியமாகத் தீட்டப்பட்ட மென்மையான போர்வையைப் போர்த்து வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.4.19 அரசி மலர் அணையில் வீற்றிருக்கும் காட்சி (131- 147)

அழகிய அப்போர்வையின் மீது அன்னப்பறவையின் வெண் தூவியால் (இறகு) செய்யப்பட்ட அணை. அதன்மீது தலையணை, சாயணை முதலியவற்றை வைத்து, கஞ்சி போட்டுத் தேய்க்கப்பட்ட துணியை அதன்மேல் விரித்து வைக்கப்பட்ட படுக்கை.

அரசியின் மார்பில் குத்தும் மங்கள நாணாகிய தாலி மட்டுமே தொங்கியது. கணவனைப் பிரிந்ததால் அலங்கரிக்காத மயிர். மகரக்குழை நீக்கப்பட்டதால் அது அழுந்தியிருந்த வடு உள்ள காது. முன்பு பொன் தொடி இருந்த முன் கையில் தற்பொழுது வலம்புரி சங்கால் செய்யப்பட்ட வளையல் கிடந்தது. வாளை மீனின் பிளந்த வாய் போன்ற சிவந்த விரலில் சிவந்த நிறமுடைய முடக்கு என்னும் மோதிரம் கிடந்தது. முன்பு பூத்தொழில் ஆடை உடுத்திருந்த இடையில் இப்போது மாசுடைய நூலால் நெய்யப்பட்ட புடவை அணிந்து கொண்டு இருந்தாள். வண்ணம் இட்டு வரையாது, கோட்டு வடிவ ஓவியத்தைப் போன்று காணப்பட்டாள்.

### 2.2.4.20 தோழியும் செவிலியும் தேற்றுதல் (149 - 156)

அரசியின் அழகு செய்யப்படாத நல்லடியைத் தோழியர் உறக்கம் வரும்படி தடவினர். நரைமுடியும் சிவந்த முகத்தையும் உடைய செவிலித்தாய் அரசியின் ஆற்றாமையால் பொய்யும் மெய்யுமான சொற்கள் பலவற்றைப் பல முறை எடுத்துக் கூறினர். 'இன்னே வருகுவர் இன் துணையோர்' இப்பொழுதே உன் துணைவர் வருவார் வருந்தாதே என்று அவள் மனதுக்கு இதமான இன்னுரைகளைக் கூறித் தேற்றினர்.

### 2.2.4.21 தலைவியின் வருத்தம் (157-168)

அரசி, தோழியும் செவிலித்தாயும் ஆற்றுவித்தும் ஆற்றாதவள் ஆனாள். கட்டிலின் மேல் கட்டப்பட்ட விதானமான துணியில் வரையப்பட்டுள்ள உரோகிணியின் ஓவியத்தைப் பார்த்து, யானும் இந்த உரோகிணி போன்று காதலரைப் பிரியாமல் உடன் வாழும் பேற்றினைப் பெறவில்லையே என்று எண்ணினாள். நெட்டுயிர்ப்பு கொண்டாள். கண்ணிலிருந்து விழும் நீரைத் தன் விரல் நுனியால் எடுத்துத் தெறித்தாள். தனிமையில் இருந்து அன்புடையவள் ஆனாள். இத்தகு அரசிக்குத் தீயதாய் இருக்கும் அரிய துன்பம் நீங்கும்படி மன்னவனுக்கு வெற்றியைக் கொடுத்து இப்போதே போர்த்தொழில் முடிவதாக. இது என்னுடைய விருப்பம். கேட்பாயாக என்று கொற்றவையை வழிபடுபவள் கூறுவதாக அமைகிறது.

### 2.2.5.22 பாசறையில் அரசன் (168- 188)

மன்னன், போரிலே யானையின் கைகளைத் துண்டித்து, பின் பகைவரின் ஒளி வாளால் ஏற்பட்ட சிறந்த விழுப்புண் அடைந்த போர்வீரர்களைக் காண்பதற்காக வெளியே வந்தான். அவர்களைக் காண்பதற்காக ஏற்றப்பட்ட விளக்குகள் வாடைக்காற்று வீசுவதால் பாண்டிலில் (அகல்விளக்கு) எரியும் பெரிய சுடர்கள் அசைந்து தெற்குப் பக்கமாகச் சாய்ந்து எரிந்தன.

வேப்பமாலை கட்டப்பட்ட வேலுடன் முன்னால் செல்லும் படைத்தலைவன் புண்பட்ட மறவர்களை மன்னவனுக்கு முறையாகக் காட்டிச் சென்றான். மணிகள் கட்டப்பட்ட யானைகளும் குதிரைகளும் கரிய சேற்றை உடைய தெருவில் துளிகளைத் தன் மீது சிதறின. மன்னன், இடப்பக்கத் தோளிலிருந்து நழுவி விழும் அழகிய மேலாடையை இடப்பக்கத்தில் அணைத்தவாறு வாளைத் தோளில் அணைத்துக் கொண்டு வாள் வீரனின் தோளில் வலக்கையை வைத்தவனாய், முகமலர்ச்சியுடன் புண்பட்ட வீரர்களைக் கண்டான். முத்துமாலை அணிந்த வெண் கொற்றக்குடை தவ் என்ற ஓசை உண்டாகுமாறு அசைந்து மழைத்துளியை மறைத்தது. நள் என்ற ஓசையையுடைய இரவிலும் மன்னன் உறங்காது சில வீரர்கள் சூழ்ந்து வரத் திரிகின்றான். பாசறையில் தங்கி அவன் செய்யும் போர்ச்செயல் வெற்றியுடன் இனிதே நிறைவுறுக.

### 2.1.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

**அ. வினாக்கள்**

1. நெடுநல்வாடையின் ஆசிரியர் யார் ?
2. நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவன் யார்?
3. இந்நூல் எத்தனை அடிகளை உடையது ?
4. கோவலர் நடுங்கக் காரணம் யாது?
5. மகளிர் மாலைக் காலம் வந்ததை எவ்வாறு அறிந்தனர்?

**ஆ. சரியா? தவறா?**

1. இரவு பகல் அறியாது புறா மயங்கிக் கிடந்தது.
2. நெடுநல்வாடை ஆசிரியப்பாவால் ஆனது.
3. வாடைக் காற்று தலைவிக்கு இன்பம் தந்தது.
4. வாடையால் குடத்து நீரை இளையவரும் முதியவரும் குடிக்கவில்லை.
5. பாட்டுடைத் தலைவன் உரைத்த வஞ்சினம் புறனாநூற்றில் காணப்படுகிறது.

### 2.1.6 பாடத் தொகுப்புரை

- வாடையின் கொடுமை கூறப்பட்டுள்ளது.
- வாடைக்காற்று தலைவிக்குத் துன்பத்தையும் போர்க்களப் பாசறையில் உள்ள தலைவனுக்கு இன்பத்தையும் தந்தமை நயமாக விளக்கப்பட்டுள்ளது
- மக்களுக்கும் புள்ளினங்களுக்கும் வாடைக்காற்று தந்த துன்ப நிலை இடம்பெற்றுள்ளது.
- அக்கால கலை நுட்பம் நயம்பட உரைக்கப்பட்டுள்ளது.

### 2.1.7 அருஞ்சொற் பொருள்

| | | |
|---|---|---|
| ஏர்பு | - | எழுந்து |
| வளைஇ | - | சூழ்ந்து |
| ஆர்கலி | - | வெள்ளம் |
| புலம்பு | - | தனிமை |
| பீரம் | - | பீர்க்கு |
| தொழுதி | - | திரள் |
| கலித்த | - | தழைத்த |
| பித்திகம் | - | பிச்சிப்பூ |
| கையற்று | - | செயலற்று |
| வடவர் | - | வட நாட்டவர் |
| சிலம்பி | - | சிலந்திப்பூச்சி |
| கன்னல் | - | நீர்க்குடம் |
| தொகுவாய் | - | குவிந்த வாய் |
| தடவு | - | கும்மட்டி |
| அரைநாள் | - | உச்சிப்போது |
| எகினம் | - | கவரிமான் |
| கலிழ்ந்து | - | கலங்கி |

| | | |
|---|---|---|
| பாவை | - | சிற்பம் |
| நாகம் | - | யானை |
| புடை | - | பக்கம் |
| பாண்டில் | - | கட்டில் |
| காடி | - | கஞ்சி |
| கலிங்கம் | - | ஆடை |
| நுசுப்பு | - | இடை |
| வடந்தை | - | வாடைக்காற்று |
| எஃகம் | - | வேல் |

### 2.1.8 மாதிரி வினாக்கள்

**அ. குறு வினாக்கள்**

1. வாடைக்காற்றின் தன்மை யாது?
2. நெடுநல்வாடை பெயர் விளக்கம் தருக.
3. தலைவியை ஆற்றுவித்தவர் யாவர்?
4. பாண்டில் - பொருள் தருக.
5. போர்ப் பாசறையில் தலைவன் யாரைக் காணச் செல்கிறான்?

**ஆ. சிறு வினாக்கள்**

1. கோவலர் நிலையாக நெடுநல்வாடை கூறுவன யாவை?
2. கூதிர் காலநிலை பற்றிக் கூறுக.
3. முழுவலி மாக்களின் செயல் எத்தகையது?
4. மாலைக் கால மகளிரின் வழிபாடு குறித்துக் கூறுக.
5. கூதிர்ப் பருவ நிகழ்ச்சி யாது?

**இ. பெரு வினாக்கள்.**

1. தலைவியை வாடைக்காற்று வருத்தியதை விளக்குக.
2. போர்ப்பாசறையில் தலைவனது செயல்கள் குறித்து எழுதுக.

### 2.1.9 பரிந்துரை நூல்

இவ்வலகில் திருமுருகாற்றுப்படை நூலுக்குக் கூறிய நூலையே காண்க.

### 2.1.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

**அ. விடைகள்**

1. நெடுநல்வாடையின் ஆசிரியர் நக்கீரர்.
2. நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.
3. இந்நூல் 188 அடிகளை உடையது.
4. கோவலர் மழையின் சிறுதுளி தம்மீது விழுவதால் நடுங்கினர்.
5. மகளிர் தாம் பறித்த மலர்கள் மலர்ந்ததால் மாலைக் காலம் வந்ததை அறிந்தனர்..

**ஆ விடைகள்**

1. சரி.
2. சரி.
3. தவறு.

4. சரி.
5. சரி.

**நெடுநல்வாடை**

வையகம் பனிப்பவலன் ஏர்பு வளைஇ,
பொய்யா வானம் புதுப் பெயல் பொழிந்தென,
ஆர்கலி முனைஇய கொடுங் கோற் கோவலர்
ஏறுடை இன நிரை வேறு புலம் பரப்பி,
புலம் பெயர் புலம்பொடு கலங்கி, கோடல்
நீடு இதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ,
மெய்க் கொள் பெரும் பனி நலிய, பலருடன்
கைக் கொள் கொள்ளியர் கவுள் புடையூஉ நடுங்க-
மா மேயல் மறப்ப, மந்தி கூர,
பறவை படிவன வீழ, கறவை
கன்று கோள் ஒழியக் கடிய வீசி,
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்-
புன் கொடி முசுண்டைப் பொதிப் புற வான் பூ,
பொன் போல் பீரமொடு, புதல்புதல் மலர;
பைங் காற் கொக்கின் மென் பறைத் தொழுதி,
இருங் களி பரந்த ஈர வெண் மணல்,
செவ் வரி நாரையோடு, எவ் வாயும் கவர-
கயல் அறல் எதிர, கடும் புனல் சாஅய்
பெயல் உலந்து எழுந்த பொங்கல் வெண் மழை
அகல் இரு விசும்பில் துவலை கற்ப;
அம் கண் அகல் வயல் ஆர் பெயற் கலித்த
வண் தோட்டு நெல்லின் வரு கதிர் வணங்க;
முழு முதற் கமுகின் மணி உறழ் எருத்தின்
கொழு மடல் அவிழ்ந்த குரூஉக் கொள் பெருங் குலை,
நுண் நீர் தெவிள வீங்கி, புடை திரண்டு,
தெண் நீர்ப் பசுங் காய், சேறு கொள முற்ற;
நளி கொள் சிமைய, விரவு மலர், வியன் காக்
குளிர் கொள் சினைய குரூஉத் துளி தூங்க-
மாடம் ஓங்கிய மல்லல் மூதூர்,
ஆறு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவில்,
படலைக் கண்ணி, பரு ஏர் எறுழ்த் திணி தோள்,
முடலை யாக்கை, முழு வலி மாக்கள்
வண்டு மூசு தேறல் மாந்தி, மகிழ் சிறந்து,
துவலைத் தண் துளி பேணார், பகல் இறந்து,
இரு கோட்டு அறுவையர், வேண்டு வயின் திரிதர-
வெள்ளி வள்ளி வீங்கு இறைப் பணைத் தோள்,
மெத்தென் சாயல், முத்து உறழ் முறுவல்,

பூங் குழைக்கு அமர்ந்த ஏந்து எழில் மழைக் கண்,
மடவரல் மகளிர் - பிடகைப் பெய்த
செவ்வி அரும்பின், பைங் காற் பித்திகத்து,
அவ் இதழ் அவிழ் பதம் கமழ, பொழுது அறிந்து,
இரும்பு செய் விளக்கின் ஈர்ந் திரிக் கொளீஇ,
நெல்லும் மலரும் தூஉய், கைதொழுது,
மல்லல் ஆவணம் மாலை அயர-
மனை உறை புறவின் செங் காற் சேவல்
இன்புறு பெடையொடு மன்று தேர்ந்து உண்ணாது,
இரவும் பகலும் மயங்கி, கையற்று,
மதலைப் பள்ளி மாறுவன இருப்ப;
கடியுடை வியல் நகர்ச் சிறு குறுந் தொழுவர்,
கொள் உறழ் நறுங் கல், பல கூட்டு மறுக;
வடவர் தந்த வான் கேழ் வட்டம்
தென் புல மருங்கில் சாந்தொடு துறப்ப;
கூந்தல், மகளிர் கோதை புனையார்,
பல் இருங் கூந்தல் சில் மலர் பெய்ம்மார்,
தண் நறுந் தகர முளரி நெருப்பு அமைத்து,
இருங் காழ் அகிலொடு வெள் அயிர் புகைப்ப;
கை வல் கம்மியன் கவின் பெறப் புனைந்த
செங் கேழ் வட்டம் சுருக்கி; கொடுந் தறி,
சிலம்பி வால் நூல் வலந்தன தூங்க;
வான் உற நிவந்த மேல் நிலை மருங்கின்,
வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர் வாய்க் கட்டளை, திரியாது, திண் நிலைப்
போர் வாய்க் கதவம் தாழொடு துறப்ப;
கல்லென் துவலை தூவலின், யாவரும்
தொகு வாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார்,
பகுவாய்த் தடவில் செந் நெருப்பு ஆர;
ஆடல் மகளிர் பாடல் கொளப் புணர்மார்,
தண்மையின் திரிந்த இன் குரல் தீம் தொடை
கொம்மை வரு முலை வெம்மையில் தடைஇ,
கருங் கோட்டுச் சீறியாழ் பண்ணு முறை நிறுப்ப;
காதலர்ப் பிரிந்தோர் புலம்ப; பெயல் கனைந்து,
கூதிர் நின்றன்றால் போதே, மாதிரம்
விரி கதிர் பரப்பிய வியல் வாய் மண்டிலம்,
இரு கோல் குறிநிலை வழுக்காது, குடக்கு ஏர்பு
ஒரு திறம் சாரா அரை நாள் அமயத்து,
நூல் அறி புலவர் நுண்ணிதின் கயிறு இட்டு,
தேஎம் கொண்டு, தெய்வம் நோக்கி,

பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்ப, மனை வகுத்து-
ஒருங்கு உடன் வளைஇ ஓங்கு நிலை வரைப்பின்,
பரு இரும்பு பிணித்து, செவ்வரக்கு உரீஇ,
துணை மாண் கதவம் பொருத்தி, இணை மாண்டு,
நாளொடு பெயரிய கோள் அமை விழுமரத்து,
போது அவிழ் குவளைப் புதுப் பிடி கால் அமைத்து,
தாழொடு குயின்ற, போர் அமை புணர்ப்பின்,
கை வல் கம்மியன் முடுக்கலின் புரை தீர்ந்து,
ஐயவி அப்பிய நெய் அணி நெடு நிலை,
வென்று எழு கொடியொடு வேழம் சென்று புக,
குன்று குயின்றன்ன, ஓங்கு நிலை வாயில்,
திரு நிலை பெற்ற தீது தீர் சிறப்பின்,
த ரு மணல் ஞெமிரிய திரு நகர் முற்றத்து,
நெடு மயிர் எகினத் தூ நிற ஏற்றை
குருங்கால் அன்னமோடு உகளும் முன் கடை,
பணை நிலை முனைஇய பல் உளைப் புரவி
புல் உணாத் தெவிட்டும் புலம்பு விடு குரலொடு,
நிலவுப் பயன் கொள்ளும் நெடு வெண் முற்றத்து,
கிம்புரிப் பகு வாய் அம்பணம் நிறைய,
கலிழ்ந்து வீழ் அருவிப் பாடு இறந்து, அயல
ஒலி நெடும் பீலி ஒல்க, மெல் இயல்
கலி மயில் அகவும் வயிர் மருள் இன் இசை,
நளி மலைச் சிலம்பின் கோயில்-
யவனர் இயற்றிய வினை மாண் பாவை
கை ஏந்து ஐ அகல் நிறைய நெய் சொரிந்து,
பரூஉத் திரி கொளீஇய குரூஉத் தலை நிமிர் எரி,
அறு அறு காலைதோறு, அமைவரப் பண்ணி,
பல் வேறு பள்ளிதொறும் பாய் இருள் நீங்க;
பீடு கெழு சிறப்பின் பெருந்தகை அல்லது,
ஆடவர் குறுகா அருங் கடி வரைப்பின்,
வரை கண்டன்ன தோன்றல, வரை சேர்பு
வில் கிடந்தன்ன கொடிய, பல் வயின்,
வெள்ளி அன்ன விளங்கும் சுதை உரீஇ,
மணி கண்டன்ன மாத் திரள் திண் காழ்,
செம்பு இயன்றன்ன செய்வு உறு நெடுஞ் சுவர்,
உருவப் பல் பூ ஒரு கொடி வளைஇ,
கருவொடு பெயரிய காண்பு இன் நல் இல்-
தச நான்கு எய்திய பணை மருள் நோன் தாள்,
இகல் மீக்கூறும், ஏந்து எழில் வரி நுதல்,
பொருது ஒழி, நாகம் ஒழி எயிறு அருகு எறிந்து,

சீரும் செம்மையும் ஒப்ப, வல்லோன்
கூர் உளிக் குயின்ற, ஈர் இலை இடை இடுபு,
தூங்கு இயல் மகளிர் வீங்கு முலை கடுப்பப்
புடை திரண்டிருந்த குடத்த, இடை திரண்டு,
உள்ளி நோன் முதல் பொருத்தி, அடி அமைத்து,
பேர் அளவு எய்திய பெரும் பெயர்ப் பாண்டில் -
மடை மாண் நுண் இழை பொலிய, தொடை மாண்டு,
முத்துடைச் சாலேகம் நாற்றி, குத்துறுத்து,
புலிப் பொறிக் கொண்ட பூங் கேழ்த் தட்டத்துத்
தகடு கண் புதையக் கொளீஇ, துகள் தீர்ந்து,
ஊட்டுறு பல் மயிர் விரைஇ, வய மான்
வேட்டம் பொறித்து, வியன் கட் கானத்து
முல்லைப் பல் போது உறழ, பூ நிரைத்து,
மெல்லிதின் விரிந்த சேக்கை-மேம்பட,
துணை புணர் அன்னத் தூ நிறத் தூவி
இணை அணை மேம்படப் பாய், அணை இட்டு,
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடு அமை தூ மடி விரித்த சேக்கை,
ஆரம் தாங்கிய அலர் முலை ஆகத்துப்
பின் அமை நெடு வீழ் தாழ, துணை துறந்து,
நல் நுதல் உலறிய சில் மெல் ஓதி,
நெடு நீர் வார் குழை களைந்தென, குறுங் கண்
வாயுறை அழுத்திய, வறிது வீழ் காதின்,
பொலந் தொடி தின்ற மயிர் வார் முன்கை,
வலம்புரி வளையொடு கடிகை நூல் யாத்து,
வாளைப் பகு வாய் கடுப்ப வணக்குறுத்து,
செவ் விரல் கொளீஇய செங் கேழ் விளக்கத்து,
பூந் துகில் மரீஇய ஏந்து கோட்டு அல்குல்,
அம் மாசு ஊர்ந்த அவிர் நூற் கலிங்கமொடு,
புனையா ஓவியம் கடுப்ப, புனைவு இல்-
தளிர் ஏர் மேனி, தாய சுணங்கின்,
அம் பணைத் தடைஇய மென் தோள், முகிழ் முலை,
வம்பு விசித்து யாத்த, வாங்கு சாய் நுசுப்பின்,
மெல் இயல் மகளிர்- நல் அடி வருட;
நரை விராவுற்ற நறுமென் கூந்தல்
செம் முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇ,
குறியவும் நெடியவும் உரை பல பயிற்றி,
'இன்னே வருகுவர் இன் துணையோர்'என,
உகத்தவை மொழியவும் ஒல்லாள், மிகக் கலுழ்ந்து--

நுண் சேறு வழித்த நோன் நிலைத் திரள் கால்,
ஊறா வறு முலை கொளீஇய, கால் திருத்தி,
புதுவது இயன்ற மெழுகு செய் படமிசை,
திண் நிலை மருப்பின் ஆடு தலை ஆக,
விண் ஊர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து,
முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய,
உரோகிணி நினைவனள் நோக்கி, நெடிது உயிரா,
மா இதழ் ஏந்திய மலிந்து வீழ் அரிப் பனி,
செவ் விரல் கடைக் கண் சேர்த்தி, சில தெறியா,
புலம்பொடு வதியும் நலம் கிளர் அரிவைக்கு
இன்னா அரும் படர் தீர, விறல் தந்து,
இன்னே முடிகதில் அம்ம- மின் அவிர்
ஓடையொடு பொலிந்த வினை நவில் யானை
நீள் திரள் தடக் கை நிலமிசைப் புரள,
களிது களம் படுத்த பெருஞ் செய் ஆடவர்,
ஒளிறு வாள் விழுப் புண் காணிய, புறம் போந்து,
வடந்தைத் தண் வளி எறிதொறும் நுடங்கி,
தெற்கு ஏர்பு இறைஞ்சிய தலைய, நன் பல்
பாண்டில் விளக்கில், பரூஉச் சுடர் அழல,
வேம்பு தலை யாத்த நோன் காழ் எஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்ட, பின்னர்,
மணி புறத்து இட்ட மாத் தாட் பிடியொடு
பருமம் களையாப் பாய் பரிக் கலி மா
இருஞ் சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்ப,
புடை வீழ் அம் துகில் இடவயின் தழீஇ,
வாள் தோட் கோத்த வன்கண் காளை
சுவல் மிசை அமைத்த கையன், முகன் அமர்ந்து,
நூல் கால் யாத்த மாலை வெண் குடை
தவ்வென்று அசைஇ, தா துளி மறைப்ப,
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்,
சிலரொடு திரிதரும் வேந்தன்,
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.

## குறிப்புகள்

# அலகு - 3

## 3.0 முன்னுரை

முன் பாடத்தில் சங்க இலக்கிய பத்துப்பாட்டுச் செய்திகளை அறிந்தீர்கள். இந்த அலகு முதல் ஐந்தாவது அலகு வரை உள்ள பகுதிகள் சங்க இலக்கிங்களில் இரண்டாவதாக எண்ணப்படும் எட்டுத்தொகை பற்றிய செய்திகளை உங்களுக்கு அறிமுகம் செய்கிறது. இவ்வலகில் பாலைக்கலியின் பாடற்பொருளைக் காணலாம்.

**பாலைக்கலி - பாட அமைப்பு**

3.1 நோக்கங்கள்

3.2 நூல் அறிமுகம்

3.3 பாடல் ஆசிரியர்

3.4 பாடப் பொருள் விளக்கம்

3.4.1 பாணன் கூற்று

3.4..2 செவிலி கூற்றும் முக்கோற் பகவர் பதில் கூற்றும்

3.4.3 தலைவி கூற்று.

3.4.4 தோழி கூற்று.

3.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

3.6 பாடத் தொகுப்புரை

3.7 அருஞ்சொற் பொருள்

3.8 மாதிரி வினாக்கள்

3.9 பரிந்துரை நூல்

3.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

## 3.1 நோக்கங்கள்

- கலிப்பாவகையின் அமைப்பும் சிறப்பும் உணர்தல்.
- தலைவன் தலைவியின் காதல் உறுதியும் நிலைத்த உண்மையும் அறிதல்.
- தலைவன் தலைவியுடன் பிற உறவுகள் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாட்டை உணர்தல்.
- சங்ககாலச் சமுதாய அமைப்பு முறையை அறிதல்.

## 3.2 நூல் அறிமுகம்

எட்டுத்தொகை அகப்பொருள் நூல்கள் ஐந்தனுள் கலித்தொகை ஒன்று. இது பாலைக்கலி, குறிஞ்சிக்கலி, மருதக்கலி, முல்லைக்கலி, நெய்தல்கலி என ஐந்து பகுதிகளை உடையது. பாலைக்கலியைப் பெருங்கடுங்கோனும், குறிஞ்சிக்கலியைக் கபிலரும், மருதக்கலியை மருதனிளனாகநாரும், முல்லைக்கலியை நல்லுருத்திரனும், நெய்தற்கலியை நல்லந்துவனும் பாடியுள்ளனர்.

இதில் மொத்தம் 150 பாடல்கள் உள்ளன. முதற்பாடல் கடவுள்வாழ்த்துப் பாடலாக உள்ளது. பாலைக்கலியில் 35, குறிஞ்சிக்கலியில் 29, மருதக்கலியில் 35, முல்லைக்கலியில் 17, நெய்தற்கலியில் 33 பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் கலிப்பா என்னும் பாவகையால் ஆனது. எனவே இதனை கலித்தொகை என்னும் பெயரால் வழங்குகின்றனர். ‘பாடல் சான்ற புலனெறி வழக்கம், கலியே பரிபாட்டு ஆயிரு மருங்கினும்’ என்ற தொல்காப்பிய நூற்பாவின் மூலம் கலிப்பாவின் தொன்மையை அறியலாம். ‘கற்றறிந்தார் ஏத்தும் கலி’, ‘கல்விவலார் கண்ட கலி’ என்னும் தொடர்கள் கலித்தொகையின் சிறப்பினை விளக்குகின்றன.

இந்நூலுக்கு உரை எழுதியவர் நச்சினார்க்கினியர். அவர் உரை மூலம் நெய்தல் திணையைப் பாடிய நல்லந்துவனாரே கடவுள்வாழ்த்துப் பாடலையும் பாடி இந்நூலைத் தொகுத்தார் என்பது தெரிகிறது.

இந்தப்பகுதியில் பாலைக்கலியின் 35 பாடல்களும் பாடமாக வந்துள்ளன. அவற்றில் தோழியின் கூற்றாக 28 பாடல்களும் தலைவியின் கூற்றாக 5 பாடல்களும் செவிலி கூற்றும் முக்கோற்பகவர் கூற்றுமாக ஒரு பாடலும் பாணன் கூற்றாக ஒரு பாடலும் இடம்பெற்றுள்ளன.

### 3..3 நூல் ஆசிரியர்

பாலைக்கலியின் ஆசிரியர் பெருங்கடுங்கோவின் இயற்பெயர் தெரியவில்லை. 'கடி' என்ற உரிச்சொல் 'கடு' என்று திரிந்து அதனுடன் 'கோ' என்ற பெயர் சேர்ந்து 'கடுங்கோ' என்றானது. அதன்முன் பெருமை சேர்ந்து பெருங்கடுங்கோ என ஆயிற்று.

இவர் இப்பாலைக்கலிப் பாடல்களுடன் நற்றிணையில் பத்து, குறுந்தொகையில் பத்து, அகநானூற்றில் பன்னிரெண்டு பாடல்களையும் பாடியுள்ளார். இவருடைய பாடல்கள் சொல் நயம் பொருள் நயம் கொண்டதாகும். மேலும் இடையிடையே நீதிகளைச் சொல்வதாகவும் விளங்குகின்றன். எ.கா. 'இரந்தார்க்கு ஈயாமை இழிவாகும்.' (கலி-14)

### 3.4 பாடப் பொருள் விளக்கம்

பாணன், செவிலியும் முக்கோற்பகவரும், தலைவி, தோழி ஆகியோர்தம் கூற்று முறையில் பாடப் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

#### 3.4.1 பாணன் கூற்று.

**பாடல் (30)**

இக்கூற்றில் **ஒரு பாடல்** இடம் பெற்றுள்ளது.

**துறை:**

பருவ வரவின் கண் ஆற்றாத தலைமகள் நிகழ்ந்தது சிந்தித்து, நம்மாட்டு தலைவர் அன்பிலராயினும் இக்காலத்து இவ் ஊரின்கண் பண்டு தாம் விளையாடியவாறு நினைந்து வருவர். இக்கால வரவு சொல்லுவார் உளராயின் எனத் தலைவி கூறக் கேட்ட பாணன் பாசறைக் கண் சென்று தலைவனைக் கண்டு கூறியது.

**பாடல் பொருள்**

**இளவேனில் பருவ வரவு (1-4)**

அரிய தவம் செய்பவர்கள் குறைவின்றி அனுபவிக்கும் இன்பம் போல அழகாக அரும்புகள் விரிந்துள்ள கொம்புகள். அக்கொம்புகளில் தான் விரும்பும் தாதைச்சேர்ந்து உண்டு ஒலிக்கும் வண்டுகளுடன் கரிய தும்பிகளும் வருத்தம் இன்றி தங்கும்படி அவற்றை மரங்கள் வரவேற்கும். இத்தகைய இளவேனில் பருவம்.

**பருவ வரவு கண்ட தலைவி கூறல். (5-17)**

வெயில் ஒளி காணாத விரிந்த மலர்கள் உள்ள குளிர்ந்த சோலையில் குயில் கூவும் இளவேனிற் காலம் என்று தலைவருக்குச் சொல்பவர் இருந்தால், யான் உறக்கம் இல்லாமல் துன்பம் அடைய, அவர் மயில் போன்ற பரத்தையருடன் தழுவுவதை அனுபவிப்பார். மேலும் அவர்களுடன் நீர்த்துறைகளில் நீராடி நம்மை மறந்து இருப்பார். ஆனால் அவருக்குச் சொல்பவர் இல்லையே.

மலர்க்கொத்துகளுடன் ஆற்றிடைக்குறையைச் சூழ்ந்து வையை ஆற்று நீர் ஓடும் என்று அவருக்குச் சொல்பவர் இருந்தால், அவரைத் தழுவுவதற்குரிய யான் அழகு கெடும்படி காமனுக்குத் திருவிழா நிகழும் இக்காலத்தில் பரத்தையருடன் விளையாடுவாரோ? ஆனால் அவருக்குச் சொல்பவர் இல்லையே.

**பாணன் தலைவனுக்குக் கூறல்** (18-21)

உன் அடியை வணங்காத பகைவர் போல மிகுந்த காமநோயினால் துன்பம் அடைந்து நடுங்கினாள். அத்தகையவளது அழகு மீண்டும் பெறும்படி உம் பெரிய வலிய தேரைச் செலுத்துவீராக! என்று பாணன் தலைவனிடம் கூறினான்.

### 3.4.2 செவிலி கூற்றும் முக்கோற் பகவர் பதில் கூற்றும்

**பாடல்** (9)

இக்கூற்றில் **ஒரு பாடல்** இடம்பெற்றுள்ளது.

**துறை:**

உடன் போய தலைவி பின் சென்ற செவிலி இடைச் சுரத்து முக்கோற் பகவரைக் கண்டு, 'இவ் வகைப்பட்டாரை ஆண்டுக் காணீரோ? என வினவியாளுக்கு, அவரைக் கண்டு அது அறம் எனவே கருதிப் போந்தோம் நீரும் அவர் திறத்து எவ்வம்பட வேண்டா' என எடுத்துக் காட்டி அவர் தெருட்டியது.

**பாடல் பொருள்**

**செவிலித் தாயின் வினா** (1-8)

உறியில் பொருந்திய கமண்டலமும் முக்கோலும் தோளில் சுமந்து வருபவரே!அரி அயன் அரன் ஆகிய மூவரையும் ஒன்றாக எண்ணும் நெஞ்சத்தினால் ஐம்பொறியும் ஏவல் செய்யும் கொள்கையும் ஒழுக்கமும் உடைய அந்தணரே! கதிரவனின் கதிர்களை மறைப்பதற்காகக் கையிலுள்ள குடை நிழலிலே கொடிய காட்டில் செல்வதை இயல்பாக உடைய ஒழுக்கத்தை உடையவரே! உம்மைக் கேட்கிறேன்,'இக்காட்டில் என் மகள் ஒருத்தியும் வேறு ஒருத்தியின் மகனும் யாரும் அறியாமல் ஒன்று சேர்ந்தனர். இப்போது மற்றவர் அறியும்படி அவ்விருவரும் இக்காட்டில் செல்ல நீவிர் கண்டீரோ? என்று செவிலித் தாய் வினவினாள்.

**முக்கோற் பகவர் பதிலுரை** (9-24)

முக்கோற் பகவர்,' ஆண்மகனுக்குரிய அழகுடைய தலைவனுடன் இவ்வரிய சுரத்தில் (காட்டில்) செல்ல எண்ணி வந்த மடப்பமுடையவளின் தாயாம் இயல்புடையீர்! நீவிர் கூறுவது போன்ற இருவரைக் கண்டோம். அது அறமே ஆகும் என்று எண்ணி வந்தோம் என்று கூறினர். மேலும்,

பல நறுமணப் பொருள் கலந்த சந்தனம் உடலில் பூசிக் கொள்பவர்க்குப் பயன்படுமேயன்றி அவை பிறந்த மலைக்கு என்ன பயனை அளிக்கும்? ஆராயின் உம் மகளும் பருவ காலத்தில் உமக்குப் பயன்பட மாட்டாள்.

சிறந்த வெண் முத்துக்கள் அணிந்து கொள்பவர்க்குப் பயன்படுமேயன்றி அவை பிறந்த கடலுக்கு என்ன பயனை அளிக்கும்? ஆராயின் உம் மகளும் பருவ காலத்தில் உமக்குப் பயன்பட மாட்டாள்.

ஏழு நரம்புகளால் எழுப்பப்படும் இனிய இசை பாடுபவருக்குப் பயன்படுமேயன்றி அவை பிறந்த யாழுக்கு என்ன பயனை அளிக்கும்? ஆராயின் உம் மகளும் பருவ காலத்தில் உமக்குப் பயன்பட மாட்டாள்.

எனவே கற்புடைய நும் மகளுக்காக நீ வருந்தாதே! பெற்றோரை விடச் சிறந்த கணவனை வணங்கிப் பின் சென்றாள். இவ்வாறு இப்புவியில் கற்புடன் நடத்தும் இல்லறமே சிறந்த அறமாகும். மேலும் மறுமைக்கும் நல் வழி காட்டும் என்று செவிலிக்கு மறுமொழி கூறினர்.

### 3.4.3 தலைவி கூற்று.

இக்கூற்றில் **ஐந்து பாடல்கள்** உள்ளன.

**பாடல் -6**

**துறை:**

தலைவன் செலவுக் குறிப்பறிந்து, 'நீர் செல்லும் கடும் சுரத்துத் துன்பத்திற்குத் துணையாக எம்மையும் உடன்கொண்டு சென்மின்' என்று தலைவி கூறியது.

**பாடல் பொருள்**

**காட்டுவழியின் தன்மை (1-6)**

பெருந்தகையீர்! காட்டுப் பசு தான், தின்பதற்கு எதுவும் கிடைக்காததால் மரல் என்னும் கற்றாழையைத் தின்னும்படி மழை வறண்டது. உயர்ந்த மலைகள் உள்ள அரியவழி. அவ்வழியில் செல்பவர்களை வழிப்பறி செய்யும் மறவர்கள் தாக்கிய கூர்மையான அம்புகள் தைத்ததால் அழுந்தி உலர்ந்து வாடும் நாவிற்குத் தண்ணீர் கிடைக்காமல் தடுமாறுவர்.அக்கொடும் துன்பத்தை அவர்களுடைய கண்ணீர் மறைக்கும் என்று இவ்வாறு சொல்லி நான் உம்முடன் வரவேண்டாம் என்கிறீர்.

**தலைவி உடன் வரல் எனல் (7-11)**

நான் உம்மைப் பிரிந்தால் ஆற்றாது இறந்து விடுவேன் என்பதை அறியாதவர் போலக் கூறுகிறீர். இவ்வாறு கூறுவது உமக்கு ஏற்றதன்று. அன்பற்று என்னைப் பிரிந்து போகாமல், என்னையும் அக்காட்டு வழியில் உம்முடைய துன்பத்திற்குத் துணையாக அழைத்துச் சென்றால், அதைவிட எமக்கு இன்பம் தருவது வேறு உண்டோ? இல்லை என்று தலைவி தலைவனிடம் தன் விருப்பத்தைக் கூறுகிறாள்.

**பாடல் (11)**

**துறை:**

தலைவன் பிரிந்து செல்லும் காட்டில் நிகழும் அருட்செயலைக் கண்ணுற்றுத் திரும்பி வருவான் எனத் தலைவி தோழிக்குக் கூறியது.

**பாடல் பொருள்**

**தலைவன் வருவான் எனல் (1-5)**

இல்லறத்தாரின் அருள் பெற வேண்டி வரும் அந்தணர் துறவியர் முதலியவர்க்கு அறம் செய்தல். பெரிய பகைகளை வென்று அச்செருக்கால் தம்மை வழிபடாதவரை அழித்தல். முற்பிறவியில் இருவருக்கும் தோன்றிய காதலால் இப்பிறப்பில் மனம் விரும்பும் இன்பத்தைத் தரும் என்று எண்ணி பொருள் தேடச் சென்ற தலைவர் வருவார் என எண்ணுகிறேன் என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

**தலைவன் மீண்டு வரக் காரணம் கூறல்(6-17)**

மேலும் அதற்கான காரணத்தைக் கூறுகிறாள். கனமான பொன் காதணி அணிந்தவளே! 'காடுகள் தீ போன்ற வெம்மையால் கால் அடி பொறுக்க முடியாத கொடியது என்று சொன்னார். அத்தகு காட்டில் யானைக் கன்றுகள் கலக்கிய நீரை ஆண் யானை முதலில் தன் பெண் யானையைக் குடிக்கச் செய்து பிறகு தான் குடிக்கும் என்றும் சொன்னார்.

காடுகள் பசுமையின்றி தீய்ந்த கொம்புகளுடன், இன்பத்திலிருந்து நீங்கிச் சென்றவரைத் துன்புறுத்தும் என்றார். அத்தகு காட்டில் வெயிலால் நிழல் இல்லாத பாலை நிலத்தில், ஆண் புறாக்கள் தம் சிறகை விரித்து நிழல் உண்டாக்கிப் பெண் புறாக்களின் வருத்தத்தைப் போக்கும் என்றும் சொன்னார்.

மலைமீதுள்ள மூங்கில்கள் வாடும்படி கதிரவனின் கதிர்கள் காய்வதால், அக்காட்டின் வழியில் செல்பவருக்கு நெருங்குவதற்கு அரியதாய் உள்ளது என்று சொன்னார். அத்தகு காட்டில் நிழல் இல்லாததால் ஆண்மான் தன் நிழலைப் பெண்மானுக்குத் தரும்.

**நல்நிமித்தம் சுட்டிக் காட்டல் (18-22)**

இத்தகு அருளும் அன்பும் நடைபெறும் காட்டில் அவர் சென்றுள்ளார். எனவே நம் நலத்தைக் கெடுக்கமாட்டார். அதற்குக் காரணம் என்னவென்றால் நம் வீட்டில் உள்ள பல்லி அவர் வருவதற்கு ஏற்றவாறு ஒலித்தது. நல்ல அழகிய என் இடக் கண்ணும் துடிக்கின்றது என்று தலைவி தோழிக்குக் கூறி ஆற்றுவிக்கிறாள்.

**பாடல் (20)**

**துறை:**

பாடல் 6 இல் காண்க.

**பாடல் பொருள்**

**காட்டின் தன்மை (1-6)**

பலவகை உணவுகளைத் தந்து எல்லோருக்கும் பயன் தரும் நிலம் ஈரம் நீங்கும்படி ஞாயிறு தன் கதிர்களைச் செலுத்துகிறது. அத்தகையக் கோடைகாலத்தில் மலையிலுள்ள குளிர்ச்சியை விரும்பிப் பசியால் விரும்பும் பெரிய ஆண் யானைகளின் கூட்டத்தை உடையது மலை. அங்கு மணிகள் விளங்கும் இத்தகைய இயல்புடைய மலையும் வாடும்படியும் மண் பிளக்கவும் தெளிந்த நீர் நிலைகள் வரண்டு துகள் எழுந்தும் காட்சியளிக்குமாறு வெப்பம் மிகுந்ததாகக் காடு உள்ளது.

**தலைவன் பிரியின் தலைவி வாழாள் எனல் (7-19)**

கிளி போன்ற இனிய சொல்லை உடையவளே! வெப்பம் மிகுந்த கொடிய சுரம் மழையை அறியாதது. எனவே அத்தகைய காடு நின் காலடி வைத்து நடத்தற்கு எளிதாய் இருக்குமோ? என்று சொல்பவரே. ஓர் எல்லையில் நிற்காமல் காற்றை விட மிக விரைவாக வாழ்நாள் செல்லும். உம்முடைய இன்பத்தையே வாழ்நாளாகக் கொண்டுள்ளேன்; எனவே உம்மைப் பிரிந்து யான் வாழ்வேனோ? இறந்துவிடுவேன்.

வாயில் ஊறும் நீர் அமிழ்தைப் போன்றது என்பதற்குக் காரணமான பற்களை உடையவளே? கொடிய சுரத்தில் நீ தண்ணீர் உண்ண விரும்பினால் அங்கு நீர் இல்லை என்று அறத்தை எனக்குச் சொல்பவரே! யான் உன்னுடைய நெஞ்சமாகிய காதலில் ஆற்று நீர் கழிந்தது போல இளமையை உடையேன். எனவே நான் இங்கு நெஞ்சம் கலங்கி வருந்தி இருப்பேனா? இறந்துவிடுவேன்.

அழகிய மூங்கில் போன்ற தோளை உடையவளே! நீ கொடிய காட்டில் என்னுடன் வந்தால் அங்குள்ள மரங்கள் உன் களைப்பைப் போக்கக் கூடிய சிறந்த நிழலை தராது என்று கூறுபவரே! நீவிர் எம்மை விட்டுப் பிரிந்தால் என் நலம் நீண்ட நிழலில் நின்ற தளிர் போல வெளுப்பதை அறிந்து இருப்பாய். ஆனால் நான் உம்முடைய அருளைக் கைவிட்டு விட்டு இங்கு இருப்பதை நினைப்பேனா? இறந்துவிடுவேன்.

**தலைவி தலைவனை உடன் அழைத்துச் செல்ல வேண்டுதல் (20-23)**

நான் போகும் இடத்தில் உள்ள காடானது நீ வருவதற்கு அரிய வெப்பதை உடையது என்று மேலும் சொல்பவரே! அம்பை எய்தால் அது குறித்த இடத்திற்குச் செல்ல முடியாமல் தடுக்கும் கற்கள் நிறைந்த வழியில் பெருமையுடைய கழுத்தும் அழகும் உடைய ஆண்மானின் பின் பிரிந்திடாமல் திரியும் பெண்மானைக் காணாமல் இருக்கின்றீரோ! எனவே என்னையும் உடன் அழைத்துக் கொண்டு செல்லுங்கள் என்று தலைவி தலைவனிடம் கேட்கின்றாள்.

**பாடல் (23)**

**துறை:**

பாடல் 6 இல் காண்க.

**பாடல் பொருள்**

**தலைவன் பிரிவில் தலைவி தன் நிலை உரைத்தல் (1-7)**

ஓட்ட கவணைப் பயன்படுத்துவர். அக்கவண் கல் பூங்கொம்பிலுள்ள மலர்களை உதிர்க்கும். இத்தகைய மலைகளை உடைய அரிய சுரத்தில் நீ தனியே செல்ல யான் இவ்வூரில் தனித்து இருத்தல் சிரித்தற்கு உரிய செயலாகும். உன் பிரிவின் பொழுது உண்ணும் உணவை மறுப்பேன். உயிருடன் வாழவும் விரும்பேன்.

**கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் நிலை உரைத்தல் (8-14)**

தோளின் அழகை அனுபவித்த கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், விருப்பத்தால் தண்ணீரை மொண்டு குடித்த எச்சில் காரணமாகப் பயன்படாத குடை ஓலையைப் போன்றவர். எனவே அதை எண்ணுதல் வேண்டும். கணவரால் மனம் விரும்பி அழகை அனுபவித்து விடப்பட்ட மகளிர், குடியிருந்தவர் நீங்கிச் சென்ற பழமையான ஊர் போன்றவர்; அதை ஆராய்தல் வேண்டும். கணவரால் பெண்மைக் குணத்தை நுகர்ந்து விடப்பட்ட மகளிர் சூடுபவர் சூடி நீக்கிய மலரைப் போன்றவர். இதனை நீ எண்ணிப் பார்ப்பாயாக.

**தலைவி நெஞ்சின் நிலை (15-19)**

நீ என்னைப் பிரிந்தால் வேடற்கு அகப்பட்ட மான் போல என் நெஞ்சம் என்னிடம் இல்லாமல் உன்னுடன் வரும்; அதனை நீ போற்றிப் பாதுகாப்பாயாக.

**பாடல் (24)**

**துறை:**

தலைவன் பிரிவைக் குறிப்பால் உணர்ந்த தலைவி ஆற்றாளாய்த் தோழிக்குச் சொல்லியது.

**பாடல் பொருள்**

**தலைவன் பிரிவைக் குறிப்பால் அறிந்து கூறல்(1-17)**

மிக இனிய சொல்லை உடையவளே! நம் நெஞ்சம் நடுங்குமாறு கேட்பது வந்தே தீரும் என்பது உறுதி. என் தலைவர் என்னை வழக்கத்திற்கு மாறாகப் பாராட்டி வருகிறார். இப்பாராட்டு பின்னால் அவர் பிரிதற்கு உரியது என்று ஆராய்ந்தேன். தலைவர் உறங்கும்போது கனவில் நான் கொடிய பாலையில் போய் இருபெரும் மன்னரைச் சமாதானப்படுத்தித் திரும்பி வரும் வரை இவள் இல்லறத்தை ஆற்றி இருக்கும் வல்லமை உள்ளவளோ! என்று கூறினார். நாம் தலைவர் கூட்டத்திற்கு இடையூராகக் கொண்டுள்ள செயல் பொருளுக்காகப் பிரிவதானால் அவரில்லாமல் யாம் உயிர் வாழ்வது இல்லை. எனவே பழிகூறும் மகளிர் பழி சொல்லுமாறு என் உயிர் அவருடன் போயிற்று என்று அவரிடம் கூறுக என்றாள்.

### 3.4.4 தோழி கூற்று.

இக்கூற்றில் **இருபத்தி எட்டு பாடல்கள்** உள்ளன.

**பாடல் (2)**

**துறை:**

பொருள் ஈட்டுதல் பொருட்டுப் பிரிவேன் என்னும் தலைவனுக்குத் தலைவியின் ஆற்றாமை கூறித் தோழி தலைவனின் செலவழுங்குவித்ததைத் தலைவிக்குக் கூறியது.

**பாடல் பொருள்**

**பாலை நிலத்தின் இயல்பு (1-10)**

நான்முகன், தேவர் முதலியோர் வேண்டிக் கொண்டதால் சிவபெருமான் அவுணர்களது மூன்று புரங்களையும் அழிக்கக் கோபம் கொண்டான். அப்போது அவன் முகம் தீ போன்று சிவந்தது போலக் கதிரவனின் ஒளியால் மலை பிளவுபட்டது. அந்த முப்புரமும் சிதைந்து விழுவது போல மலையின் பிளவுபட்ட

கற்கள் உதிர்ந்து வழியில் கிடக்கும். இத்தகைய இயல்புடையது நீ செல்ல நினைக்கும் பாலை வழி. அவ்வழியில் பொருள் ஈட்ட, இவளைப் பிரிந்து சென்றால் இவள் உயிர் வாழ மாட்டாள். யான் கூறுவதைக் கேளுங்கள்.

**தோழியின் சொல்லாற்றல் (11-22)**

ஒரு காலத்தில் தம்மிடம் உள்ள பொருள்கள் பிறருக்குக் கொடுத்துக் கொடுத்துத் தொலைந்து போகுமோ என்று எண்ணித் தம்மிடம் வந்து யாசிப்பவர்களுக்குச் சிறிது கூட பொருளைக் கொடுக்காமல் இருப்பது இழிவாகும் என்றும், இல்லை என யாசித்து வருபவர்களுக்குப் பொருள் கொடுக்காமல் இருப்பது இழிவாகும் என்றும் தம் வாழ்க்கைக்குப் பொருள் தம்மிடம் இல்லை என்று வருபவர்களுக்குப் பொருள் கொடுக்காமல் இருப்பது இழிவாகும் என்றும் மலை, காடு கடந்து சென்று ஈட்டும் பொருள் நன்றாக மதிக்கப்படுவதே. ஆயினும் நீ கூறிய கூற்றில் கறபனையும் நம்பிக்கையும் உடையவளின் இன்பத்தை எண்ணிப் பிரியாதிருத்தலே உன் மனதுக்குப் பொருளாய் இருக்கும். இவளைப் பிரிந்து செல்வது பொருளாகாது.

**தோழி தலைவனின் செலவைத் தடுத்தல் (23-29)**

இவ்வாறு கூறியும் பிரிந்து செல்வதைக் கைவிடாத தலைவர், நான் உன் இயற்கை அழகு தொலைந்து விடும் என்று கூற அதற்குக் குத்துக் கோலால் குத்தியும் அடங்காத யானை யாழ் ஓசை கேட்டு நின்றது போல நின்றார். தன் பிரிவையும் கைவிட்டார் என்று தோழி தலைவியிடம் தலைவனது செலவைத் தடுத்ததைக் கூறுகிறாள்.

**பாடல் (3)**

**துறை:**

தலைவன் பிரிவால் ஏற்படும் தலைவியின் ஆற்றாமையைக் கூறியும் தன் பிரிவைக் கைவிடாத தலைவனை அவன் செல்லும் கானமே அவன் செலவை இடித்துக் கூறித் தடுக்குமெனத் தோழி தலைவனுக்குக் கூறியது.

**பாடல் பொருள்**

**தலைவியின் நிலை (1-5)**

நான் உம் பிரிவைத் தலைவிக்குச் சொன்னதும் அவள் கை வளைகள் கழன்றன. கண்கள் நீர் சொரிந்தன. காம நோயினால் அழகற்ற நெற்றியைப் பெற்றாள். ஊர் அம்பலுக்கு நாணினாள். வழியின் வறட்சியை நினைத்தாள். இவ்வாறாக அவள் நிலை காணப்பட்டது.

**தோழியின் சொல்லாற்றல் (6-22)**

நீ பிரிந்தால் இவளது உறுப்பு நலன்கள் கெடும் என்றும் இவள் இறந்து விடுவாள் என்றும் எடுத்துக் கூறி நாங்கள் பலவாறு வேண்டியும் அவற்றை எண்ணாமல் நீ போகத் துணிந்தாய். அவ்வாறு சென்றால் இனி உன்னைத் தடுப்பன உள்ளன. அவை, நீர் இன்றி வற்றிய சுனைகளில் இலையுடன் வாடிய மலர்கள், பற்றுக்கோடாய் உள்ள மரம் வாட அதைச் சேர்வதை விட்டுவிட்டு கீழே விழுந்து கிடக்கும் கொடிகள், மரத்தின் அழகு கெட வாடிக் கிடக்கும் தளிர்கள் ஆகும். இவ்வளவு கூறியும் செல்லத் துணிந்தாயே யானால், உனக்கு உண்மையை இடித்துக் கூறும் உறவினரைப் போல உம் போக்கைத் தடுப்பது நீ செல்லும் காடே ஆகும் என்று கூறித் தலைவன் பிரிவைத் தடுத்து நிறுத்துகிறாள் தோழி.

**பாடல் (4)**

**துறை:**

பொருளின் பொருட்டுப் பிரியும் தலைவனுக்குத் தோழி தலைவியின் ஆற்றாமைக் கூறி அவன் பிரிவைக் கைவிடுமாறு கூறுதல்.

**பாடல் பொருள்**

**பாலை வழியின் தன்மை (1-8)**

பாலை நிலத்தில் உள்ள மறவர் வில்லை உடையவர். வளைந்த மயிரை உடையவர். வலிய உடலினர், புலி போன்ற பார்வையோடு அஞ்சாதவர். புதியவரிடம் பொருள் இல்லை என்றாலும் தங்கள் அம்பால் துன்பப்படுபவரைக் கண்டு மனம் மகிழ்வர். அவரைத் தொடர்ந்து சென்று உயிரைப் பறிப்பர். அதனால் அங்குப் பறவைகளும் பறக்க அஞ்சும். அத்தகைய வழியில் பொருள் தேடச் செல்ல எண்ணியதை எம் தோழி அறிந்தாள்.

**தலைவியின் வருத்தம் (9-20)**

தலைவன் தன்னைக் கூடிய காலத்து வேட்கை தணியாது, நிலை குலைந்த என் கூந்தலைக் கோதித் திருத்துதல் என் அணிகளைப் பழைய நிலையில் இருக்கச் செய்தல், வியர்வையைத் துடைத்தல் ஆகிய செயல்களைச் செய்வார். அவர் செய்ய எண்ணிய செயல் யாது அதனை நான் அறியேன் என்று தலைவி வருந்திக் கூறுகிறாள்.

**தோழியின் செயல் (21-25)**

எம் தலைவி அவள் கூறியவாறு நீ செய்த செயலால், பிரிவு ஒன்று உள்ளது என்று மனம் கலங்கி உள்ளாள். எனவே நீ அவளைப் பிரிந்தால் உயிருடன் இருக்க மாட்டாள். எம் பெரும! பொருளிடத்து மனதைச் செலுத்தாமல், பிரிவைக் கைவிடுவாயாக என்று தலைவனிடம் கூறுகிறாள்.

**பாடல் (5)**

**துறை**

தலைவன் பொருளின் பொருட்டுப் பிரிவான் எனக் கேட்ட தோழி அவனிடம் அவன் தேடும் பொருளைக் காட்டிலும் தலைவி சிறந்தவள் என்றும், அவன் பிரிவால் தலைவி இறப்பால் என்றும் கூறிப் பிரிவைத் தடுத்தல்.

**பாடல் பொருள்**

**காட்டின் இயல்பு (1-9)**

காட்டில் யானைக் கூட்டம் விலங்குகள் மறவர்கள் ஒன்றாகத் திரிந்ததால் புதர்கள் எல்லாம் வழிகளாயின. அவ்வழிகள் முன்பு இருந்த வழிகளுடன் கலந்தன. அத்தகு காட்டைக் கடந்து சென்று நீங்கள் தேடும் பொருளைவிட நாங்கள் சிறந்தவர்கள் என்பதை நீங்கள் அறிவீர். நீண்ட கடலில் காற்று வீசி மரக் கலத்தைச் சிதறச் செய்ததால், மனம் வருந்துபவரைப் போல நாங்கள் மனம் வருந்தி உங்களுடன் எவ்வாறு பேச இயலும்?. நீங்கள் இவ்வாறு இருக்க நாள்மீனும், புள்ளின் (பறவையின்) நிமித்தமும், தங்களைப் போகாமல் தடுத்து நிறுத்தும்.

**தோழியின் செயல் (10-19)**

விழா நடந்து முடிந்த இடம் பொலிவற்றது போலும், மன்னனால் துன்பப்பட்ட நாடு பாழானது போலும், நீர் இல்லாமல் ஓர் இரவுப் பொழுது மட்டும் வாடாமல் கிடக்கும் தாமரை மலர் போலும் எம் தலைவி ஆற்றி இருக்க மாட்டாள்.

மேற்கூறியவை எல்லாம் மீண்டும் நடை பெறும் விழாவினாலோ, மன்னராலோ, நீரினாலோ பழைய நிலையினை அடையலாம்.

ஆனால் நீ எம் தலைவியைப் பாதுகாப்பதை விட்டு அக்காட்டிற்குச் செல்லத் துணிந்த அந்த நாளே , அவளது உயிரைக் கவர்ந்து விடும்.

**பாடல் (7)**

**துறை:**

பொருளின் பொருட்டுப் பிரியும் தலைவனிடம் அவன் பிரிவால் இறந்து விடும் தலைவியின் உயிரை அவன் ஈட்டும் பொருள் தருமோ எனக் கூறி அவன் பிரிவைத் தடுத்தல்.

**பாடல் பொருள்**

**காட்டின் இயல்பு (1-4)**

முதுவேனிற் காலத்தில் தளர்ந்த ஆண் யானைகள் மழையற்ற ஊர்களில் நீரில்லாததால், கானல் நீரைத் தண்ணீர் என்று உண்ண விரும்பும். அத்தகு காட்டில் கடந்து செல்லும் பொழுது எம் தலைவிக்கு நிகழும் ஒன்றைக் கேட்பீராக!.

**தலைவியின் நிலையும் தோழியின் செயலும்.(5-21)**

நீ செல்வதற்கு ஆயத்தமாக வில்லைத் தடவுகின்றீர். அப்பொழுது சந்திரனைத் தழுவிய மேகம் போலத் தலைவியின் முகத்தில் பசலை பரவும். நீ கையில் தோலுறையைக் கட்டி அம்புகளைத் தேர்ந்தெடுக்கின்றீர். அச்செயல் நீர்ச்சுனையில் நீல மலர் மழை பெய்வதை அறிவுறுத்த நீர் சொரிவதைப் போன்று தலைவியின் மை பூசப் பெற்ற கண்கள் நீரைச்சொரியும். நீ தேர்ச்சக்கரத்தின் விளிம்பில் உள்ள புழுதிகளைத் துடைக்கின்றீர். அதனால் தலைவியின் வளையல்கள் கழன்று விழுகின்றன.

இவ்வாறு நீ செய்யும் செயல்களையே தாங்காத அவள், நீ பிரிந்தால் இறந்து விடுவாள். நீ தேடும் பொருள் இன்பத்தை மட்டும் தரும். தலைவியின் உயிரை மீட்டுத் தருமா? என்று கூறி தலைவன் செலவைத் தடுக்கிறாள் தோழி.

**பாடல் (8)**

**துறை:**

பொருளின் பொருட்டுப் பிரிய எண்ணும் தலைவனைத் தோழி இல்வாழ்க்கையே சிறந்த பொருளெனக் கூறி அவன் பிரிவைத் தடுத்தது.

**பாடல் பொருள்**

**காட்டின் தன்மை (1-8)**

நடுநிலைத் தவறிய அமைச்சன் சொன்னதைக் கேட்டுக் கொடிய செயலைச் செய்ய எண்ணிய மன்னனின் கொடுங்கோல் மக்களைச் சுடுவதைப் போலக் கதிரவன் காய்வதால் வரட்சி ஏற்பட்டது. நீரற்ற கரம்பு நிலத்தை உழும் ஏர்க்கலப்பைப் போல யானை நிலத்தில் தம் கொம்பை ஊன்றி கிடக்கும் காடு. அக்காட்டில் துணிந்து செல்ல நினைக்கும் உனக்கு ஒன்றைச் சொல்கிறேன் கேட்பீராக.

**அறிவுடையோர் விரும்பாத பொருள் (9-17)**

ஒலிக்கும் நரம்பு ஏழும் தம் பயன் இல்லாதவாறு இடையில் நின்ற நரம்பு அறுந்து போகும் யாழைவிட பொருள் நிலையில்லாதது. திருமகள் தான் விரும்பி சேர்ந்து இருந்தவரிடம் இருந்து மனம் வேறுபட்டு பிரியும் போது மற்றவர் அவரை இகழுமாறு செய்து அப்புறமாக மனம் மாறுவாள். அத்திருமகளைவிட பொருள் நிலையில்லாதது. பயன் கருதாது மன்னரின் ஆக்கத்தையே விரும்பிய அமைச்சரைக் கோபித்து உயிரைப் போக்கிய மன்னரைவிட பொருள் நிலையில்லாதது. எனவை இத்தகைய நிலையில்லாப் பொருளை அறிவுடையோர் விரும்பார்.

**நிலையான பொருளைக் கூறல் (18-22)**

எனவே பழியின்றி நீ செல்ல இருப்பதைக் கை விடுவாயாக. அதையே யாம் விரும்புகிறோம். மன்னன் நல்லாட்சி செலுத்த வந்த விருந்தினரை உபசரித்து தம் மனைவி விரும்பும்படி கூடி இருக்கும் இனிய முயக்கமே சிறந்த பொருளாகும் என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

**பாடல் (10)**

**துறை:**

பொருள் தேடல் பொருட்டுப் பிரிய எண்ணிய தலைவனிடம் தோழி தலைவியின் நிலை கூறிப் பிரிவைத் தடுத்ததைத் தலைவியிடம் கூறல்.

**பாடல் பொருள்**

**காட்டின் இயல்பு (1-7)**

இளமையில் வறுமை அடைந்தவனைப் போன்று மரங்களின் கொம்புகள் வாடிய தளிர்களை உடையன. மனதில் இரக்கமற்றவன் பொருளைப் பிறர்க்குக் கொடுக்காதது போல நிழலற்ற மரங்கள். எல்லோருக்கும் தீங்கையே செய்தவன் இறுதியில் உறவினரும் இல்லாமல் அவனும் கெடுவது போல மரக் கிளைகளும் வேரும் கெடும்படி ஞாயிற்றின் கதிர்கள் சுடும். வளைந்த கோல் உடைய மன்னன் குடைக் கீழ் உள்ள உலகம் போல உலர்ந்த மரங்கள் உடைய காடு. அக்காட்டில் நீ செல்லத் துணிந்துள்ளாய்.

**தலைவன் செலவைத் தடுத்தல் (8-24)**

உறங்கும் படுக்கையில் நீ அவள் அறியாமல் கையை அகற்றினாலும், விளையாட்டாய் விரும்பி சிறிது நேரம் பிரிந்தாலும் உன் பார்வை நீங்கினாலும் அவள் தாங்கிக் கொள்ளமாட்டாள். அத்தகையவளிடம் நீ பிரியும் செய்தியை நான் கூறின் எவ்வாறு தாங்குவாள்? இறந்துவிடுவாள் என்று நான் கூற நீண்ட வழியில் செல்வதைத் தலைவன் மெல்லக் கைவிட்டான் என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள். எனவே நின் வளையல்கள் கழலாதிருக்கட்டும் என்கிறாள்.

**பாடல் (12)**

**துறை:**

பொருளை ஈட்டும் பொருட்டுப் பிரிய எண்ணும் தலைவனிடம் தோழி, காட்டின் அருமையும் தலைவியின் மென்மையும் சொல்லித் தலைவன் பிரிவைத் தடுத்தது.

**பாடல் பொருள்**

**தலைவவனை நன்மக்கள் வழியை மேற்கொள்ளக் கூறல் (1-19)**

காட்டின் வெம்மையால் துன்பமுற்ற யானைகளின் கூட்டம் மலைச்சாரலில் உள்ள இடங்களில் ஓடின. ஆகையால் முன்பிருந்த வழிகள் எல்லாம் அழிந்து கிடக்கும் காடு அத்தகைய வழியில் செல்ல எண்ணியுள்ளாய். மென்மைத் தன்மையுடைய தலைவி இதனைத் தாங்கமாட்டாள். மேலும் சில நாள் வாழும் வாழ்க்கை இளமையும் காமமும் என்று அனைத்தும் விரைவில் உன்னிடம் இல்லாது கழியும். எனவே நல்ல மக்கள் மேற்கொள்ளும் வழியை நீ உனக்குரிய வழியாகக் கொள்வாயாக என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

**பாடல் (13)**

**துறை:**

தலைவன் பிரிவை அறிந்த தலைவி தானும் உடன்வரக் கூற, தலைவன் வழியின் அருமை கூறி விலக்க, தோழி தலைவியிடம் தலைவர் பிரிபவரல்லர் நகையாடினார் எனல்.

**பாடல் பொருள்**

**காட்டின் தன்மை (1-9)**

அரசன் சினந்து சென்றால் பகைவர் நாட்டை நெருப்பு தின்னும். அதுபோல் வெந்து கரியை உடைய நிலம். அதில் புள்ளிமான் உணவைக் காணாது ஆண்

மானுடன் கானல் நீரை உண்ண ஓடும். குரங்குகள் உணவின்றி வருந்தும். யானைகள் ஊற்றில் நீர் இல்லாததால் சேற்றில் உள்ள ஈரத்தை நுகரும். இத்தகைய அரிய காடு.

**தலைவன் தலைவி உடன் வருவதைத் தடுத்தல் (10-22)**

இவ்வாறு தலைவன் காட்டின் கொடுமையைக் கூறியதுடன் தலைவியிடத்தில் உன் அனிச்சமலர் போன்ற சிறிய அடிகள் சுரத்தில் உள்ள கல்லைத் தீண்டினால் அது தாமரை மலரின் உள்ளிதழ்களில் அரக்கு தோய்ந்தது போலச் சிவந்து விடும். சிங்கக்கால் கட்டிலின் மேல் அன்னத்தூவி போன்ற மென்மையான படுக்கையில் உறங்கும் நீ காட்டில் உள்ள சிங்கத்தின் குரலைக் கேட்டால் அச்சம் அடைவாய். வெம்மையான காற்று உன்னைத் தீண்டின் உன் அழகு கெடும் என்று இவ்வாறு கூறி தலைவி உடன் வருவதைத் தடுத்து விடுகிறான்.

**தோழி தலைவி வருத்தத்தைப் போக்கல் (23-27)**

தலைவி வருத்தம் அடைவதைக் கண்ட தோழி 'அனையவை காதலர் கூறலின் வினைவயின் பிரிகுவரல்லர்' உன் மெய் நடுக்கத்தைக் காண்பதற்காக அல்லாமல் விளையாட்டாகக் கூறினாரே அல்லாமல் உண்மையில் பிரியமாட்டார். பிரிபவர் அச்சுறுத்தாது அன்பான சொற்களைக் கூறிப் பிரிவார் என்று கூறித் தலைவியின் வருத்தத்தைப் போக்குகிறாள் தோழி.

**பாடல் (14)**

**துறை:**

தலைவன் தன் பொருள் தேடல் பிரிவைத் தோழியிடம் கூற அவள் அவன் பிரிவைத் தடுத்தது.

**பாடல் பொருள்**

**தலைவன் பாராட்டியதன் உட்பொருள் அறிதல் (1-9)**

களவுக் காலம் போலவே கற்புக் காலத்தில் நீ தலைவியின் மென்மையான தோள்களையும் மைதீட்டிய கண்களையும் முல்லை முகை போன்ற வெண்பற்களையும் நெற்றியையும் பிற உறுப்புகளையும் பலவாறு பாராட்டி வருத்தத்தில் ஆழ்த்தும் உன் இயல்பு என்னிடம் உண்டான வெறுப்பால் ஏற்பட்டதாகும் என்பதை இப்போது நான் அறிந்து கொண்டேன்.

**தலைவன் செலவைத் தடுத்தல் (10-19)**

பொருளை முறையான வழியில் தேடாமல் தவறான வழியில் தேடுபவர்க்கு அப்பொருள் அவரை விட்டு நீங்குவதுடன் இம்மையிலும் மறுமையிலும் அவருக்குப் பகையாகும். எனவே எம்மை ஒரு பொருளாக மதித்து நம்முள் கூடிய கூட்டத்தைக் கைவிட்டுப் போய் அடைய நினைக்கும் பொருளின் மீதுள்ள ஆசையை கைவிடுவாயாக. அதுவே நிலையான பொருளாகும் என்று தலைவனுக்கு எடுத்துச் சொல்லி அவனது செலவைத் தடுகின்றாள் தோழி.

**பாடல் (15)**

**துறை:**

பிரிவுணர்த்திய தலைவனுக்குத் தோழி தலைவியின் ஆற்றாமையும் இளமையும் கூறிப் பிரிவைத் தடுத்தல்.

**பாடல் பொருள்**

**காட்டில் மறவர் செயல் (1-9)**

முறுக்கிய மீசையும் கொடிய சினமும் உடைய மறவர் சிங்கம் இடித்தது போன்ற நாணின் ஒலியால் தன்னை எதிர்த்த மன்னரை முதுகிடச் செய்வர். வழிப்போக்கரின் பொருளைப் பறித்துக் கொண்டு புண்ணை உண்டாக்குவர். அங்கு அன்பும் அருளும் இல்லை. அத்தகைய காட்டின் வழியாகச் செல்ல விரும்பியுள்ளாய்.

**தலைவன் பிரிந்து அடையும் பொருள் தலைவியை மீட்குமோ எனல் (10-26)**

நீ அகப்பொருளை விட்டுவிட்டுப் பறப்பொருளைத் தேடிச் சென்றால், அசோகின் தளிர் போன்ற அவள் மேனி பசலை கொள்ளும்; நீ ஈட்டி வரும் புதிய பொருள் அவள் அழகை மீட்டுத் தர முடியுமா?

தலைவியின் சந்திரன் போன்ற முகம் பாம்பு விழுங்கிய திங்கள் போலப் பசலைப் படர்ந்துள்ளது. நீ சென்று கற்ற பொய்யில்லாத நாற் கேள்வியால் முன்பு மனதில் தங்கியுள்ள குற்றமில்லாத நோன்பால் அப்பசலை நீங்கிப் பழைய அழகைத் தர முடியுமா?

தலைவியின் மலர் போன்ற கண்கள் நீரைச் சொரிந்தன. நீ அயல் நாட்டிற்குச் சென்று உன்னைக் கட்டியுள்ள ஆசை என்னும் சங்கிலியை அறுத்து நிலையான தத்துவப் பொருளைக் கூடிய கூட்டத்தால் மீண்டும் பெற முடியுமா?

எனவே இவற்றை ஆராய்ந்து பார்த்து கல்வியால் உண்டாகும் வளத்தை இங்கிருந்தே செய்துகொள்ள முடியும். ஆனால் இவளது இளமையை அக்கல்வி தருமா? என்று தலைவனைப் பார்த்துத் தோழி வினவுகிறாள்.

**பாடல் (16)**

**துறை:**

தலைவன் பொருளின் பொருட்டுப் பிரிந்து செல்ல, அவன் சென்ற காட்டின் அருமை நினைந்து தலைவி தெய்வம் தொழ, தலைவன் மீண்டான் என அறிந்த தோழி தலைவியை ஆற்றுவித்தல்.

**பாடல் பொருள்**

**தோழியின் எண்ணமும் தலைவியின் மறுப்பும் (1-16)**

உறக்கம் இல்லாததால் பசலை அடைந்து, கண்ணீர்ப் பெருகி, நிறம் கெட்டு, வளை கழலும் நிலை தோன்றுமாறு பிரிந்தவர்பொருட்டு இப்போது செய்ய ஒரு செயல் உண்டு. அதுவும் நம் கற்பிற்குப் பொருத்தமானது என்று தோழி தலைவிக்குக் கூறத் தொடங்குகிறாள்.

தோழி தலைவியிடம் யாம்துன்பம் அடையும்படி, பொருளை விரும்பி நம்மை விட்டுப் போனார். அவர் செல்லும் வழியில் வெம்மை நீங்குமாறு சினம் நீங்கி, மிகுந்த துளிகளைச் சிதறுவாயாக என்று மேகத்துக்குரியதும் காற்றைத் தருவதுமாகிய ஞாயிற்றை வேண்டிக் கொள்ளலாம் என்று கூறினாள். அதைத் தலைவி மறுத்து நம் கற்பிற்குப் பொருத்தமான செயலாகுமா? என்று வினவுகிறாள்.

**தோழியின் ஆறுதல் மொழி (17-22)**

தேன் போன்ற சொல்லைப் பேசுபவளே! வறட்சிக் காலத்தில் உலகில் மழையைப் பெய்யச் செய்யும் கற்புடையவளின் நிறமழிந்து பசலை அடையும் என்று அறக் கடவுள், நம் தலைவரைப் பிரியாமல் செய்தது. இனி நீ வருந்தாதே என்கிறாள் தோழி.

**பாடல் (17)**

**துறை:**

நாடு காத்தற் பொருட்டு தலைவன் பிரிகின்றமை உணர்ந்த தலைவி வேறுபட்டமையால் தோழி தலைவனிடம் தலைவியின் இளமையும் அருமையும் கூறித் தடுத்ததைத் தலைவிக்குக் கூறியது.

**பாடல் பொருள்**

**தலைவனின் செயலும் தலைவியின் அச்சமும் (1-4)**

தலைவன் புதிய படைக்கலங்களைச் செய்து அலங்கரித்து, தலைவியை நீங்குகிறான். அது கண்டு தலைவி வருந்த, நான் பிரிந்தால் இவள் எவ்வாறு

ஆற்றுவாள் எனப் பெருமுச்சு விடுகிறான். இந்நிகழ்வை எண்ணித் தலைவி நடுங்குகிறாள்.

**தோழியின் சொல்லாற்றல் (5-21)**

தலைவி அழகு கெடும்படி நீ பிரிந்து, பகைவர் நாட்டைச் சீர்திருத்தி காவல் காத்து பொருள் ஈட்ட முயல்கிறாய். நீ குறித்த காலம், திங்களின் முழுமை தேய்வது போன்றும், தாமரை மலரின் குறைவிற்கு அதன் மலர்ச்சியே காரணமாக அமைவது போன்றும் நீர் நிறைந்த குளம் பின்பு வடிதல் போன்றும் ஒவ்வொரு நாளும் இவளது இளமையும் வாழ் நாளும் குறையும் என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

தோழியின் அறச்சொல் நல்வினையால் திருந்திய மருத்துவன் ஊட்டிய மருத்து போல நல்ல மருந்தாகி, தான் செல்ல இருந்த செலவினைக் கைவிட்டான் தலைவன்.

**பாடல் (18)**

**துறை:**

தலைவன் நாளது சின்மை முதல் அகற்சியது அருமை வரை உள்ள எட்டனையும் கூறக் கேட்ட தோழி அவன் தலைவியைப் பிரிந்து போகாது இருக்கும்படிச் செய்தது.

**பாடல் பொருள்**

**தலைவன் செலவைத் தடுத்தல் (1-12)**

ஐயனே! அரிய பொருள் மீதுள்ள ஆசையால் தலைவியைப் பிரிய எண்ண வேண்டாம். நீ மதிக்கும் பொருளும் தேடுபவர் நிலைக்கேற்பத் தேடப்படுவது. ஓரிடத்தில் கிடைப்பதன்று. பொருளைத் தேடாதவர்கள், உண்ணாமல் இருப்பதில்லை. இளமையும் காமமும் ஒன்றாகப் பெற்றோர் விரும்பும் நன்மை அச்செல்வத்துக்கு இல்லை. இல்வாழ்க்கை என்பது, இல்லத்தில் இருந்து, ஒரே ஒரு கையால் தமக்குள் தழுவிக் கொண்டு, ஒரே ஒரு கையால் ஒரே ஆடையை உடுத்திக் கொண்டு இருந்தாலும் பிரியாமல் இருப்பவரின் வாழ்க்கையே வாழ்க்கை ஆகும். சென்ற இளமை மீண்டு வருவதில்லை என்று கூறித் தோழி தலைவனின் செலவினைத் தடுக்கிறாள்.

**பாடல் (19)**

**துறை:**

பிரிவை உணர்த்திய தலைவனுக்குத் தோழி அவன் பிரிந்து சென்றால் தலைவி இறந்து விடுவாள் எனக் கூறி அவன் செலவைக் கைவிடச் செய்தது.

**பாடல் பொருள்**

**தலைவன் செலவைத் தடுத்தல் (1-13)**

தலைவனே! களவுக் காலத்தில் நீ கூறிய இனிய சொற்கள் எல்லாம் பொய் என்பதை நான் எவ்வாறு அறிவேன்? எமக்கு அலரை உண்டாக்கி விட்டுக் கொடிய காட்டில் நீ செல்வதைத் துணிந்த இப்போதுதான் தெரிந்தது நீ நல்ல மகன் அல்ல.

நீ நினைத்துச் சென்ற செயல் முடித்த பிறகு, இங்கிருந்து வருபவரைப் பார்த்து, யாம் பிரிந்து வந்தவள் செய்தியை அறிந்தீரோ? என்று வினவாதே. அவள் இறந்துவிட்டாள் என்று அவர்கள் சொல்ல நேரிடும். அது கேட்டு உன் அரிய செயல் முடியாமல் ஓர் அவலம் ஏற்படக் கூடும் என்று தோழி கூறி தலைவனது செலவினைக் கைவிடச் செய்தாள்.

**பாடல் (21)**

**துறை:**

தலைவன் தன் பிரிவைத் தோழிக்குக் கூற அவள் பொருளின் நிலையாமையையும் தலைவியின் ஆற்றாமையையும் கூறிச் செலவு மறுத்தது.

**பாடல் பொருள்**

**தலைவன் செலவை மறுத்தல் (1-14)**

மதம் பொருந்திய யானை தன் இனத்தைப் பிரிந்து, வழியில் செல்பவரைக் கொல்வதற்குக் காத்துக் கிடக்கும் காட்டில், செல்ல இருப்பவரே! களவுக் காலத்தில் உன்னைப் பிரியேன் என்று சொன்னாய். இப்போது தலைவி‘‘வ் பிரிந்து பொருள் தேட மனம் விரும்பும் என்று சொல்கிறாய். இவ்விரண்டனுள் உண்மையுடையன எது என எனக்குத் தெரியவில்லை. நீ தேடும் பொருளானது அறிவும் நல்லொழுக்கமும் உடையவரிடம் சேராது. நல்லவர் அல்லவர் என்று எண்ணிப் பார்க்காமல் பழைய வினை உடையவரிடமே மேலும் மேலும் சென்று தங்கும். இதுவே பொருளினது இயல்பு. எனவே இவள் நலனைக் கருதி பிரிந்து செல்லாதே என்று தோழி தலைவன் செலவை மறுக்கிறாள்.

**பாடல் (22)**

**துறை:**

தலைவன் தான் பிரிந்து செல்ல எண்ணியதைத் தோழியிடம் கூற, அதற்கு அவள் களவுக் காலத்து ஒழுக்கத்தைக் கூறி உடன்பட்டது போல மறுத்துக் கூறியது.

**பாடல் பொருள்**

**தலைவன் செலவை உடன்பட்டது போல மறுத்தல் (1-22)**

அறிவுடைய மாந்தரே! உண்ணுவதற்காகத் தாம் கடன் வாங்கும் பொழுது முகம் மலர்ந்திருப்பதும் அவ்வாறு வாங்கிய கடனைத் திருப்பித் தரும்பொழுது முகம் மாறி இருப்பதும் முன்பும் இவ்வுலகத்தில் இயற்கையே. அது இன்றும் புதிய செயலன்று. எவ்வாறு எனில் மங்கையரிடம் அவர்களது அழகை இரந்து வேண்டி தாது உண்ணும் வண்டு போல அனுபவித்து, அதை அவர்கள் வேண்டிய காலத்தில் அவர்களுக்குத் தராமல் துன்பத்தைத் தந்தாய். நீ அவ்வாறு கூறும் பொழுது அயலார் கூறுவது யாது? நல்ல குணமுடையவர்கள் ஓவியம் வரைபவன் உயிர் தந்த பாவை தான் அழியும் வரை அக்குறிப்பு நிற்பது போலத் தாம் சொன்ன சொல்லின் உயிரான உண்மையில் இருந்து தவற மாட்டார்கள். நீ அவ்வாறு இல்லாமல் பொருள் மீதுள்ள ஆசையால் உனக்கு அயலவரான நாங்கள் கூறும் காரியம் பயனற்றது.

களவில் இவளது இளமைப்பருவம், ஐவகை கூந்தல், ஊற்றின்பம் ஆகியவற்றைப் பாராட்டிய நீ கற்பொழுக்கக் காலத்தில் இவளைப் பாராட்டவில்லையே? சுரத்தில் செல்லும் உம்மைத் தடுக்க எம்மிடம் நல்வினை உள்ளதோ? யாம் என்ன கூறுவோம்! என்று தோழி தலைவனிடம் உடன்படாது மறுத்துரைக்கிறாள்.

**பாடல் (25)**

**துறை:**

தலைவன் தோழிக்குத் தன் பிரிவுணர்த்திய போது அவள் தலைவியின் ஆற்றாமையைக் கூறியது.

**பாடல் பொருள்**

**காட்டின் தன்மை (1-12)**

துரியோதனன் சூழ்ச்சியால் பஞ்ச பாண்டவர் தங்கி இருந்த அரக்கு மாளிகை தீப்பற்றியது. அப்பொழுது வீமன் அம்மாளிகையை அழித்துத் தன் சுற்றத்தாருடன் தப்பி வெளியேறியது போல யானைகள் உள்ளே இருக்க மூங்கில் சூழ்ந்த மலையில் தீப்பற்றியது. அத்தீயை யானை மிதித்துத் தன் சுற்றத்தாருடன் வழிகளை மிதித்துச் செல்லும் காட்டுப் பகுதி. நீர் அத்தகு காட்டு வழியில் செல்வீராயின் இங்குத் தலைவியின் நிலையைக் கேளுங்கள்.

**தலைவன் பிரிவில் தலைவிக்கு ஏற்படும் பகை (13-24)**

தம்மிடம் தங்கியிருப்பவர்க்குப் பல சிறப்புகளைச் செய்து வாழ்த்தி அவர்கள் சென்றதும் அவர்களைப் பற்றிச் சில பழிப்புரைகள் கூறுவர் சிலர். அவ்வுறவு போல நீ கூடி இருந்த காலத்தில் அவளுக்கு நல்லவனாய் இருந்தாய், நீ பிரிந்த காலத்து உமது பழியைத் தூற்றி அழுத கண் என்று கூறும்படி பகை சில உள்ளன அல்லவா?

ஒருவரிடம் செல்வம் இருக்கும்பொழுது அவருடன் இருந்து அவரது செல்வத்தை அனுபவித்து, அவர் வறுமையுற்ற காலத்து அவருக்கு உதவாத அறிவற்ற சிலர் உள்ளனர். அவ்வுறவு போல நீயும் அவளுடன் இருந்த பொழுது அவளுடைய அழகு உடன் இருந்தது. நீ பிரிந்த காலத்து கழன்று விழும் வளையல்கள் என்னும் பகை சில உள்ளன அல்லவா?

இரு நண்பர்கள் மனம் ஒத்திருந்த பொழுது ஒருவர் சொன்ன மறை (இரகசியம்) அவர்கள் பிரிந்த பொழுது பிறருக்கு உரைக்கும் பெருமையற்றவர் போல ஒருநாள் நீ அன்பு காட்டும் காலத்தில் உம் அன்பால் தானும் அழகு பெற்று விளங்கி, வேறு ஒரு நாள் நீ அன்பு காட்டாத பொழுது உம் குணத்தால் தோன்றிய நெற்றிப் பசலை பிறருக்கு அறிவித்தது என்ற பகை சில உள்ளன அல்லவா?

**தலைவன் செலவைத் தடுத்தல் (25-29)**

எனவே நீ இவளிடம் காட்டும் அன்பை நீக்கும் பொழுது மழை இன்றி இவ்வுலகம் கெடுவது போல இவளது அழகு கெடும் என்பதை உம் மனதுள் எண்ணுவாயாக! என்று தோழி தலைவனிடம் கூறிச் செலவைத் தடுக்கிறாள்.

**பாடல் (26)**

**துறை:**

இளவேனில் காலத்தில் தன்னைப் பிரிந்த தலைவன் வரவை எதிர்ப்பார்த்த தலைவியைத் தோழி ஆற்றிவித்தது.

**பாடல் பொருள்**

**இளவேனில் பருவ வரவு (1-8)**

பலதேவனைப் போன்ற வெண்மையான பூங்கொத்துகளை உடைய கடம்பு மரமும், கதிரவனைப்போன்ற அரும்புடைய செந்தி மரமும், மீன் கொடி உடைய காமனைப் போன்ற காஞ்சி மரமும், காமனின் தம்பியான சாமனைப் போன்ற நிறமுடைய சாழல் மரமும் காளைக் கொடி இறைவனைப் போன்ற இலவமரமும் ஆகியவை மற்ற மரங்களுடன் அழகுடன் விளங்கித் தோன்றும். இக்காட்சி பிரிந்தவருக்குத் துன்பத்தைத் தர, கூடியிருப்பவருக்கு இன்பம் தருவதாக இளவேனிற் பருவம் வந்தது.

**தலைவியின் மன வருத்தம் (9-20)**

இத்தகைய இளவேனில் காலத்திலும் நம்மைப் பிரிந்த தலைவர் நமக்கு அருளாது, அயல் நாட்டில் உள்ள குடிமக்கள் மனம் வருந்தாதவாறு பகைவரைப் பாதுகாத்துக் கொண்டுள்ளார். மதுரையில் வையை ஆற்றங் கரையின் நீராடு துறை முன்பு , இவனே நம் காவலன் என்று அடைக்கலமான குடிமக்களைக் காத்துக் கொண்டுள்ளார். இளவனில் காலத்தில் என்அழிந்த அழகுக்காக அருள வேண்டிய அவர் இங்கில்லாமல் அடைக்கலமாக வந்தவர்க்கு மனம் வருத்தம் ஏற்படாதவாறு பகைவரைக் காத்து, முன்பு இருந்த மன்னன் வரிப்பொருள் ஆசையால் ஆளாமல் நீங்கிய அயல் நாட்டில் இருக்கின்றார். என்று இவ்வாறு கூறி மனம் கலங்குகிறாள் தலைவி.

**தோழியின் ஆறுதல் மொழி (21-25)**

அவளிடம் ஜோழி, நம் காதலர் போரிடும் வலிமையான யானையுடன் போர்க்களத்தில் போரிட்டு மற்ற நாடுகளை வென்றவர். எனவே அவரது உண்மையான

கூற்றின் தூதாக இந்த இளவேனில் காலம் வந்தது. எனவே நீ வாழ்வாயாக என்று ஆற்றுவிக்கிறாள்.

**பாடல் (27)**

**துறை:**

இளவேனில் பருவத்தில் வருவேன் எனப் பிரிந்த தலைவன் வாராமையால் வருந்திய தலைவிக்கு அவன் வரவை அறிந்த தோழி மகிழ்ந்து கூறியது.

**பாடல் பொருள்**

**இளவேனில் பருவ வரவு (1-8)**

கொடுப்பவனின் செல்வம் வளர்வது போல இனிய நீருடைய ஆற்றங் கரையில் உள்ள மரங்கள் தழைத்தன. மகளிரின் வெண் பற்கள் போல முல்லை மலர்கள் மலர்ந்தன. குளிர்ந்த கரிய மணலில் பூந்தாதுக்களும் தளிர்களும் வீழ்ந்து கிடந்தன. அக்காட்சி காதலரைக் கூடியிருப்பவரின் கருங் கூந்தலைப் போல அழகுடன் விளங்குகிறது. அறிவற்ற அமைச்சன் ஒருவன் வலிமையற்ற அரசனை ஒரு செயலில் ஈடுபடச் செய்து படைவலிமை இல்லாத அவ்வரசன் நாட்டில் பகைவரின் படை எளிதில் வந்து புகுவது போல இளவேனில் காலம் வந்தது.

**தலைவியின் புலம்பல் (9-21)**

குயில்கள் மரத்தின் மீதிருந்து ஆரவாரம் செய்வதும், மலையிலுள்ள மயில்கள் ஆடுவதும், ஊரவர் அலர் தூற்றுவதும், முன்பு எம்மைக் காதலிக்கும் காலத்து மை தீட்டப் பெற்ற கண்ணிடத்துப் பொய்யான செயலைச் செய்ததும் நம்மை இகழும்படியாகவும் நிறம் கெடும்படியாகவும் இருக்கின்றன. நம்மை மறந்தாலும் மறப்பாராக. மதுரையிலும், பகைவரை வென்ற வெற்றிவேல் முருகனின் திருப்பரங்குன்றத்திலும், வையை ஆற்றின் மணலிடத்திலும் அழகிய பரத்தையர் கூட்டத்தை அனுபவிக்கவும் விளையாடவும் நினைத்து வந்திருப்பாரே? என்று தலைவி பலவாறு புலம்புகிறாள்.

**தோழி தலைவன் வரவை அறிவித்தல் (22-26)**

தலைவியின் வருத்தத்தைக் கண்ட தோழி, இந்த இளவேனிற் காலம், தலைவனுக்கு நாம் இல்லாத தனிமைக் காலம் ஆகும். மேலும் பிரிந்தவர்களுக்கு நடுக்கம் செய்யும் காலம். ஊரில் காமனுக்குச் செய்யும் விழாவாக இருப்பதால் தலைவி வருந்துவாள் என்று எண்ணி வலிமையான தேரை விரைவாகச் செலுத்தி நமக்குத் துணையாக இருக்க வந்துவிட்டார் என்று தலைவனின் வரவை மகிழ்வுடன் தலைவிக்குத் தெரிவிக்கிறாள்.

**பாடல் (28)**

**துறை:**

தலைவி இளவேனிற் பருவத்தில் பிரிந்த தலைவனுக்குத் தூதுவிட எண்ணினாள். தோழி, நம்மைவிடப் பிரிந்து இருக்க வல்லமையற்றவர் நம் தலைவர் என்று சொல்லி வற்புறுத்தியது.

**பாடல் பொருள்**

**இளவேனில் பருவம் (1-7)**

சுனையிலும், கொம்புகளிலும் உள்ள மலர்களைப் பறிக்க வேண்டாம். துறைதோறும் நாங்கள் தருகிறோம் என்பது போல மரங்களில் தாழ்ந்த நிலையில் மலர்கள் மலர்ந்துள்ளன. இத்தகைய இளவேனிற் காலம்.

**தலைவியின் புலம்பல் (8-20)**

மரங்களிலும் புதர்களிலும் மலர்கள் மலர்வதும், குயில்கள் தம் பேடையை அழைப்பதும், சோலையில் வண்டுகள் ஊதுவதும், பெண்கள் பழி கூறுவதும் மாமரத்தில் தளிர்கள் தளிர்ப்பதும், இப்பருவக் காலத்தில் நடைபெறுகின்றன. நம்மைப்

பிரிந்த தலைவரோ நம்மை நினைக்கவில்லை. எனக்குக் காம நோய் மிகுகின்றது. இறப்பது உறுதி. என் நெற்றி பசலை கொள்கிறது. அழகிழந்த கண்கள் உறக்கமின்றித் தனிமை நோய் மிகுகின்றது. நம் நிலைமை இவ்வாறு இருக்க இனி அவர் தம்மிடம் செய்யும் அன்பு என்ன பயனைச் செய்யும் என்று தலைவி புலம்புகின்றாள்.

**தோழி ஆற்றுவித்தல் (21-24)**

அணிகலன்களை அணிந்தவளே! பயனில்லை என்று கூறாதே. தொலைவில் இருப்பவருக்கு நம் வருத்தத்தைத் தெரிவிக்கத் தூது அனுப்ப வேண்டாம். நம்மைவிட அவர் இளவேனிற் பருவத்தில் பிரிந்திருக்கமாட்டார். விரைவில் வருவார். ஆதலால் நீ வருந்தற்க என்று ஆற்றுவிக்கிறாள்.

**பாடல் (29)**

**துறை:**

இளவேனிற் பருவத்தில் தலைவி ஆற்றாது வருந்த, தோழி அவளை ஆற்றுவிக்கிறாள். தலைவி அதை ஏற்கவில்லை. அப்போது தலைவன் வரவை உணர்ந்து அதை மகிழ்ச்சியுடன் தலைவிக்குக் கூறுகிறாள் தோழி.

**பாடல் பொருள்**

**இளவேனில் பருவம் (1-9)**

குழந்தைப் பேறு பெற்றதனால் தன் அழகு குறைந்தவள் புனிறு தீர்ந்து மறுபடியும் புதுநலம் பெற்றுத் திகழ்பவள் போலக் குடிமக்களுக்கு உணவுப் பொருள்களை விளைந்து கொடுத்ததனால் தன்னுடைய பசுமைச் சாயல் குறைந்த நிலம் மீண்டும் இளவேனில் காலத்தில் புது நலம் பெற்றது. மணலில் பூக்கள் உதிர்ந்து கிடக்கும். பல மலர்களின் மகரந்தம் உதிர்ந்து கிடக்கும். இத்தகையது இளவேனில் காலம்.

**தலைவியின் புலம்பல் (10-21)**

குற்றமற்ற சொற்களையும் அணிகலன்களையும் அணிந்தவளே! இளவேனிற் காலத்தை நினைக்காமல், தொலைவில் சென்றவரிடம் சென்ற என் நெஞ்சினை ஆற்றுவித்தும், என் மேனி வாட்டத்தை மறைத்தும் என் கைவளை கழலும்படி சென்றவரிடம் என் உயிர் சென்று பொருந்தாமல் காத்தும் இருக்கிறேன். அவற்றால் என்ன பயன்?

ஆனால் வாடைக் காற்றும், தேன் உண்ணும் தும்பியின் யாழ் ஓசை போன்ற ஓசையையுடைய மாலைக் காலமும், மணமிக்க மலரின் மணமும் நிலவு உள்ள இரவில் வந்து வருத்தத்தைச் செய்கின்றன என்று தலைவி தோழியிடம் புலம்புகின்றாள்.

**தோழி தலைவன் வரவை அறிவித்தல் (22-26)**

திருந்திய பற்களிடத்தில் விளங்கும் தேன் போன்ற இனிமையான சொற்களை எண்ணி நம் அரிய துயர் நீங்கும்படியாக நம் தலைவர் வந்துள்ளார். இனி நீ வருந்தாதே என்று தலைவிக்கு அவன் வரவைக் கூறுகிறாள்.

**பாடல் (31)**

**துறை**

இளவேனிற் காலத்தில் வருவேன் அதுவரை ஆற்றி இருப்பாயாக என்று கூறி போர் காரணமாகப் பிரிந்து செல்கிறான் தலைவன். முன்பனிக்காலமும் பின் பனிக்காலமும் தலைவியை வருத்தின. தோழி அவளிடம் அவர் வருவார் என்று தேற்றியும் தலைவி மறுக்கிறாள். ஆனால் தலைவன் தலைவி ஆற்றாள் என உணர்ந்து பின் பனிக்காலத்திலேயே வருகிறான் அவன் வரவை உணர்ந்த தோழி மகிழ்ச்சியுடன் தலைவிக்குத் தெரிவிக்கிறாள்.

**பாடல் பொருள்**

**பருவ வரவு (1-8)**

கூதிர் காலத்தில் மழை இல்லாததால் நீர் வற்றி ஆற்றில் சிறுசிறு கால்களாகத் தெளிந்து ஓடும். அந்த மணல் அறலில் ஈங்கையின் வாடிய பூக்காம்பு விழுந்து கிடக்கும். கணவரைப் பிரிந்த மகளிர் நெற்றிப் போல முன்பு பூத்திருந்த பீர்க்கம்பூ இப்பொழுது மலர் இன்றிக் காணப்படும். காதலரைக் கூடிய மங்கையின் முகம் போலப் பொய்கையில் தாமரை மலர் பூத்திருக்கும். இத்தகு இளவேனிற் காலத்தில் தலைவன் வருவேன் என்றான்.

**தலைவியின் புலம்பல் (9-20)**

சந்திரனின் ஒளிவீசும் இரவுப் பொழுதில் அணிகள் ஒளிரும்படி வாடைக் காற்று வீசும். சிறு மழைத்துளி கரும்பிலுள்ள பூவின் நிறம் அழியும்படி காற்று தூற்றுவதால் ஏற்படும் குளிர் ஆகத்தைச் சேருமாறு குளிரும். பனியானது புகை போலச் சிறு புதர்களைச் சூழ்ந்து குளிரும். இவை பகை மன்னனைக் கொன்று அவன் நாட்டைக் கைப்பற்றி யானை, குதிரை, தேர் என்று ஏறி வருபவரின் அழகு நலத்தைக் கண்டு அனுபவிக்க முடியாததால் நம் உயிரைக் கவர்ந்து செல்லாமல் விடுமோ? இல்லை உயிரைக் கவர்ந்து செல்லும் என்று தலைவி புலம்புகின்றாள்.

**தோழி தலைவன் வரவை அறிவித்தல் (21-25)**

பயனற்றவற்றைப் பேசாதே! தலைவன் தாம் கூறிய காலம் வரை தலைவி ஆற்றி இருக்க மாட்டாள் என்று முன்னதாகவே வந்துவிட்டார் என்று மகிழ்ச்சியுடன் தலைவியிடம் கூறுகிறாள்.

**பாடல் (32)**

**துறை:**

இளவேனிற் பருவ வரவு கண்டு தலைவி ஆற்றாத பொழுது தோழி அப்பருவம் தலைவனின் வரவை உணர்த்த வந்த தூது என்று கூறி இனி நாம் விருந்து அயர்வோம் என்றுரைக்கின்றாள்.

**பாடல் பொருள்**

**பருவ வரவு(1-5)**

கத்தரிக்கோல் கொண்டு வெட்டப்பட்டு ஐந்து பிரிவாய் அமைந்த மேக நிறம் கொண்ட கூந்தல் போல நீரில்லாப் புலர்ந்த மணல். அதில், நீண்ட கூந்தலில் மலர்கள் சூடியது போலப் பல மலர்கள் விழுந்து கிடக்கின்றன.

**தோழி பருவ வரவை வரவேற்றல் (6-13)**

தெளிந்த நீர், மாந்தளிர், மலராத கொம்பு, வண்டுகள் ஆரவாரம் செய்யும் புதர்கள், மலர்ந்த பூங்கொத்துகள் உள்ள மரங்கள், பின்னிக் கிடக்கும் கொடி என்று இவ்வாறு சோலைகளை அழகானதாக விளங்கச் செய்கின்ற இளவேனிலே! எங்களை விரும்புபவர்களுக்கு நாங்கள் நல்லவர்கள் ஆனது போல நீயும் எப்பொழுது வருவாய் என்று விரும்பியவர்களுக்கு நல்லையோ? அழகு செய்ய வந்துள்ளாய் என்று தோழி இளவேனிலின் வருகையை நோக்கிக் கூறுகிறாள்.

**தோழி தலைவியிடம் உரைத்தல் (14-19)**

இளவேனிற் பருவத்தில் முல்லைக் கொடியில் மகளிர் பற்களைப் போன்று நறுமணம் மிக்க வெண்மையான மலர்கள் உம் கூந்தலுக்கு எம்மைப் பறித்துக் கொள்ளுங்கள் என்பது போல மலர்ந்துள்ளன. மேலும் பசலை நோய் என்னும் பகையைத் தணித்து நம்முடைய இன்னுயிருக்கு மருந்தாகத் தம் காதலரின் தூதாக வந்துள்ளது என்று தலைவிக்குக் கூறுகிறாள்.

**பாடல் (33)**

**துறை:**

தலைவர் குறித்துச் சென்ற பருவத்தில் அவர் வரவில்லை என்று தலைவி வருந்தினாள். தோழி அப்போது தலைவர் வந்ததை உணர்ந்து தலைவிக்குத் தெரிவித்தது.

**பாடல் பொருள்**

**பருவ வரவு (1-9)**

குளங்களில் நீர் நிறைந்து மலர்களால் அழகு பெற்றுள்ளன. அக்குளத்தில் விழுந்து கிடக்கும் முருக்க மரத்தின் சிவந்த மலர்களின் இதழ்கள் கண்ணாடிக்குள் பவழம் வைத்தாற் போலக் காட்சி அளிக்கின்றன. குளக்கரையில் உள்ள மரங்களில் மலர்கள் மலர்ந்துள்ளன. இவ்வாறாக இளவேனிற் பருவம் வந்தது. ஆனால் தலைவர் வரவில்லை .

**தலைவியின் புலம்பல் (10 - 25)**

பலவகைப் பூக்கள் மலர்ந்திருப்பதும், மையில்கள் ஆடுவதும், வண்டும் தும்பியும் மலர்களின் யாழிசை போல ஊதுவதும், இருப்பவரை இருக்கச் செய்யவில்லை இப்படிப்பட்ட இளவேனிற் காலத்திலும் நம் தலைவர் வரவில்லை. தூதும் விடவில்லை அவர் நம்மைத் துறப்பாரோ என்று தோழியிடம் தலைவி புலம்புகிறாள்.

**தோழி தலைவன் வரவைக் கூறல் (26- 31)**

மைப்பூசப்பட்ட கண்களை உடையவளே! நீ நம்மை இகழ்கின்ற குயிலையும் தலைவரையும் வெறுக்காதே. நம் ஆற்றாமையை உணர்ந்த தலைவர் தம் பொய்யற்ற சொற்களை நிறைவேற்ற தேரை விரைவாகச் செலுத்தி, நமக்கு இன்பத்தைத் தர வந்துள்ளார் என்று தலைவனது வருகையைத் தலைவிக்குக் கூறுகிறாள்.

**பாடல் (34)**

**துறை:**

பருவம் கண்டு ஆற்றாத தலைவியைத் தோழி ஆற்றுவிக்க, அதைத் தலைவி ஏற்காமல் வருந்தினாள். அப்போது தலைவன் வந்ததைத் தலைவிக்குத் தோழி கூறுதல்.

**பாடல் பொருள்**

**பருவ வரவு (1- 7)**

ஆற்று நீர் வற்றி வாய்கால்களில் நீர் ஓடுகிறது. முன்பு ஆற்று நீரை உண்ட மரங்கள் இப்போழுது தம் மலர்களை அந்த ஆற்றில் உதிரச் செய்து அழகுறச் செய்கிறது. இவ்வாறாக இளவேனிற் பருவம் வந்தது.

**தலைவியின் வருத்தம் (8 -19)**

குயில்கள் தம் பெடையை அழைப்பதும், வண்டின் கூட்டமும், அவ்வண்டுகள் எழுப்பும் ஒலியும் என்னை வருத்தினாலும் நான் அவர் செய்த கொடுமையை மறைப்பேன். இருந்தாலும் என்ன பயன்? என் அழகு கெடுவதும், கண் கலங்குவதும், வளை நெகிழ்வதும் நடைபெறுகின்றன. நான் என்ன செய்வேன்? என்று தலைவி வருந்தினாள்.

**தோழி தலைவனது வரவைக் கூறல் (21-24)**

நீ இவ்வாறு உன் மன வருத்தம் கூறிக் கலங்காதே! கண் அடைந்த வருத்தத்தைக் கை நீக்கியது போலத் தலைவர் கூறிய நாளிலேயே குதிரையில் வந்துள்ளார் என்று அவனது வருகையைத் தெரிவிக்கிறாள்.

**பாடல் (35)**

**துறை:**

34 வது பாடலில் காண்க.

**பாடல் பொருள்**

**தோழியின் ஆறுதல் மொழி (1-8)**

சோம்பல் இல்லாதவரின் செல்வம் பெருகுவது போல மரங்களில் மலர்கள் நிறைந்துள்ளன. அச்செல்வத்தை அனுபவிப்பது போல மலரிலுள்ள வண்டுகள் உண்கின்ற, மரங்கள் தளிரை ஈனுகின்றன. குளங்கள் வற்றாமல் உள்ளன. குயில் தலைவியை இகழ்வது போல இசைக்கிறது. அக்குயிலின் வருத்தத்தால் அவர் நம்மை இனியும் நினைக்கமாட்டார் என்று நீ வெறுப்புறாதே என்று தலைவியிடம் தோழி கூறுகிறாள்.

**தலைவன் வரவைத் தோழி கூறுதல் (9 - 25)**

வண்டுகள் முல்லைப் பூவின் தாதை உண்ணவும், ஆற்றிடைக் குறையில் அவர் விரும்பும் பரத்தையரைக் கூடி காமனுக்கு நிகழ்த்தப்படும் விழாவில் அவருடன் விளையாடவும், நீண்ட மாடங்கள் உடைய மதுரையில் புலமை மிக்கோர் நாவிலிருந்து தோன்றிய கவிகளின் புதுமையைக் கொண்டாடவும் தோன்றிய காலம் இவ்விளவேனிற் காலம். இக்காலம் அவர் திரும்பி வரும் காலமாகும்.

பாண்டியனின் தவறாத சொல் போலத் தாம் சொன்ன சொல்லில் இருந்து தவறாத நம் தலைவனும் வந்துவிட்டார் என்று தோழி தலைவிக்குக் கூறுகிறாள்.

**பாடல் (36)**

**துறை:**

இளவேனிற் பருவம் வந்தும் தலைவன் வராததால் தலைவி வருந்தினாள். அது கண்ட தோழி ஆற்றாமல் தானும் துன்பம் அடைந்து தலைவியை ஆற்றுவித்தல்.

**பாடல் பொருள்**

**இளவேனில் பருவம் (1-11)**

களப்பைப் படையுடைய பலதேவனின் துழாய் மாலையைப் போல் வெண்கடம்ப மரம், அதன் உச்சியில் ஆரவாரிக்கும் மயில்கள் உள்ளன. வண்டு, சுரும்பு, தும்பி, தேன் இவைகள் சோலையில் யாழ் நரம்பின் ஓசை போலவும் விறலியின் பாட்டைப் போலவும் இசைக் கருவிகளின் ஓசை போலவும் ஒலிக்கின்றன. கரிய குயில்கள் கூவுகின்றன. பெரிய நீர்த் துறைகள் மலர்களால் அழகு பெறுகின்றன.

**தலைவியின் வருத்தம் (12-20)**

என் நெற்றியில் பசலை பரவுகிறது. தோள்கள் மெலிந்தன. கண்களில் நீர் சிந்தின. என் மனம் சென்றவரின் வருகையை விரும்புவதால் காமம் என்னும் தீயால் வெதும்பும். தலைவர் சென்ற இடத்திலேயே தங்கி விடுவாரோ, ஒரு தூதாவது அனுப்பி இருக்கக் கூடாதோ, நம்மை மறந்தாரோ, அவர் நம்மிடம் கொண்ட காதலை நாம் இறக்காமல் இருந்து காண்போமோ! என்று தலைவி வருந்தினாள்.

**தோழியின் ஆற்றுவிக்கும் திறன் (21-26)**

அதைக் கேட்ட தோழி தலைவியிடம் நம்மைக் கூடியவர் பிரிந்து இருத்தல் உலகத்தில் இயற்கை. என் மனம் அந்தணர் வேள்வியில் உண்டாகும் புகை போல அவருடைய வருகையை எண்ணிப் பெருமூச்சு விடுகின்றது. இது யான் அடைந்த வருத்தம் என்று தோழி தன் ஆற்றாமையைத் தலைவியிடம் கூறுகிறாள். இவ்வாறு தோழி வருந்தி உரைப்பது தலைவியை ஆற்றுவிக்கும் ஒரு வழிமுறையாகும்.

## 3.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

### அ. வினாக்கள்

1. கலித்தொகையில் உள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?
2. கலித்தொகைப் பாடல்கள் எந்தப் பா வகையைச் சார்ந்தவை?
3. பாலைக் கலியின் ஆசிரியர் யார்?
4. கலித்தொகைக்கு உரை வகுத்தவர் யார்?
5. கலித்தொகையில் எத்தனை பகுதிகள் உள்ளன ?

### ஆ. சரியா? தவறா?

1. கலித்தொகை எட்டுத்தொகை நூல்களில் ஒன்று.
2. கலித்தொகை புறம் சார்ந்த நூல்.
3. பாலைக்கலியில் உள்ள பாடல்கள் முப்பத்தைந்து.
4. பாலைத்திணைப் பாடல்களை மிகுதியாகப் பாடியவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ.
5. தோழி தலைவனின் செலவைத் தடுப்பதாகப் பாடல்கள் இல்லை.

## 3.6 பாடத் தொகுப்புரை

- தலைவன் பொருள் ஈட்ட வேண்டி தலைவியைப் பிரிந்து செல்கிறான். இச்செய்தியைத் தோழியிடம் தெரிவிக்கிறான்.
- தலைவனின் செலவைத் தடுப்பதும், தலைவனின் பிரிவின் பொழுது தலைவியை ஆற்றுவிப்பதும் தோழியின் செயல்களாக உள்ளன.
- தோழியின் சொல்லாற்றல் புலப்படுகிறது.
- தலைவன் செலவின் பொழுது தலைவி உடன் செல்ல எண்ணுவதும், தலைவன் தலைவியின் மென்மையைக் கூறி அதனைத் தடுப்பதையும் அறியலாம்.
- தலைவன் தலைவியின் வாழ்வில் பிற உறவுகள் காட்டும் அன்பின் வெளிப்பாட்டை அறியலாம்.

## 3.7 அருஞ்சொற் பொருள்

| | | |
|---|---|---|
| மூவெயில் | - | முப்புரம் |
| ஆரிடை | - | அரிய வழி |
| அடை | - | இலை |
| அணி | - | அழகு |
| புலம்பு | - | தனிமை |
| முந்நீர் | - | கடல் |
| பைதல் | - | துன்பம் |
| புரை | - | குற்றம் |
| உண்ணீர் | - | குருதி |
| இறை | - | முன்கை |
| பீடு | - | பெருமை |
| சுவல் | - | தோள் |
| இசை | - | புகழ் |
| பாயல் | - | உறக்கம் |

| | | |
|---|---|---|
| உரன் | - | வலிமை |
| பணை | - | மூங்கில் |
| கலுழ்பு | - | அழுது |
| கனலி | - | ஞாயிறு |
| ஒரோஒகை | - | ஒரே ஒருகை |
| தெருமந்து | - | சுழன்று, கலங்கி |
| முகன் | - | முகம் |
| மருப்பு | - | யானைக்கொம்பு |
| சேக்கை | - | படுக்கை |
| அழுவம் | - | காடு |
| அதர் | - | வழி |
| மௌவல் | - | முல்லை |
| கதுப்பு | - | கூந்தல் |
| கவின் | - | அழகு |
| அளி | - | அன்பு |
| தொடி | - | வளையல் |
| கூடல் | - | மதுரை |
| இணர் | - | கொத்து |
| மாறு | - | பகைவர் |
| வலம் | - | வெற்றி |
| கத்திரிகை | - | கத்திரிக் கோல் |
| ஆலும் | - | கூவும் |
| கால் | - | வாய்க்கால் |
| துருத்தி | - | ஆற்றிடைக்குறை |
| சாஅய் | - | மெலிந்து |
| செவ்வி | - | காலம் |

## 3.8 மாதிரி வினாக்கள்

### அ. குறு வினாக்கள்

1. கலித்தொகையின் சிறப்பை உணர்த்தும் தொடர்கள் யாவை?
2. பாலை பாடிய பெருங்கடுங்கோ பற்றிக் கூறுக.
3. செலவழுங்குவித்தல் என்றால் என்ன?

### ஆ. சிறு வினாக்கள்

1. பாணன் தலைவனிடம் கூறியவை யாவை?
2. செவிலித் தாய் முக்கோற்பகவரை வினவியதும் அதற்கு அவர்கள் மறுமொழி கூறியதையும் கலித்தொகைப் பாடல்வழி கூறுக.
3. தலைவன் செல்லும் காடே தலைவனைத் தடுக்கும் என்று தோழி எங்ஙனம் கூறுகிறாள்.
4. ‘ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை’ என்று தோழி கூறக் காரணம் யாது?

5. துன்பத்தில் துணையாய் உன்னுடன் வருவதைவிட எனக்கு இன்பம் தருவது உண்டோ? என்று தலைவி தலைவனிடம் எப்பொழுது கூறுகிறாள்? ஏன்?

**இ. பெரு வினாக்கள்**

1. பருவம் கண்டு ஆற்றாத தலைவியைத் தோழி எவ்வாறெல்லாம் ஆற்றுவிக்கிறாள்?
2. தலைவன் பொருள் காரணமாகத் தலைவியைப் பிரியப் போகிறேன் என்று கூறும் பொழுது தோழி எவ்வாறு தடுக்கிறாள்?
3. தலைவன் பிரிவில் தலைவி தோழியை எவ்வாறு ஆற்றுவிக்கிறாள்?

## 3.9 பரிந்துரை நூல்

கலித்தொகை நச்சினார்க்கினியர் உரை, பொ.வே. சோமசுந்தரனார் விளக்கவுரை, இரண்டாம் பதிப்பு, கழக வெளியீடு, சென்னை.

## 3.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

**அ. விடைகள்**

1. கலித்தொகையில் உள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 150 ஆகும்.
2. கலித்தொகைப் பாடல்கள் கலிப் பா வகையைச் சார்ந்தது.
3. பாலைக் கலியின் ஆசிரியர் பாலை பாடிய பொருங்கடுங்கோ ஆவார்.
4. கலித்தொகைக்கு உரை வகுத்தவர் நச்சினார்க்கினியர் ஆவார்.
5. கலித்தொகையில் ஐந்து பகுதிகள் உள்ளன.

**ஆ. விடைகள்**

1. சரி
2. தவறு
3. சரி
4. சரி
5. தவறு.

**பாலைக்கலி**

தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக,
அடங்காதார் மிடல் சாய,அமரர் வந்து இரத்தலின்,
மடங்கல் போல், சினைஇ, மாயம் செய் அவுணரைக்
கடந்து அடுமுன்பொடு, முக்கண்ணான் மூஎயிலும்
உடன்றக்கால் முகம் போல் ஒண்கதிர் தெறுதலின்,
சீறு அறுங் கணிச்சியோன் சினவலின் அவ்எயில்
ஏறுபெற்று உதிர்வன போல் வரைபிளந்து, இயங்குநர்
ஆறுகெடவிலங்கிய அழல் அவிர் ஆர் இடை
மறப்பு அருங் காதல் இவள் ஈண்டு ஒழிய,
இறப்பத் துணிந்தனிர், கேண்மின் மற்று ஐஇய
தொலைவு ஆகி, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு என
மலைஇறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருள் ஆகுமோ
நிலைஇய கற்பினாள், நீ நீப்பீன் வாழாதாள்,

முலை ஆகம் பிரியாமை பொருளாயின் அல்லதை
இல்என, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு என
கல்இறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருள் ஆகுமோ
தொல்இயல் வழா அமைத் துணை எனப் புணர்ந்தவள்
புல் ஆகம் பிரியாமை பொருளாயின் அல்லதை
இடன் இன்றி, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு என
கடன் இறந்து செயல் சூழ்ந்த பொருள்பொருள் ஆகுமோ
வடமீன்போல் தொழுது ஏத்த வயங்கிய கற்பினாள்
தடமென் தோள் பிரியாமை பொருளாயின் அல்லதை
என இவள்
புன் கண் கொண்டு இனையவும், பொருள் வயின் அகறல்
அன்பு அன்று, என்று யான் கூற, அன்புற்று,
காழ் வரைத் நில்லாக் கடுங் களிற்று ஒருத்தல்
"யாழ் வரைத் தங்கியாங்கு, தாழ்பு, நின்
தொல்கவின் தொலைதல் அஞ்சி, என்
சொல் வரைத் தங்கினர், காதலோரே. (2)

துறை : ஒன்றாத் தமரினும் என்னும் சூத்திரத்து நாளது சின்மையும், இளமையது அருமையும், தாளாண் பக்கமும் தகுதியும், அமைதியும் இன்மையது இழிவும், உடைமையது உயர்ச்சியும், அன்பினது, அகமும், அகற்சியது அருமையும், ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும் என்பதனான், இன்மயது இழிவு கூறி, இல்லாழ்க்கை நெறி ஆற்றுதற்குப் பொருள்வயிற் பிரிவேன் என்ற தலைமகற்குத் தலைமகளது இயல்பு கூறி இப்பெற்றியாளைப் பிரியாமையே பொருளாவது எனச்சொல்லி, செலவு அழுங்குவித்தமை தோழி தலைமகட்கு உவந்து சொல்லியது.

அறன் இன்றி அயல் தூற்றும் அம்பலை நாணியும்,
'வறன் நீந்தி நீ செல்லும் நீள் இடை நினைப்பவும்
இறை நில்லா வளை ஓட, இதழ் சோர்பு பனி மல்க,
பொறை நில்லா நோயோடு புல்லென்ற நுதல் இவள்
விறல் நலன் இழப்பவும, வினை வேட்டாய் கேஎள், இனி;

உடை இவள் உயிர் வாழாள், நீ நீப்பின் என பல
இடைகொண்டு யாம்இரப்பவும், எம கொள்ளாய் ஆயினை;
கடைஇய ஆற்றிடை, நீர் நீத்த வறுஞ் சுனை
அடையொடு வாடிய அணி மலர் தகைப்பன
வல்லை நீ துறப்பா யேல் ,வகை வாடும் இவள் என
ஒல் ஆங்கு யாம் இரப்பவும் உணர்ந்தீயாய் ஆயினை
செல்லு நீள் ஆற்றிடை, சேர்ந்து எழுந்த மரம் வாட
புல்லு விட்டு இறைஞ்சிய பூங்கொடி- தகைப்பன
'பிணிபு நீ விடல் சூழின், பிறழ்தரும் இவள்' என
பணிபு வந்து இரப்பவும், பல சூழ்வாய் ஆயினை
துணிபு நீ செலக் கண்ட ஆற்றிடை, அம் மரத்து
அணி செல, வாடிய அம் தளிர் - தகப்பன

என ஆங்கு
யாம் நிற் கூறவும் எம கொள்ளாய்ஆயினை
ஆனாது இவள்போல் அருள் வந்தவை காட்டி
மேல் நின்று மெய் கூறும் கேளிர் போல் நீ செல்லும்
கானம் தகைப்ப செலவு. (3)

துறை : தலைமகனால் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி தலைமகளுக்கு அஃது உரைத்து அவளது ஆற்றாமையின் வகை தலைமகற்கு உணர்த்தவும் பின்னும் பிரிவின் மேல் சென்ற உள்ளத்தன் ஆயினானை நீர் செல்லும் கானமே நும்மை இடிக்கும் கேளிர் போல விலக்குமென அவன் செலவழுங்கும் வகை அவள் கூறியது.

வலி முன்பின், வல்லென்ற யாக்கை, புலி நோக்கின்
சுற்றமை வில்லர், சுரி வளர் பித்தையர்
அற்றம் பார்த்து அல்கும்- கடுங்கண் மறவர் தாம்
கொள்ளும் பொருள் இலர் ஆயினும், வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து, உயிர் வௌவலின்

புள்ளும் வழங்காப் புலம்பு கொள் ஆர் இடை
வெள் வேல் வலத்திர் பொருள் தரல் வேட்கையின்
உள்ளினிர் என்பது அறிந்தனள், என் தோழி
'காழ் விரி கவை ஆரம் மீ வரும் இள முலை
போழ்து இடைப்படாஅமல் முயங்கியும் அமையார், என்

தாழ் கதுப்பு அணிகுவர், காதலர்; மற்று அவர்
சூழ்வதை எவன்கொல்? அறியேன் என்னும்
'முள் உறழ் முளை எயிற்று அமிழ்து ஊறும் தீ நீரைக்
கள்ளினும் மகிழ்செயும் என உரைத்தும் அமையார், என்
ஒள் இழை திருத்துவர், காதலர்; மற்று, அவர்
உள்ளுவது எவன்கொல் அறியேன் என்னும்
'நுண் எழில் மாமைச் சுணங்கு அணிஆகம் தம்
கண்ணொடு தொடுத்தென நோக்கியும் அமையார், என்
ஒள் நுதல் நீவுவர், காதலர்; மற்று, அவர்
எண்ணுவது எவன்கொல் அறியேன் என்னும்
என ஆங்கு
'கழி பெரு நல்கல் ஒன்று உடைத்து என, என் தோழி
அழிவொடு கலங்கிய எவ்வத்தள்; ஒரு நாள் நீர்
பொழுது இடைப்பட நீப்பின், வாழ்வாளோ?
ஒழிக இனி, பெரும நின் பொருட் பிணிச் செலவே. (4)

துறை : இது பொருள் வயின் பிரிவேன் என்ற தலைவனுக்குத் தோழி தலைவி செலவுக்குறிப்பு அறிந்தவாறும் அவளது ஆற்றாமையும் உணர்த்தி செலவு ஒழிவாயாக எனக் கூறியது.

பாஅல் அம் செவிப் பணைத் தாள் மா நிரை

மா அல் யானையொடு மறவர் மயங்கித்
தூறு அதர்ப்பட்ட ஆறு மயங்கு அருஞ் சுரம்
இறந்து, நீர் செய்யும் பொருளினும், யாம் நுமக்குச்
சிறந்தனம் ஆதல் அறிந்தனிர் ஆயின்

நீள் இர் முந்நீர் வளி கலன் வௌவலின்
ஆள்வினைக்கு அழிந்தோர் போறல் அல்லதை
கேள் பெருந் தகையோடு எவன் பல மொழிகுவம்?
நாளும் கோள் மீன் தகைத்தலும் தகைமே
கல்லெனக் கவின் பெற்ற விழவு ஆற்றுப்படுத்த பின்
புல்லென்ற களம் போலப் புலம்பு கொண்டு, அமைவாளோ?
ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடு போல்
பாழ்பட்ட முகத்தோடு, பைதல் கொண்டு அமைவாளோ?
ஓர்இரா வைகலுள் தாமரைப் பொய்கையுள்
நீர் நீத்த மலர் போல , நீ நீப்பின் வாழ்வாளோ?
என ஆங்கு_
பொய்ந் நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்டு
எந் நாளோ நெடுந் தகாய் நீ செல்வது
அந்நாள் கொண்டு இறக்கும், இவள் அரும் பெறல் உயிரே. (5)

துறை : தலைமகன் பொருள்வயின் பிரிவனெனக் கேட்ட தோழி தான் ஆற்றாளாய் நீர் செய்யும் பொருளினும் யாம் உமக்கு சிறந்தேமென்பது நும் உள்ளத்து உளதெனின் நும்மை நாளும் புள்ளும் விலக்கு மெனவும், இவள் பிரிந்திருப்பார் இருக்குமாறு இருப்பாளல்லள்; பிரிந்த அன்றே இறந்து படுவாளெனவுஞ் சொல்லிச் செலவழுங்குவித்தது

மரையா மரல் கவர, மாரி வறப்ப
வரை ஓங்கு அருஞ் சுரத்து, ஆர் இடைச் செல்வோர்
சுரை அம்பு, மூழ்கச் சுருங்கி, புரையோர் தம்
உள் நீர் வறப்பப் புலர் வாடு நாவிற்கு-
தண்ணீர் பெறாஅத் தடுமாற்று அருந் துயரம்
கண்ணீர் நனைக்கும் கடுமைய, காடு என்றால்
என், நீர் அறியாதீர் போல இவை கூறல்?
நின் நீர அல்ல நெடுந் தகாய் எம்மையும்
அன்பு அறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பம் துணையாக நாடின், அது அல்லது
இன்பமும் உண்டோ, எமக்கு? (6)

துறை : தலைவன்செலவுக் குறப்பறிந்து நீர் செல்லும் கடுஞ் சுரத்து துன்பத்திற்குத் துணையாக எம்மையும் உடன் கொண்டு சென்மின் எனத் தலைவி கூறியது.

வேனில் உழந்த வறிது உயங்கு ஓய் களிறு
வான் நீங்கு வைப்பின் வழங்காத் தேர் நீர்க்கு அவாஅம்

கானம் கடத்திர், எனக் கேட்பின், யான் ஒன்று
உசாவுகோ- ஐய- சிறியது
நீயே, செய்வினை மருங்கில் செலவு அயர்ந்து, யாழநின்

கை புனை வல் வில் ஞாண் உளர்தீயே
இவட்கே செய்வு உறு மண்டிலம் மையாப்பது போல்
மை இல் வாள் முகம் பசப்பு ஊரும்மே
நீயே, வினை மாண் காழகம் வீங்கக் கட்டி
புனை மாண் மரீஇய அம்பு தெரிதியே
இவட்கே, சுனை மாண் நீலம் கார் எதிர்பவை போல்
இனை நோக்கு உண்கண் நீர் நில்லாவே.
நீயே, புலம்பு இல் உள்ளமொடு பொருள்வாயிற் செலீஇய
வலம் படு திகிரி வாய் நீவுதியே
இவட்கே, அலங்கு இதழ்க் கோடல் வீ உகுபவைபோல்

இலங்கு ஏர் எல் வளை இறை ஊரும்மே
என நின்
செல் நவை அரவத்தும் இனையவள் நீ நீப்பின்
தன் நலம் கடைகொளப்படுதலின் மற்று இவள்
இன் உயிர் தருதலும் ஆற்றுமோ
முன்னிய தே எத்து முயன்று செய் பொருளே! (7)

துறை : பிரிவுஉணர்த்தப்பட்ட தோழி தலைமகனுக்கு நீர் பிரிகின்றீர்என்று யான் கூறத் தலைவி கேட்பின் அவளுக்கு அக்காலத்து நிகழ்வனவற்றை நும்மோடு ஆராய்வதுடையேன். நீர் செய்யும் பொருள் இவள் உயிரையும் தருமோ? எனச் செலவழுங்கக் கூறியது.

நடுவு இகந்து ஒரீஇ நயன் இல்லான் வினை வாங்க
கொடிது ஓர்த்த மன்னவன் கோல் போல, ஞாயிறு
கடுகுபு கதிர் மூட்டிக் காய் சினம் தெறுதலின்
உறல் உறு கமழ் கடாத்து ஒல்கிய எழில் வேழம்
வறன் உழு நாஞ்சில் போல், மருப்ப ஊன்றி நிலம் சேர

விறல் மலை வெம்பிய போக்கு அரு வெஞ் சுரம்
சொல்லாது இறப்பத் துணிந்தனிர்க்கு ஒருபொருள்
சொல்லுவது உடையேன் ; கேண்மின் மற்று ஐஇய
வீழுநர்க்கு இறைச்சியாய் விரல் கவர்பு இசைக்கும் கோல்
ஏழும் தம் பயன் கெட, இடை நின்ற நரம்பு அறூஉம்
யாழினும் நிலை இல்லாப் பொருளையும் நச்சுபவோ?
மரீஇத் தாம் கொண்டாரைக் கொண்ட கால் போலாது
பிரியுங்கால் பிறர் எள்ள, பீடு இன்றிப் புறம்மாறும்
திருவினும்நிலை இல்லாப் பொருளையும் நச்சுபவோ?

புரை தவப் பயன் நோக்கார் தம் ஆக்கம் முயல்வாரை

வரைவு இன்றிச் செறும் பொழுதில், கண் ஓடாது உயிர் வௌவும்
அரைசினும் நிலை இல்லாப் பொருளையும் நச்சுபவோ?
என ஆங்கு-
நச்சல் கூடாது, பெரும இச் செலவு
ஒழிதல் வேண்டுவல் சூழின் பழி இன்று
மன்னவன் புறந்தர வரு விருந்து ஓம்பி
தன் நகர் விழையக் கூடின்
இன் உறல் வியன் மார்ப அது மனும் பொருளே. (8)

துறை: சொல்லாது பிரியலுற்ற தலைவன் குறிப்பறிந்து தோழி பொருளது நிலையாமை கூறி அவளொடு கூடிச் செல்கின்ற இவ்வாழ்க்கைச் செலவே பொருள் என அவன் செலவழுங்கக் கூறியது.

எறித்தரு கதிர் தாங்கி ஏந்திய குடை நீழல்
உறித் தாழ்ந்த கரகமும், உரை சான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவல் அசைஇ, வேறு ஓரா நெஞ்சத்துக்
குறிப்பு ஏவல் செயல் மாலைக் கொளை நடை அந்தணீர்
வெவ் இடைச் செலல் மாலை ஒழுக்கத்தீர் இவ் இடை
என்மகள் ஒருத்தியும் பிறன் மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாம் அறி புணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணிரோ? பெரும
காணேம். அல்லேம் கண்டனம், கடத்திடை
ஆண் எழில் அண்ணலோடு அருஞ் சுரம் முன்னிய

மாண் இழை மடவரல் தாயிர் நீர் போறிர்
பல உறு நறும் சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம் என் செய்யும்
நினையுங்கால் நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே
சீர் கெழு வெண் முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என் செய்யும்
தேருங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே
ஏழ் புணர் இன் இசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என் செய்யும்?
சூழுங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே
என ஆங்கு-
இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறம் தலைபிரியா ஆறும் மற்று அதுவே (9)

துறை: உடன் போய தலைவி பின் செவிலி இடைச் சுரத்து முக்கோற் பகவரைக் கண்டு இவ்வகைப்பட்டாரை ஆண்டுக் காணீரோவென வினவியாட்கு,

அவரைக் கண்டு அஃதறமெனவே கருதிப் போந்தோம்; நீரும் அவர் திறத்து எவ்வம் பட வேண்டா என எடுத்துக் காட்டி அவர் தெருட்டியது.

வறியவன் இளமை போல், வாடிய சினையவாய்
சிறியவன் செல்வம் போல் சேர்ந்தார்க்கு நிழல் இன்றி யார்
கண்ணும்இகந்து செய்து இசை கெட்டான் இறுதிபோல்
வேரொடு மரம் வெம்ப, விரி கதிர் தெறுதலின்
அலவுற்றுக் குடி கூவ ஆறு இன்றிப் பொருள் வெஃகி
கொலை அஞ்சா வினைவரால், கோல் கோடியவன் நிழல்
உலகு போல், உலறிய உயர் மர வெஞ் சுரம்
இடை கொண்டு பொருள்வயின் இறத்தி நீ எனக் கேட்பின்
உடைபு நெஞ்சு உக, ஆங்கே ஒளியோடற்பாள் மன்னோ
படை அமை சேக்கையுள் பாயலின் அறியாய் நீ

புடை பெயர்வாய் ஆயினும், புலம்பு கொண்டு இனைபவள்
முனிவு இன்றி முயல் பொருட்கு இறத்தி நீ எனக் கேட்பின்
பனிய கண் படல் ஒல்லா படர் கூர்கிற்பாள் மன்னோ
நனி கொண்ட சாயலாள் நயந்து நீ நகையாகத்
துனி செய்து நீடினும், துறப்பு அஞ்சிக் கலுழ்பவள்

பொருள் நோக்கிப் பிரிந்து நீ போகுதி எனக் கேட்பின்
மருள் நோக்கம் மடிந்து ஆங்கே மயல் கூர்கிபாள் மன்னோ
இருள் நோக்கம் இடையின்றி, ஈரத்தின் இயன்ற நின்
அருள் நோக்கம் அழியினும், அவலம் கொண்டு அழிபவள்
என ஆங்கு
வினை வெஃகி நீ செலின், விடும் இவள் உயிர் என
புனையிழாய் நின் நிலை யான் கூற, பையென
நிலவு வேல் நெடுந்தகை நீள் இடைச்
செலவு ஒழிந்தனனால் செறிக, நின் வளையே. (10)

துறை : தலைமகனால் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி, இவ்வகைப்பட்ட சுரத்தைப் பொருள் காரணமாகப் பிரிகின்றீர் எனக் கேட்பின் இவ்வகை ஆகற்பாலளெனச் சொல்லிச் செலவழுங்கு வித்தமை தலைமகட்குச் சொல்லியது.

அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்
பெரிதாய பகை வென்று பேணாரைத் தெறுதலும்
புரிவு அமர் காதலின் புணர்ச்சியும் தரும் என
பிரிவு எண்ணிப் பொருள்வயிற் சென்ற நம் காதலர்
வருவர்கொல், வயங்கிழாஅய், வலிப்பல் யான், கேஎள், இனி
அடி தாங்கும் அளவு இன்றி, அழல் அன்ன வெம்மையால்
கடியவே- கனங் குழாஅய்- 'காடு' என்றார், 'அக்காட்டுள்
துடி அடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடி ஊட்டி, பின் உண்ணும், களிறு' எனவும் உரைத்தனரே

இன்பத்தின் இகந்து ஒரீஇ, இலை தீந்த உலவையால
துன்புறூஉம் தகையவே காடு' என்றார், அக்காட்டுள்
அன்பு கொள் மடப் பெடை அசைஇய வருத்தத்தை
மென் சிறகரால் ஆற்றும், புறவு எனவும் உரைத்தனரே
'கல் மிசை வேய் வாடக் கனை கதிர் தெறுதலான்
துன்னரூஉம் தகையவே காடு' என்றார், 'அக் காட்டுள்
இன் நிழல் இன்மையான் வருந்திய மடப் பிணைக்குத்
தன் நிழலைக் கொடுத்து அளிக்கும், 'கலை' எனவும் உரைத்தனரே
என ஆங்கு
இனை நலம் உடைய கானம் சென்றோர்
புனை நலம் வாட்டுநர் அல்லர் மனைவயின்
பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன
நல் எழில் உண்கணும் ஆடுமால் இடனே. (11)

துறை: தலைவி மூன்றன் பகுதி தலைவன் கூறியப் பொருவயினும் இவ்வகைப்பட்டனவும் உளவென்று கூறினார். அவை காண்டலின் வருவரெனத் தோழிக்குக் கூறி அதற்கு நிமித்தமும் கூறி ஆற்றுவித்தது.

மூன்றன்பகுதி கூறுதலாவது, அறத்தால் பொருளாக்கி அப்பொருளால் காமம் நுகர்வேம் என்றலாம். உடைமையது உயர்ச்சி கூறிப் பிரிந்தானெனக் கிளவி கூறிற் பொருள் வயிற் பிரிதலின்றாம், அது பொருள்வயிற் பிரிவை விலக்குமென்றலின்.

இடு முள் நெடு வேலி போல, கொலைவர்
கொடுமரம் தேய்த்தார் பதுக்கை நிரைத்த
கடு நவை ஆர் ஆற்று, அறுசுனை முற்றி
உடங்கு நீர் வேட்ட உடம்பு உயங்கு யானை
கடுந் தாம் பதிபு, ஆங்குக் கை தெறப்பட்டு

வெறி நிரை வேறாகச் சார்ச்சாரல் ஓடி
நெறி மயக்குற்ற நிரம்பா நீடு அத்தம்
சிறு நனி நீ துஞ்சி ஏற்பினும், அஞ்சும்
நறுநுதல் நீத்துப் பொருள்வயிற் செல்வோய்
உரனுடை உள்ளத்தை; செய் பொருள் முற்றிய

வளமையான் ஆகும் பொருள் இது என்பாய்
இளமையும் காமமும் நின் பாணி நில்லா
இடை முலைக் கோதை குழைய முயங்கும்
முறை நாள் கழிதல் உறாஅமைக் காண்டை
கடை நாள் இது என்று அறிந்தாரும் இல்லை

போற்றாய்- பெரும நீ, காமம் புகர்பட
வேற்றுமைக் கொண்டு, பொருள்வயிற் போகுவாய்
கூற்றமும் மூப்பும் மறந்தாரோடு ஓராஅங்கு

மாற்றுமைக் கொண்ட வழி. (12)

துறை: தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி காட்டது கடுமையும் தலைவியது மென்மையும்'நாளது சின்மையும் இளமைய தருமையும் தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும், அன்பினது அகலமும் அகற்சியது அருமையும் கூறிச் செலவு அழுங்குவித்தது..

செரு மிகு சின வேந்தன் சிவந்து இறுத்த புலம் போல
எரி மேய்ந்த கரி வறல்வாய், புகவு காணாவாய்
பொரி மலர்ந்தன்ன பொறிய மட மான்
திரி மருப்பு ஏறொடு தேர் அறற்கு ஓட
மரல் சாய மலை வெம்ப, மந்தி உயங்க
உரல் போல் அடிய உடம்பு உயங்கு யானை
ஊறு நீர் அடங்கலின், உண் கயம் காணாது
சேறுசுவைத்து, தம் செல் உயிர் தாங்கும்
புயல் துளி மாறிய, போக்கு அரு, வெஞ் சுரம்
எல்வளை எம்மொடு நீ வரின், யாழ நின்

மெல் இயல் மே வந்த சீறடி, தாமரை
அல்லி சேர் ஆய் இதழ் அரக்குத் தோய்ந்தவை போல்
கல் உறின், அவ் அடி கறுக்குந அல்லவோ
நலம் பெறு சுடர்நுதால் எம்மொடு நீ வரின்
இலங்கு மாண் அவிர் தூவி அன்ன மென் சேக்கை யுள்
துலங்கு மான் மேல் ஊர்தித் துயில் ஏற்பாய், மற்று ஆண்டை
விலங்கு மான் குரல் கேட்பின், வெருவுவை அல்லையோ
கிளி புரை கிளவியாய் எம்மொடுநீ வரின்
தளி பொழி தளிர் அன்ன எழில் மேனி தகை வாட
முளி அரில் பொத்திய முழங்கு அழல் இடை போழ்ந்த

வளி உறின், அவ் எழில் வாடுவை அல்லையோ
என ஆங்கு
அனையவை காதலர் கூறலின், வினைவயிற்
பிரிகுவர்' எனப் பெரிது அழியாதி, திரிபு
உறீஇ கடுங்குரை அருமைய காடு எனின், அல்லது
கொடுங்குழாய் துறக்குநர் அல்லர்
நடுங்குதல் காண்மார் நகை குறித்தனரே. (13)

துறை: தலைமகனால் பிரிவுணர்த்தப்பட்டு ஆற்றாளாய தலைமகள் நும்முடன் போதுவல் என்றாட்குத் தலைமகன் அவளது மென்மையையும் காட்டின் கடுமையும் கூறி உடம்படானாக, ஆற்றளாய தலைவியைத் தோழி, அவர் நம்முடன் நகையாடிச் சொன்னார்; பிரிவரல்லார் என வற்புறுத்தியது.

அணைமரு இன் துயில் அம் பணைத் தட மென் தோள்
துணை மலர் எழில் நீலத்து ஏந்து எழில் மலர் உண் கண்
மண மௌவல் முகை அன்ன மா வீழ் வார் நிரை வெண்பல்

மணம் நாறும்நறு நுதல், மாரிவீழ் இருங் கூந்தல்
அலர் முலை ஆகத்து, அகன்ற அல்குல்
சில நிரை வால்வளை,செய்யாயோ என
பலபல கட்டுரை பண்டையின் பாராட்டி
இனிய சொல்லி, இன்னாங்குப் பெயர்ப்பது
இனி அறிந்தேன், அது துனி ஆகுதலே
பொருள் அல்லால் பொருளும் உண்டோ என,யாழ நின்
மருளி கொள் மட நோக்கம், மயக்கப்பட்டு அயர்த்தாயோ?
காதலார் எவன் செய்ப, பொருள் இல்லாதார்க்கு என
ஏதிலார் கூறும் சொல் பொருளாக மதித்தாயோ
செம்மையின் இகந்து ஓரீஇப் பொருள் செய்வார்க்கு, அப்பொருள்
இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ
அதனால்
எம்மையும் பொருளாக மதித்தீத்தை, நம்முள் நாம்
கவவுக் கை விடப் பெறும் பொருட் திறத்து
அவவுக் கைவிடுதும்; அது மனும் பொருளே. (14)

துறை: தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, தலைமகற்கு, முன்னையிற் சிறப்ப எம்மை இற்பாராட்டியதெல்லாம் எம் வயிற் பிறந்த வெறுப்பென்பது இப்பொழுதறிந்தேன்; இவ்வகைக்பட்ட போக்கு நினக்கு எவ்வகையான் வந்ததென, அவன் செலவழுங்கச் சொல்லியது.

அரி மான் இடித்தன்ன அம் சிலை வல் வில்
புரி நாண், புடையின் புறம் காண்டல் அல்லால்
இணைப் படைத் தானை அரசோடு உறினும்
கணைத் தொடை நாணும் கடுந் துடி ஆர்ப்பின்
எருத்து வலிய எறுழ் நோக்கு இரலை

மருப்பின் திரிந்து மறிந்து வீழ் தாடி
உருத்த கடுஞ் சினத்து ஓடா மறவர்
பொருள் கொண்டு புண் செயின் அல்லதை அன்போடு
அருள் புறம் மாறிய ஆர் இடை அத்தம்
புரிபு நீ புறம் மாறி, போக்கு எண்ணி, புதிது ஈண்டிப்

பெருகிய செல்வத்தான் பெயர்த்தரல் ஒல்வதோ
செயலை அம் தளிர் ஏய்க்கு எழில் நலம் அந்நலம்
பயலையால் உணப்பட்டுப் பண்டை நீர் ஒழிந்தக்கால்
போய் அற்ற கேள்வியால், புரையோரைப் படர்ந்துநீ
மை அற்ற படிவத்தான் மறுத்தரல் ஒல்வதோ
தீம் கதிர் மதி எய்க்கும் திருமுகம்; அம் முகம்
பாம்பு சேர் மதி போல், பசப்பு ஊர்ந்து தொலைந்தக்கால்
பின்னிய தொடர் நீவி, பிறர் நாட்டுப் படர்ந்து, நீ

மன்னிய பணர்ச்சியான் மறுத்தரால் ஒல்வதோ
புரி அவிழ் நறு நீலம் புரை உண் கண் கலுழ்பு ஆனா

திரி உமிழ் நெய்யே போல், தெண் பனி உறைக்குங்கால்
என ஆங்கு
அனையவை போற்றி, நினைஇயன நாடிக் காண்
வளமையோ வைகலும் செயலாகும்; மற்று இவள்
முளை நிரை முறுவலார் ஆயத்துள் எடுத்து ஆயந்த
இளமையும் தருவதோ, இறந்த பின்னே. (15)

துறை: பிரிவுணர்த்திய தலைமகற்குத், தோழி, தலைமகளது ஆற்றாமையும் இளமையதருமையும் கூறி,பிரிந்து செய்யக் கருதியவை எக்காலத்துஞ் செய்யலாம்; பொருளாற் கழிந்த இளமை மீட்கலாமோ எனக் கூறியது.

பாடு இன்றிப் பசந்த கண் பைதல் பனி மல்க
வாடுபு வனப்பு ஓடி வணங்கு இறை வளை ஊர
ஆடு எழில் அழிவு அஞ்சாது; அகன்றவர்திறத்து,இனி
நாடுங்கால், நினைப்பது ஒன்று உடையேன்மன் அதுவும்தான்
தொல் நலம் தொலைபு, ஈங்கு யாம் துயர் உழப்பத் துறந்து, உள்ளார்

துன்னி நம் காதலர், துறந்து ஏகும் ஆர் இடை
கல்மிசை உருப்பு அறக் கனை துளி சிதறு என
இன் இசை எழிலியை இரப்பவும் இயைவதோ
புனையிழாய் ஈங்கு நாம் புலம்புற, பொருள்வெஃகி
முனை என்னார் காதலர் முன்னிய ஆர் இடை

சினை வாடச் சிறக்கும் நின் சினம் தணிந்தீக என
கனை கதிர்க் கனலியைக் காமுறல் இயைவதோ
ஒளியிழாய் ஈங்கு நாம் துயர் கூர, பொருள்வயின்
அளி ஒரீஇக் காதலர் அகன்று ஏகும் ஆர் இடை
முளி முதல் மூழ்கிய வெம்மை தீர்ந்து உறுக என

வளி தரும்செல்வனை வாழ்த்தவும் இயைவதோ
என ஆங்கு
செய் பொருட் சிறப்பு எண்ணிச் செல்வார்மாட்டு, இனையன
தெய்வத்துத் திறன் நோக்கி, தெருமரல் தேமொழி
வறன் ஓடின் வையகத்து வான் தரும் கற்பினாள்
நிறன் ஓடிப் பசப்பு ஊர்தல் உண்டு என
அறன் ஓடி விலங்கின்று அவர் ஆள்வினைத் திறத்தே. (16)

துறை: தலைமகன் பொருள்வயிற் பிரிந்த இடத்து அவன் போகிய காட்டது கடுமை நினைத்து ஆற்றாளகிய தலைமகள், அவள் பொருட்டாக நாம் இவ்வகைப் பட்ட தெய்வங்களைப் பரவுதல் நங்கற்புக்கு இயைவதோ எனக், கேட்ட தோழி,'அவ்வாற்றானே மீண்டனர் நீ கவலை வேண்டாவெனக் கூறியது.

படை பண்ணிப் புனையவும், பா மண்ட பல அணை
புடை பெயர்ந்து ஒடுங்கவும், புறம் சேர உயிர்ப்பவும்
உடையதை எவன் கொல் என்று ஊறுஅளந்தவர்வயின்
நடை செல்லாய், நனி ஏங்கி நடுங்கற்காண்- நறுநுதால்
தொல் எழில் தொலைபு இவள் துயர் உழப்ப, துறந்து நீ
வல்வினை வயக்குதல் வலித்திமன், வலிப்பளவை
நீள் கதிர் அவிர் மதி நிறைவு போல் நிலையாது
நாளினும் நெகிழ்பு ஓடும் நலன் உடன் நிலையுமோ
ஆற்றல் நோய் அட, இவள் அணி வாட, அகன்று நீ
தோற்றம் சால தொகு பொருள் முயறிமன்; முயல்வளவை

நாற்றம் சால் நளி பொய்கை அடை முதிர் முகையிற்குக்
கூற்று ஊழ் போல் குறைபடூஉம் வாழ்நாளும் நிலையுமோ
வகை எழில் வனப்பு எஞ்ச, வரை போக வலித்து நீ
பகை அறு பய வினை முயறிமன், முயல்வளவை
தகை வண்டு புதிது உண்ணத் தாது அவிழ் தண் போதின்
முகை வாயித்த தடம் போலும் இளமையும் நிலையுமோ
என ஆங்கு பொருந்தி யான் தான் வேட்ட
பொருள்வயின் நினைந்த சொல்
திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய
மருந்து போல், மருந்து ஆகி, மனன் உவப்ப
பெரும் பெயர் மீளி பெயர்ந்தனன் செலவே. (17)

துறை:பகைவர் திறை தந்த நாடு காத்தற்குத் தலைவன் பிரிகின்றமை உணர்ந்து, தலைவி வேறுபட்மை கண்டு, தோழி அவனை எதிர்பட்டு, அவளது ஆற்றாமையும் இளமையது அருமையும் கூறிச் செலவழுங்குவித்தன்மை தலைமகட்குக் கூறியது.

அரும் பொருள் வேட்கையின் உள்ளம் துரப்ப
பிரிந்து உறை சூழாதி ஐய விரும்பி நீ
என் தோள் எழுதிய தொய்யிலும், யாழ நின்
மைந்துடை மார்பில் சுணங்கும், நினைத்துக் காண்
சென்றோர் முகப்பப் பொருளும் கிடவாது

ஒழிந்தவர் எல்லாரும் உண்ணாதும் செல்லார்
இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்
வளமை விழைதக்கது உண்டோ? உள நாள்
ஒரோஒ கை தம்முள் தழீஇ, ஒரோஒ கை
ஒன்றன் கூறு ஆடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்கையே வாழ்க்கை அரிதுஅரோ
சென்ற இளமை தரற்கு. (18)

துறை: ஒன்றாத் தமரினும் என்னும் சூத்திரத்தில் நாளது சின்மையும் இளமையும் அருமையும்- தாளாண் பக்கமும் தகுதியும் அமைதியும்- இன்மையது இளிவும் உடைமையது உணர்ச்சியும்- அன்பினது அகலமும் அகற்சியது அருமையும் எனக் கூறிய எட்டனையும் தலைவன் கூறிக்கேட்ட தோழி அவற்றை நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே என்னும் விதியால் தலைவற்குக் கூறிச் செலழுங்குவித்தது.

செவ்விய தீவிய சொல்லி அவற்றொடு
பை முயங்கிய அஞ்ஞான்று அவை எல்லாம்
பொய்யாதல் யான் யாங்கு அறிகோ மற்ற ஐய
அகல் நகர் கொள்ளா அலர் தலைத் தந்து
பகல் முனி வெஞ் சுரம் உள்ளல் அறிந்தேன்
மகன் அல்லவை மன்ற, இனி

செல்; இனிச் சென்று நீ செய்யும் வினை முற்றி
அன்பு அற மாறி, யாம் உள்ளத் துறந்தவள்
பண்பும் அறிதிரோ என்று வருவாரை
என் திறம் யாதும் வினவல், வினவின்
பகலின் விளங்கு நின் செம்மல் சிதைய
தவல் அருஞ் செய வினை முற்றாமல் ஆண்டு ஓர்
அவலம் படுதலும் உண்டு. (19)

துறை:பிரிவுணர்த்தப்பட்ட தோழி செலவு விலக்கவும் பிரிவின் மேற் சென்ற உள்ளத்தன் ஆயினானை நீ பிரியின் இவள் இறந்துபடுமெனச் சொல்லிய வாய்பாட்டான் மறுத்தது.

பல்வளம்பகர்பு ஊட்டும் பயன் நிலம் பைது அற
செல் கதிர் ஞாயிறு செயிர் சினம் சொரிதலின்
தணிவு இல் வெங் கோடைக்குத் தண் நயந்து அணிகொள்ளும்
பிணி தெறல் உயக்கத்த பெருங் களிற்றினம் தாங்கும்
மணி திகழ் விறல் மலை வெம்ப, மண் பக,

துணி கயம் துகள் பட்ட தூங்கு அழல் வெஞ் சுரம்-
கிளி புரை கிளவியாய் நின் அடிக்கு எளியவோ
தளி உறுபு அறியாவே காடு எனக் கூறுவீர்
வளியினும் வரை நில்லா வாழு நாள், நும் ஆகத்து
அளி என, உடையேன் யான் அவலம் கொண்டுஅழிவலோ

ஊறு நீர் அமிழ்து ஏய்க்கும் எயிற்றாய் நீ உணல்வேட்பின்
ஆறு நீர் இல என அறன் நோக்கிக் கூறுவீர்
யாறு நீர் கழிந்தன்ன இளமை, நும் நெஞ்சு என்னும்
தேறு நீர், உடையேன் யான் தெருமந்து ஈங்கு ஒழிவலோ
மாண் எழில் வேய் வென்ற தோளாய் நீ வரின் தாங்கு
மாண்நிழல் இல ஆண்டை மரம் எனக் கூறுவீர்
நீள் நிழல் தளிர் போல் நிறன் ஊழ்த்தல் அறிவேன் நும்

தாள் நிழல் கைவிட்டு யான் தவிர்தலைச் சூழ்வலோ
என ஆங்கு
அணை அரும் வெம்மைய காடு எனக் கூறுவீர்.
கணை கழிகல்லாத கல் பிறங்கு ஆர் இடை
பணை எருத்து எழில் ஏற்றின் பின்னர்ப்
பிணையும் காணிரோ பிரியுமோ, அவையே (20)

துறை:பிரிவுணர்த்திய தலைவற்குத் தலைவி எம்மையும் உடன் கொண்டு சென்மினென்றாட்டு, அவன் கானின் கடுமையும் தலைவி, மென்மையும் கூறுவது கேட்ட தலைவி நாளாது சின்மையும் இளமையது அருமையும், கூறி, எம்மையும் உடன் கொண்டு சென்மின் என்றது.

பால் மருள்மருப்பின், உரல் புரை பாவு அடி
ஈர் நறுங் கமழ் கடா அத்து, இனம் பிரி ஒருத்தல்
ஆறு கடி கொள்ளும் வேறு புலம் படர்ந்து
பொருள்வயிற் பிரிதல் வேண்டும் என்னும்
அருள் இல் சொல்லும், நீ சொல்லினையே
நன்னர் நறுநுதல் நயந்தனை நீவி
நின்னின் பிரியலன், அஞ்சல் ஓம்பு என்னும்
நன்னர் மொழியும் நீ மொழிந்தனையே
அவற்றுள் யாவோ வாயின? மா அல் மகனே
கிழவர் இன்னோர் என்னாது, பொருள்தான்
பழ வினை மருங்கின் பெயர்பு பெயர்பு உறையும்
அன்ன பொருள்வயிற் பிரிவோய் நின் இன்று
இமைப்புவரை வாழாள் மடவோள்
அமைக் கவின் கொண்ட தோள் இணை மறந்தே. (21)

துறை: தலைமகனால் பிரிவுணரர்த்தப்பட்ட தோழி அவனை நெருங்கிக் களவுக் காலத்தொழுக்கம் எடுத்துக்காட்டலால் தெளிவு பட மொழிந்ததூம் பொருளது நிலையின்மையும் அவளது ஆற்றாமையும் கூறிச் செலவு மறுத்து.

உண் கடன் வழிமொழிந்து இரக்குங்கால் முகனும் தாம்
கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறாகுதல்
பண்டும் இவ் உலகத்து இயற்கை; அது இன்று
புதுவது அன்றே புலனுடை மாந்திர்
தாய் உயிர் பெய்த பாவை போல்
நலன் உடையார் மொழிக்கண் தாவார் தாம் தம் நலம்
தாது தேர் பறவையின் அருந்து, இறல் கொடுக்குங்கால்
ஏதிலார் கூறுவது எவனோ, நின் பொருள் வேட்கை?
நறுமுல்லை நேர் முகை ஒப்ப நிரைத்த
செறி முறை பாராட்டினாய் மற்று, எம் பல்லின்

பறி முறை பாராட்டினையோ ஐய
நெய் இடை நீவி மணி ஒளி விட்டன்ன
ஐவகை பாராட்டினாய், மற்றும் எம் கூந்தல்
செய்வினை பாராட்டினையோ ஐய
குளன் அணி தாமரைப் பாசரும்பு ஏய்க்கும்
இள முலை பாராட்டினாய் , மற்று எம் மார்பில்
தளர் முலை பாராட்டினையோ ஐய
என ஆங்கு
அடர் பொன் அவிர் ஏய்க்கும் அவ் வரி வாட
சுடர் காய் சுரம் போகும் நும்மை யாம் எங்கண்
படர் கூற நின்றதும் உண்டோ தொடர் கூர
துவ்வாமை வந்தக்கடை (22)

துறை: பிரிவுணர்த்தப்பட்ட தோழி அதற்கு உடன் படாது தலைமகனை நெருங்கிக் களவு காலத்தொழுக்கம் எடுத்துக்காட்டி ஆற்றுவித்து உடம்பட்ட வாய்பாட்டார் மறுத்தது.

இலங்கு ஒளி மருப்பின் கைம்மா உளம்புநர்
புலம் கடி கவணையின், பூம் சினை உதிர்க்கும்
விலங்கு மலை வெம்பிய போக்கு அரு வெஞ் சுரம்
தனியே இறப்ப, யான் ஒழிந்திருதல்
நகுதக்கன்று, இவ் அழுங்கல் ஊர்க்கே

இனி யான்
உண்ணலும் உண்ணேன்; வாழலும் வாழேன்
தோள் நலம் உண்டு துறக்கப்பட்டோர்
வேள் நீர் உண்ட குடை ஓரன்னர்
நல்குநர் புரிந்து நலன் உணப்படோர்
அல்குநர் போகிய ஊர் ஓரன்னர்
கூடினர் புரிந்து குணன் உணப்பட்டோர்
சூடினர் இட்ட பூ ஓரன்னர்
என ஆங்கு
யானும் நின்னகத்து அனையேன்; ஆனாது
கொலை வெங் கொள்கையொடு நாய் அகப்படுப்ப
வலைவர்க்கு அமர்ந்த மட மான் போல
நின் ஆங்கு வரூஉம் என் நெஞ்சினை
என் ஆங்கு வாராது ஓம்பினை கொண்மே. (23)

துறை: பிரிவுணர்த்தப்பட்டு ஆற்றாளாய் தலைவி எம்மையும் உடன் கொண்டு சென்மின் என்றாட்கு உடன்படாது அவன் பிரியலுறத் தனது இறந்துப்பாடு தோன்றக் கூறியது.

நெஞ்சு நடுக்குறக் கேட்டும்,கடுத்தும், தாம்
அஞ்சியது ஆங்கே அணங்காகும் என்னும் சொல்

இன் தீம் கிளவியாய் வாய் மன்ற; நின் கேள்
புதுவது பல் நாளும் பாராட்ட, யானும்
இது ஒன்று உடைத்து என எண்ணி அது தேர

மாசு இல் வண் சேக்கை மணந்த புணர்ச்சியுள்
பாயல் கொண்டு என் தோள் கனவுவார்' ஆய் கோல்
தொடி நிரை முன் கையாள் கையாறு கொள்ளாள்
கடி மனை காத்து, ஓம்ப வல்லுவள்கொல்லோ
இடு மருப்பு யானை இலங்கு தேர்க்கு ஓடும்.

நெடு மலை வெஞ் சுரம் போகி, நடு நின்ற
செய் பொருள் முற்றும் அளவு என்றார் ஆயிழாய்
தாம் இடை கொண்டது அதுவாயின்,
தம் இன்றி யாம் உயிர்வாழும் மதுகை இலேமாயின்
தொய்யில் துறந்தார் அவர் என, தம்வயின்
நொய்யோர் நுவலும் பழி நிற்ப, தம்மொடு
போயின்று சொல், என் உயிர். (24)

துறை: தலைமகன் குறிப்புக்கண்டு பிரிவனென ஐயுற்றுச் செல்கின்ற தலைவி அக்காலத்துத் தலைவன் கனவின் அரற்றினமை கேட்டுப் பொருள்வயின் பிரிகின்றானெனத் துணிந்து ஆற்றாளாய்த் தோழிக்குச் சொல்லியது.

வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர் பெற்ற
முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்
ஐவர் என்று உலகு ஏத்தும் அரசர்கள் அகத்தரா
கை புனை அரக்கு இல்லைக் கதழ் எரி சூழ்ந்தாங்கு
களி திகழ் கடாஅத்த கடுங் களிறு அகத்தவா

முளி கழை உயர் மலை முற்றிய முழங்கு அழல்
ஒள் உரு அரக்கு இல்லை வளிமகன் உடைத்துத் தன்
உள்ளத்துக் கிளைகளோடு உயப் போகுவான் போல்
எழு உறழ் தடக் கையின் இனம் காக்கும் எழில் வேழம்
அழுவம் சூழ், புகைஅழல் அதர்பட மிதித்துத் தம்
குழுவொடு புணர்ந்து போம், குன்று அழல் வெஞ் சுரம்
இறத்திரால் ,ஐய மற்று இவள் நிலைமை கேட்டீமின்
மணக்குங்கால் மலர் அன்ன தகையவாய், சிறிதுநீர்
தணக்குங்குகால், கலுழ்பு ஆனாக் கண் எனவும் உள் அன்றோ
சிறப்புச் செய்து உழையராப் புகழ்பு ஏத்தி மற்று அவர்
புறக்கொடையே பழி தூற்றும் புல்லியார் தொடர்பு போல்
ஈங்கு நீர் அளிக்குங்கால் இறை சிறந்து, ஒருநாள் நீர்
பாராட்டாக்கால், பசக்கும் நுதல் எனவும் உள அன்றோ
செல்வத்துள் சேர்ந்தவர் வளன் உண்டு, மற்று அவர்

ஒல்கத்து நல்கிலா உணர்விலார் தொடர்பு போல்

ஒரு நாள் நீர் அளிக்குங்கால் ஒளி சிறந்து, ஒரு நாள் நீர்
பாராட்டாக்கால்,பசக்கும் நுதல் எனவும் உள அன்றோ
பொருந்திய கேண்மையின் மறை உணர்ந்து, அம் மறை
பிரிந்தக்கால் பிறர்க்கு உரைக்கும் பீடிலார், தொடர்பு போல்?
என ஆங்கு
யாம் நிற்கு கூறுவது எவன் உண்டு? எம்மினும்
நீ நற்கு அறிந்தனை நெடுந் தகை வானம்
துளி மாறு பொழுதின், இவ் உலகம் போலும் நின்
அளி மாறு பொழுதின் இவ் ஆயிழை கவினே. (25)

துறை : பிரிவு உணரத்தப்பட்ட தோழி நீ பிரிந்தாற் பீடிலார் தொடர்பு போல நும்மை அலர் தூற்றுவன இவ்வகைப்பட்டன சிலவுள எனத் தலைவியாற்றாமை கூறிச் செலவழுங்குவித்தது.

ஒரு குழை ஒருவன் போல், இணர் சேர்ந்த மராஅமும்
பருதி அம் செல்வன் போல், நனை ஊழ்த்த செருந்தியும்
மீன் ஏற்றுக் கொடியோன் போல், மிஞிறு ஆர்க்கும் காஞ்சியும்
ஏனோன் போல், நிறம் கிளர்பு கஞலிய ஞாழலும்
ஆன் ஏற்றுக் கொடியோன் போல் எதிரிய இலவமும் ஆங்கு

தீது தீர் சிறப்பின் ஐவர்கள் நிலை போல
போது அவிழ் மரத்தொடு பொருகரை கவின் பெற
நோ தக வந்தன்றால் , இளவேனில் மே தக
பல் வரி இன வண்டு புதிது உண்ணும் பருவத்து
தொல் கவின் தொலைந்த என் தட மென் தோள் உள்ளுவார்

ஒல்குபு நிழல் சேர்ந்தார்க்கு உலையாது காத்து ஓம்பி
வெல் புகழ் உலகு ஏத்த, விருந்து நாட்டு உறைபவர்
திசை திசை தேன் ஆர்க்கும் திருமருதமுன் துறை
வசை தீர்ந்த என் நலம் வாடுவது அருளுவார்
நசை கொண்டு தம் நிழல் சேர்ந்தாரைத் தாங்கி, தம்

இசை பரந்து, உலகு ஏத்த, ஏதில் நாட்டு உறைபவர்
அறல் சாஅய் பொழுதோடு, எம் அணி நுதல் வேறாகி
திறல் சான்ற பெரு வனப்பு இழப்பதை அருளுவார்
ஊறு அஞ்சி நிழல் சேர்ந்தார்க்கு உலையாது காத்து ஓம்பி
ஆறு இன்றிப் பொருள் வெஃகி, அகன்ற நாட்டு உறைபவர்

என நீ
தெருமரல் வாழி, தோழி ! நம் காதலர்
பொரு முரண் யானையர் போர் மலைந்து எழுந்தவர்
செரு மேம்பட்ட வென்றியர்
வரும் என வந்தன்று அவர் வாய்மொழித் தூதே. (26)

துறை : 'மேவிய சிறப்பினோர்' என்னும் சூத்திரத்திற் பகை மேற் சென்ற அரசன் திறை பெற்ற நாடு காத்து அதன்கண் தன் நெறிமுறைமை அடிப்படுத்துவதற்குப் பிரிவனென்றலின், பிரிவின் கண் தலைவன் இளவேனிற் காலத்துப் பிரிய அக்கால வரவின்கண் தலைவி ஆற்றாளாய் அவர் நமக்கு அருளுங்காலையில் அருளார்காண் என்றாட்குத், தோழி 'அவர் வரவிற்கு இக்காலம் தூதாயன்றே வந்தது! நீ ஆற்றுவாயாக' என வற்புறுத்தியது.

ஈதலில் குறை காட்டாது, அறன் அறிந்து ஒழுகிய
தீதிலான் செல்வம் போல், தீம் கரை மரம் நந்த
பேதுறு மட மொழி, பிணை எழில் மான் நோக்கின்
மாதரார் முறுவல் போல், மண மௌவல் முகை ஊழ்ப்ப
காதலர்ப் புணர்ந்தவர் கதுப்புப் போல், கழல்குபு

தாதொடும் தளிரொடும், தண் அறல் தகை பெற
பேதையோன் வினை வாங்க, பீடு இலா அரசன் நாட்டு
ஏதிலான் படை போல, இறுத்தந்து, இளவேனில்
நிலம் பூத்த மரமிசை நிமிர்பு ஆலும் குயில் எள்ள
நலம் பூத்த நிறம் சாய, நம்மையோ மறந்தைக்க;

கலம் பூத்த அணியவர் காரிகை மகிழ் செய்ய
புலம் பூத்து, புகழ்பு ஆனாக் கூடலும் உள்ளார்கொல்
கல்மிசை மயில் ஆல, கறங்கி ஊர் அலர் தூற்ற
தொல் நலம் நனி சாய, நம்மையோ மறந்தைக்க
ஒன்னாதார்க் கடந்து அடூஉம், உரவு நீர் மா கொன்ற
வென் வேலான் குன்றின்மேல் விளையாட்டும்
விரும்பார்கொல்
மை எழில் மலர் உண்கண் மரு ஊட்டி மகிழ் கொள்ள
பொய்யினால் புரிவுண்ட நம்மையோ மறந்தைக்க
தைஇய மகளிர் தம் ஆயமொடு அமர்ந்து ஆடும்
வையை வார் உயர் எக்கர் நுகர்ச்சியும் உள்ளார்கொல்
என ஆங்கு
நோய் மலி நெஞ்சமோடு இனையல், தோழி !
நாம் இல்லாப் புலம்பாயின், நடுக்கம் செய் பொழுதாயின்
காமவேள் விழவாயின், 'கலங்குவள் பெரிது' என
ஏமுறு கடுந் திண் தேர் கடவி
நாம் அமர் காதலர் துணை தந்தார் விரைந்தே. (27)

துறை : தலைவன் குறித்துப் பிரிந்த இளவேனில் வரவின் கண் எம்மையோ மறக்க, இக்காலத்து இவ்வூரின்கண் தாம் விளையாடும் விளையாட்டும் மறந்தாரோவெனச் செல்லி ஆற்றாளாய தலைவிக்குத் தோழி தலைவன் வரவுணர்ந்து கழியுவகையாற் கூறியது.

பாடல் சால் சிறப்பின் சினையவும், சுனையவும்
நாடினர் கொயல் வேண்டா, நயந்து தாம் கொடுப்ப போல்
தோடு அவிழ் கமழ் கண்ணி தையுபு புனைவார்கண்
தோடுறத் தாழ்ந்து, துறை துறை கவின் பெற
செய்யவள் அணி அகலத்து ஆரமொடு அணி கொள்பு
தொய்யகம் தாழ்ந்த கதுப்புப் போல் துவர் மணல்
வையை வார் அவிர் அறல் இடை போழும் பொழுதினான்
விரிந்து ஆனா மலராயின், விளித்து ஆலும் குயிலாயின்
பிரிந்து உள்ளார் அவராயின், பேதுறூஉம் பொழுதாயின்
அரும் படர் அவல நோய் ஆற்றுவள் என்னாது

வருந்த, நோய் மிகுமாயின் வணங்கிறை! அளி என்னோ
புதலவை மலராயின், பொங்கரின வண்டாயின்
அயலதை அலராயின், அகன்று உள்ளார் அவராயின்
மதலை இல் நெஞ்சொடு மதனிலள் என்னாது
நுதல் ஊரும் பசப்பாயின் நுணங்கிறை! அளி என்னோ

தோயின அறலாயின், சுரும்பு ஆர்க்கும் சினையாயின்
மாவின தளிராயின், மறந்து உள்ளார் அவராயின்
பூ எழில் இழந்த கண் புலம்பு கொண்டு அமையாது
பாயல் நோய் மிகுமாயின் பைந்தொடி! அளி என்னோ
என ஆங்கு

ஆயிழாய் ! ஆங்கனம் உரையாதி; சேயார்க்கு
நாம் தூது மொழிந்தனம் விடல் வேண்டா; நம்மினும்
தாம் பிரிந்து உறைதல் ஆற்றலர்
பரிந்து எவன் செய்தி வருகுவர் விரைந்தே? (28)

துறை : இளவேனில் வரவின்கண் ஆற்றாத தலைவி தூதுவிடக் கருதத் , தோழி, அவர் பிரிந்திருத்தலை நம்மினும் தாம் வல்லரல்லரெனச் சொல்லி வற்புறுத்தியது .

தொல் எழில் வரைத்து அன்றி வயவு நோய் நலிதலின்
அல்லாந்தார் அலவுற ஈன்றவள் கிடக்கை போல்
பல் பயம் உதவிய பசுமை தீர் அகல் ஞாலம்
புல்லிய புனிறு ஒரீஇப் புது நலம் ஏர்தர
வளையவர் வண்டல் போல், வார் மணல் வடுக் கொள
இளையவர் ஐம்பால் போல், எக்கர் போழ்ந்து அறல் வார
மா ஈன்ற தளிர்மிசை மாயவள் திதலை போல்

ஆய் இதழ்ப் பல் மலர் ஐய கொங்கு உறைத்தர
மே தக இளவேனில் இறுத்தந்த பொழுதின்கண்
சேயர்கண் சென்ற என் நெஞ்சினை சின்மொழி !

நீ கூறும் வரைத்து அன்றி, நிறுப்பென்மன்? நிறை நீவி
வாய் விரிபு பனி ஏற்ற விரவுப் பல் மலர் தீண்டி
நோய் சேர்ந்த வைகலான், வாடை வந்து அலைத்தரூஉம்
போழ்து உள்ளார் துறந்தார்கண் புரி வாடும் கொள்கையைச்
சூழ்பு ஆங்கே சுடரிழாய்! கரப்பென்மன்? கைநீவி

வீழ் கதிர் விடுத்த பூ விருந்து உண்ணும் இருந் தும்பி
யாழ் கொண்ட இமிழ் இசை இயல் மாலை அலைத்தரூஉம்
தொடி நிலை நெகிழ்த்தார்கண் தோயும் என் ஆர் உயிர்
வடு நீங்கு கிளவியாய்! வலிப்பென்மன் வலிப்பவும்
நெடு நிலா, திறத்து உண்ண, நிரை இதழ் வாய் விட்ட

கடி மலர் கமழ் நாற்றம், கங்குல் வந்து, அலைத்தரூஉம்
என ஆங்கு
வருந்தினை வதிந்த நின் வளை நீங்க, சேய் நாட்டுப்
பிரிந்து செய் பொருட் பிணி பின் நோக்காது ஏகி, நம்
அருந் துயர் களைஞர் வந்தனர்
திருந்து எயிறு இலங்கு நின் தேமொழி படர்ந்தே. (29)

துறை : பருவ வரவின்கண் ஆற்றாத தலைவியைத் தோழி, வற்புறுப்ப, வன்புறை எதிரழிந்தாட்குத், தோழி, அவன் வரவுணர்ந்து கழியுவகையாற் கூறியது .

அருந்தவம் ஆற்றியார் நுகர்ச்சி போல், அணி கொள
விரிந்து ஆனாச் சினை தொறூஉம், வேண்டும் தாது
அமர்ந்து ஆடி
புரிந்து ஆர்க்கும் வண்டொடு, புலம் தீர்ந்து எவ் வாயும்
இருந் தும்பி, இறை கொள எதிரிய வேனிலான்
துயில் இன்றி யாம் நீந்த, தொழுவை அம் புனல் ஆடி

மயில் இயலார் மரு உண்டு, மறந்து அமைகுவான்மன்னோ
'வெயில் ஒளி அறியாத விரி மலர்த் தண் காவில்
குயில் ஆலும் பொழுது' எனக் கூறுநர் உளராயின்
பானாள் யாம் படர் கூர, பணை எழில் அணை மென்
தோள்
மான் நோக்கினவரோடு மறந்து அமைகுவான்மன்னோ

'ஆனாச் சீர்க் கூடலுள் அரும்பு அவிழ் நறு முல்லை

தேன் ஆர்க்கும் பொழுது' எனத் தெளிக்குநர் உளராயின்
உறல் யாம் ஒளி வாட, உயர்ந்தவன் விழவினுள்
விறல் இழையவரோடு விளையாடுவான்மன்னோ
'பெறல் அரும் பொழுதோடு, பிறங்கு இணர்த் துருத்தி சூழ்ந்து

அறல் வாரும், வையை' என்று அறையுநர் உளராயின்
என ஆங்கு
தணியா நோய் உழந்து ஆனாத் தகையவள் தகை பெற
அணி கிளர் நெடுந் திண் தேர் அயர்மதி பணிபு நின்
காமர் கழல் அடி சேரா
நாமம் சால் தெவ்வரின் நடுங்கினள் பெரிதே. (30)

துறை : பருவ வரவின்கண் ஆற்றாத தலைமகள் இறந்தது சிந்தித்து நம்மாட்டு அன்பிலராயினும் இக்காலத்து இவ்வூரின் பண்டு தாம் விளையாடியவாறு நினைந்து வருவர். இக்கால வரவு சொல்லுவார் உளராயினெனக் கேட்ட பாணன் பாசறைக்கண் சென்று தலைவனைக் கண்டு கூறியது.

கடும் புனல் கால் பட்டுக் கலுழ் தேறிக் கவின் பெற
நெடுங் கயத்து அயல் அயல் அயிர் தோன்ற, அம் மணல்
வடுத்து ஊர வரிப்ப போல் ஈங்கை வாடு உதிர்பு உக
பிரிந்தவர் நுதல் போலப் பீர் விய, காதலர்ப்
புணர்ந்தவர் முகம் போலப் பொய்கை பூப் புதிது ஈன.

மெய் கூர்ந்த பனியொடு மேல் நின்ற வாடையால்
கையாறு கடைக்கூட்டக் கலக்குறூஉம் பொழுதுமன்
பொய்யேம் என்று, ஆயிழாய்! புணர்ந்தவர் உரைத்ததை
மயங்கு அமர் மாறு அட்டு, மண் வெளவி வருபவர்
தயங்கிய களிற்றின்மேல், தகை காண விடுவதோ.

பயங் கெழு பல் கதிர் பால் போலும் பொழுதோடு
வயங்கு இழை தண்ணென, வந்த இவ் அசை வாடை
தாள் வலம்பட வென்று, தகை நன் மா மேல்கொண்டு
வாள் வென்று வருபவர் வனப்பு ஆர விடுவதோ
நீள் கழை நிவந்த பூ நிறம் வாடத் தூற்றுபு

தோள் அதிர்பு அகம் சேர, துவற்றும் இச் சில் மழை
பகை வென்று திறை கொண்ட பாய் திண் தேர் மிசையவர்
வகை கொண்ட செம்மல் நாம் வனப்பு ஆர விடுவதோ
புகை எனப் புதல் சூழ்ந்து, பூ அம் கள் பொதி செய்யா
முகை வெண் பல் நுதி பொர, முற்றிய கடும் பனி?

என ஆங்கு
வாளாதி, வயங்கிழாய் ! 'வருந்துவள் இவள்' என
நாள் வரை நிறுத்துத் தாம் சொல்லிய பொய் அன்றி
மீளி வேற் தானையர் புகுதந்தார்
நீள் உயர் கூடல் நெடுங் கொடி எழவே. (31)

துறை: இளவேனிற் காலத்து வருவல், அத்துணையும் ஆற்றியிருவென்று மண்நசையால் வேந்தன் சென்றவழி முன்பனிக் காலமும் பின் பனிக் காலமும் வந்து வருத்தலின், ஆற்றாத தலைவியைத் தோழி 'வருவரெ'ன வற்புறுப்பவும், வற்புறை எதிரழிந்த வழித் தலைவன் யாம்குறித்த பருவம் வருந்துணையும் ஆற்றியிராளெனப் பின் பனிக் காலத்து வருகின்ற வரவு கூர்ந்து தோழி கழியுவகையாற் கூறியது.

எஃது இடை தொட்ட, கார்க் கவின் பெற்ற ஐம்பால் போல்
மை அற விளங்கிய, துவர் மணல்- அது; அது
ஐதாக நெறித்தன்ன அறல் அவிர் நீள் ஐம்பால்
அணி நகை இடையிட்ட ஈகை அம் கண்ணி போல்
பிணி நெகிழ் அலர் வேங்கை விரிந்த பூ வெறி கொள

துணி நீரால், தூ மதி நாளால், அணி பெற
ஈன்றவள் திதலை போல் ஈர் பெய்யும் தளிரொடும்
ஆன்றவர் அடக்கம் போல் அலர்ச் செல்லாச் சினையொடும்
வல்லவர் யாழ் போல வண்டு ஆர்க்கும் புதலொடும்
நல்லவர் நுடக்கம் போல் நயம் வந்த கொம்பொடும்

உணர்ந்தவர் ஈகை போல் இணர் ஊழ்த்த மரத்தொடும்
புணர்ந்தவர் முயக்கம் போல் புரிவற்ற கொடியொடும்
நயந்தார்க்கோ நல்லைமன், இளவேனில்! எம் போலே ?
பசந்தவர் பைதல் நோய் பகை எனத் தணித்து, நம்
இன் உயிர் செய்யும் மருந்தாகி, பின்னிய

காதலர் எயிறு ஏய்க்கும் தண் அருவி நறு முல்லைப்
போது ஆரக் கொள்ளும் கமழ் குரற்கு என்னும்
தூது வந்தன்றே, தோழி!
துயர் அறு கிளவியோடு, அயர்ந்தீகம் விருந்தே. (32)

துறை : கால வரவு கண்டு ஆற்றாளாயின விடத்துத் தோழி காலத்தை நோக்கி அழகியதாய்ச் செய்தாய் வந்தெனச் சொல்லி, தலைவிக்கு நங்காதலர் வருகின்றாரெனச் சொல்லி வந்த தூது காண் இது, நம் விருந்தயர்கமெனச் சொல்லியது.

வீறு சால் ஞாலத்து வியல் அணி காணிய
யாறு கண் விழித்த போல், கயம் நந்திக் கவின் பெற
மணி புரை வயங்கலுள் துப்பு எறிந்தவை போல
பிணி விடு முருக்கு இதழ் அணி கயத்து உதிர்ந்து உக

துணி கய நிழல் நோக்கித் துதைபு உடன் வண்டு ஆர்ப்ப

மணி போல அரும்பு ஊழ்த்து மரம் எல்லாம் மலர் வேய
காதலர்ப் புணர்ந்தவர் கவவுக் கை நெகிழாது
தாது அவிழ் வேனிலோ வந்தன்று, வாரார் நம்
போது எழில் உண்கண் புலம்ப நீத்தவர்
எரி உரு உறழ இலவம் மலர
பொரி உரு உறழப் புன்கு பூ உதிர
புது மலர்க் கோங்கம் பொன் எனத் தாது ஊழ்ப்ப
தமியார்ப் புறத்து எறிந்து எள்ளி, முனிய வந்து
ஆர்ப்பது போலும் பொழுது என் அணி நலம்
போர்ப்பது போலும் பசப்பு

நொந்து நகுவன போல் நந்தின, கொம்பு; நைந்து உள்ளி
உகுவது போலும், என் நெஞ்சு; எள்ளி
தொகுபு உடன் ஆடுவ போலும் மயில்; கையில்
உகுவன போலும், வளை என் கண் போல்
இகுபு அறல் வாரும் பருவத்தும் வாரார்

மிகுவது போலும், இந் நோய்
நரம்பின் தீம் குரல் நிறுக்கும் குழல் போல்
இரங்கு இசை மிஞிறொடு தும்பி தூது ஊத
தூது அவர் விடுதரார் துறப்பார்கொல் நோதக
இருங் குயில் ஆலும் அரோ.
என ஆங்கு
புரிந்து நீ எள்ளும் குயிலையும், அவரையும், புலவாதி
நீல் இதழ் உண்கணாய் ! நெறி கூந்தல் பிணி விட
நாள் வரை நிறுத்துத் தாம் சொல்லிய பொய் அன்றி
மாலை தாழ் வியன் மார்பர் துளைதந்தார்
கால் உறழ் கடுந் திண் தேர் கடவினர் விரைந்தே. (33)

துறை : பருவ வரவின்கண் வன்புறை எதிரழிந்து ஆற்றாளாயினாளைத் தோழி தலைவனது வரவுணர்ந்து கூறி ஆற்றுவித்தது.

மன் உயிர் ஏமுற, மலர் ஞாலம் புரவு ஈன்று
பல் நீரால் பாய் புனல் புரந்து ஊட்டி, இறந்த பின்
சில் நீரால் அறல் வார, அகல் யாறு கவின் பெற
முன் ஒன்று தமக்கு ஆற்றி முயன்றவர் இறுதிக்கண்
பின் ஒன்று பெயர்த்து ஆற்றும் பீடுடையாளர் போல்

பல் மலர் சினை உக, சுரும்பு இமிர்ந்து வண்டு ஆர்ப்ப
இன் அமர் இளவேனில் இறுத்தந்த பொழுதினான்

விரி காஞ்சித் தாது ஆடி இருங் குயில் விளிப்பவும்
பிரிவு அஞ்சாதவர் தீமை மறைப்பென்மன்; மறைப்பவும்
கரி பொய்த்தான் கீழ் இருந்த மரம் போலக் கவின் வாடி
எரி பொத்தி, என் நெஞ்சம் சுடும்ஆயின், எவன் செய்கோ?
பொறை தளர் கொம்பின்மேல் சிதரினம் இறை கொள
நிறை தளராதவர் தீமை மறைப்பென்மன்; மறைப்பவும்
முறை தளர்ந்த மன்னவன் கீழ்க் குடி போலக் கலங்குபு
பொறை தளர்பு பனி வாரும் கண்ஆயின், எவன் செய்கோ
தளை அவிழ் பூஞ் சினைச் சுரும்பு யாழ் போல இசைப்பவும்
கொளை தளராதவர் தீமை மறைப்பென்மன்; மறைப்பவும்
கிளை அழிய வாழ்பவன் ஆக்கம் போல் புல்லென்று
வளை ஆனா நெகிழ்பு ஓடும் தோள்ஆயின், எவன் செய்கோ
என ஆங்கு
நின்னுள் நோய் நீ உரைத்து அலமரல்; எல்லா! நாம்
எண்ணிய நாள்வரை இறவாது, காதலர்
பண்ணிய மாவினர் புகுதந்தார்
கண் உறு பூசல் கை களைந்தாங்கே.. (34)

துறை ; பருவங்கண்டு வன்புறை எதிரழிந்து ஆற்றாளாய் தலைவிக்குத் தோழி அவன் வரவுணர்ந்து கழியுவகையால் சொல்லியது.

மடியிலான் செல்வம் போல் மரன் நந்த, அச் செல்வம்
படி உண்பார் நுகர்ச்சி போல் பல் சினை மிஞிறு ஆர்ப்ப
மாயவள் மேனி போல் தளிர் ஈன, அம் மேனித்
தாய சுணங்கு போல் தளிர்மிசைத் தாது உக
மலர் தாய பொழில் நண்ணி மணி நீர கயம் நிற்ப
அலர் தாய துறை நண்ணி அயிர் வரித்து அறல் வார
நனி எள்ளும் குயில் நோக்கி இனைபு உகு நெஞ்சத்தால்
துறந்து உள்ளார் அவர்' எனத் துனி கொள்ளல் எல்லா நீ
வண்ண வண்டு இமிர்ந்து, ஆனா வையை வார் உயர் எக்கர்
தண் அருவி நறு முல்லைத் தாது உண்ணும் பொழுதன்றோ
கண் நிலா நீர் மல்கக் கவவி, நாம் விடுத்தக்கால்
ஒண்ணுவதால்! நமக்கு அவர் "வருவதும்" என்று உரைத்ததை
மல்கிய துருத்தியுள் மகிழ் துணைப் புணர்ந்து அவர்
வில்லவன் விழலினுள் விளையாடும் பொழுதன்றோ
வலன் ஆக, வினை!" என்றும் வணங்கி, நாம் விடுத்தக்கால்
ஒளியிழாய் நமக்கு அவர் "வருதும்" என்று உரைத்ததை
நிலன் நாவில் திரிதரூஉம் நீள் மாடக் கூடலார்
புலன் நாவில் பிறந்த சொல் புதிது உண்ணும் பொழுது அன்றோ-
பல நாடு நெஞ்சினேம் பரிந்து, நாம் விடுத்தக்கால்
சுடரிழாய்! நமக்கு அவர் "வருதும்" என்று உரைத்ததை ?

என ஆங்கு
உள்ளுதொறு உடையும் நின் உயவு நோய்க்கு உயிர்ப்பாகி
எள் அறு காதலர் இயைதந்தார்- புள் இயல்
காமர் கடுந் திண் தேர்ப் பொருப்பன்
வாய்மை அன்ன வைகலொடு புணர்ந்தே. (35)

துறை ; வற்புறுத்தும் தோழிக்குத் தலைவி இக்காலம் அல்லவோ அவர் வருதுமெனச் சொன்ன காலமென வன்புறையெதிரழிந்தாள், நீ துனிகொள்ளல்
அவர் வந்தாரெனத் தலைவன் வரவுணர்ந்து தோழி ஆற்றுவித்தது.

கொடு மிடல் நாஞ்சிலான் தார் போல், மராத்து
நெடுமிசைச் சூழும் மயில் ஆலும் சீர
வடி நரம்பு இசைப்ப போல் வண்டொடு சுரும்பு ஆர்ப்ப
தொடி மகள் முரற்சி போல் தும்பி வந்து இமிர்தர
இயன் எழீஇயவை போல எவ் வாயும் இம்மென
கயன் அணி பொதும்பருள் கடி மலர்த் தேன் ஊத
மலர் ஆய்ந்து வயின் வயின் விளிப்ப போல் மரன் ஊழ்ப்ப
இருங் குயில் ஆல, பெருந் துறை கவின் பெற
குழவி வேனில் விழவு எதிர்கொள்ளும்
சீரார் செவ்வியும், வந்தன்று
வாரார், தோழி நம் காதலோரே
பாஅய்ப் பாஅய்ப் பசந்தன்று, நுதல்
சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன, தோள்
நனி அறல் வாரும் பொழுது என வெய்ய
பனி அறல் வாரும், என் கண்
மலையிடைப் போயினர் வரல் நசைஇ, நோயொடு
முலையிடைக் கனலும், என் நெஞ்சு
காதலின் பிரிந்தார்கொல்லோ வறிது, ஓர்
தூதொடு மறந்தார்கொல்லோ நோதக
காதலர் காதலும் காண்பாம்கொல்லோ
துறந்தவர் ஆண்டு ஆண்டு உறைகுவர்கொல்லோ யாவது -
"நீள் இடைப் படுதலும் ஒல்லும்; யாழ நின்
வாள் இடைப்படுத்த வயங்கு ஈர் ஓதி !
நாள் அணி சிதைத்தலும் உண்டு" என நய வந்து
கேள்வி அந்தணர் கடவும்
வேள்வி ஆவியின் உயிர்க்கும், என் நெஞ்சே. (36)

துறை ; காலங் கண்டு ஆற்றாத தலைவியது நிலைமை கண்டு, ஆற்றாத தோழி, தான் ஆற்றாளாய் அவட்குக் கூறியது.

## குறிப்புகள்

## அலகு - 4

### 4.0 முன்னுரை

முந்தைய அலகில் எட்டுத்தொகையின் அகம் சார்ந்த கலித்தொகையைப் பற்றி அறிந்தீர்கள். இந்த அலகில் அகப் பொருள் சார்ந்த அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றில் உள்ள சில பாடல்களின் அகக் கூறுகளின் சிறப்புகளைத் தெரிந்து கொள்ளப் போகிறீர்கள். இந்த அலகு மூன்று பிரிவுகளை உடையது.

பிரவு 1 - அகநானூறு, பிரிவு 11 - நற்றிணை, பிரிவு 111 - குறுந்தொகை.

**பிரிவு 1: அகநானூறு - பாட அமைப்பு**

4.1.1 நோக்கங்கள்

4.1.2 நூல் அறிமுகம்

4.1.3 பாடல் ஆசிரியர்

4.1.4 பாடப் பொருள் விளக்கம்

4.1.4.1 பாலைத் திணை

4.1.4.2 குறிஞ்சித் திணை

4.1.4.3 மருதத் திணை

4.1.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

4.1.6 பாடத் தொகுப்புரை

4.1.7 அருஞ்சொற் பொருள்

4.1.8 மாதிரி வினாக்கள்

4.1.9 பரிந்துரை நூல்

4.1.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

### 4.1.1 நோக்கங்கள்

- அகநானூற்று நூல் அமைப்பு முறையை அறிதல்.
- பரணர் பாலை, குறிஞ்சி, மருதம் ஆகிய திணைகளில் பாடல்களைப் பாடியுள்ளார் என அறிதல்.
- பாலைத்திணையில் தலைவன் பிரிவில் தலைவியின் ஆற்றமை பற்றி உணர்தல்
- அக்கால மன்னர்களின் வரலாறு, போர் முறை, அரசியல், கொடை ஆகியவை பற்றி அறிதல்.
- தலைவன் பரத்தை காரணமாகப் பிரிதலும், தலைவி ஊடுதலும், தோழியும் தலைவியும் தலைவனது வாயிலை மறுத்தலும் காணுதல்.

### 4..1.2 நூல் அறிமுகம்

அகநானூறு தொகை நூல்களில் அகம் சார்ந்த நூலாகும். இதில் 400 பாடல்கள் உள்ளன. 158 புலவர்கள் பாடியுள்ளனர். இதனைத் தொகுத்தவர் உப்பூரிக்கிழார் மகன் உருத்திர சன்மன். தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. இந்நூல் 13 முதல் 31 அடியுள்ள பாடல்களை உடையது. எனவை இதனை நெடுந்தொகை என அழைப்பர் இது களிற்று யானை நிரை (1 முதல் 120 பாடல்கள்) மணிமிடைப்பவளம் (121முதல் 300 பாடல்கள்) நித்திலக்கோவை (301 முதல் 400 பாடல்கள்) என்ற மூன்று பகுப்புகளை உடையது. இந்நூலில் ஒற்றைப்படை எண்களாக வருவன பாலைத் திணை. 2,8 என்ற எண்களில் முடிவன குறிஞ்சித் திணை. 4 என்ற எண்ணில் வருவன முல்லைத் திணை. 6 என்ற எண்ணில் வருவன மருதத் திணை. 10க்களில் வருவன நெய்தல் திணை என அமைந்துள்ளன.

### 4.1.3 பாடலாசிரியர்

இங்குப் பரணரின் பாடல்கள் 34 பாடமாக வந்துள்ளன. அவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். கபிலருடன் நண்பராக இருந்தவர் . இதற்குக் கபில பரணர் என்ற தொடர் சான்றாகிறது. இவர் பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தில் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பாடியுள்ளார்.

இவர் அகநானூற்றில் பாலைத் திணையில் 4 பாடல்களையும் குறிஞ்சித் திணையில் 15 பாடல்களையும் மருதத் திணையில் 15 பாடல்களையும் பாடியுள்ளார்...

### 4.1.4 பாடப் பொருள் விளக்கம்

பாடல்கள் திணை துறை கூற்று என்ற அடிப்படையில் பொருள் விளக்கப்படுகின்றன.

#### 4.1.4.1 பாலைத் திணை

முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை என்ற வடிவத்தைப் பெறும். இதன் ஒழுக்கம் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் ஆகும்.

**பாடல் (135)**

**துறை:**

தலைவன் பொருளீட்டத் தலைவியைப் பிரிகிறான் . அப்போது தலைவி மெய் வேறுபட, தோழி தெளிவுறுத்த, தலைவி தோழிக்குச் சொல்லியது.

**பாடல் பொருள்**

அன்புடைய தோழி! மாமை நிறமும் அழகும் புதரில் படிந்த பீர்க்கின் மலர் போலப் பசலை கொண்ட நெற்றியள் ஆனேன். ஓவியத்தில் வரைந்தது போன்ற என் கண்கள் அழுமாறு துயரம் மிகுந்து தன் கணவனைக் காவிரி கவர்ந்த போது துயரம் கொண்ட ஆதிமந்தி போல அறிவு திரிந்து துன்பம் அடைகிறேன் என் செய்வேன்.

ஞாயிறு காய்வதால், காற்று விரைந்து வீச, இருப்பை மரத்தின் தளிர் அசைகின்றது. அம்மரத்தின் வெண்மையான பூக்கள் பாறை மீது விழுந்து யானைக் கொம்பால் செய்யப்பட்ட கழங்கைப் போல விளங்கும் காட்டைக் கடந்து தலைவர் சென்றார்.

அவர் பிரியமாட்டார் என்ற என் நெஞ்சு, புகழும் வெண்குடையும் உடைய கழுவுள் என்பவன் போரிட்ட காமூர் போல் கலங்குகின்றது.

**பாடல் (367)**

**துறை:** மேற்கூறியது

**பாடல் பொருள்**

ஞாயிறு தன் கதிர்களை அடக்கி மேற்கு மலையை அடையும். அப்பொழுது கலக்கம் கொண்ட ஆண்மான் அழைக்க, நொச்சி செடி வளர்ந்துள்ள மனையில் மான்கள் தங்கியிருக்கும் காட்டு அரண்கள். அதன் அருகில் குடிகளையுடைய சிற்றூர். வேங்கை மரம் சூழ்ந்து மேட்டு நிலத்தில் விளைந்த வரகு நிறைந்த கூடு. அதன் பக்கத்தில் காட்டு ஆண் பூனை பெண் பூனையின் வருந்தும் பசி நீங்க கோழிச் சேவலைப் பிடிக்கும் சமயத்தைப் பார்த்திருக்கும் .

இத்தகைய மாலைப் பொழுது துணையுடன் கூடித் தழுவி இருப்பவர்களுக்கு இன்பம் தரும் என்று தலைவி தோழியிடம் மாலைப் பொழுது வராது இருந்தால் ஆற்றியிருப்பேன் என்று கூறுகிறாள்.

**பாடல் (181)**

**துறை:**

வினைபொருட்டு சென்ற தலைவன் இடை வழியில் மீள எண்ணிய தன் நெஞ்சுக்குக் கூறியது

**பாடல் பொருள்**

ஆய் எயினன் என்ற மன்னன் போர் வன்மை பொருந்திய மிஞிலி என்பவனுடன் போரிட்டான். போர்க்களம் சிவக்குமாறு செய்து விழுப்புண் பட்டு விழுந்தான். அவன் மேல் கதிரவன் கதிர்கள் படாதவாறு பறவைகள் ஒன்றாகக் கூடி வானத்தில் வட்டமிட்டன. சோழ மன்னரால் காக்கப்படுகின்ற நான்கு வேதம் அருளிய சிவபெருமானின் சோலை சூழ்ந்த ஆலமுற்றம் உள்ளது.. காவிரிப் பூம்பட்டினத்தை உடைய சோழ நாட்டில் வண்டுகள் மொய்க்கும் கூந்தலும் மூங்கில் போன்ற தோள்களும் உடைய தலைவி இருந்த குன்று உள்ளது. நெஞ்சே! நீ செல்வதற்கரிய காட்டைக் கடக்கத் துணிவு கொள்ளவில்லை. நீ திரும்பி வர எண்ணினால் என் நிலையை அங்குச் சென்று அவளிடம் உரைப்பாயாக.

**பாடல் (125)**

**துறை:**

தலைவன் கல்வி கற்கும் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து சென்று மீண்டான். அவன் வரவை அறிந்த தோழி ஆற்றாமையால் வருந்தும் தலைவிக்கு உணர்த்த வாடைக் காற்றுக்குக் கூறுபவளாய் கூறுவது.

**பாடல் பொருள்**

வாடைக் காற்றே! கேட்பாய். கொடிய நள்ளிரவில் உனக்கும் தலைவன் தலைவிக்கும் சிறிது பகையும் இல்லாதிருக்கும் போதே கணவரைப் பிரிந்த மகளிரின் துன்பத்தைச் சிறிதும் ஆராயாமல் அவர்கள் உன்னை வெறுக்குமாறு குளிர்ச்சியாக வீசுகிறாய். இல்வாழ்க்கையை முழுமை அடையச் செய்ய தலைவன் ஓதல் வினைக்காகச் சென்றார். அவர் விரைவாகத் திரும்பி வருவாராயின் பகைவர்க்கு அச்சம் தரும் கரிகால் வளவன் முன் நிற்க முடியாதவராய் அவரை எதிர்த்து ஒன்பது மன்னர்களும் ஒன்பது குடைகளையும் கைவிட்டுச் சென்றதைப் போல நீ எமக்கு தோற்று ஓடுவாய்.

### 4.1.4.2 குறிஞ்சித் திணை

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சித் திணையாகும். புணர்தலும் புணர்தல் நிமித்தமும் இதன் ஒழுக்கம்.

**பாடல் (142)**

**துறை:**

தலைவன் இரவில் வந்து தலைவியைக் கூடித் திரும்புகிறான். அப்பொழுது அவளுடன் இருந்ததை எண்ணி தன் நெஞ்சிற்குச் சொல்வது. இத்துறையில் **மூன்று பாடல்கள்** உள்ளன.

**பாடல் பொருள் (142)**

நெஞ்சே வாழ்க! நீதி தவறாதும் உரல் போன்ற அடியுடைய யானையையும் உடைய மன்னன் நன்னன் ஆவான். அவனுக்குரிய 'பாழி' என்ற ஊரில் பலியூட்ட பகைவரின் குருதியை ஊட்டும் இயல்பினன் 'மிஞிலி' என்பவன். அவன் அதிகன் என்பவனைக் கொன்று வாகை சூடினான். அப்பொழுது 'ஒள்வாள் அமலை'என்ற வெற்றிக் கூத்து ஆடப்பட்டது. அப்போர்க் களத்தில் தோன்றிய ஆரவாரம் போலப் பலரும் அறிந்த அலருக்கு அஞ்சி வெள்ளி வளையல் அணிந்தும், கருங்கூந்தலும் உடைய நம் காதலி நள்ளென்ற இடையாமத்தில் பாவை நடை கற்றது போல மெல்ல வந்தாள்.

அவளது மாலையில் இருந்து தேன் துளி சிந்த, யாழ் போன்ற இனிய மொழி பேசி, என்னைத் தழுவினாள்.

தம் புலமையால் மேலோர் புகழ, வள்ளல் தன்மையும், போரை வெல்லும் படையும் உடைய 'மாந்தரம் பொறையன் கடுங்கோ' என்னும் சேர மன்னனைப் பாடிச்

செல்வோர் பிச்சைக் கலம் நிறைந்தது போல என் நெஞ்சம் நிறைந்தது என்று தலைவியிடம் பெற்ற இன்பத்தை எண்ணி மகிழ்கிறான்.

**பாடல் பொருள் (152)**

நெஞ்சே! தலைவி, நம் மனம் நடுங்கும் துன்பம் நீங்க வந்து கூடி, குன்றில் உள்ள தன் சிறிய ஊருக்குத் திரும்பினாள்.

தித்தன் எனபவன் பாணரைப் புரப்பவன். அவனுடைய நீர்மிகுந்த பெருந்துறைப்பட்டினத்தில் பொன்னைக் கொண்டு வரும் மரக்கலத்தை இறால் மீன் கூட்டம் தாக்கும். அந்த இறால் மீன் கூட்டம் போன்றது பிண்டன் என்பவனின் படை. .அப்படையை வென்ற வேலை உடையவன் நன்னன். அவன் வெற்றிப் புகழைக் கொடுக்கும் கொடையினன். கலைஞர்களுக்கு ஆண் யானைகளைப் பரிசிலாக அளிப்பவன். அவனது ஊர் பாரம். அவனுடைய ஏழில் மலையின் பக்க மலை ஆகிய பாழியில் உள்ள மயில் தோகைகளைப் போன்றது தலைவியின் கூந்தல்.

தலைவியின் தோள்கள் வீரர்களுக்குத் தலைவனான நல்லியின் சோலை மிக்க பக்க மலையில் மலர்ந்த காந்தள் மலரைவிட வியப்புடைய பல அழகிய மலர் ஒன்றாய் மணப்பது போல் நறுமணம் கமழும்.

ஆய் பரிசில் பெற வந்தவருக்குக் கல்வி வல்லவராயினும் அல்லாராயினும் பிச்சைப் பாத்திரம் நிறையுமாறு சோறு அளிப்பான். அவனுடைய தலையாறு என்னும் இடத்தில் உள்ள உயர்ந்த மலையின் மூங்கில் கணுக்களின் நடுவிடம் போல் தலைவியின் தோள்கள் தொலைவில் உள்ளன. ஆயினும் நமக்குத் துன்பத்தைத் தருகின்றன என்று தலைவியின் கூந்தல் தோள்கள் அவனுக்குத் துன்பத்தைத் தருவதாக எண்ணி வருந்தி நெஞ்சிடம் கூறுகிறான்.

**பாடல் பொருள் (162)**

கடலைப் போன்று விளங்கும் வானம் மின்னலுடன் இடியும் கூடி நள்ளிரவில் மழை பெய்கிறது. தலைவியின் மாளிகையில் காவலர் தம் காவலைப் புறக்கணித்த நேரத்தில் ஒரு பக்கத்தில் நின்று கொண்டிருந்தேன்.

புரவலருக்குப் புகழை உண்டாக்குபவர் இரவலர். கழலும் வீரவளையும் அணிந்த அதிகன் இரவலருக்கு அளிப்பவன்.. அவனுடைய பலா மரமும் வேங்கை மரமும் போன்ற அழகும், பசும்பூண் பாண்டியனின் யானை மீதுள்ள கொடி போன்ற அழகும் உடைய அருவிகள் உள்ள மலைச்சாரல். அச்சாரலில் தெய்வப் பெண் போலப் பெறுவதற்கு அரியவள் நம் தலைவி.

கருமணல் கூந்தலும் நீல மலர்க் கண்களும் முல்லை அரும்புப் பற்களும் பவள வாயும் உடையவளாய் காற்றில் அசையும் தளிர் போல் அசைந்து வந்த தலைவி வருத்தம் நீங்க இடைவிடாமல் எண்ணைத் தழுவிக் கொண்டாள் என்று தன் நெஞ்சிடம் கூறினான்.

**பாடல் (62)**

**துறை**

இரவுக்குறிக்கண் தலைவன் செல்லும் முன்பே தலைவி அல்ல குறிப்பட்டு, குறி இடத்திற்கு வந்து தலைவனைக் காணாமல் இல்லம் புகுந்தாள். பின்னர் தலைவன் குறி இடத்திற்கு வந்து புள் எழுப்புதல் முதலிய குறியைச் செய்யவும் இவையும் முன்பு போல் இயற்கையில் நிகழ்வன என்று எண்ணித் தலைவி வாராமல் இருந்தாள். அப்போது தலைவன் ஏங்கி நின்று தன் நெஞ்சிற்குச் சொல்லியது. இத்துறையில் **ஐந்து பாடல்கள்** உள்ளன.

**பாடல் பொருள் (62)**

தலைவி, வெற்றி வேலும், யானைப் படையும் உடைய கொல்லி மலையில் உள்ள கடவுள் தன்மை பெற்ற பாவை போன்றவள். நீர்நிலையில் உள்ள பஞ்சாய்க்

கோரையின் அடிக் குருத்தைப் போன்ற புன்முறுவலால் அழகான பற்களுடைய சிவந்த வாயினள். மூங்கில் போன்ற தோளினள். குவளை மலர் போன்ற கண்ணினள். இத்தகையவளுடன் யாம் நிகழ்த்திய புணர்ச்சி பேயும் அறியாதது. அது இன்று போர்க்களத் துடி ஒலி போன்று அலர் ஆயிற்று. நேற்று காவிரி ஆற்றில் குளிப்பவள் போல எம்மைத் தழுவிக் கொண்டாள். இன்று அவள் வரவில்லை என்ன செய்வோம் என்று அல்லகுறியால் தலைவியைக் காணாது தலைவன் தன் நெஞ்சிடம் உரைக்கிறான்.

**பாடல் பொருள் (212)**

என் நெஞ்சே! உன்னுடன் வாழ்வது அரிது. தலைவி பொன் பாவை போன்ற அழகுடையவள். திரண்ட கூந்தலும், சிவந்த வாயும், யாழ் இசை போன்ற மிக இனிய சொற்களும், தெய்வ இயல்பும் உடையவள். இத்தனையுடைய மங்கையை விரும்பி, யானைக் கூட்டம் கலக்கிய நீரைப் போலக் கலக்கம் அடைந்த போது, 'இவள் பெறுதற்கு அரியவள் என்று எண்ணவில்லை! ஒவ்வொரு நாளும் துன்பம் நிறைந்த அரிய வழியைக் கடந்து வந்து என்னைத் துன்பத்தில் ஆழ்த்தினாய். இடைவிடாமல் காண்பதற்கு அரிய ஒருத்தியை எண்ணி நீங்காத துன்பத்தினை எனக்குத் தந்தாய். இத்தகைய நீ,

கடல் போன்ற படை உடைய செங்குட்டுவன் தன் வலிமையால் இந்த நில உலகில் மட்டுமன்று கடல் கடந்தும் போர் செய்து வெற்றியும் பெற்றவன். அவனது வேல் உன் மார்பில் பாய்ந்து உன் செருக்கு அழிவதாகுக'! என்று தன் நெஞ்சிடம் கூறுகிறான்.

**பாடல் பொருள் (258)**

என் நெஞ்சே! நீ வாழ்க! 'தலைவி நன்னன் உதியன் என்பவனின் பாழி என்னும் இடத்தில் வேளிர் பாதுகாவலுடன் சேர்த்து வைத்த பொன்னைக் காட்டிலும் அடைவதற்கு அரியவள் என்று கூறியும் நீ கேட்கவில்லை. மென்மைத் தன்மையுடைய நீ உன் உள்ளத்தில் விரும்பினாய். பாம்பு இரை தேடித் திரியும் இரவில் தலைவியைப் பெறாமல், தனிமை தோன்றி காண்பவர் இகழும்படியாகக் காமம் மிக்கு அரிய துன்பத்தை என்னிடம் உண்டாக்கினாய். எனவே இருளுடைய குகையில் ஒளியின்றி மறையும் மணியைப் போல நீ மறைந்தொழிக!' என்று தன் நெஞ்சிற்குக் கூறினான்.

**பாடல் பொருள் (322)**

நெஞ்சே! நம்மை இவ்வாறு வருத்தம் அடையச் செய்த தலைவி படையையும் தேரையும் உடைய திதியன் என்பவனின் அருவியும் முழங்கும் புலிகளும் உள்ள பக்க மலையையும் குறவர்களும் ஏறுதற்கு அரிய பொதிய மலையைப் போல் பெறுவதற்கு அரியவள். மழை பெய்த நள்ளிரவில் காமம் வருத்தி மலை உச்சியில் இருந்து கீழே விழுந்து இறப்பவர் போல அச்சம் உண்டாக நடுங்கிக் கோலால் அடிபட்ட பாம்பு போல வேறு துணையின்றி வாட்டம் அடைவாயோ! என்று தன் நெஞ்சிடம் கூறுகிறான்.

**பாடல் பொருள் (372)**

நெஞ்சே! நீ வாழ்க! கடவுளால் காக்கப்படும் பாழி மலையில் வேள்விக்குடி மக்கள் செல்வத்தை மறைத்து வைத்தனர். அதுபோலப் பெறுதற்கரிய தலைவியின் இன்பத்தை நினைத்து வருந்தினோம். ஆனாலும் நீ அதைக் கைவிடவில்லை. ஏறியும் இறங்கியும் ஆடும் கயிற்றைப் போலச் செல்லுதலும் வருதலும் ஆனாய். நீ மணியை இழந்த பாம்பு போல வருந்தினாய். தலைவி காவல் மிக உடைய மதிலைப் போன்று பெறுவதுற்கு அரியவள் என்று தன் நெஞ்சிடம் கூறுகிறான்.

## பாடல் (198)

**துறை:**

களவில் இரவுக்குறியில் வந்து தன்னுடன் இன்பம் அடைந்து மீண்டு இல்லத்திற்குச் செல்லும் தலைவியின் பண்பைக் கண்டு தலைவன் தனக்குள் மகிழ்ந்து கூறுதல். இத்துறையில் **மூன்று பாடல்கள்** உள்ளன.

## பாடல் பொருள் (198)

என் நெஞ்சே! நம்முடைய அடக்க இயலாத காமத்தை அவளிடம் வெளிப்படுத்த அதை நம்பி மழை பெய்யும் இரவிலும் மணம் மிக்க கூந்தலுடன், ஆடையால் உடம்பைப் போர்த்தி, மயில் போலவும் சிலம்பு ஒலிக்காமலும் அச்சத்துடன் வருவாள். ஊர் முழுவதும் உறங்கும் இரவில் நம்மைத் தழுவிச் செல்வாள். நிறை கற்பால் உயர்ந்த மாமை நிறம் கொண்ட பெண் அல்லள். ஆய் என்பவனின் கவிரம் என்ற பக்க மலையில் உள்ள சுனையிடத்தில் உள்ள சூரர மகளே ஆவாள் என்று தலைவன் நெஞ்சிடம் உரைத்தான்.

## பாடல் பொருள் (208)

நெஞ்சே! இரவில் கடை வாயிலில் நின்று பாணர் பரிசிலை விரும்பினால் ஆஅய் எயினன் என்பவன் யானையைப் பரிசாகத் தருவான். அவன் பாழி என்னும் ஊரில் மிஞிலி என்பவனுடன் நடந்த போரில் புண்பட்டு வீழ்ந்தான். கதிரவனின் கதிர் போரில் இறந்துபட்ட ஆஅய் எயினன் உடலைக் காயாமல் இருக்க பறவைகள் தம் இறகுகளால் பந்தலிட்டு நிழல் செய்து கொண்டிருப்பதை நான் காணேன் என அவன் இறந்து கிடக்கும் இடத்திற்குக் காணச் செல்லாமல் நன்னன் சினம் மிகுந்து மறைந்து கொண்டான்.

பல வேளிர் மகளிர் தாம் சூடிய மாலையை அழித்துவிட்டு அழுது ஆரவாரம் செய்ததை அகுதை என்பவன் நீக்கினான். அதுபோல் ஓரி என்ற வள்ளலின் கொல்லி மலையில் கார்கால மலர் போல மணம் கமழும் கூந்தலை உடைய தலைவி உப்பாலான அணையால் தடைப்படாத மழை வெள்ளம் போல் நாணத்துள் அடங்காத காமத்துடன் வந்து நம் துன்பத்தை நீக்கினாள். அவள் வாழ்க! என்று தன் நெஞ்சிடம் மகிழ்ந்து கூறுகிறான்.

## பாடல் பொருள் (262)

அருவி நீர் ஆரவாரிக்கும் பக்க மலைக்கு உரியவன் பேகன். அம்மலையைப் போன்ற நறுமணமும் இனிய சொல்லும் உடைய நம் தலைவி வந்து புணர்ந்தமையால், பசுமையான இலைகள் நிறைந்த புன்செய் நிலத்தில் விளைந்த பயற்றைப் பசு புகுந்து மேய்ந்தது. அதனால் கோசர் அன்னி மிஞிலியின் தந்தையின் கண்களை இரக்கமின்றிப் பிடுங்கினர். அதனால் உண்ணாமலும் தூய உடை உடுத்தாமலும் பகைவரை அழிக்க வேண்டும் என விரதம் கொண்டு சினந்து இருந்தாள். இச்செய்தியை வீரம் மிக்க திதியன் என்பவனுக்குச் சொல்லி கோசரைக் கொன்று சினம் நீங்கி மகிழ்ச்சி அடைந்தாள். அதைப் போன்று தலைவியைப் புணர்ந்ததால் நான் மகிழ்ந்தேன்.

## பாடல் (122)

**துறை**

பல இடையூறுகளால் தலைவனது குறியீட்டு இடத்திற்குத் தலைவி வர இயலவில்லை. தலைவன் மீண்டும் சிறைப்புறமாக வந்து இருக்க, தலைவி தன் துன்பத்தைத் தோழிக்குச் சொல்வது போலக் கூறுவது.

## பாடல் பொருள்

தோழி! கேட்பாயாக! விழா இல்லை என்றாலும் இப்பழைய ஊர் உறங்காமல் உள்ளது. கடைத் தெருவும் மற்ற தெருக்களும் உறங்கினாலும் கடுஞ்சொல் பேசும் தாய் உறங்க மாட்டாள். தாய் ஒருநாள் உறங்கினாலும் ஊர்க்காவலர் உறங்காமல் ஊரைச்

சுற்றி வருவர். அக்காவலர் உறங்கினாலும் நாய் குரைக்கும். நாய் குரைக்காமல் உறங்கினாலும் பகல் பொழுது போல நிலவு ஒளி வீசும் . நிலவு மேற்குத் திசையை அடைந்து இருள் பரவும் பொழுது கூகை கத்தும். அக்கூகை உறங்கினாலும் வீட்டில் உள்ள சேவல் கோழி குரல் எழுப்பும். ஒருநாள் இவை எல்லாம் இல்லாமல் இருந்தாலும் தலைவர் வரமாட்டார்.

அதனால் நம்முடைய இந்தக் களவொழுக்கம் ஆதி என்னும் கதியில் பாய்ந்து செல்லும் குதிரையை உடைய தித்தன் என்பவனின் உறையூரைச் சூழ்ந்துள்ள காவற்காடு போன்று பல தடைகளை உடையதாக உள்ளது என்று தலைவி தன் துன்பத்தைத் தோழிக்குக் கூறுகிறாள்.

**பாடல் (148)**

**துறை:**

தலைவன் களவொழுக்கத்தை மேற்கொண்டிருந்தான். அப்பொழுது தலைவியின் வீட்டில் காவல் மிகுந்தது. அதனால் தோழி தலைவியைத் தலைவன் மணந்து கொள்ளுமாறு வேண்டிட, பகல் குறியில் வரும் அவனை இரவில் வருக என்று கூறுகிறாள்.

**பாடல் பொருள்**

யானை பனைமரம் போன்ற பருத்த கையும், வலிமையும், மதமும், உயர்ந்த கொம்பும், உடையது. அது குளிர்ந்த மணம்வீசும் பக்க மலையில் உள்ள மரத்தை ஒடித்துத் தள்ளும். புலியைக் கதறுமாறு குத்தும். தினை விளைந்த புனத்தைக் கவர்ந்து கொள்ளும். இத்தகு நாட்டிற்குத் தலைவனே!

விரைந்து ஓடும் குதிரையை உடையவன் ஆய் எயினன். அவன் பெரிய தேரை உடைய மிஞிலி எனபவனுடன் போர் செய்து இறந்தான். அவன் பறவைகளின் பாதுகாவலன். அவனை மற்ற பறவைகளைப் போலப் பகலில் காண இயலாத கூகைப் பறவை காண முடியாது நாணித் துன்பம் அடைந்தது. அதுபோலத் தலைவி பகற்குறியில் செல்ல முடியாமல் துன்பம் அடைகிறாள். எனவே சோலையில் உள்ள மூங்கில் குருத்தினைத் தின்னும் களிறு திரியும் மலைச்சாரலில் சிறுசிறு பாறைகள் நிறைந்த வழியில் நீ மாலையில் வருதல் வேண்டும் என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

**பாடல் (222)**

**துறை:**

தலைவன் தலைவியை மணந்து கொள்ளாது களவொழுக்கத்தை விரும்பினான். தலைவி தலைவனின் பிரிவால் மெய் வேறுபாடடைந்தாள். அவளது நிலையைத் தலைவனுக்கு உணர்த்தவும் அவளை மணந்து கொள்ளவும் வேண்டி அவன் சிறைப்புறமாக இருக்க அதை அறியாதவள் போல அவன் கேட்கும்படி தலைவிக்குச் சொல்லியது.

**பாடல் பொருள்**

தோழியே! வானளவு உயர்ந்த நீலநிற மலையின் பக்கத்தில் உள்ள நாட்டிற்குத் தலைவன் உண்டாக்கிய நோயால் உன் அழகு கெட்டது. நான் சொல்வதைக் கேட்பாயாக!

முழவொலி ஆரவாரம் உடைய துறையில் நடந்த விழாவில் ஆடிய அழகிய ஆட்டன் அத்தி என்பவனை விரும்பி காவிரி ஆறானது கவர்ந்து சென்றது. அதனால் அவனுடைய மனைவி ஆதிமந்தி அனைத்து திசைகளிலும் தேடினாள். அவளுக்கு மருதி என்பவள் அவனைக் காட்டி, தான் கடலில் புகுந்து மறைந்தாள். அவளைப் போன்ற புகழை அடையும் பொருட்டு, பலநாட்களாக இடியுடன் இரவு முழுவதும் மழைபெய்ததால் ஏற்பட்ட சேற்று வழியில் நம் தலைவனைத் தேடிச்

செல்வோம் என்று தோழி தலைவியிடம் கூறுவாள் போலத் தலைவனுக்கு உணர்த்துகிறாள்.

**பாடல் (178)**

**துறை:**

களவு ஒழுக்கத்தை மேற்கொண்டிருந்த தலைவன் வரைவு மலிந்து (மணந்து கொள்ள) தன் சுற்றத்தாருடன் வரும் செய்தியை அறிந்த தோழி அதனைத் தலைவிக்குக் கூறுதல்.

**பாடல் பொருள்**

தோழி! வலிமையும், கூர்மையும், மேல்நோக்கியும் உள்ள கொம்பையும் பருத்த மயிரையும் உடைய பன்றி, பறை கண் போன்ற நீர்ச்சுனையில் உள்ள நீரைக் குடித்துச் சேம்பின் கிழங்கைத் தின்று, பெண் யானை துயின்றது போன்ற கல்லின் மேல் இறங்கி வந்து, ஆற்றை அடுத்துள்ள புதரின் மீது வெண்நாரை இருந்தால் போன்ற கூதளஞ்செடியின் மலர்க்கொத்தில் பொருந்தியது. அப்போது அம்மலரின் மகரந்தப் பொடி மேலே உதிர்ந்ததால் பொன் உரைக்கும் கட்டளைக்கல் போல அழகாகத் தோன்றியது. பின்னர் தினையின் கதிரை மேய்ந்து இனிதாய் உறங்கியது. இத்தகு நாட்டின் தலைவன்.

நீயும் உன் அழகும் நீங்காது உன் தலைவனுடன் சேர்ந்து வாழ்ந்து பின்னர் என்றும் கெடாத மறுமை உலகிலும் தங்கி வாழ்வீராக!

பகலும் இரவும் ‘கல்’ என்ற ஓசையுடன் மழை பெய்த விடியற் காலத்தே குளிர்ந்த பனி உடையது அற்சிரக் காலம் . அக்காலம் தனிமையில் இருப்பவர்க்குத் தாங்க அரிதாகும் என்று கனவிலும் பிரிவதை அறியாதவன். மேலும் நல்ல குணத்தால் முதல்நாள் தான் கண்ட நாளைப் போல எல்லா நாளும் அருள் செய்வான் என்று கூறுவதன் மூலம் அவன் மணந்து கொள்ள வரும் செய்தியைத் தோழி தலைவிக்குக் கூறுகிறாள்.

**இறைச்சிப் பொருள்:**

பன்றி சுனை நீரைக் குடித்துச் சேப்பங்கிழங்கைத் தின்று கல்லில் இறங்கி மகரந்தம் சிந்தியதால் கட்டளைக்கல் போலத் தோன்றித் தினைக்கதிரை மேய்ந்து மலையில் இனிதாக உறையும் என்று கூறியிருப்பது தலைவனும் தாம் நினைத்ததெல்லாம் பெற்று தலைவியுடன் களவின்பத்திலும் நன்கு ஒழுகி இனி அவளை மணந்து கொண்டு இன்பம் அடைந்து இருப்பான் என்ற இறைச்சிப் பொருளைத் தந்தது.

### 4.1.4.3 மருதத் திணை

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் ஆகும். ஊடலும் ஊடல் நிமித்தமும் இதன் உரிப் பொருளாகும்.

**பாடல் (356)**

**துறை:**

களவில் தோழியை மதி உடம்படுத்தி அவள் வாயிலாகத் தலைவியைக் கூட எண்ணும் தலைவன் வேண்டுகோளுக்கு இணங்கித் தோழி தலைவியிடம் சென்று, தலைவனுடைய வேண்டுகோளுக்கு இணங்குமாறு கூறுவது.

**பாடல் பொருள்**

அருவி வீழ்தலால் ஆம்பல் மலர் மலர்ந்துள்ள நீர்த்துறைகளுடைய நன்னனின் பறம்புமலை போன்ற மின்னும் கூந்தலை உடைய தலைவியே! கேள்!

மேல் துறையில் கள் உடைய கலங்களைக் கழுவியதால், கீழுள்ள துறையில் ஓடிவரும் கள்ளின் கலங்கல் நீரை ஆமை பருகும். சம்பங்கோழி வாத்தியக்காரன் போல இயங்கும். இத்தகு ஊரின் தலைவன். அவன் நம் ஊர்த் தெருவின் நடுவில்

எதிர்பாராமல் கண்டு என் கையைப் பிடித்துக் கொண்டான். அபொழுது நான் அன்னையே! என்று அழைத்தேன். அவன் என் கையை விட்டுவிட்டான்.

நன்னனுடைய பரம்பு மலையில் சாணைக்கல் செய்யும் தொழிலாளன் அரக்குடன் சேர்த்த சாணைக்கல் போன்ற வலிமையான நாவை உடையவளாகி அந்நிகழ்ச்சியைத் தாய்க்குச் சொல்லவில்லை.

சோழமன்னரின் வழி வந்தவனான வல்லம் என்ற ஊரின் தலைவன் நல்லவனாக இருக்கவும் அதை எண்ணாமல் பகைவர் அவனைக் கைப்பற்ற முயல்கின்றனர். அது ஒருபுறம் இருக்க தலைவன் நம்மிடம் இரக்கமில்லாமல் துன்பம் செய்தாலும் அது குற்றமாகாது என்று தோழி தலைவனது வேண்டுகோளுக்கு இணங்கும்படி தலைவியிடம் கூறுகிறாள்.

**பாடல் (116)**

**துறை:**

தலைவன் பரத்தை ஒருத்தியிடம் சென்று தன் வீட்டிற்கு வந்த போது தலைவி ஊடினாள். அவள் ஊடலைத் தீர்த்துத் தன்னுடன் சேர்க்கும்படி தோழி வேண்ட அத்தோழி அவன் வேண்டுகோளை மறுத்துக் கூறியது. இத்துறையில் **5 பாடல்கள்** உள்ளன.

**பாடல் பொருள் (116)**

நீர் வளம் வாய்ந்த ஊரனே! நீ நாணமற்றவன். நீ நேற்று ஒரு பரத்தையுடன் நீரில் விளையாடினாய் எனப் பலரும் உரைத்ததை இந்நாள் வரை பொய்யென்று நாங்கள் மூடி மறைக்கவும் அடங்காது பாண்டியன் சேர சோழரை வென்றபோது போர்க்களத்தில் உன்டான ஆரவாரத்தைப்போல் எங்கும் அலர் ஆனது. அதனால் உன் வேண்டுகோள்படி தலைவியை அமைதிப்படுத்த இயலாது என்று தோழி தலைவனை நோக்கிச் சொன்னாள்.

**பாடல் பொருள் (226)**

ஊரனே! பொய்யான சொற்களை எம்மிடம் கூறாதே. நீ கூறுவதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். நீ நாணமில்லாதவன். உனக்கு விருப்பமான பரத்தையுடன் நீ மத்தி என்பவனுக்குரிய கழார் என்ற ஊரில் உள்ள காவிரித் துறையில் விளையாடினாய். அதனால் எழுந்த அலர் மொழி கட்டி என்பவன் வெளியன் என்பவனுடன் போரிட வந்து வெளியன் எழுப்பிய கிணைப்பறை ஒலி கேட்டுப் போரில் ஓடியபோது எழுந்த ஆரவாரத்தை விட பெரியதாகும். ஆகவே என்னால் தலைவியின் சினத்தைப் போக்க இயலாது என்று தோழி தலைவனை நோக்கிச் சொன்னாள்.

**பாடல் பொருள் (246)**

ஊரனே! நீ நேற்று பரத்தையுடன் காஞ்சி மரச் சோலை சூழ்ந்த அகன்ற ஆற்றில் நீராடினாய் என்று அறிந்தவர் கூறுகின்றார். அதனால் உண்டான பழிச்சொல் கரிகால் வளவன் வெண்ணிப் பறந்தலையில் வேளிர் பதினொருவர் சேர பாண்டியர் ஆகியவரை வென்றபோது அழுந்தூரில் எழுந்த ஆரவாரத்தை விடப் பெரியதாய் உள்ளது.

**பாடல் பொருள் (326)**

தலைவ! தேமலும் குளிர்ந்த கண்ணும் உடைய இளம் பரத்தை அழகில் சிறந்தவள். சோழ மன்னனின் படைத் தலைவனான பழையன் என்பவன் பகைவர் மீது செலுத்திய வேலைப் போல் அப்பரத்தையால் பார்க்கப்பட்டவர் அவள் கண்களில் இருந்து தப்ப முடியாது. அவளுடன் விழாவிற்குச் செல்வது உனக்குத் தகுந்ததே. ஆதலால் நீ அங்கே செல்வாயாக என்று தலைவனுக்குக் கூறி வாயில் மறுத்தாள்.

**பாடல் பொருள் (386)**

ஊரனே! உன்பரத்தை மறைவாக வந்து நல்ல சொற்களைச் சொன்னாள். நெற்றியையும் கூந்தலையும் தடவினாள். இவ்வாறு செய்த அவள் திரும்பிப் போனாள் அதைக் கண்டு பாணனுடன் போரிட்ட ஆரிய பொருநனின் முழவுத் தோள்கள் அப்பாணனின் கையகப்பட்டு இருந்த நிலையைக் கண்டு கணையன் என்பான் நாணம் கொண்டதுபோல் நான் நாணம் கொண்டேன் என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

**பாடல் (6)**

**துறை:**

தலைவன் பரத்தையர் காரணமாகப் பிரிந்து சென்று திரும்பி வருகிறான். அப்போது ஊடல் கொண்ட தலைவி கூறுவது. இத்துறையில் **3 பாடல்கள்** உள்ளன.

**பாடல் பொருள் (6)**

தலைவனே! அழகிய ஐயை என்பவளின் தந்தையாகிய தித்தன் என்னும் மன்னனுக்குரிய உறையூரில் காவிரி ஆற்று வெள்ளத்தில் நேற்று நீ விரும்பிய பரத்தையுடன் முகம் மலர்ந்து நீராடினாய். இன்று இங்கு வந்து என் மைந்தனின் தாயே என்று பொய்ச் சொற்களைப் பல முறை கூறி என் முதுமையை இகழாதே! அம் முதுமைக்கு யாம் பொருத்தமாவோம்.

பல வேற்படையை உடைய கழாஅர் என்ற ஊரைப் போன்ற என் இளமை கழிந்து பழையதாயிற்று. ஆதலால் உன் பொய்ம் மொழி எமக்கு எவ்வாறு இன்பத்தைத் தரும் என்றாள்.

**பாடல் பொருள் (196)**

நீண்ட கொடிகள் அசையும் மிகுந்த கள்ளை உடைய பாக்கம். அங்குப் பாணர்கள், விடியற்காலையில் வேட்டையில் பிடிபட்ட பெரிய வயிற்றினை உடைய வரால் மீனின் துடிக்கண் போன்ற வலிய துண்டத்தை அறுத்து அதனை விற்று, கள்ளுண்டு களித்து ஆடி மீண்டும் வேட்டையாடச் செல்வதை மறந்து உறங்கிக் கிடப்பர். அவர்களின் மனைவியர் அகன்ற ஆம்பல் இலையில் விரும்பும் சோற்றைப் பிரம்பின் இனிய பழத்தாலான புளிக்கறியுடன் தருவர். இத்தகு ஊரின் தலைவனே!

அன்னி மிஞிலி என்பவள் தன் தந்தையின் கண்ணைக் கெடுத்த கோசரை, அழுந்தூரில் வாழும் விரைந்து ஓடும் தேரை உடைய திதியன் என்பவன் மூலம் அழித்துத் தன் பகையைத் தீர்த்தாள். அவளைப் போலத் தான் விரும்பியபடி நடக்கும் பரத்தையைத் தழுவிய உன் மார்பை யாம் தீண்டமாட்டோம். எனவே எம்மை நெருங்கி வராதே! என்று தலைவி தலைவன் மீது ஊடல் கொண்டு கூறுகிறாள்.

**உள்ளுறை**

பாணர்கள் இரவெல்லாம் தாம் தேடிய பொருளைக் கொடுத்துக் கள்ளுண்டு களித்து மீண்டும் வேட்டைக்குச் செல்லாது உறங்குவர். அவர்களின் மனைவியர் சோறும் கறியும் உணவாக அளிப்பர். இத்தகு ஊரனே! என்று கூறுவது, தலைவன் இரவெல்லாம் பரத்தையிடம் இருந்து மகிழ்ந்து உறங்கி மீண்டு வரும் அவனைத் தலைவி வரவேற்பாள் எனத் தலைவன் எண்ணுவது உள்ளுறையாக வந்துள்ளது.

**பாடல் பொருள் (226)**

தலைவனே! நேற்று, கரைவரைப் புரண்டு ஓடிய புது வெள்ளத்தில் வலிமையான ஆண் யானை போலத் தெப்பத்தின் தலைப்புறத்தைப் பற்றி மகளிருடன், நரந்தம் புல்லின் மணம் வீசும் கரிய கூந்தலுடன், நீர் விளையாட்டுக்குரிய அணிகளை அணிந்து, அம்மகளிர் நின்னைக் காணும்தோறும் நீ விருப்பம் மிகுந்து நாணத்தை இழந்து , நீரில் புடை பெய்து விளையாடினாய் என்று கூறுவர்.

அச்செயல், வேள் எவ்வி என்பான் பகைவரை அழித்த அரிமணவாயில் உறத்தூரில் பகற் பொழுதில் பெருஞ் சோற்றை அளித்த போது எழுந்த ஆரவாரத்தை விட மிகப் பெரிய அலராயிற்று.

யாம் அந்த அலருக்காக வருந்தவில்லை. வயலில் உழுவார் செய்த ஆரவாரத்தால் அஞ்சிய மயில் தெய்வத்தன்மையுடைய குன்றில் வந்து தங்கும். அத்தகு இயல்புடைய திருச்சீரலைவாயில் (திருச்செந்தூர்) முருகன் மீது உரைத்த சூளுரையே எமக்குத் துன்பத்தைத் தருவதாக உள்ளது என்று தலைவி தலைவனிடம் கூறுகிறாள்.

**உள்ளுறை**

உழவர் ஓசைக்கு அஞ்சிய மயில் குன்றில் வந்து சேரும் என்றது, தலைவனும் அலருக்கு அஞ்சி இங்கு வந்துள்ளான் என்ற உள்ளுறைப் பொருளைத் தந்தது.

## பாடல் (236)

**துறை**

தலைவன் பரத்தையிடம் சென்றதால் ஊடியிருந்தாள் தலைவி. அத்தகையவள் தலைவன் வந்தபோது ஊடாமல் மகிழ்ந்திருந்தாள். மறுநாள் தலைவன் இல்லாதபோது தோழி அங்குச் சென்றாள். அவளிடம் தலைவி தான் ஊடாமைக்குக் காரணம் கூறுகிறாள்.

**பாடல் பொருள்**

தோழியே! வாழ்க! நெல்லை அறுப்பவர் நீர் முள்ளிச் செடி உள்ள தெளிந்த நீருள்ள மடுவில் கவர்ந்த மீனின் துண்டை உண்டு விட்டுப் போன களம். அங்கு அவர்கள் கொண்டு வந்து போட்ட நீண்ட கதிர்களையுடைய நெற்கட்டுகள் பனியில் நனைய, கழனியின் வரப்பின் மேல் உள்ள மாமரத்தின் பூந்தாதுகள் மழைத்துளியைப் போலப் பரவிக் கிடக்கும் ஊரன் நம் தலைவன். யான் அவனுடைய காமச் சிறப்பை அறியாதிருந்தேன்.

இரவில் சாந்து (சந்தனம்) அழகு செய்ய, அழகிய பட்டாடை ஒளி வீச, வளைந்த காதணி அணிந்த பெண்ணைப் போலத் தலைவன் நாணத்துடன் இருந்த காட்சியைப் பார்த்து என் மடமையால் நெஞ்சம் உருகியவள் ஆனேன்.

எனவே, ஆட்டனத்தியை இழந்த ஆதிமந்தி தன் கணவனைத் தேடி, என் கணவனைக் கடல் கொண்டதோ? நீர் கொண்டதோ? என்று சொல்லித் திரிந்ததைப் போல் நான் என் துன்பத்தைப் பலரும் அறியும்படி சொல்லித் தேடுவதிலிருந்து தப்பினேன் என்று தலைவி தான் ஊடாமைக்கான காரணத்தைத் தோழியிடம் கூறுகிறாள்.

## பாடல் (76)

**துறை**

தலைமகனைப் பரத்தை கவர்ந்து கொண்டாள் என்று கூறக் கேட்ட பரத்தை தலைவியின் பாங்காயினார் கேட்பச் சொல்லியது. இத்துறையில் **இரண்டு பாடல்கள்** உள்ளன.

**பாடல் பொருள் (76)**

பரத்தையாகிய நாங்கள் இன்னிசைக் கருவிகளுடன் ஆடல் நிகழ்த்தினோம். அதைக் காணத் தலைவன் வந்தான். அவனை நாங்கள் ஆடலாலும் பாடலாலும் வயப்படுத்திக் கொண்டோம் என்று அவனுடைய மனைவி தொடர்ந்து ஒலிக்கும் பறை ஒலி போல உரைத்தனர் என்பர். அவ்வாறாயின் காவிரி ஆட்டனத்தியை அடித்துச் சென்றது போல் அவனை இனி என் வசப்படுத்திக் கொள்ள துணிந்துள்ளேன். இனி அவள் என்ன செய்வாள் என்று கூறினாள்.

**பாடல் பொருள் (276)**

ஊரனால் நமக்கு உண்டாகும் பழி உண்டாகட்டும். தலைவன் எம் சேரிக்கு வந்தால் அவனது மாலையையும் ஆடையையும் பிடித்துக் கொண்டு கூந்தலால் என் தோள் என்னும் கட்டுத்தறியில் அவன் தோளைக் கட்டி என் மார்பான தொட்டிலில் சிறை செய்வேன். அப்படிச் செய்யாமல் போனால் என் தாய் பாதுகாத்த என் அழகு ஒழிக என்று பரத்தை உரைத்தாள்.

**பாடல் (186)**

**துறை**

இற்பரத்தை தலைவி தன்னைப் பழித்தாள் என்று கேட்க அவள் தலைவியைச் சார்ந்தவர் கேட்கும்படி கூறியது.

**பாடல் பொருள்**

தலைவனால் எமக்கு எழுந்த அலர் பெரிதாகும். அத்தலைவனோ சந்தனம் மணக்கும் தோளைத் தழுவி வேறு ஒரு பரத்தையின் இல்லில் உள்ளான். அவனுடைய மனைவி, தலைவன் அவளை விட்டமைக்கு நானே காரணம் என்று எண்ணி எம்மைப் பழி தூற்றுகின்றாள் என்று கூறுகின்றனர்.

காமக்கிழத்தியான யான் தலைவிக்குப் பகை உடையவள் அல்லள். அவளுடைய கணவனே அவளுக்குப் பகைவன் ஆவான். ஆதலால் தலைவி என்னுடன் புலப்பதற்குக் காரணம் அவளது அறியாமையே ஆகும் என்று பரத்தை உரைத்தாள்.

**பாடல் (376)**

**துறை**

காதல் பரத்தை புலந்து சொல்லியது.

**பாடல் பொருள்**

தலைவ! நீ மீண்டும் பரத்தையர் சேரிக்குச் செல்லாதே. கழாஅர் என்ற துறையில் கரிகால் வளவன் காணுமாறு நீரில் விளையாடிய ஆட்டனத்தியைக் காவிரி ஒளித்துக் கொண்டது போல் சேரிப் பரத்தை உன்னை ஒளித்துக் கொண்டாள். அதனால் யாம் உன்னை வெறுக்கவில்லை. இருப்பினும் என் நெற்றி பசலை அடைந்தது. குட்டுவனின் மரந்தை என்ற நகரத்தைப் போன்ற என் அழகை எனக்குத் தந்து விட்டுச் செல்க என்று காதல் பரத்தை தலைவனிடம் ஊடிக் கூறினாள்.

**பாடல் (396)**

**துறை**

காதல் பரத்தை தலைவனுக்குச் சொல்லியது.

**பாடல் பொருள்**

தலைவனே! உன்னை நான் பற்றிக் கொண்டேன். செல்லாதே. நன்னன் என்பவன் புனல் நாட்டினரைச் சினந்து எழுந்தபோது ஆஅய் எயினன் தான் சொல்லிய சொல் தவறாமல் மிஞிலி என்பவனுடன் போரிட்டுத் தன் உயிரைத் தந்தான். நீயோ தெய்வத்தின் முன் என் வளைக் கையைப் பற்றிக் கொண்டு சொன்ன சொல்லைக் கடந்து நின் மார்பை எனக்குத் தராமல் அயலான் போல் ஆனாய். இனி நான் விடமாட்டேன். ஆதிமந்தி பலவற்றை வெறுத்திருக்க ஆட்டனத்தி ஆடும் அழகை விரும்பிக் காவிரி ஆறு கவர்ந்து கொண்டது போல உன் மனைவி உன்னைக் கவர்ந்து கொள்வாள் என்று அஞ்சுகிறேன். ஆரிய அரசர்கள் அலரும்படி தாக்கி இமயமலையின் மேல் வில் பொறி பொறித்துப் பகை மன்னரைப் பற்றி வந்த சேரனது வஞ்சி நகரை ஒத்த என் அழகை எனக்குத் தந்து விட்டுப் போவாயாக என்று காதல் பரத்தை தலைவனிடம் கூறினாள்.

### 4.1.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

**அ. வினாக்கள்**

1. அகநானூற்றின் வேறு பெயர் யாது?
2. அகநானூற்றின் மூன்று பிரிவுகள் யாவை?
3. பாலைத் திணைப் பாடல்கள் எந்த எண்ணின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன?
4. பரணர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை யாது?
5. பரணரின் நண்பர் யார்?

**அ. சரியா? தவறா?**

1. அகநானூற்றைத் தொகுத்தவர் உப்பூரிக்கிழார் மகன் உருத்திர சன்மன்.
2. நித்திலக்கோவை பகுதியில் உள்ள பாடல்கள் 301 முதல் 400 வரை ஆகும்.
3. அகநானூறு 9முதல் 12 அடிகளை உடையது.
4. மருதத் திணைப் பாடல்கள் 6 என்ற எண்ணில் வருவன.
5. பரணர் முல்லைத் திணைப் பாடல்கள் பாடியுள்ளார்.

### 4.1.6 பாடத் தொகுப்புரை

- பரணர் குறிஞ்சி, மருதம், பாலை ஆகிய திணைகளில் பாடியுள்ளார்.
- இப்பாடல்களின் வழி அக்கால மன்னர்களின் போர்முறை பற்றி அறியலாம்.
- தோழி தலைவியின் வாழ்நாள் முழுவதும் உற்ற துணையாகஇருப்பது தெரிகிறது.
- தலைவன் தலைவிமீது வைத்துள்ள அன்பின் ஆழம் புலப்படுகிறது.
- அக்காலச் சமுதாயத்தில் நிலவிய பரத்தையர் சமூக அமைப்பு முறை அறியப்படுகிறது.

### 4.1.7 அருஞ்சொற் பொருள்

| | | |
|---|---|---|
| நெருநல் | - | நேற்று |
| ஆகம் | - | மார்பு |
| அயம் | - | நீர்நிலை |
| மாஅயோள் | - | மாமை நிறம் உடையவள் |
| கனை | - | செறிந்த |
| தெரியல் | - | மாலை |
| மாழை | - | மடம் |
| பேதமை | - | இளமை |
| பாவடி | - | பரந்த அடி |
| கொண்மூ | - | மேகம் |
| திதலை | - | தேமல் |
| வனப்பு | - | அழகு |
| ஆர்ப்பு | - | வளைவு |
| கொங்கு | - | தேன் |
| விறல் | - | வெற்றி |
| அரும்படர் | - | அரியதுன்பம் |

| | | |
|---|---|---|
| உரும் | - | இடி |
| வை | - | கூரிய |
| எக்கர் | - | மேடு |
| கௌவை | - | அலர் |
| ஆடி | - | விற்று |
| வேய்ந்து | - | சூடி |
| பறந்தலை | - | போர்க்களம் |
| மறலி | - | பகைத்து |
| நிவந்த | - | உயர்ந்த |
| யாணர் | - | புதிய வருவாய் |
| பித்தை | - | தலை மயிர் |
| நந்து | - | சங்கு |
| படிவம் | - | கோலம் |
| அவலம் | - | துன்பம் |
| தானை | - | ஆடை |
| சிமை | - | உச்சி |
| படப்பை | - | தோட்டம் |
| பயின் | - | அரக்கு |
| வெருகு | - | காட்டுப் பூனை |
| அசும்பு | - | சேறு |
| தைவர | - | தடவ |

### 4.1.8 மாதிரி வினாக்கள்

**அ. குறு வினாக்கள்**

1. அகநானூறு பற்றிக் கூறுக.
2. வாயில் மறுத்தல் என்றால் என்ன?
3. பரணர் பற்றிக் கூறுக.
4. அகநானூற்றால் அறியப்படும் மன்னர்கள் யாவர்?
5. தலைவி தான் தலைவனைத் தேடுவதற்கு யாரை உவமையாகச் சொல்லுகிறாள்?

**ஆ. சிறு வினாக்கள்**

1. தோழி வரைவு மலிந்து கூறுவன யாவை?
2. தலைவன் சிறைப்புறமாக இருக்கத் தலைவி தோழிக்குச் சொல்லியது யாது?
3. பகல்வருவானை இரவு வருக எனத் தோழி தலைவனிடம் கூறக் காரணம் யாது?
4. காதற்பரத்தை புலந்து சொல்லியன யாவை?

**இ. பெரு வினாக்கள்**

1. வாயில் மறுத்தல் துறையில் அமைந்துள்ள பாடற் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.
2. தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறுவனவாகப் பரணர் கூறுவன யாவை?

3. பரத்தை தலைவியின் தோழி கேட்குமாறு கூறுவன யாவை

### 4.1.9 பரிந்துரை நூல்

அகநானூறு, அ.மு. வேங்கடசாமி நாட்டார், இரா. வேங்கடாசலம் பிள்ளை பதவுரை, விளக்கவுரை, ஆறாவது பதிப்பு, கழக வெளியீடு, சென்னை.

### 4.1.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

**அ. விடைகள்**

1. அகநானூற்றின் வேறு பெயர் நெடுந்தொகை என்பதாகும்.
2. அகநானுற்றின் மூன்று பிரிவுகள் களிற்று யானை நிரை, மணிமிடைப் பவளம், நித்திலக் கோவை ஆகும்.
3. பாலைத் திணைப் பாடல்கள் ஒற்றைப்படை எண்ணின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன.
4. பரணர் பாடிய பாடல்கள் 34 ஆகும்.
5 பரணரின் நண்பர் கபிலர் ஆவார்.

**ஆ. விடைகள்**

1. சரி
2. சரி
3. தவறு
4. சரி
5. தவறு.

**அகநானூறு**

**மருதம்**

அரி பெய் சிலம்பின் ஆம்பல் அம் தொடலை,
அரம் போழ் அவ் வளைப் பொலிந்த முன்கை,
இழை அணி பணைத் தோள், ஐயை தந்தை,
மழை வளம் தரூஉம் மா வண் தித்தன்,
பிண்ட நெல்லின் உறந்தை ஆங்கண்-
கழை நிலை பெறாஅக் காவிரி நீத்தம்,
குழை மாண் ஒள் இழை நீ வெய்யாளொடு,
வேழ வெண் புணை தழீஇ, பூழியர்
கயம் நாடு யானையின் முகன் அமர்ந்தாஅங்கு,
ஏந்து எழில் ஆகத்துப் பூந்தார் குழைய,
நெருநல் ஆடினை, புனலே; இன்று வந்து,
'ஆக வன முலை அரும்பிய சுணங்கின்,
மாசு இல் கற்பின், புதல்வன் தாய்! ' என,
மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றி, எம்
முதுமை எள்ளல்; அஃது அமைகும்தில்ல!
சுடர்ப் பூந் தாமரை நீர் முதிர் பழனத்து,
அம் தூம்பு வள்ளை ஆய் கொடி மயக்கி,
வாளை மேய்ந்த வள் எயிற்று நீர் நாய்,
முள் அரைப் பிரம்பின் மூதரில் செறியும்,

பல் வேல் மத்தி, கழாஅர் அன்ன எம்
இளமை சென்று தவத் தொல்லஃதே;
இனிமை எவன் செய்வது, பொய்ம்மொழி, எமக்கே ? (6)

துறை : ப ரத்தையிற் பிரிந்து வந்த தலைமகற்குக் கிழத்தி கூறியது.

**குறிஞ்சி**

அயத்து வளர் பைஞ்சாய் முருந்தின் அன்ன
நகைப் பொலிந்து இலங்கும் எயிறு கெழு துவர் வாய்,
ஆகத்து அரும்பிய முலையள், பணைத் தோள்,
மாத் தாட் குவளை மலர் பிணைத் தன்ன
மாஇதழ் மழைக் கண், மாஅயோளொடு
பேயும் அறியா மறை அமை புணர்ச்சி
பூசல் துடியின் புணர்பு பிரிந்து இசைப்ப,
கரந்த கரப்பொடு நாம் செலற்கு அருமையின்,
கடும் புனல் மலிந்த காவிரிப் பேரியாற்று
நெடுஞ் சுழி நீத்தம் மண்ணுநள் போல,
நடுங்கு அஞர் தீர முயங்கி, நெருநல்
ஆகம் அடைதந்தோளே- வென் வேற்
களிறு கெழு தானைப் பொறையன் கொல்லி
ஒளிறு நீர் அடுக்கத்து வியல்அகம் பொறப்பக்
கடவுள் எழுதிய பாவையின்,
மடவது மாண்ட மா அயோளே. (62)

துறை : அல்லகுறிப்பட்டுழி, தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**மருதம்**

மண் கனை முழவொடு மகிழ் மிகத் தூங்க,
தண் துறை ஊரன் எம் சேரி வந்தென-
இன் கடுங் கள்ளின் அஃதை களிற்றொடு
நன் கலன் ஈயும் நாள் மகிழ் இருக்கை
அவை புகு பொருநர் பறையின், ஆனாது
கழறுப என்ப, அவன் பெண்டிர்; 'அந்தில்,
கச்சினன், கழலினன், தேம் தார் மார்பினன்,
வகை அமைப் பொலிந்த, வனப்பு அமை, தெரியல்,
சுரியல் அம் பொருநனைக் காண்டிரோ? ' என,
ஆதிமந்தி பேதுற்று இனைய,
சிறை பறைந்து உரைஇச் செங்குணக்கு ஒழுகும்
அம் தண் காவிரி போல,
கொண்டு கைவலித்தல் சூழ்ந்திசின், யானே. (76)

துறை : 'தலைமகளை நயப்பித்துக் கொண்டாள்' என்று கழறக் கேட்ட பரத்தை, தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப, சொல்லியது.

**மருதம்**

எரி அகைந்தன்ன தாமரை இடை இடை
அரிந்து கால் குவித்த செந் நெல் வினைஞர்
கள் கொண்டு மறுகும் சாகாடு அளற்று உறின்,
ஆய் கரும்பு அடுக்கும் பாய்புனல் ஊர !
பெரிய நாண் இலைமன்ற ; 'பொரி எனப்
புன்கு அவிழ் அகன்துறைப் பொலிய, ஒள் நுதல்,
நறு மலர்க்கு அணவரும் குறும் பல் கூந்தல்,
மாழை நோக்கின் , காழ் இயல் வன முலை,
எஃகுடை எழில் நலத்து, ஒருத்தியொடு நெருநை
வைகுபுனல் அயர்ந்தனை' என்ப ; அதுவே,
பொய் புறம் பொதிந்து, யாம் கரப்பவும், கையிகந்து
அலர் ஆகின்றால் தானே; மலர்தார்,
மை அணி யானை, மறப் போர்ச் செழியன்
பொய்யா விழவின் கூடற் பறந்தலை,
உடன் இயைந்து எழுந்த இரு பெரு வேந்தர்
கடல் மருள் பெரும் படை கலங்கத் தாக்கி,
இரங்குஇசை முரசம் ஒழிய, பரந்து அவர்
ஓடுபுறம் கண்ட ஞான்றை,
ஆடு கொள் வியன் களத்து ஆர்ப்பினும் பெரிதே. (116)
துறை : தோழி தலைமகனை வாயில் மறுத்தது.

**குறிஞ்சி**

இரும் பிழி மகாஅர் இவ் அழுங்கல் மூதூர்
விழவு இன்று ஆயினும் துஞ்சாது ஆகும்;
மல்லல் ஆவண மறுகு உடன் மடியின்,
வல் உரைக் கடுஞ் சொல் அன்னை துஞ்சாள்;
பிணி கோள் அருஞ் சிறை அன்னை துஞ்சின்,
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்;
இலங்குவேல் இளையர் துஞ்சின், வை எயிற்று
வலம் சுரித் தோகை ஞாளி மகிழும்;
அர வாய் ஞமலி மகிழாது மடியின்,
பகல் உரு உறழ நிலவுக் கான்று விசும்பின்
அகல்வாய் மண்டிலம் நின்னு விரியும்மே;
திங்கள் கல் சேர்பு கனை இருள் மடியின்,
இல் எலி வல்சி வல் வாய்க் கூகை
கழுது வழங்கு யாமத்து அழிதகக் குழறும்;
வளைக்கண் சேவல் வாளாது மடியின்,
மனைச் செறி கோழி மாண் குரல்
இயம்பும்;

எல்லாம் மடிந்தகாலை, ஒரு நாள்
நில்லா நெஞ்சத்து அவர் வாரலரே; அதனால்,
அரி பெய் புட்டில் ஆர்ப்பப் பரி சிறந்து,
ஆதி போகிய பாய்பரி நன் மா
நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல் முதிர் புறங்காட்டு அன்ன
பல் முட்டின்றால்- தோழி!- நம் களவே. (122)

துறை : தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழிக்குச் சொல்லுவாளாய், தலைமகள் சொற்றது; தோழி சொல் எடுப்ப, தலைமகள் சொல்லியதூஉம் ஆம்.

**பாலை**

அரம் போழ் அவ் வளை தோள் நிலை நெகிழ,
நிரம்பா வாழ்க்கை நேர்தல் வேண்டி-
இரங் காழ் அன்ன அரும்பு முதிர் ஈங்கை
ஆலி அன்ன வால் வீ தாஅய்,
வை வால் ஓதி மைஅணல் ஏய்ப்பத்
தாது உறு குவளைப்போது பிணி அவிழ்,
படாஅப் பைங்கண் பாஅடிக் கய வாய்க்
கடாஅம் மாறிய யானை போல,
பெய்து வறிது ஆகிய பொங்கு செலற் கொண்மூ
மை தோய் விசும்பின் மாதிரத்து உழிதர,
பனி அடூஉ நின்ற பானாட் கங்குல்
தனியோர் மதுகை தூக்காய், தண்ணென,
முனிய அலைத்தி, முரண் இல் காலை;
கைதொழு மரபின் கடவுள் சான்ற
செய்வினை மருங்கின் சென்றோர் வல் வரின்-
விரிஉளைப் பொலிந்த பரியுடை நல் மான்
வெருவரு தானையொடு வேண்டு புலத்து இறுத்த
பெரு வளக் கரிகால் முன்னிலைச் செல்லார்,
சூடா வாகைப் பறந்தலை, ஆடு பெற
ஒன்பது குடையும் நன் பகல் ஒழித்த
பீடு இல் மன்னர் போல,
ஓடுவை மன்னால்- வாடை!- நீ எமக்கே. (125)

துறை: தலைமகன் வினை முற்றி மீண்டமை உணர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

**பாலை**

திதலை மாமை தளிர் வனப்பு அழுங்க,
புதல் இவர் பீரின் எதிர் மலர் கடுப்பப்

பசலை பாய்ந்த நுதலேன் ஆகி,
எழுது எழில் மழைக் கண் கலுழ, நோய் கூர்ந்து,
ஆதிமந்தியின் அறிவு பிறிதுஆகி,
பேதுற்றிசினே- காதல்அம் தோழி!
காய்கதிர் திருகலின் கனைந்து கால் கடுகி,
ஆடுதளிர் இருப்பைக் கூடு குவி வான் பூ,
கோடு கடை கழங்கின், அறைமிசைத் தாஅம்
காடு இறந்தனரே, காதலர்; அடுபோர்,
வீயா விழுப் புகழ், விண் தோய் வியன் குடை,
ஈர்- எழு வேளிர் இயைந்து ஒருங்கு எறிந்த
கழுவுள் காமூர் போலக்
கலங்கின்று மாது, அவர்த் தெளிந்த என் நெஞ்சே.

(135)

துறை : தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

**குறிஞ்சி**

இலமர் அன்ன அம் செந் நாவின்
புலம் மீக்கூறும் புரையோர் ஏத்த,
பலர் மேந் தோன்றிய கவி கை வள்ளல்
நிறைஅருந் தானை வெல்போர் மாந்தரம்-
பொறையன் கடுங்கோப் பாடிச் சென்ற
குறையோர் கொள்கலம் போல, நன்றும்
உவ இனி- வாழிய, நெஞ்சே!- காதலி
முறையின் வழாஅது ஆற்றிப் பெற்ற
கறை அடி யானை நன்னன் பாழி,
ஊட்டு அரு மரபின் அஞ்சு வரு பேஎய்க்
கூட்டு எதிர் கொண்ட வாய் மொழி மிஞிலி
புள்ளிற்கு ஏமம் ஆகிய பெரும் பெயர்
வெள்ளத் தானை அதிகற் கொன்று, உவந்து
ஒள் வாள் அமலை ஆடிய ஞாட்பின்,
பலர் அறிவுறுதல் அஞ்சி, பைப்பய,
நீர்த் திரள் கடுக்கும் மாசு இல் வெள்ளிச்
சூர்ப்புறு கோல் வளை செறித்த முன்கை-
குறை அறல் அன்ன இரும்பல் கூந்தல்,
இடன் இல் சிறுபுறத்து இழையொடு துயல்வர,
கடல் மீன் துஞ்சும் நள்ளென் யாமத்து,
உருவு கிளர் ஓவினைப் பொலிந்த பாவை
இயல் கற்றன்ன ஒதுக்கினள் வந்து,
பெயல் அலைக் கலங்கிய மலைப் பூங் கோதை

இயல் எறி பொன்னின் கொங்கு சோர்பு உறைப்ப,
தொடிக்கண் வடுக்கொள- முயங்கினள்;
வடிப்பு உறு நரம்பின் தீவிய மொழிந்தே. (142)

துறை : இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**குறிஞ்சி**

பனைத் திரள் அன்ன பரு ஏர் எறுழ்த் தடக் கை,
கொலைச் சினம் தவிரா மதனுடை முன்பின்,
வண்டு படு கடாஅத்து, உயர் மருப்பு, யானை
தண் கமழ் சிலம்பின் மரம் படத் தொலைச்சி;
உறு புலி உரறக் குத்தி; விறல் கடிந்து;
சிறு தினைப் பெரும் புனம் வவ்வும் நாட!
கடும் பரிக் குதிரை ஆஅய் எயினன்
நெடுந் தேர் ஞிமிலியொடு பொருது, களம் பட்டெடன,
காணிய செல்லாக் கூகை நாணி,
கடும் பகல் வழங்கா தாஅங்கு, இடும்பை
பெரிதால் அம்ம இவட்கே; அதனால்
மாலை, வருதல் வேண்டும்- சோலை
முளை மேய் பெருங் களிறு வழங்கும்
மலை முதல் அடுக்கத்த சிறு கல் ஆறே. (148)

துறை : பகல் வருவானை 'இரவு வருக' என்றது.

**குறிஞ்சி**

நெஞ்சு நடுங்கு அரும் படர் தீர வந்து,
குன்றுழை நண்ணிய சீறூ ர் ஆங்கண்
செலீஇய பெயர்வோள் வணர் சுரி ஐம்பால்-
நுண் கோல் அகவுநர்ப் புரந்த பேர் இசை,
சினம் கெழு தானை, தித்தன் வெளியன்,
இரங்குநீர்ப் பரப்பின் கானல்அம் பெருந் துறை,
தனம் தரு நன் கலம் சிதையத் தாக்கும்
சிறு வெள் இறவின் குப்பை அன்ன
உறு பகை தரூஉம் மொய்ம் மூசு பிண்டன்
முனை முரண் உடையக் கடந்த வென் வேல்,
இசை நல் ஈகைக் களிறு வீசு வண் மகிழ்,
பாரத்துத் தலைவன், ஆர நன்னன்;
ஏழில் நெடு வரைப் பாழிச் சிலம்பில்
களி மயிற் கலாவத்தன்ன. தோளே-
வல் வில் இளையர் பெருமகன் ; நள்ளி

சோலை அடுக்கத்துச் சுரும்பு உண விரிந்த
கடவுட் காந்தளுள்ளும், பல உடன்
இறும்பூது கஞலிய ஆய்மலர் நாறி,
வல்லினும், வல்லார் ஆயினும், சென்றோர்க்குச்
சால் அவிழ் நெடுங் குழி நிறைய வீசும்,
மாஅல் யானை ஆஅய் கானத்துத்
தலையாற்று நிலைஇய சேயுயர் பிறங்கல்
வேய் அமைக் கண் இடை புரைஇ,
சேய ஆயினும், நடுங்கு துயர் தருமே. (152)

துறை : இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**குறிஞ்சி**

கொளக் குறைபடாஅக் கோடு வளர் குட்டத்து
அளப்பு அரிது ஆகிய குவை இருந் தோன்றல,
கடல் கண்டன்ன மாக விசும்பின்
அழற்கொடி அன்ன மின்னு வசிபு நுடங்க,
கடிது இடி உருமொடு கதழ்உறை சிதறி,
விளிவு இடன் அறியா வான் உமிழ் நடு நாள்,
அருங் கடிக் காவலர் இகழ்பதம் நோக்கி,
பனி மயங்கு அசைவளி அலைப்ப, தந்தை
நெடு நகர் ஒரு சிறை நின்றனென் ஆக;
அறல் என அவிர்வரும் கூந்தல், மலர் என
வாள் முகத்து அலமரும் மா இதழ் மழைக் கண்,
முகை நிரைத்தன்ன மா வீழ் வெண் பல்,
நகைமாண்டு இலங்கும் நலம் கெழு துவர் வாய்,
கோல் அமை விழுத் தொடி விளங்க வீசி
கால் உறு தளிரின் நடுங்கி, ஆனாது,
நோய் அசா வீட முயங்கினள்- வாய்மொழி
நல் இசை தரூஉம் இரவலர்க்கு உள்ளிய
நசை பிழைப்பு அறியாக் கழல்தொடி அதிகன்
கோள் அறவு அறியாப் பயம் கெழு பலவின்
வேங்கை சேர்ந்த வெற்பகம் பொலிய,
வில் கெழு தானைப் பசும் பூண் பாண்டியன்
களிறு அணி வெல் கொடி கடுப்ப, காண்வர
ஒளிறுவன இழிதரும் உயர்ந்து தோன்று அருவி,
நேர் கொள் நெடு வரைக் கவாஅன்
சூரர மகளிரின் பெறற்கு அரியோளே. (162)

துறை : இரவுக் குறிக்கண் தலைமகளைக் கண்ணுற்று நீங்கிய தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**குறிஞ்சி**

வயிரத்தன்ன வை ஏந்து மருப்பின்,
வெதிர் வேர் அன்ன பரூஉ மயிர்ப் பன்றி
பறைக் கண் அன்ன நிறைச் சுனை பருகி,
நீலத்தன்ன அகல் இலைச் சேம்பின்
பிண்டம் அன்ன கொழுங் கிழங்கு மாந்தி,
பிடி மடிந்தன்ன கல் மிசை ஊழ் இழிபு,
யாறு சேர்ந்தன்ன ஊறு நீர்ப் படாஅர்ப்
பைம் புதல் நளி சினைக் குருகு இருந்தன்ன,
வண் பிணி அவிழ்ந்த வெண் கூதாளத்து
அலங்கு குலை அலரி தீண்டி, தாதுஉக,
பொன் உரை கட்டளை கடுப்பக் காண்வர,
கிளை அமல் சிறு தினை விளை குரல் மேய்ந்து,
கண் இனிது படுக்கும் நல் மலை நாடனொடு
உணர்ந்தனை புணர்ந்த நீயும், நின் தோட்
பணைக் கவின் அழியாது துணைப் புணர்ந்து, என்றும்,
தவல் இல் உலகத்து உறைஇயரோ- தோழி-
'எல்லையும் இரவும் என்னாது, கல்லெனக்
கொண்டல் வான் மழை பொழிந்த வைகறைத்
தண் பனி அற்சிரம் தமியோர்க்கு அரிது' என,
கனவினும் பிரிவு அறியலனே; அதன்தலை
முன் தான் கண்ட ஞான்றினும்
பின் பெரிது அளிக்கும், தன் பண்பினானே. (178)

துறை : தோழிவரைவு மலிந்து சொல்லியது.

**பாலை**

துன் அருங் கானமும் துணிதல் ஆற்றாய்,
பின் நின்று பெயரச் சூழ்ந்தனை ஆயின்,
என் நிலை உரைமோ- நெஞ்சே!- ஒன்னார்
ஓம்பு அரண் கடந்த வீங்கு பெருந் தானை
அடு போர் மிஞிலி செரு வேல் கடைஇ,
முருகு உறழ் முன்பொடு பொருது களம் சிவப்ப,
ஆஅய் எயினன் வீழ்ந்தென, ஞாயிற்று
ஒண் கதிர் உருப்பம் புதைய ஓராங்கு
வம்பப் புள்ளின் கம்பலைப் பெருந் தோடு
விசும்பிடை தூர ஆடி, மொசிந்து உடன்,
பூ விரி அகன் துறைக் கணை விசைக் கடு நீர்க்
காவிரிப் பேர் யாற்று அயிர் கொண்டு ஈண்டி,
எக்கர் இட்ட குப்பை வெண் மணல்
வைப்பின் யாணர் வளம் கெழுவேந்தர்
ஞாலம் நாறும் நலம் கெழு நல் இசை,

நான் மறை முது நூல் முக்கட் செல்வன்,
ஆலமுற்றம் கவின் பெறத் தைஇய
பொய்கை சூழ்ந்த பொழில் மனை மகளிர்
கைசெய் பாவைத் துறைக்கண் இறுக்கும்
மகர நெற்றி வான் தோய் புரிசைச்
சிகரம் தோன்றாச் சேண் உயர் நல் இல்
புகாஅர் நல் நாட்டதுவே- பகாஅர்
பண்டம் நாறும் வண்டு அடர் ஐம்பால்,
பணைத் தகைத் தடைஇய காண்பு இன் மென் தோள்,
அணங்குசால், அரிவை இருந்த
மணம் கமழ் மறுகின் மணற் பெருங் குன்றே. (181)

துறை : இடைச் சுரத்து ஒழியக் கருதிய நெஞ்சிற்குச் சொல்லியது.

**மருதம்**

வானம் வேண்டா வறன்இல் வாழ்க்கை
நோன் ஞாண் வினைஞர் கோள் அறிந்து ஈர்க்கும்
மீன் முதிர் இலஞ்சிக் கலித்த தாமரை
நீர்மிசை நிவந்த நெடுந் தாள் அகல் இலை
இருங் கயம் துளங்க, கால் உறுதோறும்
பெருங் களிற்றுச் செவியின் அலைக்கும் ஊரனொடு
எழுந்த கௌவையோ பெரிதே; நட்பே,
கொழுங் கோல் வேழத்துப் புணை துணையாகப்
புனல் ஆடு கேண்மை அனைத்தே; அவனே,
ஒண் தொடி மகளிர் பண்டை யாழ் பாட,
ஈர்ந் தண் முழவின் எறிகுணில் விதிர்ப்ப,
தண் நறுஞ் சாந்தம் கமழும் தோள் மணந்து,
இன்னும் பிறள் வயினானே; மனையோள்
எம்மொடு புலக்கும் என்ப; வென் வேல்,
மாரி அம்பின், மழைத்தோற் பழையன்
காவிரி வைப்பின் போஒர் அன்ன, என்
செறிவளை உடைத்தலோ இலனே; உரிதினின்
யாம் தன் பகையேம்அல்லேம்; சேர்ந்தோர்
திரு நுதல் பசப்ப நீங்கும்
கொழுநனும் சாலும், தன் உடன் உறை பகையே.(186)

துறை : தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப, இல்லிடப் பரத்தை சொல்லி நெருங்கியது.

**மருதம்**

நெடுங் கொடி நுடங்கும் நறவு மலி பாக்கத்து,
நாள் துறைப்பட்ட மோட்டு இரு வராஅல்
துடிக்கண் கொழுங் குறை நொடுத்து, உண்டு ஆடி,

வேட்டம் மறந்து, துஞ்சும் கொழு நர்க்குப் பாட்டி
ஆம்பல் அகல் இலை, அமலை வெஞ் சோறு
தீம் புளிப் பிரம்பின் திரள்கனி பெய்து,
விடியல் வைகறை இடூஉம் ஊர!
தொடுகலம்; குறுக வாரல்- தந்தை
கண் கவின் அழித்ததன் தப்பல், தெறுவர,
ஒன்றுமொழிக் கோசர்க் கொன்று, முரண் போகிய,
கடுந் தேர்த் திதியன் அழுந்தை, கொடுங் குழை
அன்னிமிஞிலியின் இயலும்
நின் நலத் தகுவியை முயங்கிய மார்பே. (196)

துறை : பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகற்குக் கிழத்தி சொல்லியது.

**குறிஞ்சி**

'கூறுவம்கொல்லோ ? கூறலம்கொல்?' எனக்
கரந்த காமம் கைந்நிறுக் கல்லாது,
நயந்து நாம் விட்ட நல் மொழி நம்பி,
அரை நாள் யாமத்து விழு மழை கரந்து,
கார் விரை கமழும் கூந்தல், தூவினை
நுண் நூல் ஆகம் பொருந்தினள், வெற்பின்
இள மழை சூழ்ந்த மட மயில் போல,
வண்டு வழிப் படர, தண் மலர் வேய்ந்து,
வில் வகுப்புற்ற நல் வாங்கு குடைச் சூல்
அம் சிலம்பு ஒடுக்கி அஞ்சினள் வந்து,
துஞ்சு ஊர் யாமத்து முயங்கினள், பெயர்வோள் ,
ஆன்ற கற்பின் சான்ற பெரியள்,
அம் மா அரிவையோ அல்லள்; தெனாஅது
ஆ அய் நல் நாட்டு அணங்குடைச் சிலம்பில்,
கவிரம் பெயரிய உரு கெழு கவாஅன்,
ஏர் மலர் நிறை சுனை உறையும்
சூர் மகள் மாதோ என்னும்- என் நெஞ்சே!
(198)

துறை : புணர்ந்து நீங்கிய தலைமகளது போக்கு நோக்கிய தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**குறிஞ்சி**

யாம இரவின் நெடுங் கடை நின்று,
தேம் முதிர் சிமையக் குன்றம் பாடும்
நுண் கோல் அகவுநர் வேண்டின், வெண் கோட்டு
அண்ணல் யானை ஈயும் வண் மகிழ்
வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்,
அளி இயல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை,
இழை அணி யானை இயல் தேர் மிஞிலியொடு

நண் பகல் உற்ற செருவில் புண் கூர்ந்து,
ஒள் வாள் மயங்கு அமர் வீழ்ந்தென, 'புள் ஒருங்கு
அம் கண் விசும்பின் விளங்கு ஞாயிற்று
ஒண் கதிர் தெறாமை, சிறகரின் கோலி,
நிழல் செய்து உழறல் காணேன், யான்' எனப்
ப டுகளம் காண்டல் செல்லான், சினம் சிறந்து,
உரு வினை நன்னன், அருளான், கரப்ப,
பெரு விதுப்புற்ற பல் வேள் மகளிர்
குரூஉப் பூம் பைந் தார் அருக்கிய பூசல்,
வசை விடக் கடக்கும் வயங்கு பெருந் தானை
அகுதை களைதந்தாங்கு, மிகு பெயல்
உப்புச் சிறை நில்லா வெள்ளம் போல,
நாணு வரை நில்லாக் காமம் நண்ணி,
நல்கினள், வாழியர், வந்தே- ஓரி
பல் பழப் பலவின் பயம் கெழு கொல்லிக்
கார் மலர் கடுப்ப நாறும்,
ஏர் நுண், ஓதி மாஅயோளே! (208)

துறை : புணர்ந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**குறிஞ்சி**

தா இல் நன் பொன் தைஇய பாவை
விண் தவழ் இள வெயிற் கொண்டு நின்றன்ன,
மிகு கவின் எய்திய, தொகுகுரல் ஐம்பால்,
கிளை அரில் நாணற் கிழங்கு மணற்கு ஈன்ற
முளை ஓரன்ன முள் எயிற்றுத் துவர் வாய்,
நயவன் தைவரும் செவ்வழி நல் யாழ்
இசை ஓர்த்தன்ன இன் தீம் கிளவி,
அணங்கு சால் அரிவையை நசைஇ, பெருங் களிற்று
இனம் படி நீரின் கலங்கிய பொழுதில்,
பெறல் அருங்குரையள் என்னாய், வைகலும்,
இன்னா அருஞ் சுரம் நீந்தி, நீயே
எ ன்னை இன்னற் படுத்தனை; மின்னு வசிபு
உரவுக் கார் கடுப்ப மறலி மைந்துற்று,
விரவு மொழிக் கட்டூர் வேண்டுவழிக் கொளீஇ,
படை நிலா இலங்கும் கடல் மருள் தானை
மட்டு அவிழ் தெரியல் மறப் போர்க் குட்டுவன்
பொரு முரண் பெறாஅது விலங்கு சினம் சிறந்து,
செருச் செய் முன்பொடு முந்நீர் முற்றி,
ஓங்குதிரைப் பௌவம் நீங்க ஓட்டிய
நீர் மாண் எஃகம் நிறத்துச் சென்று அழுந்தக்
கூர் மதன் அழியரோ- நெஞ்சே!- ஆனாது

எளியள் அல்லோட் கருதி,
விளியா எவ்வம் தலைத் தந்தோயே. (212)

துறை : அல்லகுறிப்பட்டு நீங்கும் தலைமகன் தன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லியது.

**குறிஞ்சி**

வான் உற நிவந்த நீல் நிறப் பெரு மலைக்
கான நாடன் உறீஇய நோய்க்கு, என்
மேனி ஆய் நலம் தொலைதலின், மொழிவென்;
முழவு முகம் புலராக் கலி கொள் ஆங்கண்,
கழாஅர்ப் பெருந் துறை விழவின் ஆடும்,
ஈட்டு எழில் பொலிந்த ஏந்து குவவு மொய்ம்பின்,
ஆட்டன் அத்தி நலன் நயந்து உரைஇ,
தாழ் இருங் கதுப்பின் காவிரி வவ்வலின்,
மாதிரம் துழைஇ, மதி மருண்டு அலந்த
ஆதிமந்தி காதலற் காட்டி,
படு கடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதி அன்ன மாண் புகழ் பெறீஇயர்,
சென்மோ- வாழி, தோழி! - பல் நாள்,
உரவு உரும் ஏறொடு மயங்கி,
இரவுப் பெயல் பொழிந்த ஈர்ந் தண் ஆறே. (222)

துறை : த லைமகன் சிறைப்புறத்தானாக, தோழி தலைமகட்குச் சொல்லியது.

**மருதம்**

உணர்குவென் அல்லென்; உரையல் நின் மாயம்;
நாண் இலை மன்ற- யாணர் ஊர!-
அகலுள் ஆங்கண், அம் பகை மடிவை,
குறுந் தொடி, மகளிர் குரூஉப் புனல் முனையின்,
பழனப் பைஞ் சாய் கொழுதி, கழனிக்
கரந்தை அம் செறுவின் வெண் குருகு ஓப்பும்,
வல் வில் எறுழ்த் தோள், பரதவர் கோமான்,
பல் வேல் மத்தி, கழா அர் முன்துறை,
நெடு வெண் மருதொடு வஞ்சி சா அய,
விடியல் வந்த பெரு நீர்க் காவிரி,
தொடி அணி முன்கை நீ வெய்யாளொடு
முன் நாள் ஆடிய கவ்வை, இந் நாள்,
வலி மிகும் முன்பின் பாணனொடு, மலி தார்த்
தித்தன் வெளியன் உறந்தை நாள்- அவைப்
பாடு இன் தெண் கிணைப் பாடு கேட்டு அஞ்சி,
போர் அடு தானைக் கட்டி
பொராஅது ஓடிய ஆர்ப்பினும் பெரிதே. (226)

துறை : தலைமகற்குத் தோழி வாயில் மறுத்தது.

**மருதம்**

மணி மருள் மலர முள்ளி அமன்ற,
துணி நீர், இலஞ்சிக் கொண்ட பெரு மீன்
அரி நிறக் கொழுங் குறை வௌவினர் மாந்தி,
வெண்ணெல் அரிநர் பெயர்நிலைப் பின்றை,
இடை நிலம் நெரிதரு நெடுங் கதிர்ப் பல் சூட்டுப்
பனி படு சாய்ப் புறம் பரிப்ப, கழனிக்
கருங் கோட்டு மாஅத்து அலங்கு சினைப் புதுப்
பூ
மயங்கு மழைத் துவலையின் தாஅம் ஊரன்
காமம் பெருமை அறியேன், நன்றும்
உய்ந்தனென்- வாழி, தோழி!- அல்கல்
அணி கிளர் சாந்தின் அம் பட்டு இமைப்ப,
கொடுங் குழை மகளிரின் ஒடுங்கிய இருக்கை
அறியாமையின் அழிந்த நெஞ்சின்,
'ஏற்று இயல் எழில் நடைப் பொலிந்த மொய்ம்பின்,
தோட்டு இருஞ் சுரியல் மணந்த பித்தை,
ஆட்டன் அத்தியைக் காணீரோ? 'என
நாட்டின் நாட்டின், ஊரின் ஊரின்,
'கடல் கொண்டன்று' என, 'புனல் ஒளித்தன்று' என,
கலுழ்ந்த கண்ணள், காதலற் கெடுத்த
ஆதிமந்தி போல,
ஏதம் சொல்லி, பேது பெரிது உறலே. (236)

துறை : ஆற்றாமை வாயிலாகப் புக்க தலைமகன் நீக்கத்துக்கண் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

**மருதம்**

பிணர் மோட்டு நந்தின் பேழ் வாய் ஏற்றை
கதிர் மூக்கு ஆரல் களவன் ஆக,
நெடு நீர்ப் பொய்கைத் துணை யொடு புணரும்
மலி நீர் அகல் வயல் யாணர் ஊர!
போது ஆர் கூந்தல் நீ வெய்யோளொடு
தாது ஆர் காஞ்சித் தண் பொழில் அகல் யாறு
ஆடினை என்ப, நெருநை; அலரே
காய் சின மொய்ம்பின் பெரும் பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணிவாயில்,
சீர் கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழ் இசை முரசம் பொரு களத்து ஒழிய,
பதி னொரு வேளிரொடு வேந்தர் சாய,
மொய் வலி அறுத்த ஞான்றை,
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே. (246)

துறை : தோழி தலைமகற்கு வாயில் மறுத்தது.

**குறிஞ்சி**

நன்னன் உதியன் அருங் கடிப் பாழி,
தொல் முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்னினும் அருமை நற்கு அறிந்தும், அன்னோட்
துன்னலம் மாதோ எனினும், அஃது ஒல்லாய்-
தண் மழை தவழும் தாழ் நீர் நனந்தலைக்
கடுங் காற்று எடுக்கும் நெடும் பெருங் குன்றத்து
மாய இருள் அளை மாய் கல் போல,
மாய்கதில்- வாழிய, நெஞ்சே!- நாளும்,
மெல் இயற் குறுமகள் நல் அகம் நசைஇ,
அரவு இரை தேரும் அஞ்சுவரு சிறு நெறி,
இரவின் எய்தியும் பெறாஅய், அருள் வரப்
புல்லென் கண்ணை புலம்பு கொண்டு, உலகத்து
உள்ளோர்க்கு எல்லாம் பெரு நகையாக,
காமம் கைம்மிக உறுதர,
ஆனா அரும் படர் தலைத்தந்தோயே! (258)

துறை : அல்லகுறிப்பட்டுப் பதிப்பெயர்ந்த தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**குறிஞ்சி**

முதை படு பசுங் காட்டு அரில் பவர் மயங்கி,
பகடு பல பூண்டு உழவுறு செஞ் செய்,
இடு முறை நிரம்பி, ஆகு வினைக் கலித்து,
பாசிலை அமன்ற பயறு ஆ புக்கென,
வாய் மொழித் தந்தையைக் கண் களைந்து, அருளாது,
ஊர் முது கோசர் நவைத்த சிறுமையின்,
கலத்தும் உண்ணாள், வாலிதும் உடாஅள்,
சினத்தின் கொண்ட படிவம் மாறாள்,
மறம் கெழு தானைக் கொற்றக் குறும்பியன்,
செரு இயல் நல் மான் திதியற்கு உரைத்து, அவர்
இன் உயிர் செகுப்பக் கண்டு சினம் மாறிய
அன்னிமிஞிலி போல, மெய்ம் மலிந்து,
ஆனா உவகையேம் ஆயினெம்- பூ மலிந்து
அருவி ஆர்க்கும் அயம் திகழ் சிலம்பின்
நுண் பல் துவலை புதல்மிசை நனைக்கும்
வண்டு படு நறவின் வண் மகிழ்ப் பேகன்
கொண்டல் மா மலை நாறி,
அம் தீம் கிளவி வந்தமாறே. (262)

துறை : இரவுக்குறிக்கண் தலைமகளைப் புணர்ந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**மருதம்**

கோடுற நிவந்த நீடு இரும் பரப்பின்
அந்திப் பராஅய புதுப் புனல், நெருநை,
மைந்து மலி களிற்றின் தலைப் புணை தழீஇ,
நரந்தம் நாறும் குவை இருங் கூந்தல்
இளந் துணை மகளிரொடு ஈர் அணிக் கலைஇ,
நீர் பெயர்ந்து ஆடிய ஏந்து எழில் மழைக் கண்
நோக்குதொறும் நோக்குதொறும் தவிர்விலையாகி
காமம் கைம்மிகச் சிறத்தலின், நாண் இழந்து,
ஆடினை என்ப- மகிழ்ந!- அதுவே
யாழ் இசை மறுகின் நீடூர் கிழவோன்
வாய் வாள் எவ்வி ஏவல் மேவார்
நெடு மிடல் சாய்த்த பசும் பூண் பொருந்தலர்
அரிமணவாயில் உறத்தூர் ஆங்கண்,
கள்ளுடைப் பெருஞ் சோற்று எல் இமிழ் அன்ன,
கவ்வை ஆகின்றால் பெரிதே; இனி அஃது
அவலம் அன்றுமன், எமக்கே; அயல
கழனி உழவர் கலி சிறந்து எடுத்த
கறங்கு இசை வெரீஇப் பறந்த தோகை
அணங்குடை வரைப்பகம் பொலிய வந்து இறுக்கும்
திரு மணி விளக்கின் அலைவாய்ச்
செரு மிகு சேஎயொடு உற்ற சூளே! (266)

துறை : பரத்தையிற் பிரிந்து வந்து கூடிய தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.

**மருதம்**

நீள் இரும் பொய்கை இரை வேட்டு எழுந்த
வாளை வெண் போத்து உணீஇய, நாரை தன்
அடி அறிவுறுதல் அஞ்சி, பைபயக்
கடி இலம் புகூஉம் கள்வன் போல,
சாஅய் ஒதுங்கும் துறை கேழ் ஊரனொடு
ஆவது ஆக! இனி நாண் உண்டோ?
வருகதில் அம்ம, எம் சேரி சேர!
அரி வேய் உண்கண் அவன் பெண்டிர் காண,
தாரும் தானையும் பற்றி, ஆரியர்
பிடி பயின்று தரூஉம் பெருங் களிறு போல,
தோள் கந்தாகக் கூந்தலின் பிணித்து , அவன்
மார்பு கடி கொள்ளேன் ஆயின், ஆர்வுற்று
இரந்தோர்க்கு ஈயாது ஈட்டியோன் பொருள்போல்,

பரந்து வெளிப்படாது ஆகி,
வருந்துகதில்ல, யாய் ஓம்பிய நலனே! (276)

துறை : தலைமகட்குப் பாங்காயினார் கேட்பப் பரத்தை சொல்லியது.

**குறிஞ்சி**

வயங்கு வெயில் ஞெமியப் பாஅய், மின்னு வசிபு,
மயங்கு துளி பொழிந்த பானாட் கங்குல்;
ஆராக் காமம் அடூஉ நின்று அலைப்ப,
இறு வரை வீழ் நரின் நடுங்கி, தெறுவர,
பாம்பு எறி கோலின் தமியை வைகி,
தேம்புதி கொல்லோ?- நெஞ்சே!- உரும் இசைக்
களிறு கண்கூடிய வாள் மயங்கு ஞாட்பின்,
ஒளிறு வேற் தானைக் கடுந் தேர்த் திதியன்
வரு புனல் இழிதரு மரம் பயில் இறும்பில்,
பிறை உறழ் மருப்பின், கடுங் கண், பன்றிக்
குறை ஆர் கொடுவரி குழுமும் சாரல்,
அறை உறு தீம் தேன் குறவர் அறுப்ப
முயலுநர் முற்றா ஏற்று அரு நெடுஞ் சிமை,
புகல் அரும், பொதியில் போலப்
பெறல் அருங்குரையள், எம் அணங்கியோளே! (322)

துறை: அல்லகுறிப்பட்டுப் போகின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**மருதம்**

ஊரல் அவ் வாய் உருத்த தித்தி,
பேர் அமர் மழைக் கண், பெருந்தோள், சிறு நுதல்,
நல்லள் அம்ம, குறுமகள்- செல்வர்
கடுந் தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்,
நெடுங் கொடி நுடங்கும் மட்ட வாயில்,
இருங் கதிர்க் கழனிப் பெருங் கவின் அன்ன
நலம் பாராட்டி, நடை எழில் பொலிந்து,
விழவில் செலீஇயர் வேண்டும்- வென் வேல்
இழை அணி யானைச் சோழர் மறவன்
கழை அளந்து அறியாக் காவிரிப் படப்பை,
புனல் மலி புதவின், போஒர் கிழவோன்,
பழையன் ஓக்கிய வேல் போல்,
பிழையல கண், அவள் நோக்கியோர் திறத்தே! (326)

துறை : தோழி தலைமகனை வாயில் மறுத்தது.

**மருதம்**

மேல் துறைக் கொளீஇய கழாலின் கீழ்த் துறை
உகு வார் அருந்த, பகு வாய் யாமை
கம்புள் இயவன் ஆக, விசி பிணித்

தெண் கண் கிணையின் பிறழும் ஊரன்-
இடை நெடுந் தெருவில் கதுமெனக் கண்டு, என்
பொற் தொடி முன்கை பற்றினனாக,
'அன்னாய்!' என்றனென்; அவன் கை விட்டனனே,
தொல் நசை சாலாமை, நன்னன் பறம்பில்
சிறுகாரோடன் பயினொடு சேர்த்திய
கற் போல் நாவினோனாகி, மற்று அது
செப்பலென் மன்னால், யாய்க்கே; நல் தேர்க்
கடும் பகட்டு யானைச் சோழர் மருகன்
நெடுங் கதிர் நெல்லின் வல்லம் கிழவோன்
நல்லடி உள்ளானாகவும், ஒல்லார்
கதவம் முயறலும் முயல்ப; அதாஅன்று,
ஒலி பல் கூந்தல் நம்வயின் அருளாது,
கொன்றனன் ஆயினும் கொலை பழுது அன்றே-
அருவி ஆம்பல் கலித்த முன்துறை
நன்னன் ஆஅய் பிரம்பு அன்ன
மின் ஈர் ஓதி!- என்னை, நின் குறிப்பே? (356)

துறை : பின்னின்ற தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி தலைமகனைக் குறை நயப்பக் கூறியது.

**பாலை**

இலங்கு சுடர் மண்டிலம் புலம் தலைப்பெயர்ந்து,
பல் கதிர் மழுகிய கல் சேர் அமையத்து,
அலந்தலை மூதேறு ஆண் குரல் விளிப்ப,
மனை வளர் நொச்சி மா சேர்பு வதிய,
முனை உழை இருந்த அம் குடிச் சீறூ ர்,
கருங் கால் வேங்கைச் செஞ் சுவல் வரகின்
மிகு பதம் நிறைந்த தொகு கூட்டு ஒரு சிறை,
குவி அடி வெருகின் பைங் கண் ஏற்றை
ஊன் நசைப் பிணவின் உயங்கு பசி களைஇயர்,
தளிர் புரை கொடிற்றின், செறி மயிர் எருத்தின்,
கதிர்த்த சென்னிக் கவிர்ப் பூ அன்ன
நெற்றிச் சேவல் அற்றம் பார்க்கும்
புல்லென் மாலையும், இனிது மன்றம்ம-
நல் அக வன முலை அடையப் புல்லுதொறும்
உயிர் குழைப்பன்ன சாயல்,
செயிர் தீர், இன் துணைப் புணர்ந்திசி னோர்க்கே.
(367)

துறை : பிரிவிடை வேறுபட்ட தலைமகன் வற்புறுக்கும் தோழிக்குச் சொல்லியது.

**குறிஞ்சி**

அருந் தெறல் மரபின் கடவுள் காப்ப,
பெருந் தேன் தூங்கும் நாடு காண் நனந்தலை,
அணங்குடை வரைப்பின், பாழி ஆங்கண்,
வேள் முது மாக்கள் வியல் நகர்க் கரந்த
அருங் கல வெறுக்கையின் அரியோள் பண்பு நினைந்து,
வருந்தினம் மாதோ எனினும், அஃ்து ஒல்லாய்,
இரும் பணைத் தொடுத்த பலர் ஆடு ஊசல்
ஊ ர்ந்து இழி கயிற்றின், செல வர வருந்தி,
நெடு நெறிக் குதிரைக் கூர் வேல் அஞ்சி
கடு முனை அலைத்த கொடு வில் ஆடவர்
ஆடு கொள் பூசலின் பாடு சிறந்து எறியும்,
பெருந் துடி வள்பின் வீங்குபு நெகிழா,
மேய் மணி இழந்த பாம்பின், நீ நனி
தேம்பினை- வாழி, என் நெஞ்சே!- வேந்தர்
கோண் தணி எயிலின் காப்புச் சிறந்து,
ஈண்டு அருங்குரையள் , நம் அணங்கியோளே. (372)

துறை: அல்லகுறிப்பட்டுப் போகாநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**மருதம்**

செல்லல், மகிழ்ந! நிற் செய் கடன் உடையென்மன்-
கல்லா யானை கடி புனல் கற்றென,
மலி புனல் பொருத மருது ஓங்கு படப்பை,
ஒலி கதிர்க் கழனி, கழா அர் முன்துறை,
கலி கொள் சுற்றமொடு கரிகால் காண,
தண் பதம் கொண்டு, தவிர்ந்த இன் இசை
ஒண் பொறிப் புனை கழல் சேவடிப் புரள,
கருங் கச்சு யாத்த காண்பின் அவ் வயிற்று,
இரும் பொலம் பாண்டில், மணியொடு தெளிர்ப்ப,
புனல் நயந்து ஆடும் அத்தி அணி நயந்து,
காவிரி கொண்டு ஒளித்தாங்கும் அன்னோ!
நும்வயின் புலத்தல் செல்லேம்; எம்வயின்
பசந்தன்று, காண்டிசின் நுதலே; அசும்பின்
அம் தூம்பு வள்ளை அழற் கொடி மயக்கி,
வண் தோட்டு நெல்லின் வாங்கு பீள் விரிய,
துய்த் தலை முடங்கு இறாத் தெறிக்கும், பொற்புடைக்
குரங்குஉளைப் புரவிக் குட்டுவன்
மரந்தை அன்ன, என் நலம் தந்து சென்மே! (376)

துறை : காதற்பரத்தை புலந்து சொல்லியது.

மருதம்

பொய்கை நீர் நாய்ப் புலவு நாறு இரும் போத்து
வளை நாள் இரை தேரும் ஊர!
நாணினென், பெரும! யானே- பாணன்
மல் அடு மார்பின் வலி உற வருந்தி,
எதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருநன்
நிறைத் திரள் முழவுத் தோள் கையகத்து ஒழிந்த
திறன் வேறு கிடக்கை நோக்கி, நல் போர்க்
கணையன் நாணியாங்கு- மறையினள்
மெல்ல வந்து, நல்ல கூறி,
'மை ஈர் ஓதி மடவோய்! யானும் நின்
சேரியேனே; அயல் இலாட்டியேன்;
நுங்கை ஆகுவென் நினக்கு' என, தன் கைத்
தொடு மணி மெல் விரல் தண்ணெனத் தைவர,
நுதலும் கூந்தலும் நீவி,
பகல் வந்து பெயர்ந்த வாணுதற் கண்டே..(386)

துறை : தோழி வாயில் மறுத்தது; தலைமகள் தகுதி சொல்லியதூஉம் ஆம்.

மருதம்

தொடுத்தேன், மகிழ்ந ! செல்லல்- கொடித் தேர்ப்
பொலம் பூண் நன்னன் புனனாடு கடிந்தென,
யாழ் இசை மறுகின் பாழி ஆங்கண்,
'அஞ்சல்' என்ற ஆஅய் எயினன்
இகல் அடு கற்பின் மிஞிலியொடு தாக்கி,
தன் உயிர் கொடுத்தனன், சொல்லியது அமையாது;
தெறல் அருங் கடவுள் முன்னர்த் தேற்றி,
மெல் இறை முன்கை பற்றிய சொல் இறந்து,
ஆர்வ நெஞ்சம் தலைத்தலை சிறப்ப, நின்
மார்பு தருகல்லாய்; பிறன் ஆயினையே;
இனி யான் விடுக்குவென் அல்லென்; மந்தி,
பனி வார் கண்ணள், பல புலந்து உறைய,
அடுந் திறல் அத்தி ஆடு அணி நசைஇ,
நெடு நீர்க் காவிரி கொண்டு ஒளித் தாங்கு, நின்
மனையோள் வவ்வலும் அஞ்சுவல்; சினைஇ,
ஆரியர் அலறத் தாக்கி, பேர் இசைத்
தொன்று முதிர் வட வரை வணங்கு வில் பொறித்து,
வெஞ் சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி அன்ன, என் நலம் தந்து சென்மே! (396)

துறை : காதற்பரத்தை தலைமகற்குச் சொல்லியது.

**பிரிவு 11 நற்றிணை - பாட அமைப்பு**

4.2.1 நோக்கங்கள்

4.2.2 நூல் அறிமுகம்

4.2.3 பாடல் ஆசிரியர்

4.2.4 பாடப் பொருள் விளக்கம்

4.2.4.1 முல்லைத் திணை

4.2.4.2 மருதத் திணை

4.2.4.3 நெய்தல் திணை

4.2.4.4 பாலைத் திணை

4.2.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

4.2.6 பாடத் தொகுப்புரை

4.2.7 அருஞ்சொற் பொருள்

4.2.8 மாதிரி வினாக்கள்

4.2.9 பரிந்துரை நூல்

4.2.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

### 4.2.1 நோக்கங்கள்

- நற்றிணைப் பாடல்களின் நயம் காணல்.
- தலைவியின் ஆற்றாமையும் தோழியின் சொல்லாற்றலும் புலப்படுதல்.
- பாடல்களின் வழி உள்ளுறை உவமச் சிறப்பினை அறிதல்.

### 4.2.2 நூல் அறிமுகம்

நற்றிணை 400 பாடல்களை உடையது. பாடிய புலவர்கள் 187 பேர் ஆவர். இது 9 முதல் 12 அடிகளை உடையது. இதனைத் தொகுப்பித்தவர் பன்நாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. தொகுத்தவர் தெரியவில்லை. இந்நூலை முதலில் பதிப்பித்து உரை எழுதியவர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயங்கார் ஆவார். நக்கீரரின் ஏழு பாடல்கள் பாடமாக வந்துள்ளன.

### 4.2.3 பாடல் ஆசிரியர்

அலகு இரண்டில் காண்க.

### 4.2.4 பாடப் பொருள் விளக்கம்

நக்கீரர் முல்லைத் திணையில் ஒரு பாடலும், மருதத் திணையில் ஒரு பாடலும், நெய்தல் திணையில் மூன்று பாடல்களும் பாலைத்திணையில் இரண்டு பாடல்களும் பாடியுள்ளார். எனவே இவ்வரிசை முறையிலேயே பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

#### 4.2.4.1 முல்லைத் திணை

காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை ஆகும். இருத்தலும் இருத்தல் நிமித்தமும் இதன் உரிப்பொருள்.

**பாடல் (367)**

**துறை**

வினை முடித்த தலைவன் வரவை அறிந்து மகிழ்ந்து தோழி கூறியது.

**பாடல் பொருள்**

மென்மையான இயல்பையுடைய அரிவையே! வளைந்த கண்ணும் கூரிய வாயும் உள்ள பெண் காக்கை, தன் சிறகால் தன் பிள்ளைகளைத் தழுவியும் தன் இனத்தை அழைத்தும் கடுகு பொறிக்கப்பட்ட சோற்றுத் திரளைத் தெய்வத்துக்கு வழங்கும் பலியுடன் கவர்ந்து கொள்வதற்காக, வீட்டின் அருகில் உட்கார்ந்திருக்கும்.

அத்தகு பழைய வீடுகள் நிறைந்த புகழுடைய ஊர் சிறுகுடி. அவ்வூர் அருமன் என்பவனுக்குச் சொந்தமானது. அவ்வூர் போல அழகுடைய நீ வருந்தாதே. குவளை மலரும் முல்லை மலரும் சேர்ந்த பூ மாலையைச் சூடி தலைவனுடன் சென்ற இளையரும் வந்துவிட்டனர். பிடரி மயிரையுடைய குதிரையைச் செலுத்திக் கொண்டு இப்பனிக் காலத்திலேயே நம் தலைவர் வந்துவிடுவார். நீ வருந்தாது இருப்பாயாக என்று தோழி தலைவிக்குக் கூறுகிறாள்.

**உள்ளுறை உவமம்**

பெண் காக்கை தன் பிள்ளைகளைத் தழுவிக்கொண்டு தன் சுற்றத்தை அழைத்து வெண் சோற்றுத் திரளைக் கவர இல்லத்தில் கூடி இருக்கும் என்றது, நீயும் உன் பிள்ளைகளைத் தழுவிக்கொண்டு, உன் சுற்றத்தாரை அழைத்துத் தலைவன் கொண்டு வந்த பொருளை வழங்கி அவனோடு கூடி மகிழ்ந்திருப்பாய் என்பதைக் குறிக்கிறது.

### 4.2.4.2 மருதத் திணை

வயலும் வயல் சார்ந்த பகுதியும் மருதம். ஊடலும் ஊடல் நிமித்தமும் இதன் உரிப்பொருள்

**பாடல் (340)**

**துறை**

பரத்தையிடம் இருந்து பிரிந்து வந்த தலைவனை நொந்து தலைவி கூறுகிறாள்.

**பாடல் பொருள்**

மகிழ்ந! சிறுகுடி என்னும் ஊர் போன்று அழகிய வேலைப்பாடுடன் கூடிய என் கை வளையல்கள் கழலும்படிச் செய்த உன்னைப் புல்லேன். புலத்தலும் இல்லேன். ஏனென்றால் பாகன் சொல்வதைத் தவிரப் பிறவற்றைக் கல்லாத யானைகளையும் விரைந்து செலுத்தும் தேரையும் உடையவன் செழியன். அவன் பெயரில் ஒரு குளம் வெட்டி, அதன் மடை வழியாக நீரை விட, நீர் வெளியில் சென்றது. அக்குளத்திலிருந்து வாளை மீனும் அந்த நீரின் கால்வாய் வழியாக வெளியேறி சேறுடைய வயலில் புகுந்தது. அங்கு உழும் எருமையின் சேறுடைய காலில் அகப்படாமல், தன் முதுகில் சேற்றைப் புள்ளிகளாகக் கொண்டு ஓடியது. அங்குச் சால் அடிக்கும் உழவர் அதைக் கோலால் அடித்தனர். அவ்வடிக்கும் அஞ்சாமல் அம்மீன் வயல் வரப்பின் பக்கத்தில் புரளும். அது வாணன் என்பவனின் சிறுகுடி என்னும் ஊராகும்.

**உள்ளுறை உவமம்.**

வாளை மீன் குளத்தில் இருந்து புறப்பட்டுக் கால்வாய் வழியாக வயலுக்குச் சென்று, உழும் எருமை காலில் அகப்படாமல், சேற்றை உடலில் பெற்று உழவனின் கோல் அடிக்கும் அஞ்சாது, வயல் வரப்பில் புரளும் என்பது நீ (தலைவன்) இல்லத்திலிருந்து சென்று பரத்தையைச் சேர்ந்து அவளுடன் இன்பம் அடைந்து ஊரார் அலர் பெற்று அவ்வலருக்கும் அஞ்சாமல், செருக்குடன் சேரியிலே புரளுவாய் என்பதைக் குறிக்கும்.

### 4.2.4.3 நெய்தல் திணை

கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் ஆகும். இரங்கலும் இரங்கல் நிமித்தமும் இதன் உரிப்பொருள் ஆகும். இத்திணையில் **மூன்று பாடல்கள்** உள்ளன.

**பாடல் (31)**

**துறை**

தலைவன் மறைவாகயிருக்க தலைவி தோழியின் வற்புறுத்தலுக்கு எதிராக வருந்தி உரைப்பது.

**பாடல் பொருள்**

பல்வேறு நாட்டிலிருந்து மரக்கலங்கள் காற்றால் தள்ளி வந்து, பலவகைப் பண்டங்களும் இறங்கும் மணற் பரப்பில் உயர்ந்த புன்னை மரம் உள்ளது. அம்மரக்கிளையில் உள்ள கருமுதிர்ந்த வெண்மையான குருகு (நாரை) அலை ஓசைக்கு அஞ்சும்படியான வளமான நீர்ப்பரப்பின் தலைவன். அவனுடன் நட்பு கொள்வதற்கு முன்பு பெரிய நீர்ப் பரப்பில் கொழுத்த இறால் மீனைப் பார்த்துக் கவ்விய சிறிய வெண் காக்கை குளிர்ந்த உப்பங்கழியில் தன்னுடைய பெடையை அழைத்து அதற்குக் கொடுக்கும்படியான சிறிய பூவையுடைய ஞாழல் துறையும் எனக்கு இனிமையாய் இருந்தது.

ஆனால் சேர்ப்பனாகிய தலைவன் என்னைக் கைவிட்டதும் அத்துறையும் இனிமை இல்லாததாயிற்று. இவ்வாறு என் வருத்தத்தை நெஞ்சில் பலவாறு எண்ணினேன் என்று தலைவி தோழியிடம் தன் ஆற்றாமையைக் கூறுகிறாள்.

**உள்ளுறை உவமம்**

புன்னை மரத்தில் உள்ள சூல் முதிர்ந்த நாரை, அலையின் ஓசைக்கு அஞ்சும் என்று கூறியிருப்பது தலைவி தான் பிறந்த இல்லத்திலிருந்து காதல் கொண்டிருக்கும் தான் அன்னையின் கடும் சொல்லுக்கு அஞ்சுகிறேன் என்று உரைப்பது போன்ற கருத்து மறைந்து வந்துள்ளது.

**பாடல் (258)**

**துறை**

தாய் தலைவியை இல்லில் செறித்ததைத் தோழி சொல்லியது.

**பாடல் பொருள்**

தலைவனே! கானலாகிய பகற்குறி இடத்திற்கு வந்து யான் தலைவியைத் தாய் இல்லத்தில் செறித்தாள் என்னும் செய்தியைச் சொல்லிச் செல்கிறேன்.

கிழக்கு மலையில் தோன்றிய ஞாயிறு சுடும்படி காயும் பகலில், செல்வமுடைய அகன்ற இல்லத்திற்கு வரும் விருந்தினரை ஓம்ப வேண்டும். பெண்கள் வீட்டின் பக்கத்தில் போட்ட வெண் சோற்றைக் காக்கை உண்ணும். அது மாலையில் கடைத் தெருவிற்குச் சென்று மர நிழலில் குவித்திருக்கும் இறா மீனைக் கவர்ந்து தின்னும். பின்னர் செல்லாமல் மிதந்து கொண்டிருக்கும் தோணியின் பாய்மரத்தில் சென்று உட்காரும். அத்தகைய மருங்கூர் பட்டணம் போன்ற அழகுடையவள் தலைவி. அவள் அழகிய வளையல்கள் கழல்வதைக் கண்ட தாய் அவளை இல்லத்திற்குள் அடைத்தாள்.

**உள்ளுறை உவமம்.**

மகளிர் இட்ட சோற்றை உண்டு அங்காடியில் இறாமீனைக் கவர்ந்த காக்கை தோணியின் பாய் மரத்தில் உட்காரும் என்றது பாங்கன் கூட்டத்தாலும் பாங்கி கூட்டத்தாலும் நலன் நுகர்ந்தும் தலைவன் கவலை இல்லாமல் திருமணம் செய்து கொள்ளும் முயற்சியில்லாமல் அவன் ஊரிலேயே தங்கி உள்ளான் என்பதாகும்.

**பாடல் (358)**

**துறை**

தலைவன் பொருள்வயின் பிரிந்த பொழுது ஆற்றாத தலைவி தோழிக்குச் சொல்லியது.

**பாடல் பொருள்**

தோழி ! என் தோள்கள் நெகிழ, வரிகள் வாட, சிறிய மெல் உடலில் பசலை பரவியது. அதனைக் கண்ட அவர் நாணினார். பிரியேன் என்று கடவுள் முன் சூளுரைத்தார், ஆனால் பிரிந்தார். சூளுரைத்த அவர் தவறினார். கடவுளே அவரை

வருத்தாது காப்பாயாக என்று கூறி கடவுளுக்கு உயர்ந்த பலி தூவி வணங்கச் செல்வோமா?

சிவந்த இறாமீனின் பஞ்சு போன்ற முடங்கலை சிறு வெண் காக்கை நாட்காலையின் உணவாகப் பெறும். பூண் அணிந்த பாண்டியனின் மருங்கை என்னும் ஊர் போல என் அழகு நீங்குமாறு என்னைப் பிரிந்து அங்கே தங்கியிருக்கும் தலைவருக்காக வணங்கச் செல்வோமா? என்று தலைவி தோழியிடம் வினவுகிறாள்.

**உள்ளுறை உவமம்**

இறால் மீனின் முடங்கலைச் சிறு வெண் காக்கை நாட்காலையின் உணவாகப் பெறும் என்றது நிறைந்த பொருளை நம் தலைவர் சென்ற இடத்தில் பெற்றுத் திரும்புவார் என்பதைக் குறிக்கும்

### 4.2.4.4 பாலைத் திணை

முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை என்ற வடிவம் கொள்ளும். பிரிதலும் பிரிதல் நிமித்தமும் இதன் உரிப்பொருள் ஆகும். இத்திணையில் **இரண்டு பாடல்கள்** உள்ளன.

**பாடல் (86)**

**துறை**

தலைவன் வினை முடிந்து குறித்த பருவத்தில் வந்ததைக் கேட்ட தோழி தலைவிக்கு உரைத்தது.

**பாடல் பொருள்**

தோழி ! கடும் முன்பனிக்காலத்தில் நாம் துன்புறுமாறு தலைவன் பிரிந்தார். பின்னர் கற்கள் பொருந்துமாறு பொன்னால் அழகு செய்த சுரிதகம் என்னும் தலையணி போல் கோங்கு மரத்தில் மொட்டுகள் மலரும் காலமாகிய இளவேனிற் காலத்தில் நம் தலைவர் நம்மை நினைத்து வந்துவிட்டார். அவர் அறத்தைக் கடைப்பிடித்து வாழும் அறவர். அவர் வாழ்க! என்று தோழி தலைவியிடம் உரைத்தாள்.

**பாடல் (197)**

**துறை**

வரைவு (திருமணம்) நீண்டதால் ஆற்றாத தலைவியைத் தோழி ஆற்றுவித்தது.

**பாடல் பொருள்**

தோழி! தோள்கள் மெலிந்து வளைகள் நெகிழ்ந்தன. நெற்றி பீர்க்கம் பூப் போல் பசலைப் படர்ந்தது. கண்களில் கண்ணீர் தங்கியது. என் உயிர் அழிவது உறுதி. நன்கு தெளிந்து விட்டேன் என்று சொல்லி நீ அழாதே. உன் கூந்தல் போல் மேகம் இறங்கி புதிய மலர்கள் உள்ள நீர் உண்ணும் துறையைப் பெருக்க பெண்களின் முன் கையில் உள்ள பொன் வளையல் போல் மின்னி இனிய ஒலி எழுப்புகிற முரசுபோல் முழங்கி, அரசருடைய மதிலைச் சுற்றிச் செல்லும் கேடகப் படை போல அவருடைய நல்ல மலை நாட்டில் மேகம் தவழ்ந்து செல்லும்.

### 4.2.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

**அ. வினாக்கள்**

1. நற்றிணையின் மொத்தப் பாடல்கள் எத்தனை?
2. நற்றிணையைத் தொகுப்பித்தவர் யார்?
3. நற்றிணையை எத்தனைப் புலவர்கள் பாடியுள்ளனர்?

**ஆ. சரியா ? தவறா?**

1. வரைவு என்ற சொல் திருமணத்தைக் குறிக்கும்.
2. பாலைத் திணையின் உரிப்பொருள் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் ஆகும்.
3. முல்லை என்பது மலையும் மலையைச் சார்ந்த இடமுமாகும்.
4. அற்சிரம் என்பது முன்பனிக் காலம் .
5. நற்றிணையில் நக்கீரர் பாடிய பாடல்கள் ஏழு.

### 4.2.6 பாடத் தொகுப்புரை

- நற்றிணையில் நக்கீரர் குறிஞ்சித் திணையைத் தவிர மற்ற நான்கு திணையிலும் பாடல்கள் பாடியுள்ளார்.
- உள்ளுறை உவமம் சில பாடல்களில் பயின்று வந்துள்ளன..
- தலைவியின் இற்செறிப்பு தோழியால் மிக நயமாக விளக்கப்படுகிறது.

### 4.2.7 அருஞ்சொற் பொருள்

| | | |
|---|---|---|
| பண்ணியம் | - | பண்டங்கள் |
| ஓதம் | - | ஒலி |
| அற்சிரம் | - | முன்பனிக் காலம் |
| நுடங்கும் | - | அசையும் |
| தேயர் | - | தேயும் |
| தோல் | - | கேடயம் |
| சேக்கும் | - | தங்கும் |
| மூதில் | - | பழைய வீடு |
| பயிர்ந்து | - | விளித்து |
| உகிர் | - | நகம் |

### 4.2.8 மாதிரி வினாக்கள்

**அ. குறு வினக்கள்**

1. நற்றிணை பற்றிக் கூறுக.
2. நெய்தல் திணை என்றால் என்ன?
3. மருதத் திணையின் உரிப்பொருள் யாது?

**ஆ. சிறு வினாக்கள்**

1. குறித்த பருவத்தில் தலைவன் வந்ததைத் தோழி தலைவிக்கு உரைப்பது எங்ஙனம்?
2. நக்கீரரின் மருதத் திணைப் பாடற் கருத்துகள் யாவை?
3. வரைவு நீட்டித்தவிடத்து தலைவியைத் தோழி எவ்வாறு ஆற்றுவித்தாள்?

**இ. பெரு வினாக்கள்**

1. நெய்தல் திணைப்பாடல்களில் பயின்று வந்துள்ள உள்ளுறை உவமத்தை விளக்குக.

### 4.2.9 பரிந்துரை நூல்

நற்றிணை நானூறு, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், நான்காம் பதிப்பு, கழக வெளியீடு, சென்னை.

### 4.2.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

**அ. விடைகள்**

1. நற்றிணையின் மொத்தப் பாடல்கள் 400 ஆகும்.
2. நற்றிணையைத் தொகுப்பித்தவர் பன்நாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி.
3. நற்றிணையை 187 புலவர்கள் பாடியுள்ளனர்.

**ஆ. விடைகள்.**

1. சரி.
2 சரி.
3. தவறு
4. சரி
5. சரி

**நற்றிணை**

**நெய்தல்**

மா இரும் பரப்பகம் துணிய நோக்கி,
சேயிறா எறிந்த சிறு வெண் காக்கை
பாய் இரும் பனிக் கழி துழைஇ, பைங் கால்
தான் வீ ழ் பெடைக்குப் பயிரிடூஉ, சுரக்கும்
சிறு வீ ஞாழல் துறையுமார் இனிதே;
பெரும் புலம்பு உற்ற நெஞ்சமொடு, பல நினைந்து,
யானும் இனையேன்- ஆயின், ஆனாது
வேறு பல் நாட்டில் கால் தர வந்த
பல உறு பண்ணியம் இழிதரு நிலவுமணல்
நெடுஞ் சினைப் புன்னைக் கடுஞ் சூல் வெண் குருகு
உலவுத் திரை ஓதம் வெரூஉம்
உரவு நீர்ச் சேர்ப்பனொடு மணவா ஊங்கே. (31)

துறை : தலைவன் சிறைப்புறத்தானாக, தலைவி வன்புறை எதிர் அழிந்தது.

**பாலை**

அறவர், வாழி- தோழி! மறவர்
வேல் என விரிந்த கதுப்பின் தோல
பாண்டில் ஒப்பின் பகன்றை மலரும்
கடும் பனி அற்சிரம், நடுங்க, காண்தகக்
கை வல் வினைவன் தையுபு சொரிந்த
சுரிதக உருவின ஆகிப் பெரிய
கோங்கம் குவி முகை அவிழ, ஈங்கை
நல் தளிர் நயவர நுடங்கும்
முற்றா வேனில் முன்னி வந்தோரே! (86)

துறை : குறித்த பருவத்தின் வினைமுடித்து வந்தமை கேட்ட தோழி தலைவிக்கு உரைத்தது.

**பாலை**

'தோளே தொடி நெகிழ்ந்தனவே; நுதலே
பீர் இவர் மலரின் பசப்பு ஊர்ந்தன்றே;
கண்ணும் தண் பனி வைகின; அன்னோ!
தெளிந்தனம்மன்ற; தேயர் என் உயிர்' என.
ஆழல், வாழி- தோழி!- நீ; நின்
தாழ்ந்து ஒலி கதுப்பின் வீழ்ந்த காலொடு,
வண்டு படு புது மலர் உண்துறைத் தரீஇய,
பெரு மட மகளிர் முன்கைச் சிறு கோல்
பொலந் தொடி போல மின்னி, கணங் கொள்
இன் இசை முரசின் இரங்கி, மன்னர்
எயில் ஊர் பல் தோல் போலச்
செல் மழை தவழும் , அவர் நல் மலை நாட்டே..
(197)

துறை : வரைவு நீட ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது.

**நெய்தல்**

பல் பூங் கானல் பகற்குறி மரீஇச்
செல்வல் - கொண்க! - செறித்தனள் யாயே-
கதிர் கால் வெம்பக் கல்காய் ஞாயிற்றுத்
திருவுடை வியல் நகர் வரு விருந்து அயர்மார்,
பொற்றொடி மகளிர் புறங்கடை உகுத்த
கொக்கு உகிர் நிமிரல் மாந்தி, எல் பட
அகல் அங்காடி அசை நிழல் குவித்த
பச்சிறாக் கவர்ந்த பசுங் கட் காக்கை
தூங்கல் வங்கத்துக் கூம்பில் சேக்கும்
மருங்கூர்ப் பட்டினத்து அன்ன, இவள்
நெருங்கு ஏர் எல்வளை ஒடுவ கண்டே.
(258)

துறை: தோழி செறிப்பு அறிவுறீஇயது.

**மருதம்**

புல்லேன், மகிழ்ந! புலத்தலும் இல்லேன்-
கல்லா யானைக் கடுந் தேர்ச் செழியன்
படை மாண் பெருங் குள மடை நீர் விட்டென,
கால் அணைந்து எதிரிய கணைக் கோட்டு வாளை
அள்ளல் அம் கழனி உள்வாய் ஓடி,
பகடு சேறு உதைத்த புள்ளி வெண் புறத்து,
செஞ் சால் உழவர் கோல் புடை மதரி,
பைங் காற் செறுவின் அணைமுதல் பிறழும்
வாணன் சிறுகுடி அன்ன, என்
கோள் நேர் எல் வளை நெகிழ்ந்த நும்மே! (340)

துறை :பரத்தையின் பிரிந்து வந்த தலைமகனைத் தலைமகள் நொந்து சொல்லியது.

**நெய்தல்**

'பெருந் தோள் நெகிழ, அவ் வரி வாட,
சிறு மெல் ஆகம் பெரும் பசப்பு ஊர,
இன்னேம் ஆக, எற் கண்டு நாணி,
நின்னொடு தெளித்தனர் ஆயிடும், என்னதூஉம்,
அணங்கல் ஓம்புமதி, வாழிய நீர்! ' என,
கணம் கெழு கடவுட்கு உயர் பலி தூஉய்,
பரவினம் வருகம் சென்மோ- தோழி !-
பெருஞ் சேயிறவின் துய்த் தலை முடங்கல்
சிறு வெண் காக்கை நாள் இரை பெறூஉம்
பசும் பூண் வழுதி மருங்கை அன்ன, என்
அரும் பெறல் ஆய் கவின் தொலைய,
பிரிந்து ஆண்டு உறைதல் வல்லியோரே.(358)

துறை: பட்டபின்றை வரையாது பொருள்வயிற் பிரிந்த காலத்து, தோழி, 'இவள் ஆற்றாளாயினாள்;

இவளை இழந்தேன்' எனக் கவன்றாள் வற்புறுத்த; அக் காலத்து ஆற்றாளாய் நின்ற த லைமகள் தோழிக்குச் சொல்லியதூஉம் ஆம்.

**முல்லை**

கொடுங் கண் காக்கைக் கூர் வாய்ப் பேடை
நடுங்கு சிறைப் பிள்ளை தழீஇ, கிளை பயிர்ந்து,
கருங் கண் கருனைச் செந்நெல் வெண் சோறு
சூருடைப் பலியொடு கவரிய, குறுங் கால்
கூழுடை நல் மனைக் குழுவின இருக்கும்
மூதில் அருமன் பேர் இசைச் சிறுகுடி
மெல் இயல் அரிவை ! நின் பல் இருங் கதுப்பின்
குவளையொடு தொடுத்த நறு வீ முல்லைத்
தளை அவிழ் அலரித் தண் நறுங் கோதை
இளையரும் சூடி வந்தனர்; நமரும்
விரி உளை நன் மாக் கடைஇ,
பரியாது வருவர், இப் பனி படு நாளே. (367)

துறை :வரவு மலிந்தது.

**பிரிவு 111 குறுந்தொகை - பாட அமைப்பு**

4.3.1 நோக்கங்கள்
4.3.2 நூல் அறிமுகம்
4.3.3 பாடல் ஆசிரியர்
4.3.4 பாடப் பொருள் விளக்கம்
4.3.4.1 தோழி கூற்று.
4.3.4.2 தலைவி கூற்று.

4.3.4.3 தலைவன் கூற்று

4.3.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

4.3.6 பாடத் தொகுப்புரை

4.3.7 அருஞ்சொற் பொருள்

4.3.8 மாதிரி வினாக்கள்

4.3.9 பரிந்துரை நூல்

4.3.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

### 4.3.1 நோக்கங்கள்

- குறிஞ்சித் திணையின் இயற்கை காட்சிகளை அறிதல்.
- தோழி இரவுக்குறி மறுப்பு, தலைவியை ஆற்றுவித்தல், தலைவனை வரைவுக்குட்படுத்தல் ஆகிய நிலைகளில் தன் சொல்லாற்றலை வெளிப்படுத்துவதை உணர்தல்.
- தலைவி தலைவன் பொருட்டுத் தெய்வம் வேண்டல், தோழியிடத்து உரை நிகழ்த்தும் பான்மை ஆகியவற்றை அறிதல்.
- தலைவன் தலைவிக்காக மடலேறத் துணிதல், பாங்கனிடம் உரையாற்றும் விதம் ஆகியவற்றை அறிதல்.

### 4.3.2 நூல் அறிமுகம்

குறுந்தொகை 4 அடிச் சிற்றெல்லையும் 8 அடிப் பேரெல்லையும் கொண்ட 400 பாடல்களை உடையது. ஆனால் 402 பாடல்கள் காணப்படுகின்றன. இந்நூல் பாடல்களை 205 புலவர்கள் பாடியுள்ளனர். சில புலவர்களின் இயற்பெயர் தெரியவில்லை. பாட்டில் வரும் தொடரினையே பெயராக வைத்துள்ளனர். இந்நூலில் அதிகமான பாடல்களைப் பாடியவர் கபிலர் ஆவார். அவருடைய பாடல்கள் மொத்தம் 28 ஆகும். நல்ல என்னும் அடைமொழியே இந்நூலின் சிறப்பை விளக்குகிறது. இதனைத் தொகுப்பித்தவர் பூரிக்கோ.

### 4.3.3 பாடல் ஆசிரியர்

கடைச் சங்கப் புலவர்களில் தலைசிறந்தவர் கபிலர். இவர் பாரியின் உயிர் நண்பர். அவன் மறைவிற்குப் பின் அவனுடைய மகளிரை மணம் செய்விக்க முயன்ற செய்ந்நன்றியாளர். இவர் பத்துப்பாட்டில் குறிஞ்சிப் பாட்டு, எட்டுத்தொகையில் பல பாடல்கள், பதினெண் கீழ்க் கணக்கில் சில பாடல்கள் இயற்றியுள்ளார்.இவர் குறிஞ்சித் திணைப் பாடல்களையே அதிகமாகப் பாடியுள்ளார். எனவே குறிஞ்சிக்கோர் கபிலர் என்று அழைக்கப்பட்டார்.

### 4.3.4. பாடப் பொருள் விளக்கம்

கபிலர் ஒரே ஒரு பாடலைத் தவிர மற்ற பாடல்களைக் குறிஞ்சித் திணையில் பாடியுள்ளார். எனவே கூற்று வாயிலாகவும் துறைவாயிலாகவும் பாடப் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

#### 4.3.4.1 தோழி கூற்று.

**பாடல் (42)**

**துறை**

தலைவன் இரவில் தலைவியைச் சந்திக்க விரும்பிய பொழுது, தோழி அதனைக் குறிப்பால் மறுக்கிறாள்.

**பாடல் பொருள்**

நள்ளிரவில் இடியோடு மழை பெய்ததால் நீர் பெருகி வீழ்வதால் அருவி ஓசையை உடைய குறிஞ்சி நிலத்தின் தலைவனே! காமம் நீங்குவதாக இருந்தாலும்

உன்னிடத்தில் எம்முடைய நட்பும் தேயுமா? தேயாது என்று குறிப்பால் நெருக்கம் இல்லையென்றாலும் நட்பு அழியாது என்பதை உணர்த்தி இரவுக்குறியை மறுக்கிறாள்.

**பாடல் (355)**

**துறை**

இரவுக்குறியில் தலைவன் வர, இம்மழை பெய்யும் நள்ளிரவில் எவ்வாறு வந்தனை என்று நொந்து கூறியது.

**பாடல் பொருள்**

ஓங்கிய மலை நாட்டுத் தலைவனே! மழை, இடத்தை மறைப்பதால் வானத்தைக் காணவில்லை. அம்மழை நீர் எங்கும் பரந்து ஓடுவதால் நிலத்தைக் காணவில்லை. சூரியன் மறைந்ததால் இருள் சூழ்ந்துள்ளது. இந்நிலையில் பலரும் தூங்கும் நள்ளிரவில் எவ்வாறு வந்தாய்? வேங்கை மலர் மணம் வீசும் எம் சிற்றூரை எவ்வாறு அறிந்தாய்? நான் வருந்துகின்றேன் என்று தலைவனிடம் கேட்கின்றாள்.

**பாடல் (198)**

**துறை**

நாங்கள் தினைப்புனம் காக்கச் செல்கிறோம். இவ்விடத்திற்கு எம் தாய் வருவாள். எனவே நீ அங்கு வருக எனக் குறி இடத்தை மாற்றிக் கூறியது.

**பாடல் பொருள்**

யாமரத்தை வெட்டிச் சுட்டக் காட்டு வழியில், கரும்பின் அடி போன்றும், பசுமையான காம்பையும் உடைய சிவந்த தினையின், பெண் யானையின் வளைந்த கையைப் போன்று வளைந்த பால் நிறைந்த பசுமையான கதிர்க் குலைகளில் வந்து சேரும் கிளிகளை ஓட்டுவதற்காக அந்த இடத்திற்குச் செல்வோம். இந்த இடத்திற்கு எம் தாய் வருவாள். பகைவரை வெல்லும் வேற்படை விளங்கும் கைகளையுடைய மலையன் என்பவனுடைய காட்டில் வளர்ந்த சந்தனம் மணக்கும் மார்பினை உடையவராய் நீ வாராதே என்று தலைவனிடம் குறி இட மாற்றத்தைக் கூறுகிறாள்.

**பாடல் (357)**

**துறை**

வரையாது வந்து ஒழுகும் தலைவன் சிறைப்புறமாக நிற்க, தலைவியிடம் கூறியது.

**பாடல் பொருள்**

மூங்கில் போன்ற தோள்கள் நெகிழ, துன்பத்தால் வருந்தி உறங்காத மை தீட்டப்பட்ட கண்களில் இருந்து விழும் நீரால் மெலிந்த தேகம் ஆயின. சிறு தினை காக்கின்ற பரணின் மேல் குறவன் ஏற்றிய கொள்ளிக் கட்டைக்கு அஞ்சிய யானை, விண்மீன் விழுவதால் உண்டாகும் ஒளியைக் கண்டு அஞ்சி வானத்தை அளாவிய மலைநாட்டுத் தலைவன் உன்னைச் சேர்வதற்கு முன்பு இவை நல்லன என்று கூறப்படும் சொற்களை உடையன என்று தலைவன் கேட்குமாறு தலைவிக்குக் கூறுகிறாள்.

**பாடல் (18)**

**துறை**

இரவில் வந்து தலைவியைக் கண்டு செல்லும் தலைவனை விரைவில் மணந்து கொள்ளுமாறு வற்புறுத்தியது.

**பாடல் பொருள்**

யாரும் வளர்க்காமல் தானே வளர்ந்த மூங்கிலை வேலியாக உடைய பலா மரங்கள் நிறைந்த மலைச்சாரல் நாட்டோனே! மலைச்சாரலில் பலாமரத்தின் சிறிய கொம்பில் பெரிய பழம் தொங்கிக் கொண்டு இருப்பது போல எம் தலைவியின் உயிர் மிகச் சிறியது. ஆனால் அவள் உம் மீது கொண்ட காமமோ பெரியது. அந்த

நிலையை அறிந்தவர் ஒருவருமில்லை என்று தோழி கூறுவதன் மூலம் தலைவியைத் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்துகிறாள்.

**பாடல் (246)**

**துறை (நெய்தல் திணை)**

இரவுக் குறி வந்த தலைவன் சிறைப்புறமாக இருக்கத் தலைவி தோழிக்குக் கூறுவது போலக் காவல் மிகுதியைத் தலைவனுக்கு உணர்த்தியது.

**பாடல் பொருள்**

தோழி!பெரிய கடற்கரையில் சிறிய வெண்காக்கை பசுமையான இலைகள் உள்ள குளிர்ந்த கழிநீரை இரைக்காகத் துழாவும் நள்ளிரவு வேளையில் தனியாக ஒரு தேர் இங்கு வந்து செல்கிறது என்று அயலார் கூறுவர். அது முதல் தாய் என்னைத் துன்புறுத்துகிறாள். பின்னிய கூந்தலும் ஆபரணமும் அணிந்த பெண்கள் கூட்டத்தில் இளையவரும் மடப்பம் உடையவரும் இருக்கின்றனர். அவர் தம்மை வருத்தாத தாயரோடு நல்வினை உடையவராவர் என்று தோழிக்குத் தலைவி கூறுகிறாள்

**பாடல் (225)**

**துறை**

வரைவின் காரணமாகப் பிரியும் தலைவனிடம் தோழி கூறியது.

**பாடல் பொருள்**

யானையின் கன்று தாயின் பாலுள்ள முலையைப் பற்றி நிற்க, தாய் யானை வீட்டின் முன்றிலில் உள்ள தினையை உண்ணும் பெரிய மலை நாடனே! வறுமைக் காலத்தில் பிறர் உதவி பெற்று, அரசுக் கட்டில் சிறப்பைப் பெற்றுப் பிறகு மறந்துவிட்ட அரசன்போல நீ யாம் செய்த நன்றியை மறந்து வரைவினை நீட்டித்தாலும் தலைவியின் மயில் பீலி போன்ற மென்மையான கூந்தல் உமக்கே உரிமையானது என்று தோழி கூறுவதன் மூலம் தலைவியை விரைவில் மணந்து கொள்ள வேண்டும் என்கிறாள்.

**பாடல் (115)**

**துறை**

தலைவனுடன் தலைவியை உடன்போக்கிய தோழி மீண்டு வரும் பொழுது கூறியது.

**பாடல் பொருள்**

அசையும் மூங்கில்கள் வளர்ந்த, குளிர்ந்த மணம் வீசும் மலையில் காட்டுப் பசு இலைகளை விரும்பி உண்டு துயிலும் மலை நாட்டுத் தலைவனே! பெரிய நன்மை ஒன்றை நமக்குச் செய்தவரை எல்லோரும் போற்றுவர். இத்தலைவியிடம் சிறிய நன்மை பெற்ற (முதுமை) காலத்திலும், உம்முடன் கருத்து வேறுபடினும் இவளுடைய பிணக்கம் நீக்கிப் பாதுகாப்பாயாக. இவள் உம்மை அன்றி வேறு பற்றுக்கோடு இல்லாதவள் என்று தோழி உடன் போக்கின் பொழுது தலைவனிடம் கூறுகிறாள்.

### 4.3.4.2 தலைவி கூற்று.

**பாடல் (13)**

**துறை**

தலைவன் தலைவியைக் கூடிப் பிரியும் பொழுது, என் பிரிவைத் தோழியருடன் கூடி ஆற்றுக என்று கூறிச் செல்கிறான். தலைவியும் அவர்களுடன் விளையாடியும் நீங்காது, தலைவன் பிரிவை எண்ணி வருந்துவதை அறிந்த தோழிக்குத் தலைவி கூறியது.

**பாடல் பொருள்**

தோழி! மேலே படிந்துள்ள புழுதியைப் பாகனால் கழுவப்பட்ட யானையைப் போல மிகுந்த மழையால் தூய்மை அடைந்த கரிய பசுமை சூழ்ந்த மலைநாட்டுத்

தலைவன், எனக்குக் காம நோய் தந்தான். எனவே முன்பு குவளை மலர் போன்று கருத்து இருந்த அழகிய என்னுடைய கண்கள் இப்பொழுது பசலை நிறம் அடைந்துள்ளன என்று தன் வருத்தத்தைத் தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

**பாடல் (106)**

**துறை**

பரத்தையிடம் பிரிந்த தலைவன் தான் குறைவில்லாத அன்புடையவன் என்று தூது விடுக்க தலைவி தோழிக்குக் கூறியது.

**பாடல் பொருள்**

தோழி! மலையில் படர்கின்ற இற்றி மரத்தினது சிறிய வெண்மையான வேரானது மலையருவி போலத் தோன்றும் நாட்டின் தலைவன் குற்றமில்லாத தன் நெஞ்சின் சொற்களை எடுத்துச் சொல்லும் தூது நம்மிடம் வந்துள்ளது. நாமும் நெய்யை ஏற்கின்ற தீப் போல அத்தூதை ஏற்றுக் கொண்டு அவன் எம்மை மணந்தபோது கொண்டிருந்த அன்பு நிலையை அடைந்தேன் எனக் கூறித் தூது விடுவோம் என்று தோழியிடம் தலைவி கூறுகிறாள்.

**பாடல் (121)**

**துறை**

தலைவன் செய்த குறி என்று நினைத்துப் பிறிதொரு குறி இடத்துச் சென்று அவனைச் சந்திக்காமல் மீண்ட தலைவி பின்னொரு நாள் அவன் வந்ததைக் கூறிய தோழியிடம் கூறியது.

**பாடல் பொருள்**

தோழி! இப்பொழுது தலைவன் வந்ததாக நீ கூறியது உண்மையோ? முன்பு மலைப்பக்கத்தில் கரிய முகமுடைய ஆண் குரங்கு தாங்கும் கிளை தெரிந்து பாயாத தவற்றால் முறிந்த அக்கொம்பின் மீது சென்றது போலத் தலைவன் குறி பொருந்துமாறு செய்யாத தவற்றினால் என் பரந்த மெல்லிய தோள்கள் பசலை அடைந்தன என்று தன் வருத்தத்தைக் கூறுகிறாள்.

**பாடல் (153)**

**துறை**

தலைவன் மணந்து கொள்ளாமல் நெடுங்காலம் வந்து உரையாடுவதால் வருந்திய தலைவி அவர் வரும் வழியின் துன்பம் அறிந்து எனக்கு ஆற்றாமை உண்டாகிறது என தோழிக்குக் கூறியது.

**பாடல் பொருள்**

தோழி! என் செஞ்சம் குன்றில் உள்ள ஆந்தை ஒலித்தாலும் முற்றத்தில் உள்ள பலா மரத்தின் பெரிய கிளையில் ஆண் குரங்கு தாவித் துள்ளினாலும் அஞ்சும். ஆனால் இப்பொழுது செல்வதற்கரிய இருண்ட இரவில், மலைச்சாரலின் நெடுவழியில் செல்வதை விடுவதில்லை எனத் தன் ஆற்றாமையைத் தோழியிடம் கூறுகிறாள்.

**பாடல் (187)**

**துறை**

வரைவு காரணமாகப் பிரிந்த தலைவன் காலம் நீட்டிக்க அவன் மீது தோழி குறை கூறத் தலைவி விரைவில் அவர் வருவார் என்று கூறியது.

**பாடல் பொருள்**

தோழி! மலைப்பக்கத்தில் தங்கும் வருடை மானின் குட்டி, தன் தாயின் பாலை வயிறார உண்டு பெரிய மலைப்பக்கத்தில் உள்ள நிழலில் துள்ளும் நாட்டிற்குத் தலைவன். அவன் கல்லினும் வலிமையானவன். அவன் வலிமையை எண்ணாமல் என்

நெஞ்சு அவன் திறத்து மெலிவடைகிறது என்று தோழியிடம் அவர் பொருளீட்டி வந்து எம்மை மணப்பார் என்று குறிப்பால் உரைக்கிறாள்.

**பாடல் (288)**

**துறை**

தலைவன் வரவு உணர்ந்து, அவன் அன்பிலன் என்று கூறிய தோழிக்குத் தலைவி கூறியது.

**பாடல் பொருள்**

தோழி! மிளகுக்கொடி படர்ந்த மலையில் தளிரை உண்ணும் குரங்குகள் ஒன்றாகத் திரண்டு உள்ள மலை நாட்டின் தலைவன் பரத்தையிடம் சென்றாலும் நம்மீது இனிமை உடையவன். எனவே உறவினரால் ஏற்படும் துன்பத்தைவிட இனியது என்று போற்றப்படும் தேவர் உலகம் இனியதோ?என்று தோழிக்குக் கூறுகிறாள்.

**பாடல் (25)**

**துறை**

தலைவன் வரைவு நீட்டித்த பொழுது தலைவி தோழிக்குக் கூறியது

**பாடல் பொருள்**

தோழி! தலைவன் என்னைக் களவில் மணந்த பொழுது அதற்குச் சாட்சியாக யாரும் இல்லை. அவன் அதைப் பொய்த்துவிட்டதால் நான் என்ன செய்வேன். தினையின் அடி போன்ற சிறிய பசுமையான கால்களை உடைய நாரை, ஓடும் நீரில் ஆரல் மீன் வரவை எதிர்பார்த்து நின்று இருந்தது. அது ஒன்று தான் எங்கள் களவு மணத்திற்குச் சாட்சி என்று தலைவி தோழிக்குக் கூறினாள்.

**பாடல் (38)**

**துறை**

தலைவன் வரைவு நீட்டித்த பொழுது தலைவி ஆற்றாமை தோன்ற தோழிக்குக் கூறியது

**பாடல் பொருள்**

தோழி! காட்டிலுள்ள மயில் பாறையில் ஈன்ற முட்டைகளைக் கருங்குரங்கின் குட்டி வெயிலில் உருட்டி விளையாடும் மலைநாட்டிற்குத் தலைவன் பிரிந்ததால் மை தீட்டப்பட்ட கண்ணில் இருந்து பெருகும் நீரோடு அவனது பிரிவை நினைத்து நினைத்து வருந்தாமல் பொறுத்திருக்கும் வல்லமை உடையவருக்கு மட்டுமே எப்பொழுதும் நல்லது என்று தோழிக்குக் கூறுகிறாள்.

மயில் அடைகாக்க வேண்டிய முட்டை காக்கப்படாமல் பாறையின் மீது தனியாக இருக்க அதனைக் குரங்குக் குட்டி எடுத்து உருட்டி விளையாடுவது என்பது தலைவி தனித்து இருந்து துன்பம் அடைய தலைவன் காப்பாற்றாமல் அலர் தூற்றும் துன்பத்திற்கு ஆளாகிறாள் என்பது நயம்.

**பாடல் (87)**

**துறை**

தலைவன் தெய்வத்தைக் காட்டிச் சூளுரைத்துப் பின் பிரிவை நீட்டிக்க, பிறகு அவன் சூளுரை பொய்த்ததால் தெய்வம் அவனைத் தண்டிக்குமோ என்று அஞ்சித் தலைவி தெய்வத்தை வேண்டியது.

**பாடல் பொருள்**

மன்றத்தில் உள்ள மரா மரத்தில் குடி கொண்டுள்ள பிறருக்கு அச்சத்தைத் தரும் முதிர்ந்த தெய்வம், கொடுமை செய்பவரைத் துன்புறுத்தும் என்று அறிந்தோர் கூறுவர். குன்றுகள் நிறைந்த நாட்டின் எம் தலைவன் சிறிதும் கொடியவர் அல்லர்.

என் நெற்றி நான் அவரை விரும்பியதால் பசலை அடைந்தது. என் மனம் அவரிடத்து நெகிழ்ந்தமையால் அகன்ற மென்மையான என் தோள்கள் மெலிந்தன.

தலைவன் சூளுரையைப் பொய்த்ததனால் துன்புறுத்துமோ என அஞ்சிய தலைவி அவனைப் பாதுகாக்க வேண்டி இவ்வாறு கூறி வணங்குகிறாள்.

**பாடல் (208)**

**துறை**

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த காலத்தில் ஆற்றாத தலைவியை ஆற்றுமாறு தோழி கூற, ஆற்றேன் என்று தலைவி கூறுகிறாள்.

**பாடல் பொருள்**

தோழி! நான் தலைவனுடன் பொருந்தாதவள் அல்ல. பொருந்தும் இயல்பினள். எனினும் நொதுமலர் வரைவு (பிறருடனான திருமணம்) ஏற்படுகிறது., மலையில் ஒன்றோடு ஒன்று போரிட்ட யானைகளால் மிதிக்கப்பட்ட வலிய அடியையுடைய வேங்கை மரம், குறமகளிர் கூந்தலில் அணிந்து கொள்வதற்காக, நின்றவாறே மலர்களைப் பறிக்கும்படி தாழ்ந்து இருக்கும். அத்தகு வேங்கை மரங்களுள்ள நாட்டிற்குத் தலைவனோடு பொருந்த மாட்டேன் என்று தன் ஆற்றாமையைத் தோழிக்குக் கூறுகிறாள் தலைவி.

**இறைச்சிப் பொருள்.**

யானையால் மிதிக்கப்பட்ட வேங்கை அதன் பின்பும் பறிப்பதற்கு எளிதாகி தாழ்ந்து மலரும் என்றது தலைவன் அல்லாத பிறர் மணம் பேசி வந்ததால் அச்சமுற்ற யான் அதுவே காரணமாக விரைந்து மணந்து கொண்டு எளிதில் இன்பம் அடைவதற்கு உரியவள் ஆனேன்.

**பாடல் (241)**

**துறை**

பிரிவில் ஆற்றாள் என்று கவன்ற தோழிக்குத் தலைவி தன் நிலையைக் கூறி வருந்தியது.

**பாடல் பொருள்**

தோழி! நான் என் காம நோயைப் பொறுத்துக் கொண்டு ஆற்றி இருக்கிறேன். கன்றுகளை மேய்ச்சலுக்கு உரிய வழியில் செலுத்திய சிறிய தலையை உடைய சிறுவர்கள், மன்றத்தில் உள்ள வேங்கை மரத்தில் மலர்ந்த மலர்களின் சிறப்பைக் கண்டும், அம்மரத்தின் மேல் ஏறாமல், மரத்தின் அடியில் நின்று செய்யும் ஆரவாரம் வானளவு உயர்ந்துள்ள மலைக் குகையில் எதிரொலிக்கும் குன்றுகள் நிறைந்த நாட்டிற்குத் தலைவன். அவனைக் கண்ட என் கண்கள் அவன் பிரிந்ததால் அழுகின்றன என்று வருந்தி தோழியிடம் தலைவி கூறுகிறாள்.

**பாடல் (249)**

**துறை**

தலைவன் வரைவின் பொருட்டுப் பிரியும் காலத்தில் நீ ஆற்றுவாயோ என்று கேட்ட தோழிக்கு ஆற்றுவேன் என்று தலைவி கூறியது.

**பாடல் பொருள்**

தோழி1 மயில்கள் ஆரவாரிக்கும் மரங்கள் நிறைந்த காட்டில், வெண்முகக் கருங்குரங்கு குட்டிகளுடன் குளிரால் நடுங்கும்படி ஒலிக்கின்ற மழை பெய்த மலைச் சாரலுள்ள தலைவனது நாட்டில் உள்ள குன்றத்தைப் பார்த்தேன். அதனால் ஒளியற்ற பசலை படர்ந்த என் நெற்றி பசலை நீங்கி மீண்டும் பழைய நிலையை அடைந்ததோ? காண்பாயாக என்று தலைவி தலைவன் குன்றம் நோக்கி ஆற்றியிருக்கும் தன்மையைத் தோழிக்குக் கூறுகிறாள்.

பாடல் (264)

**துறை**

தலைவன் பிரிவால் தலைவியின் நிறம் வேறுபட, ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கூறியது.

**பாடல் பொருள்**

தோழி! ஆரவாரமுடைய மழை நீருடைய காட்டாற்றின் தாழ்ந்த கரையில், ஆடும் மயில் நீண்ட தழைத்த தோகை அசைய நடந்து, கூவும் நாடன். அவன் நம்முடன் விரும்பி உண்டாக்கிக் கொண்ட நட்பு, நாம் பசலை அடைந்தாலும் அதனுடன் பொருந்தாது.

தன் நிறம் மாறினாலும் தலைவன் மீது கொண்ட நட்பில் உறுதியுடன் ஆற்றியிருப்பேன் என்று தலைவி தோழிக்குக் கூறுகிறாள்.

பாடல் (385)

**துறை**

வேற்று வரைவு வந்ததை அறிந்த தலைவி தோழியை அறத்தோடு நின்று அதனை மாற்றும்படி கூறியது.

**பாடல் பொருள்**

பலா மரத்தின் பழத்தை உண்ட ஆண் குரங்குகள் சிலை மரத்தால் செய்த வில்லுடைய வேட்டுவனின் குறி தப்பாத அம்புகளுக்குப் பயந்து போர்க்களத்தில் உள்ள குதிரையைப் போல மேலே எழுந்து சாரலில் உள்ள மூங்கிலின் நீண்ட கோல் அசையப் பாயும் மலைநாட்டுத் தலைவன் எப்பொழுதும் அன்று இருந்தாற் போல வேறுபாடு இல்லாத நட்பினை உடையவன். இவ்வாறு இருக்க இவ் ஆரவாரம் மிக்க ஊரானது புதிய வரைவுகளை உடையது என்று கூறுவதன் மூலம் புதிய வரைவினை மாற்ற வேண்டும் என்ற தன் உள்ளக் கருத்தைத் தோழிக்கு உணர்த்துகிறாள்.

பாடல் (361)

**துறை**

வரைவுக்குரிய முயற்சிகள் நடைபெறத் தோழி தலைவியிடம் நீ நன்கு ஆற்றியிருந்தாய் என்று சொல்லியதற்குத் தலைவி கூறியது.

**பாடல் பொருள்**

தோழி தலைவனுடைய மலையில் மாலைக்காலத்தில் பெய்த மழையால் உண்டாகிய நறுமணம் கமழும் அருவியால் காலையில் இங்கு வந்த காந்தளின் மெல்லிய இலையானது குழையும் படியாகத் தழுவுதலையும், வீட்டிற்குக் கொண்டு வந்து அதன் கிழங்கை நடுவதையும் நீக்காத தாய்க்கு உயர்ந்த தேவர் உலகம் கைம்மாறாகக் கருதினால் அது சிறியதாகும் என்று தலைவி தலைவன் மலையில் இருந்து அருவியால் வந்து சேர்ந்த காந்தள் மலரைத் தழுவி ஆற்றி இருப்பேன் என்று தோழிக்குக் கூறுகிறாள்.

**4.3.4.3 தலைவன் கூற்று**

பாடல் (142)

**துறை**

தலைவியைக் கண்டு பேசி மகிழ்ந்து நீங்கும் தலைவன் கூறியது.

**பாடல் பொருள்**

நடு இரவில் தூங்கும் யானையைப் போலப் பெருமூச்சு விட்டுக் கொண்டுள்ள என் நெஞ்சம் நான் தலைவியைக் கண்டு பேசி பிரிந்து வந்த பின்பும் அந்த இடத்திலேயே இருக்கிறது. இதைத் தலைவி அறிந்தாலோ இல்லையோ என்று தலைவன் கூறுகிறான்,

பாடல் (312)

**துறை**

இரவுக் குறிக்கண் தலைவியைக் கண்டு நீங்கும் தலைவன் தன் நெஞ்சிடம் திருமண வேட்கையைக் கூறியது.

**பாடல் பொருள்**

நெஞ்சே! நம் தலைவி இருவேறு பட்ட ஒழுக்கத்தை அறிந்தவள்.இரவில் வலிமை உடைய மலையனது முள் நிறைந்த மலைக்காட்டிலுள்ள நறுமணம் போல் மணம் வீசுமாறு வந்து நம்முடன் பொருந்தினாள். விடியற்காலத்தில் நான் அவளுக்கு அணிந்த மலர்களை உதிர்த்து விட்டு கூந்தலில் எண்ணெயைத் தடவிப் பொருந்தாத முகத்துடன் தன் உறவினருடன் சேர்ந்தவளானாள் என்று தன் நெஞ்சிடம் கூறுகிறான்.

பாடல் (95)

**துறை**

தனது வேறுபாடு கண்டு வினவிய பாங்கனுக்குத் தலைவன் கூறியது.

**பாடல் பொருள்**

தோழ! பெரிய மலையிலிருந்து விழுகின்ற வெள்ளருவி ஒலிக்கும் பல மலர்களை உடைய சாரலில் உள்ள சிற்றூரில் வாழும் குறவனின் சிறிய மகளின் நீரைப் போன்ற மென்மை தீயைப் போன்ற என் வலிமையை அழித்தது என்று தன் வேறுபாட்டிற்கான காரணத்தைத் தலைவன் பாங்கனிடம் கூறுகிறான்.

பாடல் (291)

**துறை**

தலைவன் பாங்கனுக்குத் தலைவி இவ்விடத்தைச் சேர்ந்தவள் இவ்வியல்பினள் என்று கூறியது.

**பாடல் பொருள்**

நண்ப! மரங்களைச் சுட்டுப் பண்படுத்திய கொள்ளையில் தழைத்த தினையைக் கவருகின்ற கிளிகளை ஓட்டும் தலைவியின் கைகளில் உள்ள ‘குளிர்’ என்னும் கருவி இனிய இசையும் தாளமும் உடையது. அக்குளிர் கருவியின் ஓசையை அவள் பாட்டின் தாளம் என்று எண்ணிக் கிளிகள் நீங்காது இருந்தன. அதனால் அழுத அவளுடைய கண்கள் மலைப்பக்கத்திலுள்ள சுனையில் பூத்த குவளை மலர்களைப் போன்றன என்று தலைவியின் இயல்பினைத் தலைவன் பாங்கனுக்குக் கூறுகிறான்.

பாடல் (100)

**துறை**

தலைவன் பாங்கனுக்குத் தன் காதலைக் கூறியது

**பாடல் பொருள்**

தோழ! அருவி பாயும் நிலத்தில் மலை நெல்லை விதைத்துக் களையாக முளைத்த மலை மல்லிகை மற்றும் மரலைக் கொடியைக் களைவர். காந்தள் மலரையே இயற்கை வேலியாகக் கொண்ட சிற்றூரில் உள்ளவர் வசித்தபோது யானையின் கொம்பை விற்று அதனால் வரும் உணவை உண்ணுவதற்கு இடமாகிய ஓரியினது கொல்லி மலையின் பாதையைப் போல விரும்பிய தலைவி மடப்பம் வரப்பெற்றாள். அவளுடைய மூங்கில் போன்ற பெரிய தோள்கள் தழுவுவதற்கு உரியன ஆகும் என்று தன் காதலைத் தலைவன் பாங்கனிடம் கூறுகிறான்.

### 4.3.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

**அ. வினாக்கள்**

1. குறுந்தொகையின் அடி எல்லை யாது?

2. குறுந்தொகையில் கிடைத்த மொத்தப் பாடல்கள் எத்தனை?

3. குறுந்தொகையில் அதிகமாக யாருடைய பாடல்கள் உள்ளன?

4. கபிலர் யாரிடம் செய்ந்நன்றியுடையவராக இருந்தார்?

5. கபிலர் பாடிய பத்துப்பாட்டு நூல் எது?

**ஆ சரியா? தவறா?**

1. தலைவன் தரும் இன்பத்தை விட தேவர் உலகம் இனியதோ? என்று தலைவி கூறினாள்.
2. தலைவியைத் தலைவன் யாருமறியாமல் மணந்த பொழுது அங்கிருந்தது நாரை ஆகும்.
3. தலைவனின் நண்பன் பாங்கன் ஆவான்.
4. கபிலரின் உற்ற நண்பர் நக்கீரர் ஆவார்.
5. தலைவி தலைவனின் பொய்யான சூளுக்காகச் சினந்தாள்.

### 4.3.6 பாடத் தொகுப்புரை

- கபிலர் அதிகமாகக் குறிஞ்சித் திணையில் பாடல்கள் பாடியுள்ளார்.
- கபிலர் தலைவி கூற்றுப் பாடல்களை மிகுதியாகப் பாடியுள்ளார்.
- தலைவி கூற்று வழி அவள் தலைவன் மீது வைத்துள்ள நீங்காத அன்பு புலப்படுகிறது.
- தலைவன் தன் நண்பனிடம் தலைவி மீது கொண்ட காதலை வெளிப்படுத்துகிறான்.
- இயற்கைப் பொருள்களை உவமைகளாகக் கையாண்டுள்ளமை சிறப்பாக அமைந்துள்ளது.

### 4.3.7 அருஞ்சொற் பொருள்

| | | |
|---|---|---|
| பெயல் | - | மழை |
| சிறு கோட்டு | - | சிறிய கொம்பு |
| ஒழுகு | - | ஓடுகின்ற |
| முசுவின் குருளை | - | கருங்குரங்கின் குட்டி |
| யாமம் | - | நடு இரவு |
| நுதல் | - | நெற்றி |
| உரன் | - | வலிமை |
| வேழம் | - | யானை |
| துஞ்சும் | - | உறங்கும் |
| தப்பல் | - | தவறு |
| கங்குல் | - | இரவு |
| உகளும் | - | துள்ளும் |
| தடக்கை | - | வளைந்த கை |
| ஒன்றேன் | - | பொருந்தேன் |
| இயம்பும் | - | எதிரொலிக்கும் |
| கதுப்பு | - | கூந்தல் |
| பார்ப்பு | - | குட்டி |
| புத்தேள் | - | தேவர் உலகம் |
| துப்பு | - | வலிமை |

ஞெகிழி - கொள்ளிக்கட்டை

### 4.3.8 மாதிரி வினாக்கள்

**அ. குறு வினாக்கள்**

1. ‘இவள் உயிர் தவச் சிறிது காமமோ பெரிது’ என்று தோழி தலைவனிடம் கூறக் காரணம் யாது?
2. களவு மணத்திற்குச் சாட்சியாகத் தலைவி கூறுவது எதனை?
3. தலைவி தன் ஆற்றாமையை எதனைப் போலப் பொறுத்துக் கொள்ள மாட்டேன் என்கிறாள்.?
4. தோழி குறி இட மாற்றத்தைத் தலைவனிடம் கூறக் காரணம் யாது?
5. தலைவி இதனை அறிந்தாளோ? இல்லையோ? என்று தலைவன் பாங்கனிடம் ஏன் கூறுகிறான்?

**ஆ. சிறு வினாக்கள்.**

1. தோழி இரவுக் குறியைக் குறிப்பால் மறுப்பது எங்ஙனம்?
2. தலைவன் வரைவிடை பிரியும் பொழுது தோழி கூறுவது யாது?
3. தலைவன் வரைவிடை பிரிந்து காலம் நீட்டித்த பொழுது தலைவி தோழியிடம் தலைவனைப் பற்றிக் கூறுவது என்ன?
4. தலைவி தன் தாய்க்குத் தேவர் உலகம் கைம்மாறாகக் கருதக் காரணம் யாது?
5. தலைவன் தன் நெஞ்சிடம் கூறியது யாது?

**இ. பெரு வினாக்கள்**

1. தலைவன் பிரிவில் ஆற்றுவாயோ? எனக் கேட்ட தோழிக்குத் தலைவி கூறியவை யாவை?
2. தலைவன் பாங்கனிடம் உரைத்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

### 4.3.9 பரிந்துரை நூல்

குறுந்தொகை மூலமும் பழைய உரையும், உ.வே. சாமிநாதையர் பதிப்பாசிரியர், கபீர் அச்சுக்கூடம், சென்னை.

### 4.3.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

**அ. விடைகள்**

1. குறுந்தொகையின் அடிஎல்லை 4அடி முதல் 8அடி வரை.
2. குறுந்தொகையில் கிடைத்த மொத்தப் பாடல்கள் 402.
3. குறுந்தொகையில் அதிகமாகக் கபிலருடைய பாடல்கள் உள்ளன.
4. கபிலர் பாரியிடம் செய்ந்நன்றியுடையவராக இருந்தார்.
5. கபிலர் பாடிய பத்துப்பாட்டு நூல் குறிஞ்சிப் பாட்டு.

**ஆ. விடைகள்.**

1. சரி
2. சரி.
3 சரி.
4. தவறு.
5. தவறு.

## குறுந்தொகை

### குறிஞ்சி

மாசு அறக் கழீஇய யானை போலப்
பெரும் பெயல் உழந்த இரும் பிணர்த் துறுகல்
பைதல் ஒரு தலை சேக்கும் நாடன்
நோய் தந்தனனே - தோழி
பசலை ஆர்ந்த, நம் குவளை அம் கண்ணே. (13)

துறை : தலைவைன் தோழியிற் கூட்டம் கூடி, ஆற்றும் வகையான் ஆற்றுவித்துப் பிரிய, வேறு பட்ட கிழத்தி தோழிக்கு உரைத்தது.-

### குறிஞ்சி

வேரல் வேலி வேர்க் கோட் பலவின்
சாரல் நாட1 செவ்வியை ஆகுமதி1
யார் அஃது அறிந்திசினோரே?- சாரல்
சிறு கோட்டுப் பெரும் பழம் தூங்கியாங்கு, இவள்
உயிர் தவச் சிறிது; காமமோ பெரிதே1 (18)

துறை : இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு, வரைவு கடாயது.

### குறிஞ்சி

யாரும் இல்லை; தானே கள்வன்;
தான் அது பொய்ப்பின், யான் எவன் செய்கோ ?
தினைத் தாள் அன்ன சிறு பசுங் கால
ஒழுகு நீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு, தான் மணந்த ஞான்றே. (25.)

துறை : வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.-

### குறிஞ்சி

கான மஞ்ஞை அறை ஈன் முட்டை
வெயில் ஆடு முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்றுமன் வாழி-தோழி1- உண்கண்
நீரொடு ஒராங்குத் தணப்ப,
உள்ளாது ஆற்றல் வல்லுவோர்க்கே. (38)

துறை : வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தனது ஆற்றாமை தோன்றத் தோழிக்குக் கூறியது.

### குறிஞ்சி

காமம் ஒழிவதுஆயினும்- யாமத்துக்
கருவி மா மழை வீழ்ந்தென, அருவி
விடரகத்து இயம்பும் நாட1- எம்
தொடர்பும் தேயுமோ, நின்வயினானே ? (42)

துறை: இரவுக்குறி வேண்டிய கிழவற்குத் தோழி நேர்ந்த வாய்ப்பாட்டான் மறுத்தது.

குறிஞ்சி

மன்ற அரா அத்த பேஎம் முதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம்' என்ப; யாவதும்
கொடியர் அல்லர் எம் குன்று கெழு நாடர்;
பசைஇப் பசந்தன்று, நுதலே
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தட மென் தோளே. (87)

துறை : தலைமகள் தெய்வத்திற்குப் பரா அயது.

குறிஞ்சி

மால் வரை இழிதரும் தூ வெள் அருவி
கல் முகைத் ததும்பும் பல் மலர்ச் சாரற்
சிறுகுடிக் குறவன் பெருந் தோட் குறுமகள்
நீர் ஓரன்ன சாயல்
தீ ஓரன்ன என் உரன் அவித்தன்றே. (95)

துறை : தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

குறிஞ்சி

அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்
பரு இலைக் குளவியொடு பசு மரல் கட்கும்
காந்தள் அம் சிலம்பில் சிறுகுடி பசித்தென,
கடுங் கண் வேழத்துக கோடு நொடுத்து உண்ணும்
வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந்தனளே-
மணத்தற்கு அரிய, பணைப் பெருந் தோளே. (100)

துறை : பாங்கற்கு உரைத்தது; அல்லகுறிப்பட்டு மீள்கின்றான் தன் நெஞ்சிற்குச் சொல்லியதூஉம் ஆம்.

குறிஞ்சி

புல் வீழ் இற்றிக் கல் இவர் வெள் வேர்
வரை இழி அருவியின் தோன்றும் நாடன்
தீது இல் நெஞ்சத்துக் கிளவி நம் வயின்
வந்தன்று-வாழி, தோழி1- நாமும்
நெய் பெய் தீயின் எதிர்கொண்டு,
'தான் மணந்தனையம்' என விடுகம் தூதே. (106)

துறை : தலைமகன் தூது கண்டு, கிழத்தி தோழிக்குக் கூறியது.

குறிஞ்சி

பெரு நன்று ஆற்றின், பேணாரும் உளரே ?
ஒரு நன்று உடையள் ஆயினும், புரி மாண்டு,
புலவி தீர அளிமதி- இலை கவர்பு,
ஆடு அமை ஒழுகிய தண் நறுஞ் சாரல்,
மென்நடை மரையா துஞ்சும்
நன் மலை நாட!- நின் அலது இலளே. (115)

துறை :உடன்போக்கு ஒருப்படுத்து மீளும் தோழி தலைமகற்குக் கூறியது.

**குறிஞ்சி**

மெய்யே, வாழி ?- தோழி- சாரல்
மைப் பட்டன்ன மா முக முசுக்கலை
ஆற்றப் பாயாத் தப்பல் ஏற்ற
கோட்டொடு போகியாங்கு, நாடன்
தான் குறி வாயாத் தப்பற்குத்
தாம் பசந்தன, என் தட மென தோளே (121.)

துறை : இரவுக்குறி வரும் தலைமகன் செய்யும் குறி பிறிது ஒன்றனான் நிகழ்ந்தது, மற்று அவன் குறியை ஒத்தவழி, அவ் ஒப்புமையை மெய்ப்பொருளாக உணர்ந்து சென்று, ஆண்டு அவனைக் காணாது தலைமகள் மயங்கியவழி, பின்னர் அவன் வரவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் கூறியது.

**குறிஞ்சி**

சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇ
புனக் கிளி கடியும் பூங் கட் பேதை
தான் அறிந்தன்றோ இலளே- பானாள்
பள்ளி யானையின் உயிர்த்து, என்
உள்ளம், பின்னும், தன் உழையதுவே ! (142)

துறை : இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் சொல்லியது; தோழிக்குத் தலைமகன் தன் குறை கூறியதூஉம் ஆம்.

**குறிஞ்சி**

குன்றக் கூகை குழறினும், முன்றிற்
பலவின் இருஞ் சினைக் கலை பாய்ந்து உகளினும்,
அஞ்சும்மன்; அளித்து- என் நெஞ்சம் !- இனியே,
ஆர் இருட் கங்குல் அவர்வயின்
சாரல் நீள் இடைச் செலவு ஆனாதே. (153)

துறை: வரை யாது நெடுங்காலம் வந்து ஒழுகுகின்றுழி, 'நாம் அவரை வேறுபடுத்தற்குக் காரணம் என்னை? என்ற தோழிக்கு, 'அவர் வரவு நமது ஆற்றாமைக்குக் காரணம் ஆம்' எனத் தலைமகள் கூறியது.

**குறிஞ்சி**

செவ் வரைச் சேக்கை வருடைமான் மறி
சுரை பொழி தீம் பால் ஆர மாந்தி,
பெரு வரை நீழல் உகளும் நாடன்
கல்லினும் வலியன்- தோழி !-
வலியன் என்னாது மெலியும், என் நெஞ்சே. (187)

துறை : வரைவு நீட்டித்த வழி, ஆற்றாளாகிய தலைமகளை ஆற்றுவிக்க வேண்டித் தலைமகனை இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்படமொழிந்தது.

### குறிஞ்சி

யாஅம் கொன்ற மரம் சுட்ட இயவில்
கரும்பு மருள் முதல பைந் தாட் செந் தினை
மடப் பிடித் தடக்கை அன்ன பால் வார்பு,
கரிக் குறட்டு இறைஞ்சிய செறிக் கோட் பைங் குரல்
படுகிளி கடிகம் சேறும்; அடுபோர்
எஃகு விளங்கு தடக் கை மலையன் கானத்து
ஆரம் நாறும் மார்பினை,
வாரற்கதில்ல; வருகுவள் யாயே. (198)

துறை : தோழி குறியிடம் பெயர்த்துக் கூறியது

### குறிஞ்சி

ஒன்றேன் அல்லேன்; ஒன்றுவென்; குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்,
நின்று கொய மலரும் நாடனொடு
ஒன்றேன்- தோழி!- ஒன்றினானே. (208)

துறை : வ ரை விடை, 'ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

### குறிஞ்சி

கன்று தன் பய முலை மாந்த, முன்றில்
தினை பிடி உண்ணும் பெருங் கல் நாட !
கெட்ட இடத்து உவந்த உதவி கட்டில்
வீறு பெற்று மறந்த மன்னன் போல,
நன்றி மறந்து அமையாய் ஆயின், மென் சீர்க்
கலி மயிற் கலாவத்தன்ன இவள்
ஒலி மென் கூந்தல் உரியவால் நினக்கே. (225)

துறை : வரைவிடை வைத்துப் பிரிவாற்குத் தோழி சொல்லியது.

### குறிஞ்சி

யாம் எம் காமம் தாங்கவும், தாம் தம்
கெழுதகைமையின் அழுதன- தோழி !-
கன்று ஆற்றுப்படுத்த புன் தலைச் சிறாஅர்
மன்ற வேங்கை மலர் பதம் நோக்கி,
ஏறாது இட்ட ஏமப் பூசல்
விண் தோய் விடரகத்து இயம்பும்
குன்ற நாடற் கண்ட எம் கண்ணே. (241)

துறை : பிரிவிடை, 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

**நெய்தல்**

'பெருங் கடற் கரையது சிறு வெண் காக்கை
களிற்றுச் செவி அன்ன பாசடை மயக்கி,
பனிக் கழி துழவும் பானாள், தனித்து ஓர்
தேர் வந்து பெயர்ந்தது' என்ப. அதற்கொண்டு,
ஒரும்அலைக்கும் அன்னை; பிறரும்
பின்னு விடு கதுப்பின் மின் இழை மகளிர்
இளையரும் மடவரும் உளரே;
அலையாத் தாயரொடு நற்பாலோரே. (246)

துறை : சிறைப்புறம்.

**குறிஞ்சி**

இன மயில் அகவும் மரம் பயில் கானத்து,
ந ரை முக ஊகம் பார்ப்பொடு பனிப்ப,
படு மழை பொழிந்த சாரல் அவர் நாட்டுக்
குன்றம் நோக்கினென்- தோழி !-
பண்டையற்றோ, கண்டிசின், நுதலே ? (249)

துறை: வரைவிடை வைப்ப, 'ஆற்றகிற்றியோ ?' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

**குறிஞ்சி**

கலி மழை கெழீஇய கான் யாற்று இகுகரை,
ஒலி நெடும் பீலி துயல்வர இயலி,
ஆடு மயில் அகவும் நாடன் நம்மொடு
ந யந்தனன் கொண்ட கேண்மை
பயந்தக்காலும், பயப்பு ஒல்லாதே. (264)

துறை : 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்கு, தலைமகள், 'ஆற்றுவல்' என்றது.

**குறிஞ்சி**

கறி வளர் அடுக்கத்து ஆங்கண், முறி அருந்து
குரங்கு ஒருங்கு இருக்கும் பெருங் கல் நாடன்
இனியன்; ஆகலின் ,இனத்தின் இயன்ற
இன்னாமையினும், இனிதோ-
இனிது எனப்படூ உம் புத்தேள் நாடே ? (288)

துறை : த லைமகனது வரவுணர்ந்து, 'நம்பெருமான் நமக்கு அன்பிலன்' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

**குறிஞ்சி**

சுடு புன மருங்கில் கலித்த ஏனல்
படுகிளி கடியும் கொடிச்சி கைக் குளிரே
இசையின் இசையா இன் பாணித்தே;
கிளி, 'அவள் விளி' என, விழல் ஓவாவே;

அது புலந்து அழுத கண்ணே, சாரல்
குண்டு நீர்ப் பைஞ் சுனைப் பூத்த குவளை
வண்டு பயில் பல் இதழ் கலைஇ,
தண் துளிக்கு ஏற்ற மலர் போன்றவ்வே. (291)

துறை : பாங்கற்கு உரைத்தது.

**குறிஞ்சி**

இரண்டு அறி கள்வி நம் காதலோளே;
முரண் கொள் துப்பின் செவ் வேல் மலையன்
முள்ளூர்க் கானம் நாற வந்து,
நள்ளென் கங்குல் நம் ஓரன்னள்;
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்து,
சாந்து உளர் நறுங் கதுப்பு எண்ணெய் நீவி,
அமரா முகத்தள் ஆகித்
தமர் ஓரன்னள், வைகறையானே. (312)

துறை: இரவுக்குறி வந்து நீங்குகின்ற தலைமகன், தன் நெஞ்சிற்கு வரைவிடை வேட்பக் கூறியது.

**குறிஞ்சி**

பெயல் கால் மறைத்தலின், விசும்பு காணலரே;
நீர் பரந்து ஒழுகலின், நிலம் காணலரே;
எல்லை சேறலின், இருள் பெரிது பட்டன்று;
பல்லோர் துஞ்சும் பானாள் கங்குல்
யாங்கு வந்தனையோ ?- ஓங்கல் வெற்ப!-
வேங்கை கமழும் எம் சிறுகுடி
யாங்கு அறிந்தனையோ ? நோகோ யானே. (355)

துறை : இரவுக்குறி நேர்ந்த தலைமகற்குத் தோழி நொந்து கூறியது.

**குறிஞ்சி**

முனி படர் உழந்த பாடு இல் உண்கண்
பனி கால் போழ்ந்து, பணை எழில் ஞெகிழ் தோள்,
மெல்லிய ஆகலின் மேவரத் திரண்டு,
நல்ல என்னும் சொல்லை மன்னிய-
ஏனல்அம் சிறு தினை காக்கும் சேணோன்
ஞெகிழியின் பெயர்ந்த நெடு நல் யானை
மீன் படு சுடர் ஒளி வெரூஉம்
வான் தோய் வெற்பன் மணவா ஊங்கே. (357)

துறை : தோழி கிழவன் கேட்கும் அண்மையனாகக் கிழத்திக்குச் சொல்லியது.

**குறிஞ்சி**

அம்ம வாழி, தோழி!- அன்னைக்கு
உயர்நிலை உலகமும் சிறிதால்- அவர் மலை
மாலைப் பெய்த மணம் கமழ் உந்தியொடு

காலை வந்த முழுமுதற் காந்தள்
மெல் இலை குழைய முயங்கலும்,
இல் உய்த்து நடுதலும், கடியாதோளே. (361)

துறை : வ ரைவு மலிந்தவழித் தோழி, 'நன்கு ஆற்றினாய்!' என்றாட்குக் கிழத்தி சொல்லியது.

**குறிஞ்சி**

பலவில் சேர்ந்த பழம் ஆர் இனக் கலை,
சிலை விற் கானவன் செந் தொடை வெரீஇ,
செரு உறு குதிரையின் பொங்கி, சாரல்
இரு வெதிர் நீடு அமை தயங்கப் பாயும்
பெரு வரை அடுக்கத்துக் கிழவோன் என்றும்
அன்றை அன்ன நட்பினன்;
புதுவோர்த்து அம்ம, இவ் அழுங்கல் ஊரே (385)

துறை ; வேற்று வரைவு மாற்றியது.

குறிப்புகள்

## அலகு . 5

### 5..0 முன்னுரை

அலகு நான்கில் எட்டுத்தொகையின் அகம் சார்ந்த நூல்களின் சிறப்பியல்புகளை அறிந்து கொண்டீர்கள். இவ்வலகில் புறம் சார்ந்த நூல்களாகிய புறநானூறு, பதிற்றுப்பத்து, அகமும் புறமும் சார்ந்த நூலாகிய பரிபாடல் ஆகியவற்றில் சில பாடல்களில் காணப்படும் செய்திகளைத் தெரிந்து கொள்ளப் போகிறீர்கள்.

இந்த அலகு மூன்று பிரிவுகளை உடையது. பிரிவு 1 - புறநானூறு, பிரிவு 11-பதிற்றுப்பத்து, பிரிவு 111 - பரிபாடல்.

**பிரிவு 1 புறநானூறு - பாட அமைப்பு**

5.1.1 நோக்கங்கள்

5.1.2 நூல் அறிமுகம்

5.1.3 பாடல் ஆசிரியர்

5.1.4 பாடப் பொருள் விளக்கம்

5.1.4.1 வெட்சித் திணை.

5.1.4.2 கரந்தைத் திணை

5.1.4.2.1 வேத்தியல் துறை

5.1.4.2.2 குடிநிலை உரைத்தல் துறை

5.1.4.3 வஞ்சித் திணை

5.1.4.4 தும்பைத் திணை

5.1.4.4.1 தானை மறம் துறை

5.1.4.4.2 உவகைக் கலுழ்ச்சித் துறை

5.1.4.4.3 பாண் பாட்டுத் துறை

5.1.4.5 வாகைத் திணை

5.1.4.5.1 அரசவாகைத் துறை

5.1.4.5.2 அரசவாகை, கொற்றவள்ளைத் துறை.

5.1.4.5.3 வல்லாண் முல்லைத் துறை.

5.1.4..6 பாடாண் திணை

5.1.4.6.1 இயன்மொழி வாழ்த்துத் துறை

5.1.4.6.2 பரிசில் கடாநிலைத் துறை

5.1.4.6.3 பரிசில் துறை

5.1.4.6.4 வாள் மங்கலம் துறை

5.1.4.6.5 வாழ்த்தியல் துறை

5.1.4.6.6 விறலியாற்றுப்படைத் துறை

5.1.4.6.7 கடைநிலைத் துறை

5.1.4.6.8 பரிசில் விடைத் துறை

5.1.4.7 பொதுவியல் திணை

5.1.4.7.1 கையறு நிலைத் துறை

5.1.4.7.2 பொருண் பொழிக் காஞ்சித் துறை

5.1.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

5.1.6 பாடத் தொகுப்புரை

5.1.7 அருஞ்சொற் பொருள்

5.1.8 மாதிரி வினாக்கள்

5.1.9 பரிந்துரை நூல்

5.1.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

### 5.1.1 நோக்கங்கள்

- ஔவையார், அதியமானிடம் வைத்திருந்த நட்பின் ஆழத்தை உணர்தல்.
- ஔவையார் அதியமானின் வீரத்தையும், கொடையையும் புகழ்ந்துரைக்கும் பாங்கினை அறிதல்.
- அதியமானின் மகன் பொகுட்டெழினியின் சிறப்பியல்பினை அறிதல்.
- ஔவையார் கூறும் வாழ்வியல் கருத்துகளை அறிந்து தெளிதல்.
- அதியமானின் இறப்பிற்குப் பின் ஔவையாரின் துன்பநிலை வெளிப்பாட்டைக் கையறுநிலைப் பாடல்கள் வழி உணர்தல்.

### 5.1.2 நூல் அறிமுகம்

எட்டுத் தொகை நூல்களில் புறம் பற்றிய பாடல்களின் தொகுப்பு புறநானூறு ஆகும். இதில் மொத்தம் 400 பாடல்கள் உள்ளன. இரண்டு பாடல்கள் கிடைக்கவில்லை. பாடிய புலவர்கள் எண்ணிக்கை 157. இந்நூலில் 14 பாடல்களைப் பாடிய புலவர்கள் பெயர் தெரியவில்லை. பேரரசர், சிற்றரசர் பெயர்கள் 178 உள்ளன. இந்நூல் வழி அக்கால அரசியல், பண்பாடு, மூவேந்தர்களின் நகரங்கள், மலைகள், போர்கள், மன்னர்களின் ஒழுக்க நிலை, வீரர்களின் வீரச்செயல் ஆகியவற்றை அறியலாம்.

### 5.1.3 பாடல் ஆசிரியர்

இப்பிரிவில் ஔவையாரின் 33 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவர் பெண்பாற் புலவர் ஆவார்; தம் வாழ்நாளில் அதிகமாகக் கொங்கு நாட்டுத் தகடூர் மன்னன் அதியமானிடம் கழித்தவர். அம்மன்னனின் உயிர் நண்பனும் ஆவார். அவனது இறப்புக்காலம் வரை நீங்காது உடன் இருந்தவர். இவர் பாடிய பாடல்களில் அதியமான் பற்றி 22 பாடல்களும் அதியமான் மகன் பொகுட்டெழினி பற்றி 3 பாடல்களும் மூவேந்தர்கள் பற்றி 1 பாடலும் நாஞ்சில் வள்ளுவன் பற்றி 1 பாடலும் யாரைப் பற்றி என்று அறியமுடியாத நிலையில் 3 பாடல்களும் பொது நிலையில் 3 பாடல்களும் பாடியுள்ளார்.

### 5.1.4. பாடப் பொருள் விளக்கம்

பாடல்கள் திணை வரிசையிலும் அவற்றில் அமைந்துள்ள துறை முறையிலும் விளக்கப்பட்டுள்ளன.

**பாடல் (269)**

#### 5.1.4.1 வெட்சித் திணை.

மன்னனின் ஆணை பெற்றோ பெறாமலோ பகைவரின் பசுக்களைக் கவர்தல் வெட்சித் திணை.

**உண்டாட்டுத் துறை.**

மறவர் மதுவை உண்டு மனம் மகிழ்தல்

**பாடல் பொருள்**

(பாடியது யாரை என்று அறியப்படாத பாடல்)

வெம்மையான கள்ளை இரு முறை மிகவும் உண்டனை. அப்போது வெட்சி கொள்க எனத் துடி கொட்டும் ஒலி எழுந்தது. அதைக் கேட்ட நீ கள்ளை உண்க என வேண்டியும் அதனை வாழ்த்தி உடனே போருக்குச் சென்றாய். கரந்தை வீரரோ பலர் மறைந்திருந்து போர் செய்தனர். இருப்பினும் அம்மறவர்கள் அனைவரையும் வெட்டி வீழ்த்தி அவர் ஆநிரை கவர்ந்து நீ மீண்டாய் என்றனர். நீ அவரை வீழ்த்திய வாள் இக் கைவாள் தானோ?

**பாடல் (286)**

### 5.1.4.2 கரந்தைத் திணை

பகைவர் கவர்ந்து சென்ற பசுக்கூட்டங்களை மீட்டு வருதல் கரந்தைத் திணை. இத்திணையில் **இரண்டு பாடல்கள்** உள்ளன.

#### 5.1.4.2.1 வேத்தியல் துறை

**பாடல் பொருள் (286)**

(பாடியது யாரை என்று அறியப்படாத பாடல்)

வெண்ணிறமுடைய வெள்ளாட்டுக் கிடாய் போலத் தன்னைப் போன்ற இளம் வீரர்கள் சூழ, மன்னன் என் மகனுக்குக் கள்ளைத் தந்தான். அத்தகு கள், என் மகனைப் பாடையில் கிடத்தித் தூய வெண்மையான ஆடையால் மூட முடியாததாகச் செய்தது. அத்தகையப் போரை அல்லவா யாம் விரும்புவது!.

**பாடல் (290)**

#### 5.1.4.2.2 குடிநிலை உரைத்தல் துறை.

பழமையிலும் வீரத்திலும் புகழ் பெற்ற குடியின் வரலாற்றைக் கூறுதல்.

**பாடல் பொருள்**

(பாடியது யாரை என்று அறியப்படாத பாடல்)

போரையும் யானைகளையும் தேர்களையும் உடைய தலைவனே! உன் பாட்டனுக்கு இவனுடைய பாட்டன் மெய்க் காப்பாளன். உன் பாட்டன் மீது பகைவர் எறிந்த வேலைத் தன் மார்பில் தாங்கியவன். அது ஆரக்காலோடு தச்சன் செய்த குடம் போல வேல்கள் பாய்ந்ததால் இவன் பாட்டன் மாய்ந்தான். இவன் வீரம் நிறைந்தவன். இவனும் மழையும் வெம்மையும் தம் மீது படாமல் காக்கும் பனை ஓலைக் குடை போல பகைவர் உன்னைக் குறித்து வீசும் வேலை இடையில் இருந்து தாங்குவான். எனவே நீ இவனுக்கு முதலில் கள்ளைக் கொடுத்துப் பிறகு உண்பாயாக!

**பாடல் (100)**

### 5.1.4.3 வஞ்சித் திணை

பகைவர் நாட்டைக் கைப்பற்ற எண்ணிப் போரிடச் செல்லுதல் வஞ்சித் திணை ஆகும்.

**அரச வாகையும் கொற்ற வள்ளையும் துறை.**

அரசனது வெற்றியைக் கூறுவது அரசவாகை. அவனது புகழை எடுத்துச் சொல்லி, அவன் பகைவர் நாடு அழிவதற்கு இரங்கிக் கூறுவது கொற்ற வள்ளை.

**பாடல் பொருள்**

அதியமானின் கையில் வேலும் காலில் வீரக் கழலும் உடம்பில் வியர்வையும் தலையில் பனம் பூ மாலையும் வெட்சி மலரும் வேங்கை மலரும் சேர்த்துக் கட்டிய மாலையும் அணிந்தவன். புலியுடன் போரிட்ட வலிமையான யானை சினம் தணியாதது போல இவன் பகைவரைச் சினந்து பார்த்த கண்கள், தன் மகனை வந்து பார்த்தும் நிறம் மாறாது உள்ளன. எனவே இவனைச் சினம் அடையச் செய்தவர் உயிர் பிழைக்க மாட்டார்கள்.

### 5.1.4.4 தும்பைத் திணை

பகைவருடன் போர் செய்தல் தும்பைத் திணை ஆகும். இத்திணையில் **ஆறு பாடல்கள்** உள்ளன.

**பாடல் (87)**

### 5.1.4.4.1 தானை மறம் துறை.

போர் செய்வதற்கு எழுந்த படைகள் தமக்குள் ஒத்த ஆற்றல் உடைய காரணத்தால் போர் செய்து மடியாமல் விலக்குதல் தானை மறமாகும். இத்துறையில் **நான்கு பாடல்கள்** உள்ளன. அந்நான்கு பாடல்களும் அதியமானைப் பற்றிப் பாடப்பட்டவை.

**பாடல் பொருள் (87)**

பகைவர்களே! போர்க்களம் செல்வதைக் கைவிடுங்கள். எமக்குள் எதிர்த்துப் போரிடும் ஆற்றல் உடையவன் ஒருவன் உள்ளான். அவன் ஒரு நாளைக்கு எட்டுத் தேர்களைச் செய்யும் தச்சன் ஒரு மாதம் முயன்று செய்த தேர்ச் சக்கரத்தைப் போன்ற வலிமையுடையவன் ஆவான்.

**பாடல் பொருள் (88)**

பகைவரே! எம் தலைவன் உயர்ந்த வலிமையுடையவன். வேற்படை வீரர்களுக்குத் தலைவன். ஒளி வீசும் அணிகளை அணிந்த மார்பன். களவேள்வி ஆற்றிச் சிறந்த போரைச் செய்யும் முழவு போன்ற தோள்களை உடையவன். இத்தகையவனைக் காண்பதற்கு முன்பு யாம் போர் செய்வோம் என்று கூறியது சரியானததாகும். ஆனால் இவனைக் கண்ட பிறகு இவ்வாறு சொல்லுதலும் செய்தலும் அரியதாகும்.

**பாடல் பொருள் (89)**

இளமையும் மைதீட்டப்பட்ட கண்களையும் ஒளிரும் நெற்றியையும் உடைய விறலியே! ‘ உன் பெரிய நாட்டில் என்னுடன் போர் செய்பவர் உள்ளாரோ? ’என்று என்னைக் கேட்ட படை வலிமை உடைய வேந்தனே! கேட்பாயாக! ‘ எம் நாட்டில் அடிக்கும் கோலுக்கு அஞ்சாது எதிர்த்துச் சீறி எழும் பாம்பு போல வலிமையான வீரர்கள் பலர் உள்ளனர். மேலும் முழவின் மீது காற்று மோதுவதால் எழும் ஓசையைப் போர்ப்பறை என்று மகிழ்ந்து என் தலைவனும் இருக்கின்றான். இதைக் கண்டுமா நீ இவ்வாறு கேட்கின்றாய்’ என்று கூறுகின்றாள்.

**பாடல் பொருள் (90)**

புலி சீறினால் அதன் எதிரே நிற்கும் மானினம் உள்ளதோ? ஞாயிறு எழுவதால் ஓடாது நிற்கும் இருள் வானில் உள்ளதோ? ஆற்றல் மிக்க நடை உடைய எருதானது போவதற்கு அரிய துறையும் உள்ளதோ?இல்லை அல்லவா!. அவற்றைப் போல முழந்தாள் வரை நீண்ட கையை உடையவனே! உன் நாட்டைக் கைப்பற்றிப் போர்செய்யும் வீரரும் உள்ளாரோ?. நீ களம் புகுந்தால் எவர் உன்னை எதிர்க்க வல்லவர்?.

**பாடல் (295)**

### 5.1.4.4.2 உவகைக் கலுழ்ச்சித் துறை

கணவனின் வாளால் ஏற்பட்ட புண் உடைய உடலைக் கண்டு மனைவி மகிழ்ந்து கண்ணீர் சொரிதல்.

**பாடல் பொருள் (295)**

இப்பாடலில் வீர மரணம் அடைந்த தாயின் செயல் கூறப்பட்டுள்ளது.

போர்க் களத்தில் கூர்மையான வேலைக் கையில் ஏந்தி பகைவரின் முன்னணிப் படையைப் பிளந்து இடையில் ஏற்பட்ட துன்பத்தை அழித்தான் ஒரு மறவன். அப்பொழுது பகைவர் அவனைத் தாக்கி அவனுடைய உடலைச்

சிதைத்தனர். அஞ்சி ஓடாத கொள்கை உடையவனின் தாய் அவன் இருந்த நிலையைக் கண்டாள். அவனது வீரத்தைக் கண்டு மகிழ்ந்த அத்தாயின் முலையில் இருந்து பால் ஊறிச் சுரந்தது.

**பாடல் (311)**

**5.1.4.4.3 பாண் பாட்டுத் துறை**

வீரனைப் பாணன் புகழ்ந்து பாடுதல்.

**பாடல் பொருள்**

களர் நிலத்தில் கிணறு தோண்டி நாள்தோறும் வண்ணாத்தி துவைத்து வெண்மையாகத் தந்த ஆடையை அணிந்து செல்பவன், பூந்தாது படிந்துற்ற மன்றத்தில் அவ்வாடைகள் அழுக்குப் படிந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல் பலர் குறை கூறக் கேட்டு வேண்டியதைச் செய்பவன். மாலை சூடிய அத்தலைவனுக்கு ஒருவரும் இல்லை. சிறந்த கண்கள் சினத்தால் சிவக்க தன் ஒரு கேடயத்தைக் கொண்டே பகைவர் வீசும் படைக் கலங்களைத் தடுக்கும் ஆற்றல் உடையவனாக உள்ளான்.

**5.1.4.5 வாகைத் திணை**

போரில் பகைவரை வெல்லுதல் வாகை . இத்திணையில் **ஆறு பாடல்கள்** உள்ளன.

**பாடல் (93)**

**5.1.4.5.1 அரசவாகைத் துறை**

அரசனின் இயல்பைக் கூறுவது அரசவாகை ஆகும். இத்துறையில் **நான்கு பாடல்கள்** உள்ளன. அந்நான்கு பாடல்களும் அதியமானைப் பற்றிப் பாடப்பட்டவை

**பாடல் பொருள் (93)**

பெரும் தகுதி உடையவனே! மதம் பொருந்திய யானையைப் போர்க்களத்தில் வெட்டி நீ விழுப்புண்ணைப் பெற்றாய். உன்னை எதிர்த்தவர் உன் தூசிப் படைக்கு முன்னால் எதிர்ப்பதற்கு இயலாமல் சிதறி ஓடினர். அத்தகு மன்னர்கள், நோயினால் இறந்த உடலை வாளினால் இறக்காத குற்றத்திற்காக அந்தணர் தருப்பைப் புல்லைப் பரப்பி அதன் மேல் உடலை வைத்து ' தன் ஆண்மையே பற்றுக்கோடாக நல்ல போரில் இறந்த வீரக் கழலை உடைய வேந்தர் செல்லும் துறக்க உலகத்திற்குச் செல்க' என்று கூறி வாளால் வெட்டி அடக்கம் செய்யும் இழிநிலையிலிருந்து தப்பித்தனர். எனவே உனக்கு முரசு ஒலியுடன் போருக்குச் சென்று வெல்வது என்பது எங்கே உள்ளது?

**பாடல் பொருள் (94)**

பெருமையுடையவனே! ஊரில் இருக்கும் சிறுவர்கள் யானையின் வெண்மையான கொம்புகளை நீர்த்துறையில் கழுவுகின்றனர். அதனால் அந்த ஆண் யானைகள் அவர்களுக்கு எளிதாகவும் இனியதாகவும் உள்ளன. அதுபோல நீ எங்களுக்கு இனியவனாய் உள்ளாய். அந்த யானை மதம் பிடித்தால் எவ்வாறு கொடியதாய் இருக்குமோ அதுபோல நீ உன் பகைவர்களுக்கு இனிமை அற்றவனாய் உள்ளாய்.

**பாடல் பொருள் (99)**

உன் முன்னோர் வானவரை வழிபட்டு வேள்வியில் அவி உணவைத் தந்தும் கரும்பை விண் உலகில் இருந்து இவ்வுலகத்திற்குக் கொண்டு வந்து தந்தும் கடல் சூழ்ந்த இவ்வுலகில் தன் ஆணைச் சக்கரத்தைச் செலுத்தியவர். அவரைப் போல வீரக்கழல் அணிந்த காலும் பனைமாலையும் மலர்ச்சோலையும் நாளும் ஈரம் உலராத புலால் உடைய கடலையும் ஏழு இலாஞ்சனையையும் உடைய ஒரு நாளும் நீங்காத அரசு உரிமையை நீயும் பெற்றாய். பெற்றும் அமைதி கொள்ளாது போரை விரும்பி

முரசு உடைய ஏழு மன்னர்களுடன் பகைத்துப் படையெடுத்துச் சென்றாய். போரில் வெற்றி பெற்ற அன்றும் உன்னைப் பாடுவதற்கு அரியவனாக உள்ளாய். கோவலூரை நீ அழித்த வெற்றியை இன்றும் பரணன் தான் பாடினான் மற்றவர்களால் பாடுதல் அரிதாகும்.

**பாடல் பொருள் (104)**

வீரர்களே! உங்களுக்கு ஒன்றைக் கூறுவோம். ஊரில் இருக்கும் இளம் சிறுவர்கள் விளையாடுவதால் கலங்கிய குறைந்த நீராக இருந்தாலும் யானையைக் கொன்று வீழ்த்தும் முதலையைப் போலப் பெரிய வலிமை உடையவன் என் தலைவன். அவன் பகைவரை வீழ்த்துவதற்காக மனவலிமையும் வினைவலிமையும் பெற்றவன். எனவே என் தலைவன் அதியமான் இளையவன் என எண்ணி மதிக்காமல் இருந்தால் உங்களுக்கு வெற்றி கிடைக்காது. எனவே அவனிடம் இருந்து உயிர்த்தப்பிப் பிழையுங்கள்.

**பாடல் (98)**

### 5.1.4.5.2 அரசவாகை, கொற்றவள்ளைத் துறை.

அரசனின் இயல்பைக் கூறுதல் அரசவாகை. மன்னனின் புகழை எடுத்துச் சொல்லி அவனது பகைவர் நாடு அழிவதற்கு இரங்கிக் கூறுதல் கொற்றவள்ளை.

**பாடல் பொருள்**

(அதியமானைப் பாடியது.) போரிட்டுத் தேய்ந்து குறைந்த கொம்புகளுடைய உன் யானைகள் செல்வதைப் பார்த்த பகைவர், தம் மதில்வாயிலுக்குக் கதவும் கணைய மரமும் புதிதாகச் செய்து கொள்வர். போரில் இறந்தவரின் உருவம் அழியப் பிணங்கள் மீது மிதித்துச் செல்லும் இரத்தக் கறை படிந்த குளம்பு உள்ள நின் குதிரைகள் செல்வதைக் கண்டால், காட்டு வாயில்களை வேல முள்ளால் அடைப்பர். பகைவர் மீது எரிந்த வேல் ஊடுருவிச் செல்வதைக் கண்டால் தம் வாளை உறையிலிருந்து எடுக்க அஞ்சுவர். உன் படைவீரரின் வலிமையைக் கண்டால் தம் அம்பை மறைத்துக் கொள்வர். இவ்வாறு பகைவர் அஞ்சும் வலிமை மிக்கது உன் படைகள். நீ வெண்சிறு கடுகைக் காவலுக்காகப் புகைத்தாலும் பொறுக்காமல் உடனே போருக்குச் செல்லும் இயல்பினன். போரிலே எமனைப் போலப் பகைவர் உயிரை அழிப்பவன். அதனால் நீர் வளமும் விளைபொருளும் மிகுதியாக உடைய பகைவருடைய நாடுகள் உன்னைப் பகைத்தாலே இனி அழியும்.

**பாடல் (315)**

### 5.1.4.5.3 வல்லாண் முல்லைத் துறை

ஒரு வீரனின் இல்லத்தையும் ஊரையும் இயல்பையும் சொல்லி அவன் ஆண்மைத் தன்மையைப் பெருகச் சொல்லுதல் வல்லாண் முல்லை.

**பாடல் பொருள்**

(அதியமானைப் பாடியது.) நெடுமானஞ்சி பொருள் மிகுதியாக இருக்கும் பொழுது இரவலர்களுக்குத் தந்து தானும் உண்ணுபவன். குறைவாக இருக்கும்பொழுது அவர்களுக்குத் தந்து தான் உண்ணாது இருப்பான். தான் தரக் கடன்பட்டவர்க்குக் கொடுக்க வேண்டிய அளவை விட அதிகமாக இரவலருக்குக் கொடுப்பவன். அறிவற்றவருடன் உண்டு மகிழ்பவன். வீட்டின் மேற்கூரையில் செருகி வைக்கப்பட்ட தீக்கடைக்கோல் போல் தன் வலிமை தோன்றாது இருக்கவும் வல்லவன். அந்தத் தீக்கடைக்கோலைக் கடையத் தோன்றும் தீயைப் போலத் தன் வலிமை தோன்ற வேண்டிய இடத்தில் பலரும் அறிய தோற்றுவிக்கவும் வல்லவன்.

### 5.1.4.6 பாடாண் திணை

ஒருவனது புகழ், கொடை, வலிமை, குளிர்ந்த அருள் ஆகியவற்றை ஆராய்ந்து சொல்லுதல் பாடாண் திணை.

இத்திணையில் **பதிமூன்று பாடல்கள்** உள்ளன.

**பாடல் (92)**

### 5.1.4.6.1 இயன்மொழி வாழ்த்துத் துறை

ஒரு தலைவன் எதிரில் சென்று அவன் சிறப்பையும் அவன் குலத்தவர் சிறப்பையும் அவன் மீது ஏற்றிச் சொல்வது. இத்துறையில் உள்ளன.

**பாடல் பொருள் (92)**

(அதியமானைப் பாடியது) பகைவரின் வலிமையான மதிலுடைய அரண் பல வென்ற அஞ்சியே! புதல்வரின் மழலைச் சொற்கள், யாழ் இசை போல இல்லை. காலத்தோடும் கூடி இராதன. பொருளும் அறிய முடியாதன.இருந்தாலும் தந்தைக்கு அருளை உண்டாக்குவது போல விளங்குவன. அதுபோல நீ அருளுவதால் என் வாய்ச் சொற்களும் அத்தகைய இயல்புடையன.

**பாடல் பொருள்(97)**

(அதியமானைப் பாடியது) போர் செய்வதற்கான விருப்புடன் உறையில் இருந்து எடுக்கப்பட்ட அதியமானின் வாள்கள் பகைவரின் காவலுடைய மதிலை அழித்ததால் அவர்களுடைய தசையில் மூழ்கி உருவத்தை இழந்தன. அவனுடைய வேல்கள் குறும்பர் அரண்மனைகளை வென்று பகை நாட்டை அழித்ததால் சுரையுடன் பொருந்திய காம்பின் ஆணிகள் நிலை கலங்கின. அவனது ஆண் யானைகள் கணைய மரத்தின் தடை உள்ள கதவுகளை மோதிப் பகைவரின் களிறுடைய அரணை அழித்ததால் பருத்த கிம்புரிகள் கழன்றன. அவனது குதிரைகள் வீரனின் பொன் மாலை அணிந்த மார்பின் உருவம் அழிய ஓடுவதால் குருதிக் கறை படிந்த குளம்பை உடையன. அவனோ கடல் போன்ற படையுடன் தும்பை மாலை அணிந்து கழல், கிண்ணி வடிவில் உள்ள அம்புகளால் துளைக்கப்பட்ட கேடயத்தை உடையவன். எனவே அவன் சினந்தால் பிழைப்பது அரிது. வளமான உம் ஊர் உமக்கு வேண்டுமானால் அவனிடம் சென்று திறை செலுத்துக. திறை கொடுக்க மறுத்தால் வெற்றி பெறும் அவன் உடன்பட மாட்டான் என்று நான் சொல்லியும் நீங்கள் போருக்குச் சென்றால் உம் மனைவியால் உம்மை இழத்தல் உறுதியாகும். இதனை அறிந்து போர் செய்யுங்கள்.

**பாடல் பொருள் (390)**

(அதியமானைப் பாடியது) ஆயரும் சிறு குடியினரும் கூடி விழா கொண்டாடும், செருந்தி மலர் மணம் வீசும் அகன்ற மன்றம் போன்ற அஞ்சியின் அரண்மனை முற்றத்தை அன்புடையவரே அடைவர். மற்றவர் கனவில் கூட அடைய மாட்டார்கள். அத்தகு காவலுடைய பெரிய நகரில் குன்றுகள் போன்ற அவனது மாடங்கள் எதிரொலிக்க என் தடாரியை அறைந்து அவன் புகழைப் பாடி நின்றேன். பல நாட்கள் அல்ல நான் சென்ற அன்றே, அன்று இரவு வந்ததை அறிந்து, நான் அவனிடம் செல்ல வேண்டி என் இடையில் இருந்த பழைய பாசி படிந்த கிழிந்த ஆடையை நீக்கிக் கொன்றை மலர் போன்ற ஆடையை உடுக்கச் செய்தான். மகிழ்ச்சியை அளிக்கும் கள்ளுடன் அமிழ்து போன்ற ஊன் துவைச் சோற்றை வெண்மையான வெள்ளிக் கலத்தில் தந்து உண்ணச் செய்தான். மேலும் ஊருக்கு முன் புறம் மன்றத்தில் தங்கியுள்ள பசியுடன் இருக்கும் என் சுற்றத்தார் பசி தீரும் பொருட்டு நெற்போர் அளித்தான். ‘இவை எல்லாம் கொள்க’ என்று தந்தான். அவன் வளம் மிக்க நாட்டை உடையவன். அவன் இருப்பதையும் அவனைக் காண்பதையும் அறியாதவரே அவனைக் கண்ட பிறரைக்கொண்டு அவர் அடி வாழ்த்தி துயருற்று மழையும் பெய்யவில்லையே என வாடுவர்.

**பாடல் பொருள் (96)**

(பொகுட்டெழினியைப் பாடியது) மலர்ந்த தும்பை மாலை சூடிய மார்பும் நீண்ட கையும் உடையவன் அஞ்சியின் மகன். அவனுக்கு இரண்டு பகைகள் உள்ளன.

ஒன்று இவனைக் கண்டு காதல் வயப்பட்ட மகளிர் , தம் நெஞ்சம் வருந்தும் துயர் கொள்வதால் உண்டாகும். மற்றொன்று அவன் படை எடுத்துச் சென்றுள்ள ஊரினர், விழாநாள் இல்லாத பொழுதும் ஆட்டுக் கறியுடன் உண்டு மகிழ்ந்த சுற்றத்தாருடன் நீர்த் துறையில் உள்ள நீரினை யானைகள் வந்து உண்ணுமோ என்று அஞ்சி அங்கு வாழ்வதை வெறுப்பர்.

**பாடல் பொருள் (102)**

(பொகுட்டெழினியைப் பாடியது) வண்டியில் பூட்டப்படும் காளைகள் இளையவை. இதுவரை வண்டி நுகத்தடியை அறியாதவை. வண்டியில் ஏற்றப்பட்ட பொருளும் மிகுதி. எனவே அது பள்ளத்தில் இறங்கினாலும் மேட்டில் ஏறினாலும் ஏற்படும் இடையூற்றை அறிபவர் யார்? என்று எண்ணி உப்பு வணிகர் அச்சு மரத்துடன் சேம அச்சையும் கட்டுவர். அவன் அத்தகு அச்சு போன்றவன். கொடுப்பதற்காகக் கவிழ்ந்த கையை உடையவன். தன்னை நாடியவரின் துன்ப இருளை நீக்குவதால் முழு நிலவு போன்றவன்.

**பாடல் (206)**

### 5.1.4.6.2 பரிசில் கடாநிலைத் துறை

யாவரும் பரிசில் பெற்றனர், நான் பெறவில்லை என்று தன் பரிசில் பெறும் வேட்கையைப் புலப்படுத்தல் பரிசில் கடாநிலை.

**பாடல் பொருள்**

(அதியமானைப் பாடியது) வாயில் காவலனே! கொடைத் தன்மை உடையவர் செவியில் விளங்கும் சொற்களை விதைத்து, தான் எண்ணிய பரிசிலை அறிந்து தரும் சிறப்பிற்காக வருந்தும் இயல்புடைய பரிசிலருக்கு அடைக்காத வாயிலைக் காப்பவனே! விரைந்த ஓட்டத்தையுடைய குதிரையை உடைய அஞ்சி தன் தகுதி அறியானோ? அல்லது என் தகுதி அறியானோ? அறிவும் புகழும் உடையவர் பசியால் இறந்தார் என்னும் வறுமையுற்ற உலகம் இது. அதனால் எம்முடைய இசைக் கருவிகளைக் கட்டினோம். முட்டுக்களைக் கட்டினோம். மரம் வெட்டும் தச்சன் காட்டிற்குச் சென்றால் ஏதாவது ஒரு மரம் அவனுக்குக் கிடைக்கும். அதுபோல எந்தத் திசையில் சென்றாலும் எமக்குச் சோறு கிடைக்கும்.

**பாடல் (101)**

### 5.1.4.6.3பரிசில் துறை

மன்னன் ஒருவன் முன் நின்று தான் எண்ணியது இது என்று கூறுவது பரிசில் துறை.

**பாடல் பொருள்**

(அதியமானைப் பாடியது) ஒருநாள், இருநாள் அல்ல பலநாள் பலருடன் நெருங்கிச் சென்றாலும் முதல் நாளைப் போலவே விருப்பத்துடன் உதவும் பண்பினன். யானையும் இலக்கணம் அமைந்த தேரும் உடையவன். அவனுடைய பரிசிலைப் பெறக் காலம் நீட்டித்தாலும் நீட்டாது போனாலும் யானை தன் கொம்பின் இடையில் வைக்கப்பட்ட கவளம் போலப் பரிசில் நம் கையில் உள்ளது. அது தவறாது. மனமே! நீ வருந்தாதே. வாழ்க, அவன் அடிகள்!.

பாடல் (95)

### 5.1.4.6.4 வாள் மங்கலம் துறை.

மன்னனின் வாளைப் புகழ்தல் வாள் மங்கலம்.

**பாடல் பொருள்**

தொண்டைமானிடம் ஔவையார் தூது வந்த பொழுது, 'இங்குள்ள படைக் கலன்கள் மயில் பீலி அணிந்து, மாலை சூடி, காம்புகள் அழகு செய்யப்பட்டு, நெய் பூசப்பட்டு, காவலுடைய நின் அரண்மனையில் உள்ளன. எந்த நாளும் பொருள் இருக்குமானால் உணவளித்து, பொருள் இல்லாத பொழுது இருப்பதைப் பலருடன் பகிர்ந்து மகிழும் வறியவர்களின் தலைவனான எம் அதியமானின் வேல்களோ, பகைவரைக் குத்துவதால் நுனி முரிந்து கொல்லன் உலைக்களத்தில் உள்ளன' என்று கூறினார்.

பாடல் (88)

### 5.1.4.6.5 வாழ்த்தியல் துறை

மன்னனை வாழ்த்தி உரைப்பது வாழ்த்தியல். இத்துறையில் **இரண்டு பாடல்கள்** உள்ளன.

**பாடல் பொருள்**

(அதியமானைப் பாடியது) போர்க் களத்தில் பகைவரை வென்ற வீரவாளை உடையவனே! வீரச் செல்வமும் பொன்மாலையும் உடைய அஞ்சியே! மலைச்சரிவில் பெரு முயற்சியுடன் பெற்ற இனிய நெல்லிக் கனி இது. இதனைப் பெறுவது அரிது என்று கருதாமல், அதனால் விளையும் பயனையும் கூறாமல் உன் உள்ளத்திலேயே அடக்கிக் கொண்டு என் சாதல் ஒழிய எமக்குத் தந்தாய். எனவே முடியில் பிறை அணிந்தும் , நீல மணி போன்ற கழுத்தையும் உடைய இறைவனைப் போல நீயும் நிலைபெற்று வாழ்வாயாக!

பாடல் (367)

சேரன் மாரி வெண்கோ, பாண்டியன் கானப்பேர் தந்த பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி ஆகிய மூவரும் நண்பர்கள். இம்மூவரும் ஒன்றாக ஓரிடத்தில் இருந்தனர். அப்பொழுது ஔவையார் பாடியது.

**பாடல் பொருள்**

நிலவுலகம் எந்த நாளும் தம்முடையது என்று சொல்ல முடியாது. இது அயலார் வலி மிகுந்தவரானால் அவரிடம் சென்று சேர்ந்து விடும். எனவே பொருள் வேண்டி வருபவருக்குப் பூவும் பொன்னும் நீருடன் வார்த்துத் தருக.! மகளிர் பொன் கலத்தில் தரும் கள்ளை உண்டு மகிழ்ந்து , வருகின்ற இரவலருக்குக் கலம் குறையாது வழங்கி நன்றாக வாழ்க! ஆராயின், இவ்வுலகில் உயிருடன் இருக்கும் வரையும் துணையாக இருப்பது நல்வினையே! வேறு அல்ல. ஆசைகளை அடக்கி அந்தணர் செய்யும் யாகத்தைப் போல அழகாக வீற்றிருந்த வெண் கொற்றக் குடையை உடைய மன்னர்களே!நான் அறிந்த அளவில் வாழ்வின் இலக்கணம் இதுதான். வானத்தில் உள்ள விண்மீனினும், பெய்யும் மழைத்துளியை விடவும் நீண்ட நாள் உம் வாழ்நாள் விளங்குக!

பாடல் (103)

### 5.1.4.6.6 விறலியாற்றுப்படைத் துறை

மன்னனின் புகழ் பாடும் விறலியை ஆற்றுப்படுத்தல்.

**பாடல் பொருள்**

(அதியமானைப் பாடியது) தோளில் உள்ள காவடியின் ஒரு பக்கத்தில் பறையும் மறு பக்கத்தில் சிறு முழவும் தொங்குமாறு சுமந்து கொண்டு , உணவில்லாததால் கவிழ்ந்த உணவுக் கலத்தை உணவளித்து நிரப்புபவர் யார்? என

வினவும் விறலியே! அதியமான் நீண்ட தூரத்தில் இல்லை. பகைவர் நாட்டில் உள்ளான். உலகமே வறுமையுற்று வாடியிருந்தாலும் அவன் கொழுத்த நிணத்தால் ஆன உணவை மிகுதியாகத் தந்து பாதுகாக்க வல்லவன். அவன் அடிகள் வாழ்க!

**பாடல் (392)**

### 5.1.4.6.7 கடைநிலைத் துறை

புரவலன் மகிழ இரவலன் அரண்மனை முற்றத்தில் நின்றது.

**பாடல் பொருள்**

(பொகுட்டெழினியைப் பாடியது) நிலவு போன்ற வெண் கொற்றக்குடையை உடைய அதியர் தலைவர் பொகுட்டு எழினியின் முற்றத்தில் நான் நின்று கொண்டு, பனி விழும் விடியற் காலைப் பொழுதில், கிணைப் பறையை ஒலித்தேன். ‘ திறை கொடாத மன்னரின் மதில்களை வஞ்சனையின்றிப் போர் செய்து அழித்தவன். போர்க்களத்தில் கடுமையாகப் போர் செய்து, கழுதை பூட்டி உழுது எப்பொழுதும் போர் என்ற உழவைச் செய்யும் மன்னனே! நீ நீண்ட நாள் வாழ்வாயாக!’ என வாழ்த்தினேன். அப்பொழுதே நீரிலுள்ள பாசி போன்ற கிழிந்த என் ஆடையை நீக்கி நேரிய கரையும் மெல்லிய நூலால் ஆனதுமான ஆடையை உடுக்கச் செய்தான். புளிப்பேறிய கள்ளினைத் தந்து முறையாக விருந்து ஊட்டி மகிழ்வித்தான் பிற நாட்டில் இருந்து கரும்பை இந்நாட்டிற்குக் கொண்டுவந்தவனின் வழித்தோன்றலான எழினி. அவன் வாழ்க.

**பாடல் (140)**

நாஞ்சில் வள்ளுவன் என்பவனை ஔவையார் புகழ்தல்..

### 5.1.4.6.8 பரிசில் விடைத் துறை

தம் புகழைக் கூறியவருக்கு மன்னன் பரிசில் வழங்கி இன்பம் மிகும்படி அவர்களுக்கு விடை அளிப்பது.

**பாடல் பொருள்**

நல்ல நாவினை உடைய புலவர்களே! கையில் வளையல்கள் அணிந்த விறலியர் பறித்த இலையின் மேல் தூவுவதற்குச் சிறிது அரிசி வேண்டினோம். ஆனால் அவனோ எம்முடைய வறுமையை நினைக்காமல் தன் தகுதியைச் சீர்த்தூக்கிப் பார்த்து, மலை போன்ற பெரிய யானையை எமக்கு அளித்தான். எனவே பலா மிகுந்த இந்த நாஞ்சில் மலை வேந்தன் அறியாமையை உடையவனே! ஒருவருக்கு ஒரு பொருளைத் தரும்போது ஆராயாமல் கொடுக்கும் கொடையும் உள்ளதோ? பெரியவர்கள் தாம் செய்வதைப் பாதுகாத்துச் செய்ய மாட்டாரோ?

**பாடல் (231)**

### 5.1.4.7 பொதுவியல் திணை

வெட்சி முதலான திணைகளுக்குப் பொதுவானதையும் அவற்றில் கூறாமல் விட்டதையும் கூறுவது பொதுவியல். இத்திணையில் **நான்கு பாடல்கள்** உள்ளன.

### 5.1.4.7.1 கையறு நிலைத் துறை

ஒரு மன்னன் இறக்க அவனைச் சேர்ந்தவர்கள் அந்த இறப்பைச் சொல்லித் தளர்தல் கையறு நிலை ஆகும். இத்துறையில் அதியமானைப் பற்றிய **மூன்று பாடல்கள்** உள்ளன.

**பாடல் பொருள் (231)**

கொல்லை நிலத்தில் குறவனால் வெட்டிச் சுடப்பட்ட துண்டினைப் போன்ற கரிந்த புறப் பகுதியையுடைய விறகால் அடுக்கப்பட்டு ஈமத்தால் எரியும் தீயில் அதியமானின் உடல் சுட, அத்தீ அவன் உடலைச் சிதையாமல் குறையினும் குறைக. அல்லது குறையாது வானத்தில் ஓங்கினும் ஓங்குக. ஆனால் குளிர்ந்த சந்திரனைப் போன்ற வெண் கொற்றக்குடை உடைய அவனது புகழ் என்றும் அழியாது.

**பாடல் பொருள் (232)**

அதியமான் இல்லாமல் பகலும் இரவும் எனக்கு இல்லாமல் போகட்டும். நான் வாழும் நாளும் எனக்கு இல்லாமல் ஒழியட்டும். உயர்ந்த மலையை உடைய நாடு முழுவதும் கொடுத்தாலும் அதை ஏற்றுக் கொள்ளாத பண்பாளன். அவனுக்காக நடுகல்லை நாட்டி மயில் பீலி சூட்டி, நாரால் வடிக்கப்பட்ட மதுவை சிறிய கலத்தில் கொடுக்கவும் அதனைக் கொள்வானோ? கொள்ள மாட்டான்.

**பாடல் பொருள் (235)**

சிறிதளவே மதுவைப் பெற்றால் அதனை எமக்கே கொடுத்துவிடுவான். பெரிய அளவில் கிடைத்தால் யான் பாட எமக்கும் கொடுத்து அவனும் உண்பான். பெருஞ் சோற்றைப் பலருடன் உண்பான். எலும்பும் தசையும் உள்ள வேட்டைப் பொருள்களை எமக்கு அளித்து, தான் அம்பும் வேலும் இடம் பெறும் போர்க்களத்தை மேற்கொள்வான். நரந்தம் நாறும் தன் கையால் புலால் நாறும் என் தலையை அன்பாகத் தடவி மகிழ்வான். அவனது அரிய மார்பிலே தைத்த வேல் பாணரின் உண்ணும் கலங்களைத் துளைத்து, இரப்பவரின் கைகளை ஊடுருவி, அவர் சுற்றத்தினரின் கண் ஒளியை மங்கச் செய்து நுண்ணிய அறிவுடையார் நாவிலும் சென்று தைத்தது. அவனா இறந்து விட்டான். எமக்குத் தந்தை போல இருந்து காத்தவன் எங்கே உள்ளான்? இனி பாடி வருபவர்களுக்குத் தருபவர் இல்லை. நீர்த்துறையில் உள்ள பகன்றை மலர் எவருக்கும் பயன்படாதது போலப் பிறருக்கு ஒரு பொருள் கொடுக்காமல் இறக்கும் உயிர்கள் பலவாகும்.

**பாடல் (187)**

### 5.1.4.7.2 பொருண் பொழிக் காஞ்சித் துறை

தெளிந்த பொருளை முனிவர் கூறுதல்.

**பாடல் பொருள்**

நிலமே! நீ நாடானால் என்ன, காடானால் என்ன, மேடானால் என்ன பள்ளமானால் என்ன எந்த இடத்தில் ஆண் மக்கள் நல்லவராக இருக்கின்றாரோ, அந்த இடத்தில் நீயும் நல்லை. அதுவன்றி உனக்கு என்று ஒரு நலமும் இல்லை. நீ வாழ்வாயாக!

### 5.1.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

**அ . வினாக்கள்**

1. புறநானூற்றில் உள்ள மொத்த பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?
2. புறநானூற்றில் யாருடைய பாடல்கள் பாடமாக வந்துள்ளன. பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?
3. பாடாண் திணை பற்றிக் கூறுக.
4. இயன்மொழி வாழ்த்துத் துறை பற்றிக் கூறுக.
5. ஔவைக்கு நெல்லிக் கனி தந்தவன் யார்?

**ஆ. சரியா? தவறா?**

1. ஔவையார் மூவேந்தர்களையும் பற்றி ஒரு பாடலும் பாடவில்லை.
2. அதியமானின் மகன் பொகுட்டு எழினி.
3. ஔவையார் வாழ்வியல் கருத்துகளைக் கூறவில்லை.
4. புறநானூறு புறம் பற்றிய நூல்களில் ஒன்று.
5. ஔவையார் பாடியவர்களில் ஒருவன் நாஞ்சில் வள்ளுவன்.

### 5.1.6 பாடத் தொகுப்புரை

- ஔவையார் 22 பாடல்களில் அதியமானின் வீரம், கொடை, விருந்தோம்பல், படைச் சிறப்பு ஆகியவற்றைப் புகழ்ந்து உரைத்துள்ளார்.
- அதியமானின் மகன் பொகுட்டு எழினியின் வீரம், கொடை பற்றி 3 பாடல்களில் பாடியுள்ளார்.
- மூவேந்தர்களைப் பற்றியும், பெயர் அறியப்படாத மன்னர்களையும் புகழ்ந்துரைத்துள்ளார்.
- வாழ்வியல் கருத்துகளைக் கூறியுள்ளார்.

### 5.1.7 அருஞ்சொற் பொருள்

| | | |
|---|---|---|
| தெவ்வர் | - | பகைவர் |
| கூழை | - | அணி |
| தார் | - | தூசிப் படை |
| மள்ளர் | - | வீரர் |
| எழுமரம் | - | கணையமரம் |
| நீல மணிமிடற்றொருவன் | - | சிவபெருமான் |
| அரவு | - | பாம்பு |
| காழ் | - | காம்பு |
| பதம் | - | உணவு |
| மடை | - | ஆணி |
| குறும்பு | - | அரண் |
| அசைஇய | - | வருந்திய |
| நூறி | - | அழித்து |
| போந்தை | - | பனம்பூ |
| சகடம் | - | வண்டி |
| அலத்தற்காலை | - | உலகம் வறுமையுற்ற காலை |
| கராஅ | - | முதலை |
| அவல் | - | பள்ளம் |
| உரன் | - | வலிமை |
| விசும்பு | - | வானம் |
| பெயரி | - | பெயர்த்து |
| கூவல் | - | கிணறு |
| நெலிகோல் | - | தீக்கடைக்கோல் |
| பொலங்கலம் | - | பொன்கலம் |
| அடிசில் | - | உணவு |
| குருதி | - | இரத்தம் |

### 5.1.8 மாதிரி வினாக்கள்

#### அ. குறு வினாக்கள்

1. புறநானூற்றில் ஔவையார் பாடிய பாடல்கள் எத்தனை?
2. புறநானூறு பற்றிச் சிறு குறிப்பு வரைக.

3. மன்னனின் இறப்பிற்குப் பின் பாடப்படும் துறை யாது?
4. பொதுவியல் திணை என்றால் என்ன?
5. கொற்றவள்ளைத் துறை என்றால் என்ன?

**ஆ. சிறு வினாக்கள்**

1. நாஞ்சில் வள்ளுவன் பற்றி ஔவையார் கூறுவன யாவை?
2. ஔவையார் மூவேந்தர்களுக்குக் கூறுவன யாவை?
3. வாகைத் திணை வல்லாண் முல்லைத் துறை கருத்துகள் யாவை?
4. 'அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்று ஔவையார் கூறக் காரணம் யாது? இதன் திணை, துறையைக் கூறுக.

**இ. பெரு வினாக்கள்**

1. பாடாண் திணையில் அமைந்துள்ள பாடற் கருத்துக்களைத் தொகுத்துரைக்க
2. கையறு நிலைத் துறையில் ஔவையார் கூறுவன யாவை?
3. அதியமானை ஔவையார் எவ்வாறு புகழ்ந்துரைக்கிறார்?
4. பொகுட்டு எழினியை ஔவையார் எவ்வாறு போற்றுகிறார்?

### 5.1.9 பரிந்துரை நூல்

புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே. சாமிநாதையர் பதிப்பாசிரியர், சென்னை.

### 5.1.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

**அ. விடைகள்**

1. புறநானூற்றில் உள்ள மொத்த பாடல்களின் எண்ணிக்கை 400 ஆகும்.
2. புறநானூற்றில் ஔவையாரின் பாடல்கள் பாடமாக வந்துள்ளன. பாடல்களின் எண்ணிக்கை 33 ஆகும்.
3. ஒருவனது புகழ், கொடை, வலிமை, குளிர்ந்த அருள் ஆகியவற்றை ஆராய்ந்து சொல்லுதல் பாடாண் திணை.
4. ஒரு தலைவன் எதிரில் சென்று அவன் சிறப்பையும் அவன் குலத்தவர் சிறப்பையும் அவன் மீது ஏற்றிச் சொல்வது இயன்மொழிவாழ்த்து ஆகும்.
5. ஔவைக்கு நெல்லிக்கனி தந்தவன் அதியமான் நெடுமான் அஞ்சி ஆவான்.

**ஆ. விடைகள்.**

1. தவறு.
2. சரி
3. தவறு
4. சரி
5. சரி

களம் புகல் ஓம்புமின், தெவ்விர் ! போர் எதிர்ந்து,
எம்முளும் உளன் ஒரு பொருநன்; வைகல்
எண் தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால் அன்னோனே. (87)

திணை- தும்பை; துறை- தானை மறம்.
அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது .

யாவிர் ஆயினும், 'கூழை தார் கொண்டு
யாம் பொருதும்' என்றல் ஓம்புமின்- ஓங்கு திறல்
ஒளிறு இலங்கு நெடு வேல் மழவர் பெருமகன்,
கதிர் விடு நுண் பூண் அம் பகட்டு மார்பின்
விழவு மேம்பட்ட நற் போர்
முழவுத் தோள் என்னையைக் காணா ஊங்கே. (88)

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

'இழை அணிப் பொலிந்த ஏந்து கோட்டு அல்குல்,
மடவரல், உண்கண், வாள் நுதல், விறலி!
பொருநரும் உளரோ, நும் அகன் தலை நாட்டு ?' என,
வினவல் ஆனாப் பொருபடை வேந்தே!
எறி கோல் அஞ்சா அரவின் அன்ன
சிறுவன் மள்ளரும் உளரே; அதா அன்று,
பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை
வளி பொரு தெண் கண் கேட்பின்,
'அது போர்' என்னும் என்னையும் உளனே. (89)

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

உடை வளை கடுப்ப மலர்ந்த காந்தள்
அடை மல்கு குளவியொடு கமழும் சாரல்,
மறப் புலி உடலின், மான் கணம் உளவோ ?
மருளின விசும்பின் மாதிரத்து ஈண்டிய
இருளும் உண்டோ, ஞாயிறு சினவின்?
அச்சொடு தாக்கிப் பார் உற்று இயங்கிய
பண்டச் சாகாட்டு ஆழ்ச்சி சொல்லிய,
அரி மணல் ஞெமர, கல் பக, நடக்கும்

பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ?
எழுமரம் கடுக்கும் தாள் தோய் தடக் கை
வழு இல் வன் கை, மழவர் பெரும!
இரு நிலம் மண் கொண்டு சிலைக்கும்
பொருநரும் உளரோ, நீ களம் புகினே? (90)

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

வலம் படு வாய்வாள் ஏந்தி, ஒன்னார்
களம் படக் கடந்த கழல் தொடித் தடக் கை
ஆர் கலி நறவின், அதியர் கோமான்1
போர் அடு திருவின் பொலந் தார் அஞ்சி!
பால் புரை பிறை நுதற் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக- பெரும! நீயே, தொல் நிலைப்
பெரு மலை விடரகத்து அரு மிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீம் கனி குறியாது,
ஆதல் நின் அகத்து அடக்கி,
சாதல் நீங்க, எமக்கு ஈத்தனையே! (91)

திணை- பாடாண் திணை; துறை- வாழ்த்தியல்.
அவனை அவர் நெல்லிப் பழம் பெற்றுப் பாடியது.

யாழொடும் கொள்ளா; பொழுதொடும் புணரா;
பொருள் அறிவாரா; ஆயினும், தந்தையர்க்கு
அருள் வந்தனவால் , புதல்வர்தம் மழலை;
என் வாய்ச் சொல்லும் அன்ன- ஒன்னார்
கடி மதில் அரண் பல கடந்த
நெடுமான் அஞ்சி! நீ அருளன்மாறே. (92)

திணை - அது; துறை- இயன்மொழி.
அவனை அவர் பாடியது.

திண் பிணி முரசம் இழுமென முழங்கச்
சென்று, அமர் கடத்தல் யாவது?- வந்தோர்
தார் தாங்குதலும் ஆற்றார், வெடிபட்டு,
ஓடல் மரீஇய பீடு இல் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇ,
காதல் மறந்து, அவர் தீது மருங்கு அறுமார்,

அறம் புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம் பரி பசும் புல் பரப்பினர் கிடப்பி,
'மறம் கந்தாக நல் அமர் வீழ்ந்த
நீள் கழல் மறவர் செல்வுழிச் செல்க!' என
வாள் போழ்ந்து அடக்கலும் உய்ந்தனர் மாதோ-
வரி ஞிமிறு ஆர்க்கும் வாய் புகு கடா அத்து
அண்ணல் யானை அடு களத்து ஒழிய,
அருஞ் சமம் ததைய நூறி, நீ,
பெருந்தகை! விழுப் புண் பட்ட மாறே. (93)

திணை- வாகை; துறை- அரச வாகை.
அவன் பொருது புண்பட்டு நின்றோனை அவர் பாடியது

ஊர்க் குறுமாக்கள் வெண் கோடு கழாஅலின்,
நீர்த் துறை படியும் பெருங் களிறு போல
இனியை, பெரும! எமக்கே; மற்று அதன்
துன் அருங் கடாஅம் போல
இன்னாய், பெரும! நின் ஒன்னாதோர்க்கே. (94)

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டி,
கண் திரள் நோன் காழ் திருத்தி, நெய் அணிந்து,
கடியுடை வியல் நகரவ்வே; அவ்வே,
பகைவர்க் குத்தி, கோடு, நுதி, சிதைந்து,
கொல் துறைக் குற்றிலமாதோ- என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து,
இல்லாயின் உடன் உண்ணும்,
இல்லோர் ஒக்கல் தலைவன்,
அண்ணல் எம் கோமான், வைந் நுதி வேலே. (95)

திணை - பாடாண் திணை; துறை- வாள் மங்கலம்.
அவன் தூதுவிட, தொண்டைமானுழைச் சென்ற ஔவைக்கு அவன் படைக்கலக் கொட்டில் காட்ட, அவர் பாடியது.

அலர் பூந் தும்பை அம் பகட்டு மார்பின்,
திரண்டு நீடு தடக்கை, என்னை இளையோற்கு
இரண்டு எழுந்தனவால், பகையே; ஒன்றே,
பூப் போல் உண்கண் பசந்து, தோள் நுணுகி,

நோக்கிய மகளிர்ப் பிணித்தன்று; ஒன்றே,
'விழவின்று ஆயினும், படு பதம் பிழையாது,

மை ஊன் மொசித்த ஒக்கலொடு, துறை நீர்க்
கைமான் கொள்ளுமோ? ' என,
உறையுள் முனியும், அவன் செல்லும் ஊரே. (96)

திணை- அது; துறை- இயன்மொழி.
அவன் மகன் பொகுட்டெழினியை அவர் பாடியது.

போர்க்கு உரைஇப் புகன்று கழித்த வாள்,
உடன்றவர் காப்புடை மதில் அழித்தலின்,
ஊன் உற மூழ்கி, உரு இழந்தனவே;
வேலே, குறும்பு அடைந்த அரண் கடந்து, அவர்
நறுங் கள்ளின் நாடு நைத்தலின்,
சுரை தழீஇய இருங் காழொடு
மடை கலங்கி நிலை திரிந்தனவே;
களிறே, எழூஉத் தாங்கிய கதவம் மலைத்து, அவர்
குழூஉக் களிற்றுக் குறும்பு உடைத்தலின்,
பரூஉப் பிணிய தொடி கழிந்தனவே;
மாவே, பரந்து ஒருங்கு மலைந்த மறவர்
பொலம் பைந் தார் கெடப் பரிதலின்,
களன் உழந்து அசைஇய மறுக் குளம்பினவே;
அவன் தானும், நிலம் திரைக்கும் கடல் தானைப்
பொலந் தும்பைக் கழல் பாண்டில்
கணை பொருத துளைத் தோலன்னே
ஆயிடை, உடன்றோர் உய்தல் யாவது? 'தடந் தாள்,
பிணிக் கதிர் நெல்லின் செம்மல் மூதூர்
நுமக்கு உரித்தாகல் வேண்டின், சென்று அவற்கு
இறுக்கல் வேண்டும், திறையே; மறுப்பின்,
ஒல்வான் அல்லன், வெல்போரான்' எனச்
சொல்லவும் தேறீர் ஆயின், மெல் இயல்,
கழற் கனி வகுத்த துணைச் சில் ஓதி,
குறுந் தொடி மகளிர் தோள் விடல்
இறும்பூது அன்று; அஃது அறிந்து ஆடுமினே. (97)

திணையும் துறையும் அவை.
அதியமான் நெடுமான் அஞ்சியை அவர் பாடியது.
முனைத் தெவ்வர் முரண் அவியப்
பொரக் குறுகிய நுதி மருப்பின் நின்

இனக் களிறு செலக் கண்டவர்
மதிற் கதவம் எழுச் செல்லவும்,
பிணன் அழுங்கக் களன் உழக்கிச்
செலவு அசைஇய மறுக் குளம்பின் நின்
இன நல் மாச் செலக் கண்டவர்
கவை முள்ளின் புழை அடைப்பவும்,
மார்புறச் சேர்ந்து ஒல்காத்
தோல் செறிப்பு இல் நின் வேல் கண்டவர்
தோல் கழியொடு பிடி செறிப்பவும்,
வாள் வாய்த்த வடுப் பரந்த நின்
மற மைந்தர் மைந்து கண்டவர்
புண் படு குருதி அம்பு ஒடுக்கவும்,
நீயே, ஐயவி புகைப்பவும் தாங்காது, ஒய்யென,
உறுமுறை மரபின் புறம் நின்று உய்க்கும்
கூற்றத்து அனையை; ஆகலின், போற்றார்
இரங்க விளிவது கொல்லோ- வரம்பு அணைந்து
இறங்குகதிர் அலவரு கழனி,
பெரும் புனற் படப்பை, அகன் தலை நாடே! (98)

திணை- வாகை; துறை- அரச வாகை; திணை- வஞ்சியும், துறை- கொற்றவள்ளையும் ஆம்.
அவனை அவர் பாடியது.

அமரர்ப் பேணியும், ஆவுதி அருத்தியும்,
அரும் பெறல் மரபின் கரும்பு இவண் தந்தும்,
நீர் அக இருக்கை ஆழி சூட்டிய
தொல் நிலை மரபின் நின் முன்னோர் போல,
ஈகை அம் கழற் கால், இரும் பனம் புடையல்,
பூ ஆர் காவின், புனிற்றுப் புலால் நெடு வேல்,
எழு பொறி நாட்டத்து எழாஅத் தாயம்
வழு இன்று எய்தியும் அமையாய், செரு வேட்டு,
இமிழ் குரல் முரசின் எழுவரொடு முரணிச்
சென்று, அமர் கடந்து, நின் ஆற்றல் தோற்றிய
அன்றும், பாடுநர்க்கு அரியை; இன்றும்
பரணன் பாடினன் மற்கொல்- மற்று நீ
முரண் மிகு கோவலூர் நூறி, நின்
அரண் அடு திகிரி ஏந்திய தோளே! (99)

திணையும் துறையும் அவை.
அவன் கோவலூர் எறிந்தானை அவர் பாடியது.

கையது வேலே; காலன புனை கழல்;
மெய்யது வியரே; மிடற்றது பசும் புண்;
வட்கர் போகிய வளர் இளம் போந்தை
உச்சிக் கொண்ட ஊசி வெண் தோட்டு,
வெட்சி மா மலர், வேங்கையொடு விரைஇச்,
சுரி இரும் பித்தை பொலியச் சூடி,
வரிவயம் பொருத வயக் களிறு போல,
இன்னும் மாறாது சினனே; அன்னோ!
உய்ந்தனர் அல்லர்,இவன் உடற்றியோரே;
செறுவர் நோக்கிய கண், தன்
சிறுவனை நோக்கியும், சிவப்பு ஆனாவே. (100)

திணையும் துறையும் அவை; திணை- வஞ்சியும், துறை- கொற்றவள்ளையும் ஆம். அதியமான் தவமகன் பிறந்தவனைக் கண்டானை அவர் பாடியது.

ஒரு நாள் செல்லலம்; இரு நாள் செல்லலம்;
பல நாள் பயின்று, பலரொடு செல்லினும்,
தலை நாள் போன்ற விருப்பினன் மாதோ-
இழை அணி யானை இயல் தேர் அஞ்சி
அதியமான்; பரிசில் பெறூஉம் காலம்
நீ ட் டினும், நீட்டாது ஆயினும், களிறு தன்
கோட்டு இடை வைத்த கவளம் போலக்
கையகத்தது; அது பொய் ஆகாதே;
அருந்த ஏமாந்த நெஞ்சம்!
வருந்த வேண்டா; வாழ்க, அவன் தாளே! (101)

திணை- பாடாண் திணை; துறை- பரிசில் கடாநிலை.
அவனை அவர் பாடியது.

'எருதே இளைய; நுகம் உணராவே;
சகடம் பண்டம் பெரிது பெய்தன்றே;
அவல் இழியினும், மிசை ஏறினும்,
அவணது அறியுநர் யார்? ' என, உமணர்
கீழ் மரத்து யாத்த சேம அச்சு அன்ன,
இசை விளங்கு கவிகை நெடியோய்! திங்கள்
நாள் நிறை மதியத்து அனையை; இருள்
யாவணதோ, நின் நிழல் வாழ்வோர்க்கே? (102)

திணை- அது; துறை- இயன்மொழி.
அவன் மகன் பொகுட்டெழினியை அவர் பாடியது.

ஒரு தலைப் பதலை தூங்க, ஒரு தலைத்
தூம்பு அகச் சிறு முழாத் தூங்கத் தூக்கி,
'கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யார்? ' எனச்
சுரண்முதல் இருந்த சில் வளை விறலி!
செல்வைஆயின், சேணோன் அல்லன்;
முனை சுட எழுந்த மங்குல் மாப் புகை
மலை சூழ் மஞ்சின், மழ களிறு அணியும்
பகைப் புலத்தோனே, பல் வேல் அஞ்சி;
பொழுது இடைப்படாஅப் புலரா மண்டை
மெழுகு மெல் அடையின் கொழு நிணம் பெருப்ப,
வறத்தற் காலை ஆயினும்,
புரத்தல் வல்லன்; வாழ்க, அவன் தாளே! (103)

திணை- அது; துறை- விறலியாற்றுப்படை.
அதியமான் நெடுமான் அஞ்சியை அவர் பாடியது.

போற்றுமின், மறவீர்! சாற்றுதும், நும்மை;
ஊர்க் குறுமாக்கள் ஆடக் கலங்கும்
தாள் படு சில் நீர்க் களிறு அட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் கராஅத்து அன்ன என்னை
நுண் பல் கருமம் நினையாது,
'இளையன்' என்று இகழின், பெயல் அரிது, ஆடே. (104)

திணை- வாகை; துறை- அரச வாகை.
அவனை அவர் பாடியது.

தடவு நிலைப் பலவின் நாஞ்சில் பொருநன்
மடவன், மன்ற; செந் நாப் புலவீர்!
வளைக் கை விறலியர் படப்பை கொய்த
அடகின் கண்ணுறையாக யாம் சில
அரிசி வேண்டினெமாக, தான் பிற
வரிசை அறிதலின், தன்னும் தூக்கி,
இருங் கடறு வளைஇய குன்றத்து அன்னது ஓர்
பெருங் களிறு நல்கியோனே; அன்னது ஓர்
தேற்றா ஈகையும் உளதுகொல்?
போற்றார் அம்ம, பெரியோர் தம் கடனே? (140)

திணை- அது; துறை- பரிசில் விடை.
அவனை ஔவையார் பாடியது.

நாடா கொன்றோ; காடா கொன்றோ;
அவலா கொன்றோ; மிசையா கொன்றோ;
எவ் வழி நல்லவர் ஆடவர்,
அவ் வழி நல்லை; வழிய நிலனே! (187)

திணையும் துறையும் அவை.
ஔவையார் பாடியது.

வாயிலோயே! வாயிலோயே!
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தி, தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயிலோயே!
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன் அறியலன்கொல்? என் அறியலன்கொல்?
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந் தலை உலகமும் அன்றே; அதனால்,
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரம் கொல் தச்சன் கை வல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே-
எத் திசைச் செலினும், அத் திசைச் சோறே. (206)

திணையும் துறையும் அவை.
அதியமான் நெடுமான் அஞ்சி பரிசில் நீட்டித்தானை ஔவையார் பாடியது.

எறி புனக் குறவன் குறையல் அன்ன
கரி புற விறகின் ஈம ஒள் அழல்,
குறுகினும் குறுகுக; குறுகாது சென்று,
விசும்புற நீளினும் நீள்க- பசுங் கதிர்த்
திங்கள் அன்ன வெண் குடை
ஒண் ஞாயிறு அன்னோன் புகழ் மாயலவே. (231)

திணையும் துறையும் அவை.
அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது.

இல்லா கியரோ காலை மாலை
அல்லாகியர் யான் வாழும் நாளே
நடுகல் பீலி சூட்டி நார் அரி
சிறுகலத்து உகுப்பவும் கொள்வன்கொல்லோ

கோடு உயர் பிறங்கு மலை கெழீஇய
நாடு உடன் கொடுப்பவும் கொள்ளா தோனே. (232)

திணை : பொதுவியல், துறை : கையறுநிலை
அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது.

சிறிய கட் பெறினே, எமக்கு ஈயும்; மன்னே!
பெரிய கட் பெறினே,
யாம் பாட, தான் மகிழ்ந்து உண்ணும்; மன்னே!
சிறு சோற்றானும் நனி பல கலத்தன்; மன்னே!
பெருஞ் சோற்றானும் நனி பல கலத்தன்; மன்னே!
என்பொடு தடி படு வழி எல்லாம் எமக்கு ஈயும்; மன்னே!
அம்பொடு வேல் நுழை வழி எல்லாம் தான் நிற்கும்; மன்னே!
நரந்தம் நாறும் தன் கையால்,
புலவு நாறும் என் தலை தைவரும்; மன்னே!
அருந் தலை இரும் பாணர் அகல் மண்டைத்
துளை உரீஇ,
இரப்போர் கையுளும் போகி,
புரப்போர் புன்கண் பாவை சோர,
அம் சொல் நுண் தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்று வீழ்ந்தன்று, அவன்
அரு நிறத்து இயங்கிய வேலே!
ஆசு ஆகு எந்தை யாண்டு உளன்கொல்லோ?
இனி, பாடுநரும் இல்லை; பாடுநர்க்கு ஒன்று ஈகுநரும் இல்லை;
பனித் துறைப் பகன்றை நறைக் கொள் மாமலர்
சூடாது வைகியாங்கு, பிறர்க்கு ஒன்று
ஈயாது வீயும் உயிர் தவப் பலவே! (235)

திணையும் துறையும் அவை.
அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது.

குயில் வாய் அன்ன கூர்முகை அதிரல்
பயிலாது அல்கிய பல் காழ் மாலை
மை இரும் பித்தை பொலியச் சூட்டி,
புத்தகல் கொண்ட புலிக் கண் வெப்பர்
ஒன்று இரு முறை இருந்து உண்டை பின்றை,
உவலைக் கண்ணித் துடியன் வந்தென,
பிழி மகிழ் வல்சி வேண்ட, மற்று இது
கொள்ளாய் என்ப, கள்ளின் வாழ்த்தி;
கரந்தை நீடிய அறிந்து மாறு செருவின்

பல் ஆன் இன நிரை தழீஇய வில்லோர்,
கொடுஞ் சிறைக் குரூஉப் பருந்து ஆர்ப்ப,
தடிந்து மாறு பெயர்த்தது, இக் கருங் கை வாளே; (269)

திணை- வெட்சி; துறை- உண்டாட்டு.
ஔவையார் பாடியது.

வெள்ளை வெள் யாட்டுச் செச்சை போலத்
தன் ஓர் அன்ன இளையர் இருப்பப்,
பலர் மீது நீட்டிய மண்டை என் சிறுவனைக்
கால் கழி கட்டிலில் கிடப்பித்,
தூவெள் அறுவை போர்ப்பித்திலதே! (286)

திணை- கரந்தை; துறை- வேத்தியல்
ஔவையார் பாடியது.

இவற்கு ஈந்து உண்மதி, கள்ளே; சினப் போர்
இனக் களிற்று யானை, இயல் தேர்க் குருசில்!
நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை,
எடுத்து எறி ஞாட்பின் இமையான், தச்சன்
அடுத்து எறி குறட்டின், நின்று மாய்ந்தனனே;
மறப் புகழ் நிறைந்த மைந்தினோன் இவனும்,
உறைப்புழி ஓலை போல,
மறைக்குவன்- பெரும! நிற் குறித்து வரு வேலே. (290)

திணை- கரந்தை; துறை- குடிநிலை உரைத்தல்.
ஔவையார் பாடியது.

கடல் கிளர்ந்தன்ன கட்டூர் நாப்பண்,
வெந்து வாய் மடித்து வேல் தலைப் பெயரி,
தோடு உகைத்து எழுதரூஉ, துரந்து எறி ஞாட்பின்,
வரு படை போழ்ந்து வாய்ப் பட விலங்கி,
இடைப் படை அழுவத்துச் சிதைந்து வேறாகிய,
சிறப்புடையாளன் மாண்பு கண்டருளி,
வாடு முலை ஊறிச் சுரந்தன-
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே. (295)

திணை- அது; துறை - உவகைக் கலுழ்ச்சி.
ஔவையார் பாடியது.

களர்ப் படு கூவல் தோண்டி, நாளும்,
புலைத்தி கழீஇய தூ வெள் அறுவை.
தாது எரு மறுகின் மாசுண இருந்து,
பலர் குறை செய்த மலர் தார் அண்ணற்கு
ஒருவரும் இல்லேமாதோ, செருவத்து;
சிறப்புடைச் செங் கண் புகைய, ஓர்
தோல் கொண்டு மறைக்கும் சால்பு உடையோனே. (311)

திணை- அது; துறை- பாண்பாட்டு.
ஔவையார் பாடியது.

உடையன் ஆயின் உண்ணவும் வல்லன்;
கடவர் மீதும் இரப்போர்க்கு ஈயும்;
மடவர் மகிழ் துணை; நெடு மான் அஞ்சி-
இல் இறைச் செரீஇய ஞெலிகோல் போல,
தோன்றாது இருக்கவும் வல்லன்; மற்றதன்
கான்று படு கனை எரி போல,
தோன்றவும் வல்லன்- தான் தோன்றுங்காலே. (315)

திணையும் துறையும் அவை.
நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது.

நாகத்து அன்ன பாகு ஆர் மண்டிலம்
தமவே ஆயினும் தம்மொடு செல்லா;
வேற்றோர் ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்;
ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங் கை நிறையப்
பூவும் பொன்னும் புனல் படச் சொரிந்து,
பாசிழை மகளிர் பொலங் கலத்து ஏந்திய
நார் அரி தேறல் மாந்தி, மகிழ் சிறந்து,
இரவலர்க்கு அருங் கலம் அருகாது வீசி,
வாழ்தல் வேண்டும், இவண் வரைந்த வைகல்;
வாழச் செய்த நல்வினை அல்லது
ஆழுங் காலைப் புணை பிறிது இல்லை;
ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப்பாளர்
முத்தீப் புரையக் காண்தக இருந்த
கொற்ற வெண் குடைக் கொடித் தேர் வேந்திர்!
யான் அறி அளவையோ இவ்வே; வானத்து
வயங்கித் தோன்றும் மீனினும், இம்மெனப்
இயங்கும் மா மழை உறையினும்,
உயர்ந்து சமந் தோன்றிப் பொலிக, நும் நாளே! (367)

திணை- பாடாண் திணை; துறை- வாழ்த்தியல்.

சேரமான் மாரிவெண்கோவும், பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், ஒருங்கு இருந்தாரை ஔவையார் பாடியது.

அறவை நெஞ்சத்து ஆயர், வளரும்
மறவை நெஞ்சத்து தாயிலாளர்,
அரும்பு அலர் செருந்தி நெடுங் கான் மலர் கமழ்,
விழவணி வியன்களம் அன்ன முற்றத்து,
ஆர்வலர் குறுகின் அல்லது, காவலர்
கனவினும் குறுகாக் கடியுடை வியல் நகர்,
மலைக் கணத்து அன்ன மாடம் சிலம்ப, என்
அரிக் குரல் தடாரி இரிய ஒற்றிப்
பாடி நின்ற பல் நாள் அன்றியும்,
சென்ற ஞான்றைச் சென்று படர் இரவின்
வந்த தற்கொண்டு, 'நெடுங் கடை நின்ற
புன் தலைப் பொருநன் அளியன் தான்' எனத்,
தன்னுழைக் குறுகல் வேண்டி, என் அரை
முது நீர்ப் பாசி அன்ன உடை களைந்து,
திரு மலர் அன்ன புது மடிக் கொளீஇ,
மகிழ் தரல் மரபின் மட்டே அன்றியும்,
அமிழ்து அன மரபின் ஊன் துவை அடிசில்
வெள்ளி வெண் கலத்து ஊட்டல் அன்றி,
முன் ஊர்ப் பொதியில் சேர்ந்த மென் நடை
இரும் பேர் ஒக்கல் பெரும் புலம்பு அகற்ற,
அகடு நனை வேங்கை வீ கண்டன்ன
பகடு தரு செந்நெல் போரொடு நல்கி,
'கொண்டி பெறுக!' என்றோனே- உண் துறை
மலை அலர் அணியும் தலை நீர் நாடன்;
கண்டாற்கொண்டும் அவன் திருந்து அடி வாழ்த்தி,

----------------------------------------------

வான் அறியல என்பர் அடுபசி போக்கல்;
அண்ணல் யானை வேந்தர்
உண்மையோ, அறியல்? காண்பு அறியலரே! (390)

திணையும் துறையும் அவை.

அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது.

மதி ஏர் வெண் குடை அதியர் கோமான்,
கொடும் பூண் எழினி, நெடுங் கடை நின்று, யான்
பசலை நிலவின் பனி படு விடியல்,

பொரு களிற்று அடி வழி அன்ன, என் கை
ஒரு கண் மாக் கிணை ஒற்றுபு கொடாஅ,
'உரு கெழு மன்னர் ஆர் எயில் கடந்து,
நிணம் படு குருதிப் பெரும் பாட்டு ஈரத்து
அணங்குடை மரபின் இருங் களந்தோறும்,
வெள் வாய்க் கழுதைப் புல் இனம் பூட்டி,
வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்
வைகல் உழவ! வாழிய பெரிது! ' எனச்
சென்று யான் நின்றனெனாக, அன்றே,
ஊர் உண் கேணிப் பகட்டு இலைப் பாசி
வேர் புரை சிதாஅர் நீக்கி, நேர் கரை
நுண் நூல் கலிங்கம் உடீஇ, 'உண்' எனத்
தேட் கடுப்பு அன்ன நாட்படு தேறல்
கோள்மீன் அன்ன பொலங் கலத்து அளைஇ,
ஊண் முறை ஈத்தல் அன்றியும், கோள் முறை
விருந்து இறை நல்கியோனே- அந்தரத்து
அரும் பெறல் அமிழ்தம் அன்ன
கரும்பு இவண் தந்தோன் பெரும் பிறங்கடையே. (392)

திணையும் துறையும் அவை
அதியமான் நெடுமான் அஞ்சி மகன் பொகுட்டெழினியை ஔவையார் பாடியது.

**பிரிவு 11 பதிற்றுப்பத்து - பாட அமைப்பு**

5.2.1 நோக்கங்கள்
5.2.2 நூல் அறிமுகம்
5.2.3 பாடல் ஆசிரியர்
5.2.4 பாடப் பொருள் விளக்கம்
5.2.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்
5.2.6 பாடத் தொகுப்புரை
5.2.7 அருஞ்சொற் பொருள்
5.2.8 மாதிரி வினாக்கள்
5.2.9 பரிந்துரை நூல்
5.2.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

## 5.2.1 நோக்கங்கள்

- குமட்டூர் கண்ணனார் பற்றி அறிதல்.
- இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் வீரம், குடிமக்களைப் பாதுகாக்கும் முறை, விருந்தோம்பல் ஆகியவற்றைத் தெரிதல்.
- தம் புகழ் பாடுவோனின் துன்பம் தீர்க்கும் பொருட்டுப் பரிசில் வழங்கும் தன்மையை அறிதல்.

## 5.2.2 நூல் அறிமுகம்

இந்நூல் சேர மன்னர்கள் பத்துப் பேரைப் பற்றிய 100 பாடல்களைக் கொண்டது. இவற்றில் முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் ஒரு பதிகம் உள்ளது. ஒவ்வொரு பாட்டுக்கும் அப்பாட்டின் தொடரே தலைப்பாக உள்ளது. உ.வே.சா. இந்நூலை முதலில் பதிப்பித்தார். இந்நூலின் வழி சேர நாட்டின் வளம், போர், கொடை, சேரமாதேவியரின் இயல்பு, மக்களின் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை அறியலாம்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர் கண்ணனார் பாடிய இரண்டாம் பத்து இங்குப் பாடமாக வந்துள்ளது.

## 5.2.3 பாடல் ஆசிரியர்

குமட்டூர் கண்ணனார் அந்தண மரபினர். இவரது ஊர் குமட்டூர். கண்ணனார் என்பது இவரது இயற்பெயர். இவர் இப்பத்துப் பாடல்களைப் பாடியதால் இவருக்கு உம்பர் காட்டுப் பகுதியில் ஐந்நூறு ஊர்களை வரியில்லா நிலமாகச் சேர மன்னன் பரிசாகத் தந்தான்.

## 5.2.4 பாடப் பொருள் விளக்கம்

பாடலின் பெயர் விளக்கம் கூறிப் பாடல் பொருள் விளக்கப்படுகிறது.

### 1. புண்ணுமிழ் குருதி.

இப்பாட்டில் சேரன் போரில் பகைவரின் மார்பினைப் பிளந்தபோது அப்புண்ணிலிருந்து சிவந்த குருதி வெள்ளமாய்ப் பெருகி ஓடி, கழியில் உள்ள நீலநிற நீர் நிறம் மாறி குங்குமக் குழம்பைப் போல விளங்கியதால் இப்பெயர் பெற்றது.

**பாடாண் திணை**

பாடப்படும் ஆண் மகனின் ஒழுக்கத்தைக் கூறுவது.

**செந்துறைப் பாடாண் பாட்டுத் துறை**

விகார வகையால் அமரராக்கிச் செய்யும் அறுமுறை வாழ்த்தைப் போல் இல்லாது உலகத்து இயற்கை வகையால் மக்களைப் பாடுவது செந்துறை.

பாடும் செயலையும் வினையையும் பாடப்படும் ஆண் மகனையும் நோக்காது அவனது ஒழுகலாறான திணையை உணர்த்துதல் பாடாண் பாட்டு ஆகும்.

(1-6) மலை போல உயர்ந்து எழும் கடல் அலையைக் காற்று வீசி வெண்சிறு துளிகளாக உடைத்துச் சிதைக்கிறது. இத்தகு பரந்த நீர் நிறைந்த கடல். அதற்குள் போய் பிறரை வருத்தும் இயல்புடைய அவுணர் கூட்டமாய் காவல் செய்யும் சூரபத்மனின் காவல் மாமரத்தை வேருடன் வெட்டி அழித்த மிக்க புகழும் சினமும் வலிமையும் உடைய முருகன் பிணிமுகம் என்னும் யானை மேல் ஏறி வெற்றி உலா வந்தான் அதுபோல்

(7-16) கூர்மையான வாளால் எதிர்த்த பகைவரை வெட்ட, அவர்களது மார்பு பிளந்து, குருதி பெருகி, கழியில் உள்ள நீலநிற நீர் நிறம் மாறி குங்குமக் குழம்பைப் போல விளங்க, நீ பகைவர் அரண்களை அழித்தாய். அதனால் வலிமைமிகுந்து சிறப்புற்று மனஎழுச்சி உடையவனானாய் பகைவர் பலர் ஒன்றாகக் காவல் காத்த மலர்களுடைய காவல்மரத்தை அடியுடன் வெட்டி அழிக்கும்படி வீரரை ஏவினாய். போரில் வென்று அம்மரத்தால், முழங்கும் வெற்றி முரசம் செய்து கொண்டாய். இத்தகு வென்ற போரையும் வடித்த கள்ளும் மாலை அணிந்த மார்பும் அஞ்சாது அறப்போர் செய்யும் படையும் உடைய சேரனே!

(17-25) முருக்க மரங்கள் நிறைந்த மலையில் இரவில் உறங்கும் கவரிமான்கள், பகலில் தாம் மேய்ந்த நரந்தம் புல்லையும் அங்குள்ள அருவிகளையும் கனவில் கண்டு மகிழ்ந்தன. இத்தகு இயல்புடைய ஆரியர் நெருங்கி வாழும் புகழுடைய இமயமலை, தெற்கில் உள்ள குமரி ஆகிய இவற்றுக்கிடையே உள்ள நாட்டில் மன்னர்களுள் செருக்குக் கொண்டு தம்மை உயர்த்திச் சொல்பவரின் வீரம் அழியும்படி வஞ்சிப் போர் செய்து வென்றாய். மார்பில் மாலை தாழ்ந்து விளங்க, வெற்றியால் உயர்ந்த குற்றமற்ற பொன்னரி மாலை அணிந்த யானையின் பிடரியின் மீது ஏறிப் பலரும் புகழச் சிறந்து விளங்கினாய்! இச்சிறப்பை யாம் இனிது கண்டோம் ! நீ வாழ்க!

**2. மறம் வீங்கு பல் புகழ்**

மன்னருக்குப் பலவகையால் உண்டாகும் புகழைவிட மறத்தால் உண்டாகும் புகழே உயர்ந்தது என்று கூறப்பட்டதால் இப்பெயர் பெற்றது.

**திணையும் துறையும்** மேற்கூறியவை.

(1-3) போரில் வாள் போரால் வீரர்கள் தோல்வியுற்று கீழே விழ, அவர்களின் நாட்டைக் கவரும் படையையுடைய மன்னர் தலை நடுங்கி வணங்குமாறு அவர்களுடைய காவல் மரத்தை அடியோடு வெட்டி அழித்த மிகுந்த சினமுடைய சேர மன்னனே!

(4-9) கழுத்தில் பிடரி மயிரையும் நீண்ட கூரிய நகங்களையும் உடைய சிங்கம் உலவும் மலைச்சரிவில் மற்ற விலங்குகளின் கூட்டம் மன நடுக்கமுடன் ஒடுங்கி வாழும். அதுபோல நான்கு திசைகளிலும் வாழும் மன்னர்கள் முரசு முழங்கும் தம் அரண்மனைக்குள் அஞ்சி நடுங்கி மனம் கலங்கி உறங்காமல் இருப்பர். இவ்வாறு உன் வீரத்தில் வரும் புகழ் செவியில் கேட்பதற்கு இனிதாக உள்ளது.

(9-14) உன் புகழைக் கேட்கும் பொழுது உன்னைக் காணும் விருப்பத்துடன், இளமையும் அசைந்த நடையும், வண்டு மொய்த்ததால் உண்டாகும் காட்டு மல்லிகை நறுமணமும் உடைய கன்றுடன் கூடிய பெண் யானைகள் இருக்கும் குன்றுகள் பல கடந்து வந்து தங்கும் இடத்தில் தங்கியது பெரிய என் சுற்றம்.

(15-25) அவர்களின் நீண்ட நாள் பசியின் வருத்தம் போகுமாறு, வெண்மையான ஊனின் இறைச்சியும் ஆட்டிறைச்சியும் சேர்த்துச் சமைத்த வெண் சோறும் கள்ளின் தெளிவும் உண்டனர். மழையில் நனைந்த பருந்தின் ஈரமான இறகைப் போன்ற மண் படிந்த கிழிந்த கந்தை ஆடையை நீக்கி, பட்டால் ஆகிய ஆடையைத் தர உடுத்துக் கொண்டனர். கூந்தலும் மூங்கில் போன்ற தோள்களும் உடைய பெண்கள் அணிகளை

அணிந்து கொள்வர். உன் சுற்றத்தார் உன்னைச் சூழ்ந்து இருக்க நீ வீற்றிருக்கும் திருவோலக்க இன்பம் பார்த்து மகிழ்வதற்கு இனிதாய் உள்ளது.

### 3. பூத்த நெய்தல்

தம்மை உண்ண வந்த எருமைகளைத் தம் இனிமையாலும் மிகுதியாலும் தம்மை விட்டு வேறு இடம் செல்லாமல் தடுக்கும் நெய்தல் மலர்கள் என்று கூறிய உவமைச்சிறப்பால் இப்பெயர்பெற்றது.

**திணையும் துறையும் மேற் கூறியவை**

(1-10)பசுக்கூட்டங்கள் புல்லை மேயும் கொல்லை ஆனது ஆரல் மீன் உலாவும் நீர் நிறைந்த வயல்கள் ஆயின. அங்குப் பன்றிகள் தம் கொம்பினால் கிண்டிப் புழுதி ஆக்கியதால் ஏரால் உழாமல் காலால் குழப்பி விதை விதைக்கும் வயல்கள் ஆயின. கரும்புள்ள பாத்திகளில் பூத்துள்ள நெய்தல் மலர்கள் பெரிய கண்களை உடைய எருமைக் கூட்டத்தை வேறு இடத்திற்குச் சென்று மேயாமல் தடுக்கும். இளம்பெண்கள் ஒன்றாகக் கூடித் துணங்கைக் கூத்தாடும் இடத்தில் அம்மங்கையரின் தழை உடையில் இருந்து உதிர்ந்த ஆம்பல் பூக்களை முதிய பசுக்கள் தின்னும். தென்னை மரங்கள், பறவைகள் ஒலிக்கும் மருத மரங்கள், கால்வாய்களை உடைய பூம் பொய்கைகள் ஆகியன அங்குள்ளன. இவ்வாறு புலவர் புகழ்ந்து பாடும் செல்வமிக்க ஊர்களை உடையது பகைவரின் நாடு.

(11-19)இவ்வழகிய பகைவரின் நாடு அழியுமாறு அங்குள்ளவர்களுக்கு அச்சமூட்டி நீ வெகுண்டு படையுடன் முற்றுகையிட்டாய். எனவே எமனால் அழிக்கப்படும் உடம்பு அழகற்று இருப்பதைப் போலக் கரும்பு விளையும் வயல்கள் அழகற்று உள்ளன. முறுக்கிய காயை உடைய விடத்தேரை மரமும் கரிய உடைமரமும் உயர்ந்து வளரப் பிளந்த தலைமயிரை உடைய பேய்மகள் கழுதின் மேல் ஊர்ந்தாள். போர்க்களத்தின் தூசிகள் படிந்தன. மக்களும் விலங்குகளும் எழுப்பும் ஆரவாரம் இல்லாததால் ஊர் மன்றத்தில் செல்ல நினைத்தவர் எண்ணம் அச்சத்தால் அழியும். இவ்வாறு பாழான ஊர்கள் ஆயின.

(20-28) பெருமை மிக்கவனே! காடுகள் முனிவர் வாழ்வதற்கான இடமாயின. முல்லைக் கொல்லைகள் வீரர்களும் மகளிரும் தங்கும் இடமாயின. பெருவழிகள் ஆறலைக் கள்வர்களும் பிற துன்பங்களும் இல்லாது வழியில் செல்பவர்களுக்கு ஏற்றவாறு உள்ளன. மேலும் நிலத்தில் விளையும் எட்டு வகையான உணவு தானியங்களையும் விற்பவர்களையும் குடிமக்களையும் வேளாளர் சுற்றங்களையும் பாதுகாத்து வருகின்றாய்.

உன் ஆட்சியின் சிறப்பால் செவ்வாயும் சுக்கிரனும் ஒன்று கூடாது இருக்க, நிலத்தில் வேண்டிய பொழுது மழை பெய்து வளம் பெருகுகிறது. நீ பாதுகாக்கும் நாடு நோயும் பசியும் இன்றி பல்வளமும் பெற்றதாக உள்ளது.

### 4. சான்றோர் மெய்ம்மறை

சேரன் தன் படை வீரர்களை மெய்யில் (உடம்பில் ) அணியும் கவசம் போலக் காப்பவன் என்பதால் இப்பெயர் பெற்றது.

**திணையும் துறையும் அதுவே.**

(1-4) மன்னனே! நீ நிலம், நீர், காற்று, ஆகாயம் போல உன் பெருமையை உணர்ந்து காண்பதற்கு அரியவன். நாள் மீன், கோள், திங்கள், ஞாயிறு, தீ என்னும் ஐந்தும் கூடுவதால் பிறக்கும் ஒளியைப் போன்ற ஒளி உடையவன்.

(5-7) போர் செய்வதில் கூற்றுவன் போல வலிமையான அக்குரன் என்பவனைப் போலக் கொடைத் தன்மை உடையவன்.

(8-10) போரிட்டுச் சிறந்த தும்பைப் பகைவரின் போரையும் பெருமையும் அழித்தவன். கூற்றுவனே சினத்துடன் வந்தாலும் நீ அவனை ஓடச் செய்யும் ஆற்றலுடையவன்.

(11-12) ஏழு மன்னர்களின் பொன் முடியில் செய்யப்பட்ட ஆரத்தை அணிந்த திருமகள் விரும்பித் தங்கும் மார்பையும் வலிமையான பெரிய கையையும் உடைய வீரனின் கவசம் போன்றவன்.

(13-15) மெய்ந்நலமும், தலை அணிகலன்களால் மறைந்த வண்டுகள் மொய்க்கும் கூந்தலும் காதில் அணிந்துள்ள வளைந்த குழையும் உடைய தேவிக்குக் கணவன்.

(16-17) பல யானைக் கூட்டத்துடன் வெற்றிக் கொடி உயர்ந்து பறக்கும் படையை ஏராகக் கொண்டு பகைவரின் படையாகிய நிலத்தை உழுகின்றவன். பாடி வரும் பாண் மகளுக்கு வேண்டும் பொருள் வழங்கும் மன்னன்.

(18-22) பொன் அணிகள் அணிந்து கடலால் சூழப்பட்ட இவ்வுலகம் முழுதும் ஆண்ட உம் முன்னோரைப் போல அழியாத புகழை இவ்வுலகில் நிறுவினாய். நீ குறைவின்றி இனிது வாழ்வாயாக!.

**5 நிரைய வெள்ளம்.**

சேரனின் படை வீரர்கள் பகைவர்களுக்கு நிரைய வெள்ளம் போலத் தோன்றி அழிவை ஏற்படுத்துவர். அதனால் இப்பெயர் பெற்றது.

**திணை துறை அதுவே.**

(1-15) சேரனே! உயர்ந்த மதிலையும் காவற்காட்டையும் அழித்து வரிசையாக ஆண் யானைகள் செல்லும். அவை பகைவர்களுக்கு நரகத் துன்பம் தரும். இத்தகு படை வெள்ளம் நான்கு திசைகளிலும் சென்று மன்னனின் சுற்றமான படையை அழிக்கும். நீ அழிக்க எண்ணிய நாட்டில் ஓர் ஆண்டு வரை தங்கி இருக்கும், அப்பொழுது போர் ஏற்பட்ட ஊர்களைத் தீயிட்டு அழிக்கும்.. மேலே உயர்ந்து எழும் தீயின் சுடர்கள் காற்று வீசுவதால் மேலெழுந்து நிறம் கொண்ட புகையாக மாறி உடைந்து கெடும். அவ்விடமும் தீயில் எரியாத இடங்களும் அழியும்படி உன் படைகள் அழிக்கும் . இவ்வாறு பழைய இயல்பழிந்த ஊர்கள் பல. அவ்வூர்களில் வாழ்பவர் நீங்கினர். அதனால் ஊர்கள் பாழாயின. அங்கிருந்த வீடுகளில் வேளைக் கொடியும் சுரைக் கொடியும் தழைத்து வளர்ந்தன. கூரையில் பீர்க்கங் கொடி படர்ந்தன. உழுதுவிட்ட நிலத்தில் மழை பெய்ததால் முளைத்து மலர்ந்த காந்தள் செடி இப்பொழுது நீரின்றி வேருடன் உலர்ந்துள்ளது. அவ்வீடுகளில் அறமற்ற மறவர் தங்கினர். இவ்வாறு பகைவர் நாட்டை அழித்தாய். அத்தகைய நாடுகளையும் பார்த்தவாறு இங்கு வந்தேன்.

(16-24) மன்னனே! கடலிலும் மலையிலும் ஆற்று நீர்பாயும் நிலங்களிலும் உண்டாகும் பொருள்களும் வேற்று நாட்டுப் பொருள்களும் என வளம் மிகுந்த விழாவின் முழவு ஒலிக்கும் முதிய ஊர்கள். அங்குப் பலவகைக் கொடி நிழலுடைய கடை வீதிகளில் வெற்றியும் கொடையும் அறிவிக்கும் முரசு ஒலிக்கும். வீரர்களுக்குப் பரிசளித்தும் போரில் அழிந்த கொம்புடைய வலிமையான யானைகளையும் உடையவனே!

(24-34) சான்றோர் நலமான வாழ்க்கையில் ஐம்புலன் அடங்கிய ஒழுக்கத்தையும் நல்வினை செய்ததால் அற வேட்கையும் உடையவரே. அவர்களைப் போலத் தாமும் விரும்பி அறங்களைச் செய்யும் சுற்றத்தார் சூழ இருக்கும் ஊரில் குற்றம் அறியாது இனிதாக விரும்பி வாழும் பலரும் உன்னைப் புகழ்வர். இத்தகு நீ நோயின்றியும் புது வருவாயுடைய நாடும் சிறக்க இசைக்கருவிகளைப் பையில் வைத்துள்ள பாணர் நீ வாழ்வாயாக என்று வாழ்த்துவர். இவற்றை என் இரு கண்களாலும் கண்டு மகிழ்ந்தேன்.

(35-40) இவ்வுலகத்தில் வாழும் உயிர்களுக்குக் குறைவின்றிக் கொடுக்கும் கொடைத் தன்மை உடையவன். அறிவு ஒழுக்கத்தால் சிறந்த குடிகளுக்குப் பொருள் தந்து இன்பம் தரும் திருமாலைப் போன்ற உன்னைக் காண விரும்பியே மேலே கூறிவாறு இரு நாடுகளையும் கண்டு மதி மயங்கினேன்.

## 6. துயிலின் பாயல்.

இமயவரம்பனின் ஏழுமன்னனின் பொன் முடியால் ஆன ஆரத்தைஅணிந்த மார்பு மகளிருக்கு உறங்கும் பாயல் என்று கூறுவதால் இப்பெயர் பெற்றது.

**திணையும் துறையும் அதுவே,**

(1-9) மலையைவிட வலிமையாகவும் உயரமாகவும் கட்டப்பட்ட வளைந்த மதிலும் அம்புக்கட்டுகள் உள்ள இடை மதிலும், கதவில் கணைய மரங்கள் பொருந்திக் கிடக்கும் வெண்சிறு கடுகு தொங்கவிடப்பட்ட மதிலும் உள்ளன. இத்தகு கதவுகளை யானைகள் அழித்ததால் நுனி முறிந்த கொம்பை உடையன. எனவே பன்றி போல் தோன்றும். சினந்து மதநீர் சொரிந்து கணைய மரம் காவல் மரம் ஆகியவற்றை அழிக்கும் களிறுகள் பிளிறும் பாசறையில் நீண்ட நாள் நீ தங்கியதால் உன்னைக் காண வந்தேன்.

(10-13) நின் தேவி சினமற்ற கற்புடையவள், ஊடலிலும் இன்சொல் பேசுபவள். சிவந்த வாயும் அமர்த்த கண்ணும் ஒளி நெற்றியும் அசைந்த நடையும் உடையவள், அவள் நின்னை நினைந்து வருந்துவள்.

(14-20) சேரர் குடியோனே! அழகிய மணிகள் பதித்த பொன்னாரம் அணிந்த நின் மகளிர் ஏழு அரசனின் பொன் முடியால் செய்த மாலையை அணிந்த நின் மார்பில் உறங்கும் இடத்தினை வினை மேற்கொண்டபோது நீங்குதலும் இல்லத்தில் நீங்காது இருத்தலும் ஆகியவற்றில் வல்லவனே! நின் மார்பு அவளை வருத்த படுக்கையில் இருந்து வருந்திடாமல் இருப்பாளோ ? எனவே விரைந்து அவளிடம் செல்வாயாக.

## 7. வலம்படு வியன் பணை

பகைவர் கேட்ட உடனேயே வெருவி ஓடும்படி முழங்குவது முரசம். மன்னனுக்கு முழக்கத்தால் வெற்றியினை உண்டாக்கப் பண்ணும் முரசம். எனவே இப்பெயர் பெற்றது.

**திணையும் துறையும் அதுவே,**

(1-3) உன் பகைவராக இருந்தாலும் பொறுக்கமுடியாத பிழை செய்தவராக இருந்தாலும் அவர்தம் பிழையை உணர்ந்து வருந்தி உம்மை அடைந்து பணிந்து திறை செலுத்த அவர்களை மன்னித்து அத்திறையை ஏற்றுக் கொள்வாய். எனவே உம் அருளுக்கு ஒப்பாக ஒன்றை ஆராய்ந்தால் ஒப்பும் உயர்வும் ஒன்றும் இல்லை.

(4-7) அலை கடல் சிறு சிறு திவலைகளாக உடையும்படி கடல் கடந்து சென்று அங்குக் குறும்பு செய்து திரியும் பகைவரின் காவல் மரமான கடம்ப மரத்தை வெட்டி, அதை முரசாகச் செய்தாய். உம் படைவீரர்கள் போர்க்களத்தில் இருந்து வந்து அம்முரசுக்குப் பலியிட்டு வழிபடுவர். குறுந்தடியால் அம்முரசின் கண்ணில் அடித்து முழக்கும் இசைக் கருவியை இயக்குபவர்கள் உள்ளனர்.

(8-14) இருளாகிய பகையைக் கெடுக்கும் ஞாயிறு செல்லும் சிறப்பும் காற்றால் மேகக் கூட்டம் பரவியதுமான பெரிய வானம். அவ்வானம் போன்றது உன் வெண்குடை. பசுமையான நிலத்தில் வாழும் மக்கள் அனைவரும் இக்குடைக்குள் வருக என்று கூறும் மார்பை உடையவனே. பாடினிக்கு அவள் விரும்பியதை அறிந்து வழங்குபவனே.

## 8. கூந்தல் விறலியர்.

அடுப்புத் தொழில் செய்வதற்கு உரியவர் அல்லர் விறலியர். அத்தகையவரை அத்தொழில் செய்ய விடுத்தலால் இப்பாடல் இப்பெயர் பெற்றது.

**துறை: இயன் மொழி வாழ்த்து.**

ஒரு மன்னனின் புகழ் கொடை வீரம் ஆகியவற்றின் இயல்பை எடுத்துக் கூறுவது. (பரிசு பெற்ற பாணன் கூற்று)

(1-2) கள்ளை உண்க! சோற்றைச் சமைப்பீர்! கறியை அறுப்பீர்! புழுக்கை வகைகளை உலையில் ஏற்றுவீர்!

(3-6) இருண்ட ஐந்து வகையாகப் பின்னப்பட்ட கூந்தலும் இளமையும் உடைய விறலியே! மேலும் வருபவர்களுக்கு வழங்க நீங்கள் பொற்றொடி ஒலிக்க உண்பதற்கு உரியதை நிறைய சமைப்பீராக!

(7-12) உணவுடன் நீர் பெற்ற செல்வத்தையும் வருபவர்களுக்குத் தருவீர்களாக! அதனால் குறை ஒன்றும் இல்லை. இவ்வுலகில் உயிர்கள் பல ஆண்டுகளாக நீரின்றித் தவிக்குமாறு மேகம் மழை பெய்வதைப் பொய்த்தாலும் இச்சேர மன்னன் நீ எப்பொழுது சென்றாலும் உம் விருப்பப்படியே நிறைய கொடுப்பான்.

**9. வளனறு பைதிரம்.**

முன்பு போல் வாழ்க என்ற வாழ்வு அளிக்காத வளப்பம் இல்லாப் பகைவர் நாடுகள் என்பதால் இப்பெயர் பெற்றது.

**துறை பரிசில்துறை பாடாண் பாட்டு.**

(1-10) உன் கூலிப் படைவீரர், பகைவர் நாட்டில் சூறையாடிப் பெற்ற உணவும், வினை செய்வதையே விரும்பும் கால்களையும் உடையவர். அவர்கள் சுரத்தில் கற்களுடைய நீண்ட வழிகளை வெட்டி அகன்ற வழிகளாக அமைத்துத் தருவர். போர் மறவர் முன் வைத்த காலைப் பின் வைக்க அறியாதவர்கள். அவர்கள் காம்புடைய வாள் படையைப் புலித்தோல் உறையில் இருந்து எடுத்துப் போருக்குச் செல்வதற்கு ஏற்றவாறு செம்மை செய்வர். போருக்குச் செல்ல விரும்புபவர் சிவந்த தினையைக் குருதியுடன் கலந்து தூவிப் பலியிடுவர். இசை இசைப்போர் நீராடி வாரால் கட்டப்பட்ட முரசின் கண்ணில் குருதியைப் பூச, தொடி அணிந்த தோள்களை உடைய வீரர்கள் வலக் கையில் குறுந்தடியை ஏந்தி முரசு அடித்து முழக்குவர். போர் வீரர்களுடன் அம்புகளை ஆராய்ந்து முன்பு செய்த போரையே திரும்பவும் விரும்பி இருப்பாய்.

(10-15) நீ அவ்வாறு போரை விரும்பி இருக்க, உன் மனைவி பகலில் உன் பிரிவை விரும்பி ஆற்றியிருக்கிறாள். ஆனால் இரவில் அரிதே பெற்ற உறக்கத்தில் தோன்றும் கனவினால் தான் பெற்ற சிறு மகிழ்ச்சியால் தன் உயிரைத் தாங்கி இல்லத்தில் தங்கி உள்ளாள். .அவளிடம் உன் நினைவு இல்லை. நீ வரவில்லை. அவளுக்கு நீ யாரோ! இரங்கத் தக்கவன்.

16-19) ( பகை நாட்டின் அழிவைக் கூறுதல்.)

உன் பகைநாட்டிலுள்ள அனைவரும் அச்சம் அடைந்து ஒன்றாக எழுந்து ஓடினர். எனவே அவர்கள் பாதுகாத்த பசுக் கூட்டங்கள் வெவ்வேறு திசைகளில் ஓடின. அவர்கள் உழு கலப்பை முதலியவற்றை எறிந்து விட்டுச் சென்றதால் நிலங்கள் அழிந்தன. உன் போர்ச் செயலால் யாரும் இருந்து வாழக் கூடிய வாய்ப்பைப் பெறவில்லை. எனவே பகைவர் நாடுகள் இத்தகு அழிந்த நிலையை அடைந்தன.

(19-27) முன்பு பகைவர் நாட்டில், நீர் நிலைகளில் நெருப்பு போலத் தாமரை, ஆம்பல் மலர்கள் மலரும். நெல் விளையும் வயல்களில் நெய்தல் மலர் மலரும். விளைந்த நெல்லை அரியும் போது அரிவாள் வாய் மடங்கும். கரும்புச் சாறு பிழியும் இயந்திரத்தின் சாறு விழும் கூன் வாய் வளையும். அவ்வளங்கள் இன்று நேற்றல்ல பல காலம் இருந்தனவே என்று பலரும் வாயால் சொல்லுவர். இன்று கை சேர்த்துப் பிசைந்து வருந்துமாறு பல சிறப்புகளைப் பெற்றிருந்த நாடுகள் கெட்டு அழியும் தன்மை உடையன ஆயின.

**10 அட்டுமலர் மார்பன்.**

‘அடாஅ அடு புகை அட்டு மலர் மார்பன்’ எனச் சிறப்பித்தலால் இப்பாடல் இப்பெயர் பெற்றது.

**துறை: இயன் மொழி வாழ்த்து.**

(1-3) உன் தலைவன் யார் என்று கேட்டால், என் தலைவன் கடுமையான கடலில் உள்ள தீவில் வாழும் பகைவரை அழிக்க எண்ணி, அவர்கள் இருக்கும் இடம் சென்று,

அவர்களின் காவல் மரத்தை வெட்டி வீழ்த்தி அவரையும் வென்று அழித்த மிகுந்த சினமும் வலிமையும் உடைய சேரனே ஆவான். அவன் கண்ணி வாழ்வதாகுக.

(6-10) பகைவர் நாட்டில் தனக்கு எதிராக அவர்கள் செய்யும் சூழ்ச்சிகளை அறிந்து , அச்செயல் அவர்களுக்குச் சிறிது கூடப் பயன்படாதவாறு அவற்றை அழித்தான். தன் கண் எதிரிலேயே மனதில் ஒன்று நினைத்து, வெளியில் அன்பு காட்டுவது போல உறவாடும் பகைவரிடம் கனவிலும் பொய் சொல்வதை அறியாதவன்.

(11-21) பகைவர் கண்டஞ்சுமாறு பெருந்தன்மையுடன் நடந்து அவர்களை அழித்தான். கூட்டமான மத யானைப் படை ஓடுமாறு பகைவரின் நிலத்தை வென்றவன். புலவர் பாடிப் போற்றித் துதிக்க, அவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்து உயர்ந்த புகழை அடைந்தான். வயிரியர் கண்ணுளர் ஆகிய இருவருக்கும் குதிரை, களிறு, தேர் ஆகியவற்றைத் தனக்கு என்று வைத்துக் கொள்ளாமல் மிகுதியாகத் தந்தவன். காவற்காடும், கிடங்கும், மதிலும், ஞாயிலும், கடத்தற்கரிய அகமதிலும் உடைய அந்நகரை அழித்தான். ஊரைச் சுடும் புகை கவ்வியது. இவ்வாறு பகைவரை வென்ற செருக்குடன் விரிந்த மார்பை உடையவன்.

(22-24) எங்களைச் சேர்ந்த பாணர், கூத்தர், புலவர், வேறு பரிசிலர், கலைவன்மை இல்லாதவர் என அனைவருக்கும் கொடுப்பதை விரும்பிக் கடமையாகச் செய்யும் நெஞ்சுடையவன்.

(25-28) குளிர்ந்த மேகம் பல ஆண்டுகள் மழை பெய்யாது போனாலும் இவன் தன்னை அடைந்தவரின் வயிற்றுப் பசியைக் குறைவின்றி நீங்குமாறு கொடுப்பான். எனவே அவனைப் பெற்ற தாய் வயிறு குற்றம் இன்றி விளங்குவாளாக!

### 5.2.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

**அ. வினாக்கள்**

1. பதிற்றுப் பத்தில் உள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை யாது?
2. பதிற்றுப்பத்து எந்த மன்னர்களைப் பற்றிப் பாடப்பட்டது?
3. பாடமாக வந்துள்ள பகுதி யார் யாரைப் பற்றிப் பாடியது?
4. குமட்டூர்க் கண்ணனாருக்குச் சேர மன்னன் தந்த பரிசு யாது?

**ஆ. சரியா? தவறா?**

1. பதிற்றுப்பத்து புறம் சார்ந்த நூல்.
2. ஒவ்வொரு பாட்டுக்கும் அப்பாட்டின் தொடரே தலைப்பாக உள்ளது.
3. துயிலின் பாயல் என்று சிறப்பிக்கப்பட்டது சேரனின் மார்பு.
4. பாடமாக வந்துள்ள பகுதி பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்து.

### 5.2.6 பாடத் தொகுப்புரை

- சேர மன்னர்கள் பத்துப் பேரைப் பற்றிப் பாடப்பட்டது பதிற்றுப்பத்து.
- சேரன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் படை வலிமை, போர், வீரம், கொடை ஆகியவற்றில் சிறந்திருந்தான்
- சேரனைக் காண விரும்பி வந்தோர் அவனைப் போற்றிச் சிறப்பித்தனர்.

### 5.2.7 அருஞ்சொற் பொருள்

| | | |
|---|---|---|
| வரை | - | மலை |
| புணரி | - | கடலின் அலை |
| வளி | - | காற்று |
| அட்ட | - | வருத்திய |
| அரிமான் | - | சிங்க ஏறு |

| | | |
|---|---|---|
| கடும்பு | - | சுற்றம் |
| பாக்கம் | - | நெய்தல் நில ஊர் |
| பறந்தலை | - | போர்க்களம் |
| பீடு | - | பெருமை |
| துப்பு | - | துணை |
| குரூஉ | - | நிறம் |
| வயவர் | - | வீரர் |
| கோடு | - | மலை உச்சி |
| இஞ்சி | - | மதில் |
| இயவர் | - | இசைக் கருவிகளை இசைப்பவர் |
| அடுமின் | - | சமையுங்கள் |
| எல்லி | - | இரவு |
| இரு முந்நீர் | - | கரிய கடல் |
| கடந்து | - | வென்று |

### 5.2.8 மாதிரி வினாக்கள்

**அ. குறு வினாக்கள்**

1. பதிற்றுப்பத்து பற்றிக் கூறுக.
2 குமட்டூர்க் கண்ணனாரைப் பற்றிக் கூறுக
3. புண்ணுமிழ் குருதி பெயர்க் காரணம் யாது?

**ஆ. சிறு வினாக்கள்**

1. மறம் வீங்கு பல்புகழ் என்ற தலைப்பில் வந்துள்ள கருத்துகள் யாவை?
2. பாணன் கூற்றின் வாயிலாக வெளிப்படும் சேரனின் கொடைச் சிறப்பு பற்றிக் கூறுக.
3. 'புலவரேத்த வோங்கு புகழ் நிறீஇ' என்று சேர மன்னன் போற்றப்படக் காரணம் யாது?

**இ. பெரு வினாக்கள்**

1. சேரன் வான் பொய்ப்பினும் தான் பொய்யான் என்பதை நிறுவுக.
2. சேர மன்னன் பகைவர் நாட்டின் மீது போரிட்டு வென்ற சிறப்பினை விவரி.

### 5.2.9 பரிந்துரை நூல்

பதிற்றுப்பத்து மூலமும் விளக்கவுரையும், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை உரை, கழக வெளியீடு, சென்னை.

### 5.2.10 தன்மதி ப்பீட்டு வினா - விடைகள்

**அ. விடைகள்.**

1. பதிற்றுப்பத்தில் உள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை100 ஆகும்.
2. பதிற்றுப்பத்து சேர மன்னர் பத்துப் பேரைப் பற்றிப் பாடப்பட்டது.
3. பாடமாக வந்துள்ள பகுதியைக் குமட்டூர்க் கண்ணனார் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பற்றிப் பாடியது.

4. குமட்டூர்க் கண்ணனாருக்குச் சேர மன்னன் உம்பர் காட்டுப் பகுதியில் ஐந்நூறு ஊர்களை வரியில்லா நிலமாகத் தந்தான்.

**ஆ. விடைகள்.**

1. சரி
2. சரி.
3. சரி.
4. தவறு.

**பதிற்றுப்பத்து**

**11. புண்ணுமிழ் குருதி**

'வரைமருள் புணரி வான்பிசி ருடைய
வளிபாய்ந்தட்ட துளங்கிருங் கமஞ்சூல்
நளிஇரும் பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை அவுணர்ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந்தாங்குச்
செவ்வாய் எஃகம் விலங்குநர் அறுப்ப
வருநிறந் திறந்த புண்ணுமிழ் குருதியின்
மணிநிற இருங்கழி நீர்நிறம் பெயர்ந்து
மனாலக் கலவை போல அரண்கொன்று
முரண்மிகு சிறப்பின் உயர்ந்த ஊக்கலை
பலர்மொசிந்து ஓம்பிய அலர்பூங் கடம்பின்
கடியுடை முழுமுதல் துமிய வேஎய்
வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்
நாரரி நறவின் ஆர மார்பில்
போரடு தானைச் சேர லாத
மார்புமலி பைந்தார் ஓடையொடு விளங்கும்
வலனுயர் மருப்பில் பழிதீர் யானைப்
பொலனணி எருத்தமேல் கொண்டு பொலிந்தநின்
பலர்புகழ் செல்வம் இனிது கண்டிகுமே
கவிர் ததை சிலம்பில் துஞ்சுங்கவரி
பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே! '

திணை :பாடாண் திணை, துறை : செந்துறைப் பாடாண் பாட்டு .

**12 . மறம் வீங்கு பல்புகழ்**

வயவர் வீழ வாளரின் மயக்கி
இடங்கவர் கடும்பின் அரசுதலை பனிப்பக்
கடம்புமுதல் தடிந்த கடுஞ்சின வேந்தே!
தாரணி எருத்தின் வாரல் வள்ளுகிர்

அரிமான் வழங்குஞ் சாரல் பிறமான்
தோடு கொள் இனநிரை நெஞ்சதிர்ந் தாங்கு
முரசுமுழங்கு நெடுநகர் அரசு துயிலீயாது
மாதிரம் பனிக்கு மறம் வீங்கு பல்புகழ்
கேட்டற் கினிதுநின் செல்வம் கேட்டொறும்
காண்டல் விருப்பொடு கமழுங் குளவி
வாடாப் பைம்மயிர் இளைய ஆடுநடை
அண்ணன் மழகளிறு அரிஞிமிறு ஓப்பும்
கன்றுபுணர் பிடியகுன்று பல நீந்தி
வந்தவண் நிறுத்த இரும்பேரொக்கால்
தொல்பசி உழந்த பழங்கண் வீழ
எஃகு போழ்ந்து அறுத்த வானிணக் கொழுங்குறை
மையூன் பெய்த வெண்ணல் வெண்சோறு
நனையமை கள்ளின் தேறலொடு மாந்தி
நீர்ப்படு பருந்தின் ஈர்ஞ்சிறகு அன்ன
நிலத்தின் சிதாஅர் களைந்த பின்றை
நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ
வணர்இருங் கருப்பின் வாங்கமை மென்தோள்
வசையின் மகளிர் வயங்கிழையணிய
அமர்புமெய் யார்த்த சுற்றமொடு
நுகர்தற் கினிது நின் பெருங்கலி மகிழ்வே!

துறை : செந்துறைப் பாடாண் பாட்டு.

13 .பூத்த நெய்தல்

'தொறுத்தவயல் ஆரல் பிறழ்நவும்
ஏறுபொருத செறு உழாது வித்துநவும்
கருப்பின் பாத்திப் பூத்த நெய்தல்
இருங்கண் எருமையின் நிரைதடுக்குநவும்
கலிகெழு துணங்கை ஆடிய மருங்கின்
வளைதலை மூதா ஆம்பல் ஆர்நவும்
ஒலிதெங்கின் இமிழ் மருதில்
புனல் வாயில் பூம்பொய்கைப்
பாடல்சான்ற பயங்கெழு வைப்பின்
நாடுகவின் அழிய நாமம்தோற்றிக்
கூற்றடூஉ நின்ற யாக்கை போல
நீசிவந் திறுத்த நீரழி பாக்கம்
விரிபூங் கருப்பின் கழனி புல்லெனத்
திரிகாய் விடத்தரொடு காருடை போகிக்
கவைத்தலைப் பேய்மகள் கழுதூர்ந்தியங்க
ஊரிய நெருஞ்சி நீறாடு பறந்தலைத்
தாதெரு மறுத்த கலியழி மன்றத்து

உள்ளமழிய ஊக்குநர் மிடல்தபுத்து
உள்ளுநர் பனிக்கும் பாழாயினவே
காடே கடவுள்மேன புறவே
ஒள்ளிழை மகளிரொடு மள்ளர்மேன
ஆறே அவ்வனைத்தன்றியும் ஞாலத்துக்
கூலம்பகர்நர் குடிபுறந்தராஅ,
குடிபுறந்தருநர் பாரம் ஓம்பி
அழல்சென்ற மருங்கின் வெள்ளியோடாது
மழைவேண்டு புலத்து மாரி நிற்ப
நோயொடு பசிஇகந் தொரீஇப்
பூத்தன்று பெருமநீ காத்த நாடே ! "

துறை : செந்துறைப் பாடாண் பாட்டு.

### 14 . சான்றோர் மெய்ம்மறை

"நிலநீர் வளிவிசும்பு என்ற நான்கின்
அளப்பரியையே !
நாள்கோள் திங்கள் ஞாயிறு கனை அழல்
ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை
போர்தலை மிகுந்த ஈரைம் பதின்மரொடு
துப்புத் துறைபோகிய துணிவுடை ஆண்மை
அக்குரல் அனைய கைவண்மையையே
அமர்கடந்து மலைந்த தும்பைப் பகைவர்
போர் பீடு அழித செருப்புகல்முன்ப
கூற்று வெகுண்டு வரினு மாற்றும் ஆற்றலையே
எழுமுடி கெழீஇய திருஞெமரகலத்து
நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை
வானுறை மகளிர் நலனிகல் கொள்ளும்
வயங்கிழை கரந்த வண்டுபடு கதுப்பின்
ஒடுங்கீரோதிக் கொடுங்குழை கணவ
பல்களிற்றுத் தொழுதியொடு வெல்கொடி நுடங்கும்
படையே ருழவ பாடினி வேந்தே
இலங்குமணி மிடைந்த பொலங்கலத் திகிரிக்
கடலக வரைப் பினிப் பொழின் முழு தாண்டநின்
முன்றிணை முதல்வர் போல நின்றுநீ
கெடாஅ நல்லிசை நிலைஇத்
தவா அலியரோ இவ்வுலக மோடுடனே !"

துறை : செந்துறைப் பாடாண் பாட்டு .

### 15 . நிரைய வெள்ளம்

"யாண்டுதலைப் பெயர வேண்டுபுலத்து இறுத்து
முனையெரி பரப்பிய துன்னரும் சீற்றமொடு
மழைதவழ்பு தலைஇய மதில்வர முருக்கி

நிரைகளிறு ஒழுகிய நிரைய வெள்ளம்
பரந்தாடு கழங்கழி மன்மருங்கு அறுப்பக்
கொடிவிடு குரூஉப்புகை பிசிரக் கால்பொர
அழல்கவர் மருங்கின் உருவறக் கெடுத்துத்
தொல்கவின் அழிந்த கண்அகல் வைப்பின்
வெண்பூ வேளையொடு பைஞ்சுரை கலித்துப்
பீரிவர்பு பரந்த நீரறு நிறைமுதல்
சிவந்த காந்தள் முதல்சிதை மூதில்
புலவுவில் உழவில் புல்லாள் வழங்கும்
புல்இலை வைப்பில் புலஞ்சிதை அரம்பின்
அறியாமையான் மறந்து துப்பெதிர்ந்த நின்
பகைவர் நாடும் கண்டு வந்திசினே
கடலவுங் கல்லவும் யாற்றவும், பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவறு பறியா முழவுஇமிழ் மூதூர்க்
கொடிநிழல் பட்ட பொன்னுடை நியமத்துச்
சீர்பெறு கலிமகிழ் இயல்பு முரசின்
வயவர் வேந்தே பரிசிலர் வெறுக்கை
தாரணிந் தெழிலிய தொடி சிதை மருப்பின்
போர்வல்யானைச் சேரலாத
நீவாழியர் இவ்வுலகத் தோர்க்கென
உண்டுரை மாறிய மழலை நாவின்
மென்சொல் கலப்பையர் திருந்துதொடை வாழ்த்த
வெய்துறவு அறியாது நந்திய வாழ்க்கைச்
செய்த மேவல் அமர்ந்த சுற்றமோடு
ஒன்று மொழிந் தடங்கிய கொள்கை என்றும்
பதிபிழைப்பறியாது துய்த்தல் எய்தி
நிரையம் ஒரீஇய வேட்கைப் புரையோர்
மேயினர் உறையும் பலர்புகழ் பண்பின்
நீபுறந் தருதலின் நோய்இகந்து ஒரீஇய
யாணர் நன்னாடுங் கண்டுமதி மருண்டனென்
மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க் கெஞ்சாது
ஈத்துக்கை தண்டாக் கைகடுந் துப்பின்
புரைவயின் புரைவயின் பெரிய நல்கி
ஏமம் ஆகிய சீர்கெழு விழவின்
நெடியோன் அன்ன நல்லிசை
ஒடியா மைந்தநின் பண்பு பலநயந்தே!"

துறை : செந்துறைப் பாடாண் பாட்டு .

## 16. துயிலின் பாயல்

கோடுறழ்ந்து எடுத்த கொடுங்கண் இஞ்சி
நாடுகண்டன்ன கணைதுஞ்சு விலங்கல்
துஞ்சு மரக்குழாந் துவன்றிப் புனிற்றுமகள்
பூணா வையவி தூக்கிய மதில
நல்லெழில் நெடும்புதவு முருக்கிக் கொல்லுபு
ஏனமாகிய நுனைமுரி மருப்பின்
கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தி
மரங்கொல் மழகளிறு முழங்கும் பாசறை
நீடினை ஆகலில் காண்குவந்திசினே
ஆறிய கற்பின் அடங்கிய சாயல்
ஊடினும் இனிய கூறும் இன்னகை
அமிர்து பொதி துவர்வாய் அமர்த்த நோக்கின்
சுடர்நுதல் அசைநடை உள்ளலும் உரியள்
பாயல் உய்யுமோ- தோன்றல் தாவின்று
திருமணி பொருத திகழ்விடு பசும்பொன்
வயங்குகதிர் வயிரமோடு உறழ்ந்து பூண்சுடர்வர
எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்துப்
புரையோர் உண்கண் துயிலின் பாயல்
பாலும் கொளாலும் வல்லோய் நின்
சாயல் மார்பு நனியலைத் தன்றே ?

துறை : செந்துறைப் பாடாண் பாட்டு .

## 17 . வலம்படு வியன்பணை

"புரைவது நினைப்பின் புரைவதோ இன்றே
பெரிய தப்புந ராயினும் பகைவர்
பணிந்து திறை பகரக்கொள்ளுநை ஆதலின்
துளங்கு பிசிருடைய மாக்கடன் நீக்கி
கடம்பு அறுத்து இயற்றிய வலம்படு வியன்பணை
ஆடுநர் பெயர்ந்து வந்தரும் பலி தூஉய்க்
கடிப்புக் கண்ணுறூஉந் தொடித் தோளியவர்
அரணம் காணாது மாதிரந் துழைஇய
நனந்தலைப் பைஞ்ஞிலம் வருகிஇந் நிழலென
ஞாயிறு புகன்ற தீதுதீர் சிறப்பின்
அமிழ்து திகழ் கருவிய கணமழை தலைஇக்
கடுங்கால் கொட்கும் நன்பெரும் பரப்பின்
விசும்புதோய் வெண்குடை நுவலும்
பசுப்பூண் மார்ப்பாடினி வேந்தே ."

துறை : செந்துறைப் பாடாண் பாட்டு .

## 18 கூந்தல் விறலியர்

" உண்மின் கள்ளே அடுமின் சோறே
எறிக திற்றி ஏற்றுமின் புழுக்கே,
வருநர்க்கு வரையாது பொலங்கலந்தெளிர்ப்ப
இருள்வணர் ஒலிவரும் புரியவிழ்ஐம்பால்
ஏந்துகோட்டல்குல் முகிழ்நகை மடவரல்
கூந்தல் விறலியர் வழங்குக அடுப்பே
பெற்றது உதவுமின் தப்பின்று பின்னும்
மன்னுயிர் அழிய, யாண்டுபல துளக்கி
மண்ணுடை ஞாலம் புரவெதிர் கொண்ட
தண்ணியல் எழிலி தலையாது மாறி
மாரி பொய்க்குவது ஆயினும்
சேரலாதன் பொய்யலன் நசையே! "

துறை : இயன் மொழி வாழ்த்து .

## 19 வளனறு பைதிரம்

"கொள்ளை வல்சிக் கவர்கால் கூளியர்
கல்லுடை நெடுநெறி போழ்ந்து சுரனறுப்ப
ஒண்பொறிக் கழல்கால் மாறாவயவர்
திண்பிணி எஃகம் புலியுறை கழிப்ப
செங்கள விருப்பொடு கூலமுற்றிய
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
மண்ணுறு முரசங் கண்பெயர்த்து இயவர்
கடிப்புடை வலத்தர் தொடித்தோள் ஓச்ச
வம்புகளைவு அறியாச் சுற்ற மோடம்பு தெரிந்து
அவ்வினை மேவலை யாகலின்
எல்லும் நனியிருந் தெல்லிப் பெற்ற
அரிதுபெறு பாயல் சிறுமகிழானும்
கனவினுள் உறையும் பெருஞ்சால்பு ஒடுங்கிய
நாணுமலி யாக்கை வாணுதல் அரிவைக்கு
யார் கொல் அளியை
இனந்தோடகல ஊருடன் எழுந்து
நிலங்கண் வாட நாஞ்சில் கடிந்து நீ
வாழ்தல் ஈயா வளனறு பைதிரம்
அன்னவாயின பழனந்தோறும்
அழன்மலி தாமரை ஆம்பலொடு மலர்ந்து
நெல்லின் செருவின் நெய்தல் பூப்ப
அரிநர் கொய்வாண் மடங்க அறைநர்
தீம்பிழி எந்திரம் பத்தல் வருந்த
இன்றோ அன்றோ தொன்று ஓர் காலை
நல்லமன் அளிய தாமெனச் சொல்லி

காணுநர் கைபுடைத்திரங்க
மாணாமாட்சிய மாண்டன பலவே . "

துறை :பரிசில் துறைப் பாடாண் பாட்டு.

## 20 அட்டுமலர் மார்பன்

நுங்கோ யாரென வினவின் எங்கோ
இருமுந்நீர்த் துருத்தியுள்
முரணியோர்த் தலைச் சென்று
கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேரலாதன் வாழ்க அவன் கண்ணி
வாய்ப்பறியலனே வெயில்துகள் அனைத்தும்
மாற்றோர் தேஎத்து மாறிய வினையே
கண்ணினுவந்து நெஞ்சவிழ் பறியா
நண்ணார் தேஎத்தும் பொய்ப்பறியலனே
கனவினும் ஒன்னார் தேயவோங்கி நடந்து
படியோர்த் தேய்த்து வடிமணி இரட்டும்
கடாஅ யானைக் கணநிரை அலற
வியலிரும் பரப்பின் மாநிலங் கடந்து
புலவரேத்த வோங்கு புகழ் நிறீஇ
விரியுளை மாவும் களிறுந் தேரும்
வயிரியர் கண்ணுளர்க்கு ஓம்பாது வீசிக்
கடிமிளைக் குண்டுகிடங்கின்
நெடுமதில்நிலை ஞாயில்
அம்புடை யாரெயிலுள்ளழித் துண்ட
அடாஅ அடுபுகை அட்டுமலர் மார்பன்
எமர்க்கும் பிறர்க்கும் யாவராயினும்
பரிசின் மாக்கள் வல்லாராயினும்
கொடைக் கடனமர்ந்த கோடா நெஞ்சினன்
மன்னுயிரழிய யாண்டு பலமாறி,
தண்ணிய எழிலி தலையாதுஆயினும்
வயிறு பசி கூர வீயலன்
வயிறு மாசிலீஇயர் அவன் ஈன்றதாயே!

துறை : இயன்மொழி வாழ்த்து .

**பிரிவு 111 பரிபாடல் - பாட அமைப்பு**

5.3.1 நோக்கங்கள்

5.3.2 நூல் அறிமுகம் .

5.3.3 பாடல் ஆசிரியர்

5.3.4 பாடப் பொருள் விளக்கம்

5.3.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

5.3.6 பாடத் தொகுப்புரை

5.3.7 அருஞ்சொற் பொருள்

5.3.8 மாதிரி வினாக்கள்

5.3.9 பரிந்துரை நூல்

5.3.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

### 5.3.1 நோக்கங்கள்

பரிபாடல் நூலின் இசைச் சிறப்பு அறிதல்.

- வையை ஆற்றின் புதுவெள்ள வரவும், மக்களின் மகிழ்ச்சியும்அறிந்து இன்புறல்.
- தலைவன் பரத்தையருடன் கொண்ட உறவு புலப்படுதல்.
- ஊடல் கொண்ட தலைவியின் செயல் வழி அக்காலச் சமுதாய நிலை அறிதல்.

### 5.3.2 நூல் அறிமுகம்

சங்க இலக்கிய நூல்களில் இசை நலம் கொண்டதும், பலவகைப் பா வடிவங்களை உடையதும் என்று போற்றப்படுவது பரிபாடல் ஆகும். இது 25 முதல் 400 அடிகளைக் கொண்டதாக இருக்கும். தரவு, எருத்தம், அராகம், கொச்சகம், மடக்கியல், வாரம் என்னும் உறுப்புகளுடன் கலந்து வரும். இதில் 70 பாடல்கள் உள்ளன. ஆனால் இப்போது உள்ளவை 22 பாடல்களே. அவற்றுள் திருமாலைப் பற்றி 6 பாடல்களும், முருகனைப் பற்றி 8 பாடல்களும், வையை பற்றி 8 பாடல்களும் உள்ளன. இந்நூல் அகம் புறம் என்ற இரண்டு பொருள் பற்றிப் பேசுகிறது.

இந்நூலில் ஒவ்வொரு பாடல்களின் பின்னும் பாடியவரின் பெயர், பண்ணின் பெயர், இசை வகுத்தவரின் பெயர் ஆகியன உள்ளன.

இங்குப் பாடமாக வந்துள்ளது பரிபாடலின் ஆறாம் பாடலாகிய வையை பற்றிய பாடல். இதனைப் பாடியவர் நல்லந்துவனார் ஆவார்.

### 5.3.3 பாடல் ஆசிரியர்

பரிபாடலில் நான்கு பாடல்களைப் நல்லந்துவனார் பாடியுள்ளார். அந்துவன் என்பது இயற்பெயர். ‘நல்’ என்ற அடை மொழியும் ‘ஆர்’ என்ற விகுதியும் சேர்ந்து நல்லந்துவனார் என்று அழைக்கப்பட்டார். இவர் கலித்தொகையைத் தொகுத்ததுடன் கடவுள் வாழ்த்துப் பாடலையும் நெய்தல் கலியையும் பாடியுள்ளார். மேலும் நற்றிணை, அகநானூறு ஆகியவற்றில் ஒவ்வொரு பாடலைப் பாடி உள்ளார்.

### 5.3.4 பாடப் பொருள் விளக்கம்

வையையில் பெருவெள்ளம், புதுப் புனலாட ஈடுபடும் மகளிரின் செயல் போன்ற தலைப்புகளின் கீழ் பாடப் பொருள் விளக்கம் தரப்படுகிறது.

**துறை**

வையைநீர் விழாவில் தலைமகன் காதல் பரத்தை இற்பரத்தையுடன் நீராடினான் எனக் கேட்டு ஊடல் கொண்ட தலைவியிடம் வாயிலாகச் சென்ற விறலிக்குத் தலைவி வாயில் மறுத்துக் கூறியது.

### 5.3.4.1 வையையில் பெருவெள்ளம் (1-10)

மேகங்கள், கடலிலுள்ள நீரை முகந்து, வானில் பரவி, இளைப்பாறுதல் போல மழையைப் பெய்ததால், ஊழிக்காலத்தில் உலகம் முழுகுவது போல் நீர் நிறைந்தது. மலையில் வாழும் மான்கூட்டம் கலங்க, மயில்கள் அகவ, மலையிலுள்ள அழுக்குகள் நீங்க, அருவியாய் வெள்ளம் விரைந்து வந்தது. அந்த அருவி நீர் வரும் வழிகளாகிய சாரல்கள் புலவர் பாடிய பாக்கள் பொய் ஆகாமல் இருக்க எங்கும் நீர் பரவி உழவு செழிக்குமாறு நீர் ஓடியது.

### 5.3.4.2 புதுப் புனலாட ஈடுபடும் மகளிரின் செயல் (11-!3).

அந்த வெள்ள நீர், வையை ஆற்றில் பெருகியது. அதில் நீராட விரும்பும் மகளிர் தம் கூந்தல் ஈரத்தை உலர்த்த புகைத்தற்குரிய அகிலும், நெருப்பும், அணிந்து கொள்ள மலரும், வையை ஆற்றுக்கு வழிபாட்டுப் பொருளும், பொன் மீனும் நண்டும் ஏந்தித் தம் காதலருடன் வையைக்கு வந்தனர்.

### 5.3.4.3 வையைக்கரை உடைதலும் மக்கள் எழுச்சியும் (14-24)

மகிழ்ச்சியால் பெண்களின் உடல் பூரித்தது. அதனால் தோளில் தொடி அழுத்த, அங்கு அணிந்த வளையும் முன் கையில் வந்து மோத, எழுதப்பட்ட தொய்யில் அழிய, மேகலைகள் அறுந்து உதிர ,முத்து மாலை சந்தனத்தால் நிறம் மழுங்க, நகத்திலும் கபோலத்திலும் பூசிய செம்பஞ்சிக் குழம்பு அழிய, மார்பின் குங்குமக் குழம்பு அழிய, ஆடவர் பெண்டிர் அணிகள் மயங்க, உள்ளத்து அன்பால் ஒன்றுபட்டு அவர் நிறையை அழிக்கும். அவை போல வெள்ளம் மலை போன்ற அணைகளை உடைத்து, ஆற்றின் சிறகுகளான அலைகள் வையை ஆற்றின் காவலான கரைகளை உடைத்தது. அக்கரையை அடைத்தற்கு ஆட்கள் வருக என்று காவலர் அழைக்க, பறை ஒலிக்க, ஊராரின் ஆரவாரமும் எழுந்தது.

### 5.3.4.4 மைந்தரும் மகளிரும் நீராடச் செல்லல் (25-37)

அந்த ஆரவாரத்துடன், போருக்கு ஆண் யானைகள் அணி அணியாகச் செல்வதைப் போல, நீராட்டு விழாவிற்குப் பெண் யானைகள் வரிசை வரிசையாகச் சென்றன. இளைய ஆடவரும் அவருக்கு இளைய மகளிரும் முன்பு அணிந்த அணிகலன்களை நீக்கி, நீராடத் தக்க அணிகலன்களுடன் யானையின் பிடரியிலும், குதிரையின் மீதும், விளையாட்டுப் போரை விரும்பி, வையை நீரே விளையாட்டுப் போர் நிகழ்த்துதற்கு உரிய போர்க்களமாகக் குறித்தனர். தமக்குரிய துறையைத் தேர்ந்து கொள்ளும் பொருட்டுக் கூட்டம் கூட்டமாகத் தூசிப் படை போல் விளங்கினர். அந்தப் போருக்கு ஏற்ற படைக்கலங்களைக் கொண்டனர். புழுகு நெய்யால் நிரம்பிய துருத்தியையும், பனி நீர் நிரம்பிய கொம்பையும், வெண்மையான நெட்டிகளால் செய்யப்பட்ட தெப்பங்களையும், நிறம் ஊட்டப்பட்ட நல்ல நெட்டியால் செய்யப்பட்ட தேர்களையும் உடையவராய் நெருங்கிச் சென்றனர்.

### 5.3.4.5 ஆற்றின் நீரோட்டமும் அந்தணர் கலக்கமும் (38-45)

இவ்வாறு நெருங்கிச் சென்றதால் புறஞ்சேரியில் இருந்த இளைஞர் வெளியில் போக முடியவில்லை. எல்லாரும் ஒருவரை ஒருவர் முந்திச் சென்று துறைகளில் இடம் பிடிக்கச் சென்றனர். வலிமையற்றவர் ஆற்றில் குதிக்காது, துறைகளில் நீராடினர். வலிமையானவர்கள் ஆற்றின் புதிய நீரில் குதித்து விளையாடினர். அதனால் வையை ஆறானது, அவர்கள் பூசிய பத்து வகையான துவரில் ஊறின நீரும் சந்தனக் குழம்பும், நறுமண எண்நெய்யும் அணிந்த மலரும் மணம் வீசிச் சென்றது. இத்தகைய நீரைக் கண்ட வேதத்தை விரும்பும் அந்தணர் இது தூய்மையற்றது என மருண்டு நீராடவில்லை.

### 5.3.4.6 சேறு கலந்த புனல் கண்டு மற்றவரும் நீங்குதல் (46-60)

சூடியதால் நிறம், மணம் மாறிய மென் மலரும், ஆடவர், மகளிர் அணிந்த மாலையும் ஆற்றின் கரையிலுள்ள மரம், செடி, கொடி ஆகியவற்றின் வேர், தூர்,

காய், கிழங்கு என அவையும் கீழ் மக்கள் உண்டு சிந்திய கள்ளும் கலந்ததால் அந்த நீர் நலம் கெட்டது என அனைவரும் நீங்கிச் சென்றனர்.இத்தன்மையதாக நீரின் ஓட்டம் இருந்தது.

திருப்பரங்குன்றத்தில் அளவற்ற வெண்நிற அருவி தாலாட்டவும், உருவமற்ற தூய்மையான தென்றல் காற்று பாராட்டவும் தலைவர் மகளிருடன் இன்பத்துடன் உறங்குகின்றனர் என்ற செய்தியை மதுரையில் உள்ளவர்களுக்குச் சென்று சொல்வது போல மதுரைத் தெருக்களில் ஓடி, இரவில் புலந்த மகளிர் வீசிய மாலையை வாரிக்கொண்டு, வைகறையில் தெருக்கள் எல்லாம் வறுமை அடையும்படி தமிழ் பொருந்திய வையை நீர் பரவிச் சென்றது. இத்தகு நீரில் ஒரு தலைவன் இற்பரத்தையுடன் நீராடினான். இதனைக் காதற் பரத்தையிடம் கூறினான்.

### 5.3.4.7 காதற்பரத்தை வினாவும் தலைவன் மறுமொழியும் (61-70)

அதைக் கேட்ட காதற்பரத்தை ஊடல் கொண்டாள். தலைவன் தளிரைக் கையுறையாகக் கொடுத்தான். அவனது செயலால் மேலும் புலந்த காதற்பரத்தை பின்வருமாறு கூறத் தொடங்கினாள்.

'நீ இத்தளிரை எனக்காகக் கொய்யவில்லை. உம்மைப் புதிதாக விரும்பும் மகளிருக்காகக் கொய்தாய்' என்றாள். அதற்குத் தலைவன் 'நீ அறிய மாட்டாய். இது உனக்காகக் கொய்யப்பட்டது.' என்றான்.

'நீ முன்பு எனக்காகக் கொய்த தளிர் விரைந்து என்னிடம் வந்ததால் துவளாது. இன்று இத்தளிர் வேறு ஒருத்திக்குக் கொய்யப்பட்டு, அவள் மறுக்க, இங்குக் கொண்டு வரப்பட்டதால் துவண்டது. மேலும் அவளது அடியில் வீழ்ந்து வணங்கி இருப்பாய். அவள் உன் வணக்கத்தையும் ஏற்கவில்லை. நான் கூறுவது உண்மை அல்லவா! கூறுக'என்றாள்.

அதைக் கேட்ட தலைவன் 'வையை ஆற்றில் தெப்பத்தில் ஏறி வருவதற்குக் காலம் தாழ்ந்தது. எனவே அவ்வையை நீர் காரணமாக இத்தளிர்கள் துவண்டன இது திருப்பரங்குன்றத்தின் மீது ஆணை. மேலும் வையை ஆற்றின் நீர் அழகிய பெருக்கன்றோ1'என்று கூறினான்.

### 5.3.4.8 தலைவவன் கூறியதைக் காதற் பரத்தை மறுத்து உரைத்தல் (71-86)

ஆம்! நீ சொல்வது பொருத்தமானது. காமம் எப்பொழுதும் ஒரே தன்மையாக இருக்காது. சிலரிடம் அது விரைந்து பெருகும். சிலரிடம் விரைவாகச் சுருங்கும். இந்த வையை ஆற்றின் நீரைப் போலவே காமம் இருக்கின்றது. தேவையில்லாமல் சூளுரைத்துப் பிழை செய்தாய். இனி இத்தகையச் சூளுரைக்காதே.

உன் ஊர் என் ஊருக்கு அருகில் இருக்கிறது. கார்காலத்தில் தெப்பம் ஏறி வருவதால் காலம் தாழ்த்தும் இந்த வையை இளவேனில் காலத்தில் நீர் வற்றிக் கிடக்கும். எனவே உன் காமத்தையும் இந்த வையை ஆறே அழித்ததாகக் கருதுவாய்.

தானே இயங்காது, நீர் ஓடும் வழியே ஓடும் தெப்பம் போல நின்னைக் கவர்வதில் வல்ல மங்கையர் இயக்கிய வழியே இயங்கினை. அம்மங்கையருக்குத் தெப்பமாகிய மார்பை உடையை. நீ இவ்வாறு இருப்பதற்கு அஞ்சாது இரவெல்லாம் அவளுடன் தங்கினாய். இந்த வையை ஆற்றில் உடைந்த மடையைஅடைந்தாலும் மீண்டும் ஒழுகும் ஊற்று நீரைப் போல முன்பு தோன்றிய துன்பம் நீங்கும்படி நீ அவரிடம் தங்கினாய். எனினும் உம் பிரிவால் கண்ணீர் விடும்படி, அவர்கள் நெஞ்சம் வருந்த நீ செய்து, என்னிடம் வந்துள்ளாய். இனி இவ்வாறு வரவேண்டாம் என்று காதற்பரத்தை கூறினாள்.

### 5.3.4.9 தலைவன் மேலும் கூறுதல் (87-91)

அதைக் கேட்ட தலைவன் , எவளோ ஒருத்தி குளக் கரையில் நின்றிருக்க நான் அங்குக் குளித்தேன். அவள் அறியாது அந்தக் குளத்தில் ஆழமான இடத்தில்

இறங்கி நீரில் மூழ்கப் போனாள். நான் அவளை மீட்கப் போனேன். அவளே எழுந்து, பின்பு மயங்கி, என் மீது விழுந்து, அவளை அறியாது என்னை அணைத்தாள். நான் அவளைத் தழுவியது எவ்வாறோ? என்று கூறினான்.

### 5.3.4.10 காதற்பரத்தை கூற்றும் தலைவன் சூளறைந்து உரைத்தலும் (92-95)

நீ அவளுடன் ஆடுவதற்கு ஏற்ற வேறு ஆறு உண்டோ! நீ நீராடியது இந்த வையை ஆறுதான் என்று காதற் பரத்தை கூறினாள். தலைவன், நான் எவ்வளவு கூறினாலும் நீ இவ்வாறு மாறாகவே பேசுகின்றாய். நீ ஐயம் கொள்வாய் என்றால், முன்பு சூள் உரைத்தது போல இப்பொழுதும் திருப்பரங்குன்றத்தின் தலையைத் தொட்டுக் கூறுகிறேன் நான் அவ்வாறு செய்யவில்லை என்றான்.

### 5.3.4.11 முதுபெண்டிரின் ஆறுதல் மொழி (96-104)

இவ்வாறு தலைவன் கூறியதும் காதற் பரத்தை வீட்டில் இருந்த முதுபெண்டிர், உன் மை பூசப்பட்ட கண் சினந்தாலே அஞ்சுபவன். நீ இவ்வாறு சினம் கொள்ளாது அவனுடன் விளையாடு. சினந்தால் காம இன்பம் பதம் கெடும். நீயோ பெண்ஆவாய். இவனைச் சினந்தால் இவன் உன்னை விட்டுப் பிரிவது உறுதி. பிறகு இரவில் இவனைத் தேடித் திரிய வேண்டும். எனவே இவ்வாறு சினப்பது ஒழுக்கத்துக்குப் பிழையாகும் என்று தேற்றினர்.

மேலும் ஊடல் தீர்க்கும் வாயில்கள் இரந்தும் வருந்தியும் சொல்லி ஊடலைத் தணித்தனர். அதனால் இருவரும் கள்ளுண்டு களித்து, வையை ஆற்றில் நீராடி மகிழ்ந்தனர். மீண்டும் ஊடினர், கூடினர், ஆடினர்.

### 5.3.4.12 விறலியிடம் தலைவி வாயில் மறுத்தல் (105-106)

இவற்றை எல்லாம் தலைவி அறிந்து ஊடினாள். அதனை அறிந்த தலைவன் விறலியைத் தூதாக அனுப்பினான். நடந்ததை அறிந்த தலைவி வையையே! ‘நீ நின்னிடம் வந்து நீராடுபவர் மனத்தில் இத்தகு காமத்தை ஏற்படுத்தும் தன்மை எப்பொழுதும் குறையாது இருக்கட்டும்’ என்று வாழ்த்துவது போலத் தலைவனின் வாயிலை மறுக்கிறாள்.

### 5.3.5 தன் மதிப்பீட்டு வினாக்கள்

**அ. வினாக்கள்**

1. பரிபாடலில் உள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?
2. பரிபாடல் எந்தெந்தப் பொருள் குறித்துப் பாடப்பட்டுள்ளது?
3. பரிபாடல் பாடல்களில் வந்துள்ள உறுப்புகள் யாவை?

**ஆ. சரியா? தவறா?**

1. பரிபாடல் இசையோடு பாடக்கூடிய பாடல்களை உடையது.
2. பரிபாடல் அகமும் புறமும் சார்ந்த நூல்.
3. திருமால் பற்றி 8 பாடல்கள் உள்ளன.
4. வையை ஆற்றில் புதுவெள்ளம் வருவது குறித்து மக்கள் ஆரவாரித்தனர்.

### 5.3.6 பாடத் தொகுப்புரை

- வையை ஆற்றின் புதுவெள்ள வரவும் மக்களின் மகிழ்ச்சியான நீர் விளையாட்டும் அறியப்படுகின்றன.
- தலைவன் பிற மகளிருடன் நீர் விளையாடும் நிகழ்ச்சி புலப்படுகிறது.
- காதற் பரத்தையின் ஊடலும் தலைவன் அதைத் தணித்தலும் காணப்படுகின்றன.
- தலைவன் மீண்டு வருவதை ஊடிய தலைவி தடுத்தலின் நயம் வெளிப்படுகிறது.

### 5.3.7 அருஞ்சொற் பொருள்

| | | |
|---|---|---|
| உராய் | - | எங்கும் உலவி |
| அசைவிட | - | இளைப்பாற |
| தாயிற்று | - | தாவிச் சென்றது |
| வகை | - | முறை |
| சாலும் | - | மிகும் |
| செறித்தல் | - | அழுந்துதல் |
| வரைச்சிறை | - | மலை போன்ற அணைக்கட்டு |
| திரைச்சிறை | - | அலையாகிய இறகு |
| கரைச்சிறை | - | கரையாகிய காவல் |
| நவின்று | - | விரும்பி |
| கிடை | - | நெட்டி |
| உண்டிகை | - | கூட்டம் |
| நறவம் | - | கள் |
| கால் | - | தென்றற்காற்று |
| ஆக்கம் | - | பெருகுதல் |
| அம்பி | - | ஓடம் |
| பிசிர் | - | நீர்த்துளி |
| காத்தி | - | காப்பாயாக |
| துனி | - | ஊடல் |
| அல்லாப்பு | - | சுழற்சி |

### 5.3.8 மாதிரி வினாக்கள்

**அ. குறு வினாக்கள்**

1. பரிபாடல் பற்றிக் கூறுக.
2. வாயில் மறுத்தல் என்றால் என்ன?
3. தலைவன் தலைவியிடம் ஊடலைத் தணிக்க யாரைத் தூதாக அனுப்புகிறான்?

**ஆ. சிறு வினாக்கள்**

1. மழை வெள்ளம் குறித்துப் பரிபாடல் கூறுவன யாவை?
2. புது வெள்ள நீரில் மக்கள் நீராட மேற் கொண்ட முயற்சிகளைத் தொகுத்துரைக்க.
3. தலைவனிடம் காதற் பரத்தை ஊடிக் கூறியவை யாவை?

**இ பெரு வினாக்கள்.**

1. வையையின் புதுவெள்ளமும் மக்களின் செயல்களும் குறித்துக் கூறுக.
2. காதற்பரத்தை ஊடியதும் தலைவன் அதைத் தணித்தலும் பற்றிக் கூறுக.
3. தலைவி தலைவனுக்கு வாயில் மறுக்கக் காரணம் யாது?

### 5.3.9 பார்வை நூல்

பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும், உ.வே. சாமிநாதையர் பதிப்பாசிரியர், நான்காம் பதிப்பு, ஸ்ரீ தியகராச விலாச வெளியீடு, சென்னை.

## 5.3.10 தன்மதிப்பீட்டு வினா - விடைகள்

**அ. விடைகள்**

1. பரிபாடலில் உள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 70 ஆகும்.
2. பரிபாடல் திருமால், முருகன், வையை ஆகிய பொருள் குறித்துப் பாடப்பட்டுள்ளது.
3. பரிபாடல் பாடல்கள் தரவு, எருத்தம், அராகம், கொச்சகம், மடக்கியல், வாரம் என்னும் உறுப்புகளுடன் கலந்து வரும்.

**ஆ. விடைகள்**

1. சரி
2. சரி.
3. தவறு.
4. சரி.

**பரிபாடல்**

நிறை கடல் முகந்து உராய் நிறைந்து நீர் துளும்பும் தம்
பொறை தவிர்பு அசைவிடைப் பொழிந்தன்று வானம்
நிலம் மறைவது போல் மலிர் புனல் தலைத் தலைஇ
மலைய இனம் கலங்க மலைய மயில் அகவ
மலை மாசு கழியக் கதழும் அருவி இழியும்

மலி நீர் அதர் பல கெழுவு தாழ் வரை
மாசு இல் பனுவற் புலவர் புகழ் புல
நாவின் புனைந்த நன் கவிதை மாறாமை
மேவிப் பரந்து விரைந்து வினை நந்தத்
தாயிற்றே தண் அம் புனல்

புகை பூ அவி ஆராதனை அழல் பல ஏந்தி
நகை அமர் காதலரை நாளணிக் கூட்டும்
வகைசாலும் வையை வரவு
தொடி தோள் செறிப்பத் தோள்வளை இயங்கக்
கொடிசேரா திருக் கோவை காழ் கொளத்
தொகு கதிர் முத்துத் தொடை கலிழ்பு மழுக
உகிரும் கொடிறும் உண்ட செம் பஞ்சியும்
நகில் அணி அளறு நனி வண்டல் மண்ட
இலையும் மயிரும் ஈர்ஞ் சார்ந்து நிழத்த
முலையும் மார்பும் முயங்கு அணி மயங்க
விருப்பு ஒன்றுபட்டவர் உளம் நிறை உடைத்தென
வரைச் சிறை உடைத்ததை வையை ; வையைத்
திரைச் சிறை உடைத்தன்று கரைச்சிறை அறைக எனும்

உரைச் சிறைப் பறை எழ ஊர் ஒலித்தன்று
அன்று போர் அணி அணியின் புகர்முகம் சிறந்தென

நீர் அணி அணியின் நிரைநிரை பிடி செல
ஏர் அணி அணியின் இளையரும் இனியரும்
ஈரணி அணியின் இகல் மிக நவின்று
தணி புனல் ஆடும் தகை மிகு போர்க்கண்
துணி புனல் ஆகத் துறை வேண்டும் மைந்தின்
அணிஅணி ஆகிய தாரர் கருவியர்
அடு புனலது செல அவற்றை இழிவர்
கைம்மான் எருத்தர் கலி மட மாவினர்
நெய்ம் மாண் சிவிறியர் நீர் மணக் கோட்டினர்
வெண் கிடை மிதவையர் நன் கிடைத் தேரினர்
சாரிகை மறுத்துத் தண்டா உண்டிகை
ஓர் இயவு உறுத்தர ஊர்ஊர்பு இடம் திரீஇச்
சேரி இளையர் செல அரு நிலையர்
வலியர் அல்லோர் துறைதுறை அயர
மெலியர் அல்லோர் விருந்து புனல் அயர
சாறும் சேறும் நெய்யும் மலரும்
நாறுபு நிகழும் யாறு வரலாறு
நாறுபு நிகழும் யாறு கண்டு அழிந்து
வேறுபடு புனல் என விரை மண்ணுக் கலிழைப்
புலம் பரி அந்தணர் கலங்கினர் மருண்டு

மாறு மென் மலரும் தாரும் கோதையும்
வேரும் தூரும் காயும் கிழங்கும்
பூரிய மாக்கள் உண்பது மண்டி
நார் அரி நறவம் உகுப்ப நலன் அழிந்து
வேறாகின்று இவ் விரி புனல் வரவு என
சேறு ஆடு புனலது செலவு
வரை அழி வால் அருவி வாதாலாட்ட
கரை அழி வால் அருவிக் கால் பாராட்ட
இரவில் புணர்ந்தோர் இடைமுலை அல்கல்
புரைவது பூந் தாரான் குன்று எனக் கூடார்க்கு
உரையோடு இழிந்து உராய் ஊரிடை ஓடிச்

சலப் படையான் இரவில் தாக்கியது எல்லாம்
புலப்படப் புன் அம் புலரியின் நிலப்படத்
தான் மலர்ந்தன்றே
தமிழ் வையைத் தண்ணம் புனல்
விளியா விருந்து விழுவார்க்குக் கொய்தோய்
தளிர் அறிந்தாய் தாம் இவை
பணிபு பசி ஒண்பபண்டெல்லாம் நனி உருவத்து
என்னோ துவள் கண்டீ
எய்தும் களவு இனி நின் மார்பின் தார் வாடக்
கொய்ததும் வாயாளோ கொய் தழை கை பற்றிச்
செய்ததும் வாயாளோ செப்பு
புனை புணை ஏறத் தாழ்த்ததை தளிர் இவை
நீரின் துவண்ட சேஎய் குன்றம் காமர்
பெருக்கு அன்றோ வையை வரவு
ஆம்ஆம் அது ஒக்கும் காதல் அம் காமம்
ஒருக்க ஒரு தன்மை நிற்குமோ ஒல்லைச்
சுருக்கமும் ஆக்கமும்சூள் உறல்வையைப்
பெருக்கு அன்றோ பெற்றாய் பிழை
அருகு பதியாக அம்பியின் தாழ்ப்பிக்கும்

குருகு இரை தேரக் கிடக்கும்பொழி காரில்
இன் இளவேனில் இது அன்றோ வையை நின்
வையை வயமாக வை
செல் யாற்றுத் தீம் புனலில் செல் மரம் போல
வவ்வு வல்லார் புணை ஆகிய மார்பினை

என்னும் பனியாய் இரவெல்லாம் வைகினை
வையை உடைந்த மடை அடைத்தக்கண்ணும்
பின்னும் மலிரும் பிசிர் போல இன்னும்
அனற்றினை துன்பவிய நீயடைந்தக் கண்ணும்
பனித்துப் பனி வாரும் கண்ணவர் நெஞ்சம்

கனற்றுபு காத்தி வரவு
நல்லாள் கரை நிற்ப நான் குளித்த பைந் தடத்து
நில்லாள் திரை மூழ்கி நீங்கி எழுந்து என்மேல்
அல்லா விழுந்தாளை எய்தி எழுந்து ஏற்று யான்
கொள்ளா அளவை எழுந் தேற்றாள் கோதையின்

உள் அழுத்தியாள் எவளோ தோய்ந்தது யாது என
தேறித் தெரிய உணர் நீ பிறிதும் ஓர்
யாறு உண்டோ இவ் வையை யாறு
இவ் வையை யாறு என்ற மாறு என்னை கையால்
தலை தொட்டேன் தண் பரங்குன்று (95)

சினவல் நின் உண்கண் சிவப்பு அஞ்சுவாற்குத்
துனி நீங்கி ஆடல் தொடங்கு துனி நனி
கன்றிடின் காமம் கெடூஉம் மகள் இவன்
அல்லா நெஞ்ச முறப்பூட்டக் காய்ந்தே
வல் இருள் நீயல் அது பிழையாகும் என (100)

இல்லவர் ஆட இரந்து பரந்து உழந்து
வல்லவர் ஊடல் உணர்த்தர நல்லாய்
களிப்பர் குளிப்பர் காமம் கொடி விட
அளிப்ப துனிப்ப ஆங்காங்கு ஆடுப
ஆடுவார் நெஞ்சத்து அலர்ந்து அமைந்த காமம்
வாடற்க வையை நினக்கு , (106)

மாதிரி வினாத்தாள்

## பெரியார் தொலைநிலைக் கல்வி நிறுவனம்.

## பெரியார் பல்கலைக் கழகம்

## சேலம் - 636 011.

### இளங்கலைப் பட்ட வகுப்பு

### தமிழ்

### தாள் 6. அற இலக்கியங்களும் சங்க இலக்கியங்களும்

காலம்: 3 மணி மதிப்பெண்:100

### பகுதி : அ

அனைத்து வினாக்களுக்கும் ஒருபத்தி அளவில் பதில் அளிக்க (10 * 2 = 20)

1. உடம்பின் பெருமை யாது?
2. வாயில் மறுத்தல் என்றால் என்ன?
3. பொதுவியல் திணை என்றால் என்ன?
4. களவு மணத்திற்குச் சாட்சியாகத் தலைவி கூறுவது எதனை?
5. வாடைக்காற்றின் தன்மை யாது?
6. அகநானூற்றால் அறியப்படும் மன்னர்கள் யாவர்?
7. கலித்தொகையின் சிறப்பை உணர்த்தும் தொடர்கள் யாவை?
8. தலைவன் இல்லாத வீட்டின் நிலைமை யாது
9. ஆற்றுப்படை என்றால் என்ன?
10. உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவு எத்தகையது?

### பகுதி : ஆ

அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க (5 *4 = 20)

11. புது வெள்ள நீரில் மக்கள் நீராட மேற் கொண்ட முயற்சிகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

'புலவரேத்த வோங்கு புகழ் நிறீஇ' என்று சேர மன்னன் போற்றப்படக் காரணம் யாது?

12. நக்கீரரின் மருதத் திணைப் பாடற் கருத்துகள் யாவை?

(அல்லது)

பகல்வருவானை இரவு வருக எனத் தோழி தலைவனிடம் கூறக் காரணம் யாது?

13. பாணன் தலைவனிடம் கூறியவை யாவை?

(அல்லது)

செவிலித் தாய் முக்கோற்பகவரை வினவியதும் அதற்கு அவர்கள் மறுமொழி கூறியதையும் கலித்தொகைப் பாடல்வழி கூறுக

14. முழுவலி மாக்களின் செயல் எத்தகையது?

(அல்லது)

முருகனின் திருமுகங்கள் செய்த செயல்கள் யாவை

15. தாய் தந்தைக்குக் கைம்மாறு செய்ய இயலாது என்பதை நிறுவுக.

(அல்லது)

பூச்சூடிப் பொய்க்கோலம் செய்ய ஒழியுமே - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக

**பகுதி:இ**

அனைத்து வினாக்களுக்கும் மூன்றுபக்க அளவில் விடையளிக்க (5 * 12 = 60)

16. காதற் பரத்தை ஊடியதும் தலைவன் அதைத் தணித்தலும் பற்றிக் கூறுக.

(அல்லது)

பொகுட்டு எழினியை ஔவையார் எவ்வாறு போற்றுகிறார்?

17. தலைவன் பாங்கனிடம் உரைத்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறுவனவாகப் பரணர் கூறுவன யாவை?

18. பருவம் கண்டு ஆற்றாத தலைவியைத் தோழி எவ்வாறெல்லாம் ஆற்றுவிக்கிறாள்?

(அல்லது)

தலைவன் பொருள் காரணமாகத் தலைவியைப் பிரியப் போகிறேன் என்று கூறும் பொழுது தோழி எவ்வாறு தடுக்கிறாள்?

19. போர்ப்பாசறையில் தலைவனது செயல்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

முருகனின் திருப்பரங்குன்றக் காட்சியை விவரி.

20. தெய்வம் உண்டு என்பதை ஆசிரியர் எங்ஙனம் நிறுவுகிறார்?

(அல்லது)

கல்லாமை பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?

## குறிப்புகள்